ஜீவப்ரவாகம் எங்கே?

அபேதவாதம் எதற்கு?

தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயண்
அவர்களால் எழுதப்பட்ட ஆங்கில நூலின்
மொழிபெயர்ப்பு

வெளியிடுவோர்:
புது நூற்பதிப்பு நிலையத்தார்,
"~~மார்க்ஸ் ஹவுஸ்~~"
தியாகராயநகர், சென்னை.

ல] 1936 [அணா 10

முன்னுரை

இப்புத்தகம் அபேதவாதக் கொள்கைகளை விளக்குவதற்காக எழுதப்படவில்லை. நமது தேசீய இயக்கத்தில், தற்கால நிலையில் உற்பத்தியாகும் சில கேள்விகளைத் தெளிவுபடுத்துவதற்கும், அவைகளின் வருங்காலப் போக்கை காட்டுவதற்குமே எழுதப்பட்டது. காங்கிரஸ் அபேதவாதக் கட்சியின் வளர்ச்சி காங்கிரஸ் கோஷ்டிகளுக்கிடையில் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணி சில மூலாதாரமான வாதப் பிரதிவாதங்களை முன்னணிக்கு கொண்டு வந்துவிட்டது. இதனால் லட்சியங்களில் ஏற்பட்ட குழப்பங்களும் திட்டங்களில் உண்டான வித்தியாசமும் திட்டமான தீர்ப்பைத் தேடுகின்றன. காங்கிரஸ்காரரை, முக்கியமாக காங்கிரஸ் தொண்டர்களை இவ்விஷயங்களில் சரியான முடிவிற்கு வர உதவிசெய்யும் பொருட்டே இம்முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது குறிப்பாக காங்கிரஸ் தொண்டர்கட்காக எழுதப்பட்டதாகும்.

இப்புத்தகத்தில் அநேக குறைகள் இருப்பதை நான் அறிவேன். சில உன்னதமான அபிப்பிராயங்களை சுலபமான நடையில் எழுத முயன்றதால் நான் அவசியத்திற்கு மேல் விளக்க வேண்டியதாயிற்று. இவ்விஷயங்களை மிகவும் சரியானவிதமாகச் சொல்ல வேண்டுமானல், இப்புத்தகத்திலுள்ள அநேக வாக்கியங்களை அதிக நுட்பத்தோடும் பல கட்டுப்பாடுகளோடும் சொல்ல வேண்டும். ஆனல் அநேக நுட்பமான விஷயங்களைக் கொண்டு வாசகர்களைக் குழப்பி விடுவதைவிட முக்கிய விஷயங்களை நேராகச் சொல்லிவிடுவது உத்தமமென்று நான் நினைத்தேன்; அப்படியிருந்தும் நான் நினைத்தபடி சுலபமாக்க முடியாமல் போனதால் அபேதவாத தத்துவத்திற்குரிய பாஷையை அறவே விலக்கிவிட்டு எழுத முடியவில்லை. இப்புத்தகம்

எழுதப்படும்போது இதன் சில பகுதிகளைப்பற்றி சில காங்கிரஸ் நண்பர்களோடு வாதப் பிரதிவாதம் செய்தேன். ஆகையால் எனது குறைகளைப்பற்றி நான் நன்கு அறிகிறேன்.

இப்புத்தகம் அபேதவாத பண்டிதர்களுக்கு கோப மூட்டத் தக்க சிறு பாலபாடமாகத் தோன்றலாம். அபேதவாதிக்கும் சாதாரண காங்கிரஸ் தொண்டருக்கு மிடையில் ஓர் பெரும்பிளவு இருக்கிறது. அபேதவாதிக்கு சாவசாதாரண உண்மையாகத் தோன்றும் விஷயங்கூட காங்கிரஸ் தொண்டர் தெரிந்து கொள்வதற்கு அநேக படிகளைக்கடந்து வரவேண்டியதாக விருக்கிறது. ஆகவே ஒருவருக்காக எழுதப்பட்டது மற்றவருக்கு ஆரம்பப்படிப்பாகத் தோன்றுவது சகஜமே. ஆனாலும் என்னுடைய அபேதவாத நண்பர்கள் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைக் கொடுத்து உதவும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இவ்வாறு கூடி, கருத்துக்களைக் கலந்து கொள்வதைக் கொண்டு இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களை மேலும் விரிக்க சாதகமாகவிருக்கும்.

இப்புத்தகத்தின் கோர்வையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லவேண்டியதிருக்கிறது. அநேகமாக அபேதவாதத்தைப் பற்றி தர்க்கம் செய்யும் போது முக்கியவிஷயத்தை (தனியுடைமையை தவிர்த்து பொது உடமையாக்குவது) விட்டு விட்டு சில்லரை விஷயங்களைப்பற்றி தர்க்கம் செய்து முடிவிற்கு வராமல் போய்விடுகிறார்கள்; ஆகையால் முதல் அதிகாரத்தில அபேதவாதத்தின் முக்கியமான கொள்கைகளை விவரிக்க முயன்றிருக்கிறேன்.

இரண்டாவது அதிகாரத்தில், காங்கிரஸ் அபேதவாதக்கட்சித் திட்டங்களை, கொள்கையின் விளக்கு ஒளியைக் கொண்டு சோதித்திருக்கிறேன்.

மூன்றாவது அதிகாரத்தில், அபேதவாதத்திற்குப் பதிலாக காந்திஜீ வற்புறுத்தும் திட்டத்தையும் டாக்டர் பகவான்தாஸ் வற்

புறத்தும் பூர்வீக விஞ்ஞான அபேதவாதத்தையும் விவரமாக ஆராய்ந்திருக்கிறேன்.

நான்காவது அதிகாரத்தில், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் போர் முறைகளைப்பற்றி விவரிக்க முயன்றிருக்கிறேன். அவைகள் பரிபாஷைச் சொற்களில் மிகுந்திருப்பதால் அவைகளைச் சேர்ந்த அநேக முக்கிய விஷயங்களை நான் விட்டுவிட வேண்டியதாயிற்று. அவைகள் சாதாரண வாசகர்களுக்கும் காங்கிரஸ் தொண்டருக்கும் கூட அதிக முக்கியமானவைகளல்ல. அவைகள் முக்கியமாக கட்சி அங்கத்தினர்களுக்கு வேண்டியவை. ஆகையால் கட்சியின் பிரசுரங்களிலும், வெளியீடுகளிலும் நன்றாக ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

இறுதியில் மிகுந்த நெருக்கடியான வேலைகளுக்கிடையே இப்புத்தகத்தின் புரூப்களைபார்த்து எனக்கு உயர்ந்த அபிப்பிராயங்களைக் கொடுத்த ஸ்ரீ பிரகாஷா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தை அளிக்கின்றேன்.

—ஜெயப்பிரகாஷ் நாராயண்.

PUBLISHERS' NOTE.

காலப்போக்கில் ஒவ்வொருவரும் 'அபேத வாதக் கொள்கையைப்பற்றிய பரிபூரண மான ஞானம் பெற்றிருக்கவேண்டுவது இன்றியமையாததாகின்றது. தமிழ் மொழி யில் அந்த ஞானத்தை நல்கும் நூல் எதுவும் இதுகாறும் வந்தபாடில்லை. எனவே யாம் தோழர் ஜயப்பிரகாசரின் பேர்போன சோஷ லிசம் ஏன் என்ற நூலை மொழிபெயர்த்து வெளியிடுகின்றோம். காலநிலை கருதி விரை வில் வெளியிட வேண்டுவதாயிற்று. நமக்கு வெளியீட்டு விஷயத்தில் பேருதவி புரிந்த நண்பர்கட்கு மனமார்ந்த வணக்கம்.

'மார்க்ஸ் ஹவுஸ்.'
28-11-'36.

—வெளியிடுவோர்.

அத்தியாயம் I

அபேதவாதத்தின் அஸ்திவாரம்

"தனியுடைமைமுறை நீக்கப்படாத வரையில் மக்களுக்கிடையே பொருட்களை நியாயமாகவும் நேர்மையாகவும் பங்கிட முடியாது என்றும், உலகம் ஒழுங்காக ஆட்சி செய்யப்பட முடியாதென்றும் கூறவேண்டியவனு யிருக்கிறேன்."

—தாமஸ் மூர்.

பல அபேதவாதக் கொள்கைகள்.

அபேதவாதத்தில் பல மாதிரிகளிருக்கின்றனவென்றும் ஆகையால் அபேதவாதமென்பது என்னவென்று வரையறுத்துக் கூறுவது கஷ்டமான காரியமென்றும் விஷய ஞானமில்லாதவர்களே யன்றி, படித்தவர்களும்கூட அடிக்கடிச் சொல்லி வருகிறார்கள்.

சரித்திர வாயிலாக நோக்குமிடத்து, பலமாதிரி அபேதவாதக் கொள்கைகள் இருந்திருக்கின்றனவென்பது உண்மையே. அவற்றைத் தழுவிய கக்ஷியார்கள் பரஸ்பரம் போராடிக்கொண்டு மிருந்திருக்கின்றார்கள். ஆனால் சமீப காலங்களில் உலக நெருக்கடியின் காரணமாகவும், பாசிஸத்தின் (Fascism) வளர்ச்சி காரணமாகவும், அவர்கட்குள் ஒருவித ஐக்கியம் பெருகி வந்திருக்கிறது. ஆகவே இன்று மார்க்ஸியம் (Marxism) என்ற ஏக அபேதவாதக்

கொள்கையைத் தவிர வேறெதுவும் இல்லையென்று சொல்வது பொருந்தும்.

மேலும், இதுகாறும், பலதிறப்பட்ட அபேதவாதிகளுக்குள்ளும், தற்போதைய முதலாளித்வமுறை செறிந்த சமூகத்தை என்னென்ன தந்திரங்களாலும் வழிகளாலும் அபேதவாத சமூகமாக மாற்றியமைக்கலாமென்ற அநுஷ்டான நீர்மைகளில்தான் கருத்து வித்தியாசங்கள் ஏற்பட்டிருந்தனவே தவிர, அபேதவாத தர்மத்தின் வியாக்கியானத்திலோ தன்மையிலோ முரண்பாடு உண்டானதில்லை. இந்நாள் ருஷ்யப் பொதுவுடைமைக்காரர்கள் (Communists) தமது குறிப்பிடத்தகுந்த பெரிய வெற்றியால் தம் போராட்டமுறையைக் காண்பித்திருக்கிறார்கள். மற்ற முறைகளைக் கையாண்ட ஏனையோரெல்லாம் வெற்றிபெற்றிருக்கின்றாரல்லர்.

நான் இங்கே எவ்விதப் போராட்டமுறைகளையும் தரப்போவதில்லை. என்னுடைய நோக்கம் அபேதவாதத்தின் அடிப்படையான கொள்கைகளை விளக்குவதேயாகும். இது போன்ற ஒரு சிறு புத்தகத்தில் அபேதவாதத்தை முற்றிலுமாக விளக்கிவிடுவதும் சாத்தியமல்ல. நான், வாசகர்களின் மனதில் அபேதவாதமென்ற வெற்றி ஸ்தம்பம் எழுவதற்கான அஸ்திவாரமாகிய சில தத்துவங்களை மட்டிலுமாவது ஆழப் புகுத்திவிட்டேனேயானால் திருப்தியுடையவனாகிவிடுவேன்.

அபேதவாதம்: ஓர் சமூக அமைப்பு முறை

அபேதவாதத்தைப்பற்றி முதன்முதலில் தெரிந்திருக்க வேண்டுவது, அது சமூகத்தை மாற்றியமைக்கும் ஓர் முறை

என்பதாகும். தனி மனிதரின் ஒழுக்கங்களைத் திரட்டிச் சொல்லும் ஒரு சட்டக்கோர்வையல்ல. அபேதவாதம் நீங்களோ நானோ மட்டிலும் கையாளத்தகுந்த ஓர் பொருளு மல்ல. அன்றி திடீரென கிளம்பி வந்துவிடுவதுமல்ல. இந்தியா வில் நாம் அபேதவாதத்தைப் புகுத்த வேண்டும் என்று சொல்லும்போது, அத்தேசம் முற்றிலுமுள்ள சமூக, பொருளாதார வாழ்வையும் அவற்றிற் கடிப்படையான விவ சாயப் பண்ணைகள், தொழிற்சாலைகள், பள்ளிக்கூடங்கள், நாடக ரங்கங்கள் முதலியவற்றையும் மாற்றியமைக்க வேண்டு மென்பதே நம் கருத்து. சந்தேகமின்றி ஒரு கிராமத்தையோ ஒரு தொழிற்சாலையையோ அபேதவாத கொள்கைப் பிர காரம் நடாத்தவியலும்; ஆனல் அது மட்டிலும் அபேதவாத மாகி விடாது. ஒரு திரிபுஜக் கண்ணாடி எறியும் நிழலில் ஏழு வர்ணங்கள் காணப்படலாம்; ஆயின் அது வானவில் ஆகி விடாது.

அபேதவாத அமைப்புக்கு சர்க்கார் அதிகாரம் தேவை

அபேதவாத சமூகத்தை ஸ்தாபனம்செய்ய ஆசைப்படு பவர்கட்கு போதுமான பலமும் ஆதரவும் வேண்டும். எந்த லட்சிய வாதிகட்கும் (Idealists) தம் கையில் பலம் (அதி காரம்) இல்லாது போனல் அபேதவாத நாட்டைக் கண்டுவிட முடியாது.

அதிகாரமென்றால் பொருளென்ன? இந்நாள் ஒருவன் உலகம் முழுதும் கண்ணெறிந்து பார்ப்பானானல், எந்த தனி மனிதனும், கட்சியாரும், குழுவினரும் தத்தம் திட்டங்களை அல்லது முறைகளை தத்தம் தேசத்தில் புகுத்தவேண்டும் போது முதலில் சர்க்காரையே (State) கைப்பற்றிக் கொள்

கின்றார்கள் என்பதைத் தெரிந்து கொள்வான். இங்கிலாந்திலிருக்கும் தொழில் கட்சியாரைப் போன்ற சட்டவரம்புக்குள்பட்ட கூட்டத்தாரோ, ருஷ்ய போல்ஷவிக்கர்களைப் போன்ற புரட்சிக் கூட்டத்தாரோ, ஜெர்மன் ஹிட்லர் கோஷ்டியைப் போன்ற ஒரு பாஸிஸ்டு கூட்டத்தாரோ, எவராயினும் சரி, முதலில் சர்க்காரையே கைப்பற்றிக் கொள்கிறார்கள். கவர்ன்மெண்ட் உங்கள் கைக்கு வந்துவிட்டால் நீங்கள் தாராளமாகச் சட்டமியற்றலாம்; நவீனகால விஞ்ஞான மளித்துள்ள அநந்தம் கருவிகளை பிரசாரத்திற்காகவும் கல்வி போதனைக்காகவும் பயன்படுத்தலாம்; அன்றி உங்கள் விருப்பத்தை அமுல் நடத்தவும் செய்யலாம். அதுபோது எதிர்ப்புத் தோற்றுமாயின், சர்க்காரின் போராட்டக் கருவிகளாகிய ராணுவத்தையும் பொலீஸையும் செலுத்தி அடக்கி விடலாம். சர்க்கார் இயற்றும் ஒவ்வொரு சட்டத்தையும் பரிபூரணமாக அமுல் நடத்தவும் அதன்படி மக்களை ஆட்டி வைக்கவும் பலமிருக்கும்.

ஆகையால் சர்க்காரைத் தன் கைக்கு இழுத்துக்கொள்ளாத எந்தக் கட்சியாலும் அபேதவாதத்தை நிலைநாட்டி விட வியலாது. இவ்வாறு இழுத்துக் கொள்வது ஓட்டுப் பலத்திலா அல்லது வேறுவழியிலா வென்பதைப்பற்றி இங்கு விவாதிப்பது பொருத்தமற்றதாகும்.

இதை விளக்கும் முறையில், ஒரு உதாரணத்தை யெடுத்துக் கொள்வோம். அதிகாரம் செலுத்தும் ஒரு கட்சியால்—அதாவது சர்க்காரைக் கைப்பற்றி நடாத்திவரும் ஒரு கட்சியால்—அபேதவாத ஆட்சியை நிறுவமுடியும் என்று மேலே சொன்னோம். அப்படி நிறுவவேண்டுமெனில் அடியில் வருமிரண்டிலொன்று மிகவும் தேவை :—

(1) எதிர்ப்பை நசுக்குவதற்குப் போதுமான அடக்கு முறைப் பலம் (2) பகைமையைத் தடைப்பதற் கனுகுண மான பொதுஜன ஆதரவு. இவ்விரண்டுக்கும் முடிவான பொருள் ஒன்றுதான். ஒரு அபேதவாத சர்க்காரிடம் பலாத்கார உணர்ச்சி—(இராது. ஒருகால்)—இருக்குமானல் அது பொதுஜன ஆதரவுடையதாகவே இருக்கும். அபேத வாத சர்க்காரை எதிர்ப்பவர்கள் நிச்சயமாகவும் பணம் படைத்த முதலாளிகளாகவே இருப்பார்கள்.

நான், ஒரு கட்சி, சர்க்காரைக் கைப்பற்றி, அச் சர்க் காரைப் பாதுகாக்கும் சௌகரியத்தையும் பெற்றிருக்கு மானல், உலகில் ஒரு அபேதவாத சொர்க்கத்தையே கட்டி விட முடியும் என்று சொன்னேன். அவ்வாறு கட்டத் தொடங்கும் வேலையை எப்படி ஆரம்பிக்கவேண்டும்? எல்லாக் கொள்ளைக்காரர்களையும், வயிறு பெருத்த முதலாளிகளையும் பிடித்துச் சுட்டுவிட வேண்டுமா? பண்டித ஜவஹர்லால் நேரு அபேதவாத இந்தியாவின் பிரதம மந்திரியாகவோ தலைவ ராகவோ வந்து விட்டாரென்று வைத்துக்கொள்வோம். அப் போது அவர் ஐக்கிய மாகாணத்திலுள்ள எல்லா தாலுக்தார் களையும், வரிசையாக நிறுத்திவைத்து வெடி மருந்தால் தூள் தூளாகத் தகர்த்துவிட வேண்டுமா? அல்லது அவர் ராஜாக் களின் பொக்கிஷங்களையும், மகா ஜனங்களின் செல்வத்தை யும் பிடுங்கி ஜனங்களுக்கெல்லாம் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிடவேண்டுமா? தொழிற்சாலைகளை—உதாரணமாக டாடா இரும்புத் தொழிற்சாலையை எடுத்துக்கொள்வோம். —அத் தொழிற்சாலையை அதிலுள்ள தொழிலாளிகளுக்குக் கொடுத்துவிட்டு அவர்களுக்கு இயன்றபடி நல்ல விதமாகவோ கெட்ட விதமாகவோ அதை நடத்திவர விட்டுவிடவேண்டுமா?

அல்லது தேசத்திலுள்ள எல்லா நிலங்களையும் மொத்த ஜனத் தொகையால் வகுத்து, ஆளுக்கு ஒவ்வொரு துண்டாகக் கொடுத்துவிட வேண்டுமா? இப்படிச் செய்வது அபேத வாதம் தானா?

இல்லை. அபேதவாதம் இதைவிட அதிக புத்திசாலித் தனமானது; நாகரிக இயல்புடையது; விஞ்ஞான மதியுடையது.

எனவே பண்டித ஜவஹர்லால் என்ன செய்யவேண்டும்?

இதற்கு விடைகாண, நாமிருக்கும் சமூகத்தையும், வெளி நாட்டிலுள்ள சமூகங்களையும் பார்க்க வேண்டும்.

உயர்வு தாழ்வு: சமூகத்தின் முக்கிய பிரச்னை

நம் சமூகத்தில் முதலில் நமக்கு தென்படுவது, மிகுந்த மனக்கஷ்டத்தைக் கொடுக்கக் கூடிய சமத்துவ மின்மை—அதாவது அந்தஸ்து வித்தியாசம், கல்வி வித்தியாசம், சந் தர்ப்ப வித்தியாசம் என்பனவாகும். தேசத்தில் பெரும் பாலான மக்கள் பசி, வறுமை, நோய், அசுத்தம், அறியாமை என்பவற்றால் அவதிப்பட்டுக் கொண்டிருக்க, குறிப்பிட்ட ஒரு சிறு பான்மையோர் மாத்திரம், சுகபோகம், டாம்பீகம், பதவி, அதிகாரம் ஆகியவைகளை அநுபவித்து வருகிறார்கள். பல தேசங்களில் இது மிக சாதாரணமானாலும் நமது தேசத் தின் நிலைமை மற்றத் தேசங்களை விட மிகவும் மோசம் என்றே சொல்ல வேண்டும். இந் நிர்ப்பாக்கிய இந்தியா வைப்போல் எந்த தேசத்தில் செல்வத்திலும் தரித்திரத்திலும், எதேச்சாதிகாரத்திலும் அடிமைத்தனத்திலும் இவ்வளவு வித்தியாசமிருக்கிறது?

இவ்வித்தியாசங்களும் அவற்றால் சமூகத்திலேற்படும் தொல்லைகளும்தான் நம் இன்றையப் பிரச்னை. இப்பிரச்னையை நியாயமான முறையில் தீர்ப்பதற்காகப் பல வருடங்களாய் எத்தனையோ பெரியார்கள் காலமெல்லாம் செலவிட்டிருக்கின்றார்கள். மக்களை தர்மம் செய்யத் தூண்டியதும், பரோபகாரிகளாயிருக்கும்படிக் கேட்டுக் கொண்டதுமெல்லாம் மேற்படி வித்தியாசத்தைச் சமன் செய்வதற்காக எழுந்தவைகளேயாம். கற்பித உலகங்கள், தரித்திரத்தைப் போற்றுதல் செல்வமுடைமையைத் தூற்றுதல், பாக்கியமுடையார் நிர்ப்பாக்கியவான்கள்மீது கருணை காட்ட வேண்டுமென்று தர்மம் வகுத்தல் என்பன இவ் உலகில் சமநிலை காண்பதற்காகக் கையாளப்பட்ட முறைகள்தான்.

ஆனால் அபேதவாதிகள் இவ்வாறு உபதேசிக்கவில்லை. அவர்கள் காண்பிக்கும் வழி நிரம்ப வித்தியாசமானதாகும் ஒரு தேர்ந்த வைத்தியன் ஒரு நோயை எவ்வாறு பார்ப்பானோ அதேபோல தம் முன்னிருக்கும் பிரச்னையைக் கவனிக்கின்றார்கள். நோயின் வேர் எங்கிருக்கிறதென்று கண்டு பிடித்து அதனை யொழிக்க முயல்கின்றார்கள். அவர்கள் சமத்துவமின்மை இன்றியமையாதது என்று கருதுவதில்லை. அதற்குப் பதிலாக அந்த சமத்துவமின்மை எங்கிருந்து முளைக்கிறதென்று கண்டு பிடித்து அதனை அங்கு தடைசெய்யப் பார்க்கிறார்கள்.

ஜீவ நிர்ணய நியாயம்

அபேதவாதிகள் மேற்கூறியவாறு வித்தியாசத்தின் (சமத்துவமின்மையின்) ஆதிகாரணம் எங்கிருக்கிறதென்று ஆராய முயலுங்காலையில் முதன் முதலில் ஜீவ நிர்ணய

சாஸ்திராசிரியர்கள் வந்து எதிர்ப்படுகின்றார்கள். அவர்கள் மக்களெல்லோரும் சமமாகப் படைக்கப்படவில்லையெனவும், நிரம்ப வேற்றுமைபெற்றே யிருக்கின்றார்களெனவும் கடுமையாக வாதிக்கின்றனர். உண்மையில் மனிதர்கள் பிறப்பினால், குணம் அளவு ஆகியவற்றில், வித்தியாசமுடையவர்கள் தாமென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஒழுக்க வாதிகள் (behaviourist) கூட இந்த ஜீவவர்க்க நிர்ணய வாதிகளின் கூற்றுக்கு மறுப்புச் சொல்லமாட்டார்கள்.

இத்தகைய ஜீவவர்க்க நிர்ணய வாதம்பற்றி எழும் ஏற்றத்தாழ்வு, சமூக சம்பந்தமான உயர்வு தாழ்வுகளை ஒரு அபேதவாதி பரிசீலனை செய்கையில், எவ்வாறு வந்து தாக்குகின்றதென்பதைக் கவனிப்போம். சமய சந்தர்ப்பங்களுக்கியன்றவாறே சக்தி பெருகவோ அருகவோ செய்யுமென்பதை அபேதவாதி ஒப்புக்கொள்கிறான். மனித சமூகத்தின் ஒரு கோடியில் அதி புத்திசாலிகளும் மேதாவிகளுமான ஒரு சிறு கூட்டத்தாரிருக்கின்றனர்; மற்றொரு கோடியில் முட்டாள்களும் அரைப்புத்தி படைத்தோருமான மற்றொரு வகுப்பாரிருக்கின்றனர்; அதே வேளையில் நடுவில் சற்றேறக்குறைய சமமான ஆற்றலுள்ள ஒரு பெருந்தொகையார் இருக்கின்றனர் என்பது வெள்ளிடைமலை.

இச் சீவவர்க்க நிர்ணய வித்யாசங்கள் சமூகத்தில் அநேக உருவங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக படிப்பிலும், கலைகளிலும், விஞ்ஞான ஆராய்ச்சி முறைகளிலும், காணலாம். அப்பால் அந்தஸ்து, செல்வம், அதிகாரம் முதலியவற்றில் காணலாம். சமூகத்திற்குள் ஸி. வி. ராமன்களும் தாகூர்களுமிருப்பதை அபேதவாதிகள் மறுக்கவில்லை

அவர்களிருப்பது பற்றி அபேதவாதிகட்குச் சந்தோஷமே. ஆனால் எத்தனையோ சக்தி மிக்க தாகூர்களும் ராமன்களும் சுய வளர்ச்சிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படாமல் அழுவாரு மடிப்பாருமற்றுச் சுடுகாட்டை யெய்துகின்றார்களே என்பது பற்றித்தான் வருத்தம். சமூகத்திற்குள் சிலர் மேதாவிகளா யிருப்பதனால்தான் சமத்துவ மின்மை உற்பத்தியாகிறதென்று அபேதவாதிகளாவது வேறு எவரேனுமாவது ஒரு போதும் சொன்னதில்லை. ஆனால் மேலே இரண்டாவதாக சொன்ன அந்தஸ்து முதலியவற்றில் ஏற்படும் வித்யாசத்தைக் கண்டே கவலைப்படுகிறார்கள். நவீன உலகில் மக்கள் சொத்து வைத்துக்கொள்வது சாதாரணமாக அனுமதிக்கப்படும் ஓர் உரிமை. அப்படியிருக்க, சொத்து அசமத்துவமாகப் பங்கிடப்பட்டிருக்கிறது. அதுதானன்றோ எல்லா சமூகத் தொல்லைக்கும் காரணம்!

செல்வத்திலிருக்கும் வித்தியாசம் ஜீவவர்க்க வித்தியாசத்தைப் பற்றியதல்ல.

நல்லது. சொத்துக்கள் ஏன் சமமாகப் பங்கிடப் படவில்லை? இதில்கூட ஜீவவர்க்க நிர்ணயத்துக்கு சம்பந்தமிருக்கிறதென்று சிலர் சொல்லலாம். நம்மில் அதிக தந்திரமுள்ளவர்கள் தான் நல்லவிதமாக வியாபாரங்களைச் செய்து அதிகமாக லாபம் சம்பாதித்து பெரும் பணக்காரர்களாக இருக்கிறார்கள் என்றும் விவாதிக்கப்படலாம். இவ்விவாதத்தை நாம் தற்சமயம் உண்மை என்று வைத்துக் கொள்ளுவோம். ஆனால் பிதுரார்ஜிதமாய் அடையும் சொத்துக்கும் இதுதான் காரணமா? பிதுரார்ஜித சொத்தை யடைவதில் ஜீவவர்க்க நிர்ணயத்துக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாதென்பது தெளிவாகத் தோன்றுகிறதன்றோ? ஒரு கோடீஸ்வரனின்

சொத்தை ஒரு மடத்தனமான புத்திரன் எவ்வளவு அடை வானோ அவ்விதம்தானே ஒரு விவேகமுள்ள புத்திரனும் அடைகின்றான்? இதிலிருந்து வாரிசுகளுக்குப் பெரிய சொத்துக்கள் கிடைப்பதற்கு சமூகப் பழக்க வழக்கங்கள் தான் காரணமென்று தெளிவாகக் காணப்படுகிறதல்லவா? இந்த பழக்கத்தை மாற்றிவிட்டால் இன்று பணக்காரராக விருப்பவர்களில் எத்தனை லக்ஷம் பேர் திடீரென்று ஏழை களாகி விடுவார்கள்!

இனி சுயார்ஜிதமாய் சொத்துச் சம்பாதிப்பவர்களைச் சற்று ஆராய்வோம். அவர்கள் தங்களுக்கு மேலான திறமை இருந்ததனால் அதிகப் பணம் சம்பாதித்தவர்களல்லவா?

ஆம். வெற்றிகரமாகத் தொழில் நடாத்த வேண்டுமானால் ஒரு விதமான திறமை வேண்டுமென்பதை மறுக்கமுடியாது. ஆனால் ஒரு விதமானவர்கள்தான் செல்வத்தை உற்பத்தி செய்யலாம், ஏனையோர் அவர்களின் தயவைப் பெற்றே காசு தேட வேண்டு மென்பது கடவுள் சித்தமாக விருக்கு மானால் அது ஆச்சரியமல்லவா? ஒரு கணித சாஸ்திரி அவன் காலத்தில் எல்லோரையும் விட அதிமேதாவியாயிருக்கிறான்.— அமரத்வம்கூட அவன் மேதையால் சித்தியாகின்றது; ஆயி னும் அவன் ஆற்றல் முழுதும் அவனுக்குச் செல்வத்தை நல் குவதில்லை. இதனால் அவன் அறிவு, சில முறைகளைக் கடைப் பிடித்துப் பணம் சம்பாதிக்கும் மிக சாதாரணமான ஒரு வியாபாரி (Business man)யின் அறிவைவிட கீழ்ப் பட்டதாகத் தோற்றவில்லையா? சரி, இதே கணித மேதாவி திடீரென ஒரு வியாபாரியாக மாறி விடுகின்றானென்று வைத்துக் கொண்டால், மறுநாள் அவனது கணித ஆராய்ச் சிச்சாலை (Laboratory) காணாத செல்வத்தை தொழில்

சாலை கண்டுவிடுகிறது. ஆகவே வியாபாரம் நடாத்துபவரின் ஆராய்ச்சிசாலைதான் செல்வத்தை யுற்பத்தி செய்யவல்ல தென்று ஏற்படுகின்றதன்றோ?

இனி இந்த இரண்டாவது ஆராய்ச்சிசாலை என்ன, அதில் எவ்வாறு செல்வம் உற்பத்தி செய்யப்பட்டு குவிக்கப்படுகிற தென்று பார்ப்போம்.

செல்வ உற்பத்தியும் சேமிப்பும்.

உலகில் ஒருபால் இயற்கையையும் இன்னொருபால் மனிதனையும் காண்கிறோம். செல்வமெல்லாம் இயற்கையின் வயிற்றிலிருக்கின்றன. அதனைப் பெற்றுக் கொள்வதற்கு மனிதன் இயற்கையில் உழைக்கவேண்டும். இவ்விதமாய் ஒருவனடையும் எல்லா பிரயோஜனமான வஸ்துக்களும் சேர்ந்துதான் அவனுடைய செல்வமாகும். எனவே இயற்கையே எல்லாச் சொத்துகளுக்கும் அடிப்படையாய் இருக்கிறது. மனிதனுடைய உழைப்பே அதை உற்பத்தி செய்யும் மார்க்கம். இதுதான் எல்லாவிதப் பொருளாதார சாஸ்திரங்களுக்கும் அடிப்படை. நிற்க.

செல்வமானது எவ்விதம் குவிகின்றது? இயற்கையி லிருந்து மனிதர்கள் தங்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு மாத்திரம் எடுத்திருந்தால் செல்வம் குவியவே குவியாது. மனிதன் இயற்கையிலிருந்து எடுக்கும் செல்வத்தின் அளவு அவனுடைய உற்பத்தித் திறமையையும், அவனுடைய ஆயுதங்களின் இயல்பையும், அவனுடைய வேலை செய்யும் முறையையும் பொருத்திருக்கிறது. செல்வத்தைச் சேர்த்து வைப்பது சாதகமாய் இருக்கவேண்டுமானால் மனிதன் தன் னுடைய வாழ்க்கைக்குத் தேவையானதைவிட அதிகமாயுற்

பத்தி செய்யும் சக்திகளை வளர்க்க வேண்டும். இதுதான் பொருள் சேர்த்து வைப்பதென்பதின் இரகசியம். மக்கள் தம் தேவைக்கு அதிகமாய்க் கிடைக்குமாறு வேட்டையாடுதல், மீன் பிடித்தல், பயிர் செய்தல் முதலிய தொழில்களை அபிவிருத்தி செய்து சாதாரண வாழ்க்கைக்குப் போதுமானதைவிட அதிகமாகப் பொருளை ஈட்டிக் கொண்டு விட்டால் அதுசேர்த்து வைப்பதற்குச் சாதகமாய்விடும்.

அல்லது, ஒரு சமூகத்தில் தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யும் வகையில் உற்பத்தி முறைகள் வளர்ந்து விட்டிருக்குமானால், (அந்த சமூகத்தில் ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு குறிப்பிட்ட அளவு செல்வத்தைச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டுவதற்கு) அவனவன் சுயேச்சையுடன் உழைக்கும் சுதந்திரமும், இயற்கையை தாராளமாக அனுபவிக்கும் உரிமையும், அவன் சம்பாதிப்பதை அவனே வைத்துக்கொள்ளும் அதிகாரமும் இருக்கவேண்டும். சேமிப்பின் அளவு, ஒவ்வொருவரும் உழைக்கும் உழைப்பையும் செலவிட்டபின் மீதி வைக்கும் அளவையும் பொறுத்திருக்கும். சில குடும்பங்கள் உற்பத்தி செய்ததையெல்லாம் செலவிட்டு விடலாம்; அப்படியாயின் எதுவும் சேமித்து வைக்க வியலாது. எனினும் அந்தக் குடும்பங்கள் பட்டினியால் வருந்திவிடா. ஏனெனில் நாம் தேவைக்குப் போதுமானதை ஈட்டிக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருப்பதோடு அதனை கடந்துமிருக்கிறோம்.

இச்சமூகத்தில் சிலர் அளவுக்குமீறி சாமர்த்தியமுடையவர்களாயிருக்கலாம். சாதாரணமாக அவர்கள் மற்றவர்களை விடக் கொஞ்சம் அதிகமாக சம்பாதிக்கலாம். மேலும் அவர்கள் சற்று செட்டாகவிருந்தால் அதிகமாகச் சேர்த்தும்

கொள்ளலாம். மற்றொரு வகையில், குறைந்த ஆற்றலுடையார் கொஞ்சமாக மீதம் பிடிக்கலாம்; அறவே மீதம் பிடியாமலு மிருக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட சமூகத்தில்—நாம் மேலே கூறியவற்றை திருப்பிக் கூறுவோம்—ஒவ்வொரு நபரும் சுதந்திரத்துடன் அவனவனுடைய ஆயுதங் (உற்பத்திக் கருவி) களைச் சொந்தத்தில் பெற்றிருப்பதோடு, இயற்கையிலிருந்து தன்னாலியன்றதை அடைந்து கொள்ள பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டு, தான் உற்பத்தி செய்யும் பொருட்களையெல்லாம் தானே வைத்துக்கொள்ள அநுமதி யளிக்கவும் பெற்றால், ஒவ்வொரு உடல் பலமுள்ள மனிதனும் கொஞ்சம் செல்வத்தைச் சேர்த்து வைக்கலாம். அப்படிச் சேர்த்து வைக்காவிட்டாலும் இஷ்டமாக தன்னைத்தானே காப்பாற்றியாவது கொள்ளலாம்.

இனி நாம் வாதத்துக்காக வைத்துக்கொண்ட சமூகத்தை விட்டுவிட்டு நம்முடைய சமூகத்தைப்பற்றி சற்று கவனிப்போம். நமது வாழ்க்கையின் அளவு, நாம் வாதத்திற்காக ஏற்படுத்திக்கொண்ட ஆதிகாலத்து சமூகத்திலிருந்ததைவிட அதிகமாக உயர்ந்துவிட்டது. நமது வாழ்க்கையின் அந்தஸ்து நாம் வாதத்திற்காக எடுத்துக்கொண்ட ஆதிகால சமூகத்தின் அந்தஸ்தைவிட எவ்வளவோ உயர்ந்துவிட்டது. ஒரு இந்திய விவசாயி பண்டைக்கால உழுபடைகளையே வைத்துக் கொண்டிருந்த போதிலும் அவனுடைய தேவைக்குப் போதுமானதைவிட அதிகமாக சம்பாதிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறான். ஆனால் அந்தோ! எத்தனை லட்சக் கணக்கான பாரதமக்கள் தினசரி ஒரு தடவைகூட வயிறாரச் சாப்பிட்டுக்களிக்கும் வசதி பெறாது திண்டாடுகிறார்கள்! அதே வேளையில் சிற்சிலர் தம் தேவையைவிட மிக அதிகமாகச் செல்வம் கண்டு அதி உன்னதமான சுகத்தை

அநுபவிக்கிறார்கள். இவ்விதம் கடுமையான தரித்திரம் ஒரு பாலும் பெருமிதமான ஆடம்பர சுகபோகம் இன்னொரு பாலும் ஏற்படுவது எப்படி?

அதற்காக முதன்முதலில் ஒரு ஏழையை எடுத்துக் கொள்வோம். இந்தியர்கள், உற்பத்தி செய்யும் ஆற்றலில் வளர்ச்சியுற்றிருப்பதால், எந்த மனிதனும் தன் தேவைக்குப் போதுமான செல்வத்தைப் பெற்றிருப்பதோடு, சற்று சேமித்துவைக்கவும் வசதிபெற்றிருக்க வேண்டுவதாகும். ஆனால் பெரும்பான்மையான இந்தியர்களோ தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்குக்கூட சௌகரியமில்லாதவர் களாயிருக்கின்றார்கள். இது ஏன்? ஏனெனில் கீழே வரும் நிர்மைகள் நாட்டிலில்லாது போய்விட்டன. அதாவது: ஜனங்கள் எல்லோரும் தங்களுக்காக உழைப்பதில்லை; எல்லோருக்கும் இயற்கையை அநுபவிக்க உரிமை இல்லை; இயன்றவரை பலருக்கு சொந்தத்தில் ஆயுதங்கள் கிடையா; அப்பால் அவர்கள் ஈட்டியவற்றை அவர்களே வைத்துக் கொள்ள அநுமதிக்கப்படுவதில்லை. இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது என்று சொல்வது ஒரு மகாபாரதமாய் முடிந்துவிடும்.

எனவே சுருங்கக்கூறினால் நம் மக்களின் தரித்திர நிலைமைக்குக் காரணம், அவர்கட்குச் சொந்தமாய் உழுபடைகள், இயந்திரங்கள், நிலம் முதலிய உற்பத்திச் சாதனங்கள் இல்லாததாகும். அவர்கட்கு உற்பத்தி செய்ய வேண்டும் போதெல்லாம் அவ்உற்பத்தி சாதனங்கட்காகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அஃதோடு எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக உற்பத்திக் கருவிகளைப்பெற முயல்கின்றார் களோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாகப் பணம் கொடுக்க

வேண்டியவர் களாகின்றனர்கள். ஆகவே தரித்திரம் அத்தனைக் கும் பிறகின்றது.

இன்னும், பெரும்பாலான இந்தியர்களிடம் உற்பத்திக் கருவிகள் வாங்க பொருளே கிடையா. அக் காரணம்பற்றி அவர்கள் தங்கள் உழைப்பைப் பிறருக்கு விற்பனைசெய்ய வேண்டியவர்களாகின்றனர்கள். எந்தத் தேசத்திலும் உற் பத்தி செய்யுமுரிமையில் கட்டுப்பாடு இல்லாமல் போகு மானல்தான் தரித்திர மில்லாது ஒழியும். சிலகால் ஒரு தேசத்தின் ஜனத்தொகையின் தேவைக்குப் போதுமான செல்வத்தை அத்தேசத்தால் வழங்க முடியாது போமாயின் அத்தேசத்தில் தரித்திரம் தலை காட்டக் கூடும்; ஆனல் நமது தேசத்திலோ அந்நிலை இன்னும் வரவில்லை.

அடுத்தபடியாக, தனவந்தர்களை எடுத்துக் கொள்வோம். சில பணக்காரர்கள் ஏழைகளைப் போல் பல்லாயிர மடங்கு —பல லக்ஷம் மடங்கு—செல்வம் குவியப் பெற்றிருக்கின் றனர்கள். அச் செல்வம் எப்படி அவர்கட்குக் கிடைத் தது? ஒரு மனிதன் எவ்வளவு சாமர்த்தியசாலியாக விருந்தாலும், இதரர்கள் உபயோகிக்கும் உற்பத்திக் கருவி களையே அவனும் உபயோகித்துக் கொண்டிருப்பானனல் நிச்சயமாகவும் ஆயிரக் கணக்கில் இன்னெருவன் உற்பத்தி செய்வது போல் அவனல் உற்பத்தி செய்துவிட முடி யாது. இயற்கையிலிருந்து அடையும் செல்வத்தைத் தவிர வேறு செல்வம் கிடையாதென்றும், தேவைக்கதிகமாக உற் பத்தி செய்த பொருட்களைத்தான் சேர்த்து வைக்கலாமென் றும் சொல்லி விட்டோம். மேலும், ஒரு சமூகத்தின் உற் பத்தியின் அளவு, அதன் உற்பத்தி முறையின் வளர்ச்சி எந்த நிலைமையிலிருக்கின்றதோ அந்த நிலையால் எல்லைப்படுத்

தப் பட்டிருக்கின்றது. மிஷின்களைக்கொண்டு உற்பத்தி செய்யும், மிகவும் சிக்கலான மேல்நாட்டு சமூகத்தில்கூட இவ்விதமாய்த் தானிருக்கின்றது. இந்தியாவில் ஓர் அளவிற் கிருப்பது போல், அச்சமூகத்திலும், தனித்து உற்பத்தி செய்ய முடியாத அளவிற்கு, உற்பத்தி முறைகள் வளர்ச்சி யடைந்து விட்டன. இது எவ்விதத்திலும் என்னுடைய வாதத்தை மறுக்கவில்லை. உற்பத்தியிலீடுபடும் எல்லா ஜனங்களுக்கும் சமபாகம் கிடைத்தால், நாம் விவாதத்துக் காக ஏற்படுத்திக் கொண்ட சமூகத்திலிருந்த நிலைமையே இருக்கும். சமூகத்திலுள்ள ஒவ்வொரு நபரும் கொஞ்சம் செல்வத்தைச் சேர்த்து வைக்க முடியும்; தரித்திரம் அறவே இருக்காது. செல்வமெல்லாம் சிலர் கைகளில் குவியா.

இச்சமூகத்திலிருக்கும் ஏராளமான தனிச்சொத்துக் களெல்லாம் எவ்விதமாகச் சேர்க்கப்பட்டன? சுறுசுறுப்பாக பாடுபட்டவர்கள் கஷ்டப்பட்டும் அனுபவிக்காமல் சொத்து வைத்ததின் பலனென்று சிலர் கூறலாம். சுறுசுறுப்பும், செட்டுத்தனமும் ஒரே வம்சத்தில் அனேக தலைமுறை களாயிருக்க முடியாது. இன்றைய தினத்தின் அனேக சொத் துக்கள், முக்கியமாக தொழில்களிலிருக்கும் சொத்துக்கள் மிகவும் பூர்வீகச் சொத்துக்களாக காணப்படவில்லை. ஆகை யால் செல்வத்தின் காரணம் திறமையோ, அல்லது சொத் துக்காரர்களின் பிறப்போவல்ல.

தனிச்சொத்தின் அடிப்படை சுரண்டுதலே

எவ்விதமாய் செல்வம் குவிகின்றதென்று நாம் பார்த்து விட்டோம். ஒரு சமூகத்தில் தேவைக்கதிமாய் உற்பத்தி ஏற்படும்போது, ஒரு மனிதன் பத்து நபர்களை அவர்களு

டைய வாழ்க்கையின் தேவைக்குப் போதுமானவைதக் கொடுப்பதாகச் சொல்லி நியமித்து, அவர்கள் அதிகமாய் உற்பத்தி செய்யும் செல்வத்தை எல்லாம் தானே அபகரித்துக் கொண்டால், அவன் மற்ற தனித்து வேலை செய்பவர்களைவிட பத்து மடங்கு அதிகமாக செல்வத்தைச் சேர்த்துக் கொண்டு அதி சீக்கிரத்தில் ஒரு பெரிய பணக்காரனுய்விட முடியும். அவன் எவ்வளவு ஆட்களை நியமிக்கின்ருனே அவ்வளவு அவனுடைய செல்வம் பெருகுமென்பது தேற்றம். அதே விதமாக ஒருவன் நிலங்களை அபகரித்துக்கொண்டு, மற்றவர்கள் தங்களுடைய உழைப்பில் ஒரு பங்கு கொடுத்தாலொழிய அவர்களை அந்நிலத்தில் சாகுபடி செய்யவிடுவதில்லை என்று தடை செய்வானுனால் அவனும் மற்றவர்களைவிட அதிகப் பணக்காரனுய்விடக்கூடும். அவன் எந்த அளவுக்கு நிலத்தை கட்டியாள்கின்ருனே அந்த அளவிற்கும், அவன் எவ்வளவு பங்கு வசூலிக்கின்ருனே அந்த அளவிற்கும் அவனுடைய செல்வம் பெருகும். மற்ற இயற்கைப் பொருட்களின் சங்கதியும் இப்படியே. இதுதான் செல்வ உயர்வு தாழ்வின் மர்மம். சுரண்டுதலென்பதின் உண்மையான அருத்தமும் இதுவே.

'ஒரு மனிதன், சுலபமாக, தானே சம்பாதித்து அதன் பலனை தானே வைத்துக்கொள்ள முடிந்தபோது, அவன் மற்ருெருவனுக்காக ஏன் வேலைசெய்து தன்னுடைய கஷ்டத்தின் பலனின் ஒரு பாகத்தை ஏமாந்து இழக்க வேண்டும்?' என்ற கேள்வி பிறக்கலாம். இக்கேள்விக்கு திருப்திகரமான பதிலளிப்பதாக விருந்தால் மானிட வர்க்கத்தின் சமூக, அரசியல் சரித்திரம் முழுவதையும் ஆராய வேண்டும். சுருக்கமாகக் கூறவேண்டுமானல் மேற்கூறிய வாறு ஒருவன் பிறர்க்குழைத்து ஏமாறுவதற்கு யாதொரு

காரணமும் இடையாது. உண்மையில், சரித்திரம் முழுவதிலும், பலவந்தப்படுத்தப் பட்டாலொழிய, யாரும் அப்படி செய்து வந்ததாகக் காணமுடியாது.

என்னுடையது உன்னுடையதென்று காடுகள் அபகரிக்கப்படாமலிருந்து, மனிதனுக்கு அக்காடுகளைப் பண்படுத்தி சாகுபடி செய்ய அனுமதியிருந்த சமூகத்தில் பொது லாபத்துக்காகவேயொழிய எவனும் மற்றொருவனுக்காகப் பாடுபடவில்லை. இயற்கை வசதிகள்தான் முதன்முதலாக அபகரிக்கப்பட்டன. இந்த அபகரிப்பு, ஆரம்ப காலங்களில் பலாத்காரமாகச் செய்யப்பட்டது. ஒவ்வொரு தேசத்திலும் ஒரு வகுப்பார் தோன்றி, இயற்கை வசதிகளை—முக்கியமாக நிலங்களை—அபகரித்துக்கொண்டு மற்றவர்களை எல்லாம் அடிமைகளாகவும், பண்ணையடிமைகளாகவும், குத்தகை வாங்கும் "சுதந்திரம் மட்டிலுமுடையவர்களாகவும்" செய்து விட்டார்கள்.

மனிதர்கள் தனித்தனியே தொழில் செய்யுங் காலம் வரையில், தொழிலைக்கொண்டு சுரண்டுதல்களும், தொழில் வருமான வித்தியாசங்களும் அதிகமாக ஏற்படவில்லை. உற்பத்தி முறைகள் அபிவிருத்தியுற்று, பெரிய பட்டணங்களுண்டான காரணத்தால், அடிமைகளும் மற்ற தொழிலாளிகளும் கூட்டம் கூட்டமாக ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டியதாயிற்று. எனவே தொழில் வருமானங்களில் பெரிய வித்தியாசங்கள் ஏற்படலாயின. நீராவியின் சக்தியைக் கண்டு பிடித்த காலமாகிய தொழிற் புரட்சிக் காலத்திலிருந்துதான் அனேகம்பேர்களைத் தொழிற்சாலைகளில் நியமித்து அவர்களைச் சுரண்டி பெரிய சொத்துக்களைச் சேர்க்கச் சாதகமேற்பட்டது.

'சமூகத்தில் சிலர், ஒருவரையும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளாமலும், ஒருவரிடத்திலிருந்தும் வாடகையோ மற்ற விதமான பங்கோ வாங்காமலுமிருந்தும் மற்ற சில பணக்காரர்களைவிட அதிகப் பணக்காரர்களாக இருக்கின்றார்களே, அது எப்படி ?' யென்று கேட்கப்படலாம். உதாரணமாக வியாபாரிகள், சாகச வியாபாரிகள் (Speculators) வட்டிக்குப்பணம் கொடுக்கின்றவர்கள் முதலியவர்கள் தாமாக செல்வத்தை யுற்பத்தி செய்வதும் கிடையாது; மற்ற உற்பத்தி செய்கிறவர்களையும் நேராக நின்று சுரண்டுவதும் கிடையாது. அவர்களுடைய சொத்துக்கள் எந்த வழியாய் வந்தாலும் சரி, சமூகத்தின் மொத்த உற்பத்தியிலிருந்துதான் வருகிற தென்பது மிகவும் வெளிப்படை.

செல்வம் உழைப்பால்தான் உற்பத்தி செய்யப்படுகிற தென்று நாம் காண்பித்து விட்டோம். உழைப்பவர்களுக்குக் கிடைக்கும் பங்கு போக மீதமெல்லாம் சுரண்டும் வகுப்பார்களின் சொத்தாய் விடுகிறது. இவ் வகுப்பார்கள் இவர்களால் அமர்த்தப்பட்ட தொழிலாளிகளால் உற்பத்திச் செய்யப்படும் எல்லாப் பொருட்களையும் தாமே யனுபவிக்க முடியாது. அவைகளை விற்று மற்ற வஸ்துக்களை வாங்கவேண்டும். இதனால்தான் வியாபாரிகளும் சாகச வியாபாரிகளும் (Specula tors) ஏற்படுகிறார்கள். தொழிற்சாலை முதலாளிகள் உற்பத்திப் பொருட்களை விற்று, தொழிலுற்பத்திக்குத் தேவையான சாமான்களை வாங்கவேண்டியதாய் இருப்பதால், அவர்களுக்குக் கிடைத்த அதிக செல்வத்தின் ஒரு பாகத்தை வியாபாரிகளுக்கும் சாகச வியாபாரிகளு (Specu-lators) க்கும், (விற்பனை செய்து கொள்முதல் செய்கிறவர்களென்ற முறையில்) கொடுத்து விடுகின்றார்கள். இதுதான் வட்டிக்குக் கொடுக்கிறவர்களுடையவும் நிலைமை. அவர்கள்

கொடுத்த பணத்துக்கு வட்டி வாங்குவதாக சொல்லப்படுகிறது. அந்த வட்டியும் உற்பத்தி முறையில் சம்பாதித்த அதிக செல்வத்திலிருந்துதான் கொடுக்கப்படுகிறது. லாபம், வட்டி, இடையிலிருப்பவர்களின் கமிஷன் முதலியவைகளெல்லாம் உற்பத்திச் சாதனங்களை முழுதும் அபகரித்துக் கொண்ட முதலாளிகளுக்கு, தொழிலாளிகள் அதிகமாக உற்பத்திசெய்து நல்கிய நிதியிலிருந்துதான் கொடுக்கப்படுகின்றன. பணம், தானகே பணத்தைச் சம்பாதியாது. மற்ற எவ்வித வியாபார தந்திரங்களைக்கொண்டும் செல்வத்தை யுண்டுபண்ணமுடியாது. முதலாளித்துவ சமூகத்தில் நடைபெறும் எல்லாத் திருவிளையாடல்களும், மீதியிருக்கிற சொத்தில் எவ்வளவு பங்கு போட்டுக்கொள்ள முடியுமோ அவ்வளவு பங்கு போட்டுக் கொள்வதற்காகத்தான். இதுதான் முதலாளித்துவப் போட்டியின் மர்மம். இதுதான் மிகவும் கஷ்டப்பட்டு சர்வகலாசாலைகளில் போதிக்கப்படும் வியாபார முறைகளின் ரகசியம்.

மறுபடியும் திருப்பிச்சொல்ல வேண்டுமானல், (இதைத் திரும்பச் சொல்வது நன்றாகவே இருக்கும்) உற்பத்திச் சாதனங்களை சிலர் கைப்பற்றிக்கொண்டு, மற்றவர்களைச் சுரண்டும் செல்வத்திலிருந்துதான் தற்கால சமூக அமைப்பில் எல்லா வகுப்பாரும் அவரவர்களுடைய பங்கை யடைகின்றனர்கள். இந்த "மத்திய ஆட்கள்" எவ்விதத்திலாவது செல்வத்தை யுற்பத்தி செய்கிறார்களென்று நம்புவது தவறு. அவர்கள் பணத்தை சம்பாதிக்கிறார்கள் என்பதற்கு, குவிந்திருக்கும் செல்வத்தின் ஒரு பெரிய பாகத்தை தம் பக்கம் சரியும்படிச் செய்கின்றார்களென்பதே அருத்தம். வக்கீல்கள், வைத்தியர்கள் முதலிய (Profession) தொழிற்காரர்களின் சொத்தின் ஒரு பெரும் பாகம்

கூட இந்தக் குவியலிலிருந்துதான் வருகிறது; (அப்பெரிய பாகம் போக) சிறிய பாகம் தொழிலாளிகள் விவசாயிகள் முதலிய உண்மையான உற்பத்திக்காரர்களின் தேட்டத்திலிருந்து போகிறது.

இனி, தொகுத்துக் கூறுவோம். மக்களுக்குச் செல்வத்தை வழங்குவதற்கு ஆதிகாரணமாகிய இயற்கையும் உற்பத்திக் கருவிகளும் சிலருக்குத் தனியுடைமையாகிவிட்ட காரணத்தினாலேயே செல்வ நிலைமையில் ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. இதுவே பொருளாதாரச் சுரண்டுதலுக்கு மூகாந்திரம்—அதாவது உற்பத்தி செய்யும் உண்மை உழைப்பாளிகட்கு ஒரு குறிப்பிட்ட வாழ்வுக்கு வேண்டியதை மட்டிலும் கொடுத்துவிட்டு மற்றவற்றை யெல்லாம் முதலாளிகள் கொள்ளையிட்டுக் கொள்வதற்குச் சாதகம். ஒரு முதலாளி தனக்குக் கீழ் உற்பத்திக்காரர்களை கூலியாட்களாக நியமிக்கும் காலையில் பொருளாதாரச் சுரண்டுதல் (கொள்ளை) நேரடியாக நிகழும். மற்றப்படி நிலத்தின் வாடகை, மற்ற வசதிகளின் வாடகை யென்ற பெயரால் உழைப்பைப் பெறுவாரெனில் கொள்ளை மறைமுகமாக நடைபெறும்.

ஆரம்பகாலத்தில் இந்த உற்பத்திக் கேற்ற இயற்கை வசதிகளும் ஆயுதங்களும்* பலவந்தமாக தனித்த நபர்களால் கைக் கொள்ளப்பட்டன. இதற்கு "பூர்வீகக் குவியல்" (primitive accumulation) என்று பெயர். இவ்விதமாய்ச் சேர்க்கப்பட்ட சொத்துக்கள், பலாத்காரத்தை உபயோகிக்க திறமையுடையவர்களாக விருந்த சிலருடைய கையில், அடிமைகளின் உழைப்பினாலும் கட்டுப்பட்ட தொழி

---

*இவைகளை எல்லாம் சேர்த்து அபேதவாதிகள் தம்முடைய நூல்களில் "உற்பத்திச் சாதனங்கள்" என்று சொல்லுவார்கள்.

லாளிகளின் உழைப்பினாலும் மலைபோல் பெருகலாயின. கடைசியாக, இந்தியாவில் அடித்த கொள்ளையும் சில ஆங்கிலேய, ஜர்மானியர்கள் கண்டுபிடித்த நூதன கருவி (inventions)களும் சேர்ந்து தொழிற் புரட்சியை உண்டுபண்ணின. இது உண்மையில் நோராக சாண்டும் ஓர் யுகத்துக்குக்கொண்டு வந்து விட்டுவிட்டது.

உயர்வு தாழ்வுகளின் காரணங்கள் இப்படி இருப்பதால் அபேதவாதிகள் இப்பிரச்னையை எவ்விதமாய் தீர்க்க (solve) நினைக்கின்றார்கள் என்பதைப்பற்றிச் சிந்திப்பதில் யாதொருவித கஷ்டமும் ஏற்படாது

உயர்வு தாழ்வுக்கு மருந்து

தத்துவார்த்தமாக இரண்டு முறைகள் ஏற்படலாம். இவைகளில் எது ஏற்பட்டாலும் ஒரு உயர்வு தாழ்வில்லாத சந்தோஷகரமான சமூகம் ஏற்பட்டுவிடும். முதல் முறைப் பிரகாரம், ஒவ்வொருவனுக்கும் வேலைசெய்ய சுதந்திரமளிக்கக் கூடியவாறு சமூகத்தை யமைக்கவேண்டும். அதாவது ஒவ்வொருவனும் மற்றவர்களுக்கு யாதொரு பங்கும் கொடுக்காமல் தன்னுடைய நிலத்தை தானே சாகுபடி செய்யவேண்டும்; அல்லது தன்னுடைய சொந்தக் கூடத்தில் தனக்கு வேண்டிய கருவிகளைச் செய்யவேண்டும். ஒருவன் தனித்து உபயோகிக்கக்கூடிய உற்பத்திச் சாதனங்களைவிட அதிகமான சாதனங்கள் எவனுக்கும் கொடுக்கக் கூடாது.

தற்கால சமூகத்தை மேற்கூறிய விதமாய் மாற்ற வேண்டுமானால் அனேக மாறுதல்களை செய்து, பலப்பல தடைகளை உட்புகுத்தவேண்டும். அப்படிப்பட்ட சமூகம்

ஒழுங்காக வேலைசெய்ய வேண்டுமானால் ஒரு பெரிய அளவிற்கு சமூக ஒழுங்கும் மேற்பார்வையும் அவசியமாய் இருக்கும். இத்தகைய ஒழுங்குமுறைகள் பண்டைக் காலப் பொருளாதார அமைப்புடைய ஒரு சமூகத்திற்குத் தேவைப்படா. அப்படிப்பட்ட சமூகத்தில் இருப்புப் பாதைகளும், தந்திகளும், (மிகவும் ஆதிகாலத்து போக்குவரத்து சாதனங்களைத் தவிர) மற்ற போக்குவரத்துச் சாதனங்கள் எதுவும் கிடையா. மேலும் ராணுவ விஷயத்தில் அப்படிப் பட்ட சமூகம் மிகவும் பலமில்லாததாகவும் மெஷின் முதலியவைகளைக்கொண்டு யுத்தம் செய்யக்கூடிய தேசங்களுக்கு இலகுவில் இரையாகிவிடக் கூடியதாகவுமிருக்கும். வாழ்க்கையின் அளவு சம்பந்தப்பட்ட மட்டில் இந்தியாவைப் போன்று ஏராளமான ஜனத்தொகை இருக்கும் தேசமாயிருந்தால், ஒவ்வொருவனும் சம்பாதிக்கக்கூடியது மிகவும் சொற்பமாகவே இருக்கமுடியும்; ஆகையால் வாழ்க்கையின் அளவு மிகவும் குறைந்துவிடும்.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால், தற்கால கெடுதிகளிலிருந்து தப்புவதற்காக இந்த பழைய முறையை கைக்கொள்ள முடிந்தாலும் அனேக காரணங்களைக்கொண்டு அதைக் கைக்கொள்ளுவது சாதகமாய் இராது.

எனவே இந்த (Solution) பரிஹார முறையை கைக்கொள்ளுவது சாத்தியப்படாது. இதை நடத்திவைக்க ஒரு சர்வாதிகாரம் அவசியமாகவிருக்கும். மற்றப்படி உரிமைகளை எல்லாம் அழித்து சமூகத்தை முழுவதும் மாற்ற முடியாது.

அபேதவாதிகளின் பரிஹார முறை

செல்வம் எவ்வாறு குவிகின்றதென்று நாம் விளக்கிக் காண்பித்தபடியால், உற்பத்திச் சாதனங்களை தனிப்பட்டவர்

கையிலிருந்து எடுத்து, சமூகம் முழுவதற்கும் சொந்தமாகச் செய்து கொள்வதே அபேதவாதி கூறும் பரிஹார முறை என்பது விளங்கியிருக்கலாம்.

உற்பத்தி சாதனங்களின் பேரிலுள்ள தனியுடைமையை யொழித்து, பொது உடைமையை ஏற்படுத்தினால், பொருளாதாரச் சுரண்டுதல் வேரோடழிவுற்று பொருளாதார வித்தியாசங்களும் மாய்ந்துவிடும். அதாவது இச்சமூகத்திலுள்ள கெடுதிகளின் அடிப்படை நீங்கிவிடும். நாம் மேலே பார்த்ததுபோல், செல்வம் சில தனிப்பட்டவர்களிடத்தில் குவிவதற்கு மூலகாரணம் தொழிலாளிகளைச் சுரண்டுதல்தான். சமூக உடைமை ஏற்பட்டு விட்டால், ஜனங்கள் மற்றவர்களுக்காகப் பாடுபடமாட்டார்கள். அவர்கள், தனித்த முறையில்லாமல் கூட்டு முறையில், தங்களுக்காகவே பாடுபடுவார்கள். அவர்கள் உற்பத்தி செய்வதெல்லாம் முதலாளிகளுக்காக விராது. பொது உடைமை என்றால், செல்வத்தை எல்லாம் பொதுவாக்கி நியாயமான விநியோகம் செய்வதென்பது அருத்தம். ஆரம்பத்தில் வேலையின் அளவுக்கும் குணத்துக்கும் தக்கபடி பங்கு கொடுக்கப்படும். கடைசியாக ஒவ்வொருவருக்கும் அவரவர்களின் தேவைக்குத் தக்கபடி கொடுக்கப்படும். அதுகாலை தனியாக அவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படுவது தேசப் பாதுகாப்பு, சர்க்கார் நிர்வாகம், கல்விச்சாலைகள், ஆஸ்பத்திரி ஆகியவைகளுக்கும் மற்ற பொது விஷயங்களுக்கும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு தான். போக மீதமெல்லாம் உழைப்பாளிகட்குப் பங்கிட்டு கொடுக்கப்பட்டுவிடும்.

இவ்வாறு உற்பத்திச் சாதனங்களை யெல்லாம் சமூகத்திற்குச் சொந்தமாக்கி விடுவதுதான் அபேதவாதத்தின் அடிப்படையான கொள்கை. அபேதவாத முறைப்படி சமூகத்தில்

செய்ய நினைக்கும் எந்த மாற்றியமைப்பு முறையையும் உற்பத்தி சாதனங்களின் பேரிலேற்பட்டிருக்கும் தனிச் சொத்துரிமையை ஒழிப்பதிலிருந்துதான் ஆரம்பிக்கவேண்டும்.

அபேதவாத சமூகத்தை நிலைநாட்ட விரும்பும் ஒரு புதிய சர்க்கார் இக்காரியத்தை ஒரே அடியில் சாதித்துவிட முடியாது; எனினும் அது வெற்றிபெறவேண்டுமானால், தேசத்தின் பொருளாதார வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாய் இருக்கும் எல்லாப் பெரிய உற்பத்திச் சாலைகளிலும் இம் மாறுதலை உடனே ஏற்படுத்திவிட வேண்டும்.

முன்னேற்றமடைந்த சமூகங்களில் உற்பத்தி சாதனங்களோடு விநியோக முறையும் வளர்கின்றன. (—அதாவது பாங்குகள், வியாபார நிலயங்கள், போக்குவரத்து சாதனங்கள் முதலியவைகளும் வளர்கின்றன.) பின் சொல்லப்பட்ட விநியோக முறை முன்னே கூறப்பட்ட உற்பத்திச் சாதனங்களிலிருந்து பிறந்து அவைகளை ஆதரிக்கும். உற்பத்தி சக்தியை சுற்றிக்கொண்டிருக்குபடிச் செய்வதுதான் பாங்கு, வியாபார நிலயங்கள் முதலியவற்றின் வேலை. எனவே உற்பத்திச் சாதனங்களை சமூகத்துக்குக் சொந்தமாக்கிக் கொள்வதோடு நின்றுவிடாமல் பின் சொல்லப்பட்டவைகளேயும் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுவதாகும்.

இப்பொழுது, பண்டித ஜவஹர்லால் அதிகாரத்தை யடைந்துவிட்டால் அவர் என்னென்ன செய்யவேண்டுமென்பதை நாம் ஒருவாறு சொல்லிவிட்டோம்.

அடுத்த அதிகாரத்தில் காங்கிரஸ் அபேதவாதக் கட்சி இக்கொள்கைகளை எவ்விதமாய் இந்தியாவில் நிறைவேற்ற உத்தேசித்திருக்கிற தென்றும் அதனுடைய திட்டங்களென்ன வென்பதையும் காண்பிக்க முயலுவேன்.

அத்தியாயம் II

காங்கிரஸ் அபேதவாதக் கட்சியின் கொள்கையென்ன?

அன்னிய சர்க்காருக்குப் பதிலாக ஒரு உள்நாட்டு சர்க்கார் ஏற்பட்டு சொத்துரிமைகளை எல்லாம் அப்படியே விட்டுவிடுமானால், அதை சுதந்திரத்தின் சாயல் என்றுகூட சொல்லமுடியாது.

—ஜவஹர்லால் நேரு

அபேதவாதமும் இந்தியாவும்

காங்கிரஸ் அபேதவாத கட்சியின் சட்டதிட்டங்களில் குறித்திருக்கிறபடி அதன் நோக்கம், "ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை விட்டுப் பிரிந்துவிடுவதென்ற அருத்தத்தில் பூரண சுதந்திரமடைந்து, ஒரு அபேதவாத சமூகத்தை ஏற்படுத்துவது" ஆகும்.

இது போதுமான அளவு தெளிவாகவும், நேராகவு மிருக்கிறது. இக்கட்சிக்கு இரண்டு நோக்கங்களுள. முதல் நோக்கம் இந்திய தேசிய காங்கிரஸின் நோக்கந்தான். ஆனால் பூரணசுதந்திரமென்றால் ஆங்கில ஏகாதிபத்தியத்தை விட்டு பிரிந்து விடுகிறதென்று விளக்கியிருக்கின்றது.*

சுதந்திரமடைந்த இந்தியா அதன் பொருளாதார வாழ்க்கையை அபேதவாத முறையில் மாற்றியமைக்க

வேண்டுமென்பதுதான் கட்சியின் இரண்டாவது நோக்கம்.*
ஏன் ?

இந்நோக்கத்திற்கு அடிப்படையாய் இருப்பது நல்ல நோக்கங்களும் அவைகளின் பிரயோஜனங்களுமாம். அவைகளைத் தீர்மானித்துவிட்டால் மற்ற விஷயங்களை ஒப்புக்கொண்டே தீரவேண்டும்.

நம்முடைய நோக்கம், மக்கட்கு அரசியலிலும், பொருளாதாரத்திலும், சுதந்திரம் அளித்து, அவர்கட்கு எல்லாவித சுரண்டுதலிலிருந்தும் விடுதலை கொடுப்பதோடு, மேலும் மேலும் விருத்தியடைய யாதொரு தடையுமின்றி சந்தர்ப்பங்களையும் கொடுக்க வேண்டுமென்பதாக விருக்குமானால், நாம் அபேதவாதத்தைக் கைக்கொண்டே தீரவேண்டும். மேலும், சமூகத்தைக் குழப்பிக் கொண்டிருக்கும் அவல சக்திகளை அடக்கி, ஜனங்களுக்கு அதிகமான லாபம் கிடைக்கத்தக்கவாறு சமூகத்தை மாற்றியமைத்து மனிதர்களின் அறிவையும் ஞானத்தையும் விருத்திசெய்து

* இந்நோக்கங்களை ஜவஹர்லால் நேருவின் அடியில் கண்ட வாக்கியத்தோடு ஒத்துப்பார்க்கவும்: "இந்தியாவின் முக்கிய நோக்கம் அதில் நடக்கும் சுரண்டுதலை ஒழிக்க வேண்டுமென்பதாகத்தானிருக்க வேண்டும். அரசியலில் இந்தியா பூரண சுதந்திரமடைந்ததும் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தில் இந்தியாவை அடக்கிவைத்திருக்கும் ஆங்கிலேய சம்பந்தத்தை முறித்துவிட வேண்டும். (நமது முதல் நோக்கம்—G. P. N.) பொருளாதாரத்திலும் சமூக வாழ்க்கையிலும், எல்லாவித விசேஷமான உரிமை பெற்ற வகுப்புகளையும் சொத்துரிமைகளையும் தொலைக்க வேண்டும். (நமது இரண்டாவது நோக்கம்—G.P.N.—(இந்தியா எந்த பக்கம் செல்லுகிறது என்ற கட்டுரையில் கூறுகிறார்.)

மானிட நன்மைகளுக்காக உபயோகப்படுத்த வேண்டியது நமது நோக்கமானல், அபேதவாதத்தைவிட்டு நாம் தப்ப முடியாது.

யாருடைய விருப்பங்களும் நோக்கங்களும் இதற்கு மாறுபட்டவைகளா யிருக்கின்றனவோ, அவர்கள் இப்புத்தகத்தை மேற்கொண்டு படிக்கும் சிரமத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

நான் நம்புவதுபோல் இவைகளே நம்முடைய நோக்கங்களாயிருந்தால், இந்தியாவில் அபேதவாத சமூகத்தின் அவசியம் என்ன வென்பதைக் காட்ட யாதொரு விளக்கமும் வேண்டியதில்லை. இந்தியாவிலும் ஒரு பக்கத்தில் தரித்திரமும்—அல்ல, பசியும், மற்றொரு பக்கத்தில் ஏராளமான செல்வமும், சுகபோகமும் இருக்கின்றன. இந்தியாவிலும் சுரண்டுதலிருக்கிறது; இங்கும்கூட உற்பத்திச் சாதனங்களெல்லாம் தனிப்பட்டவர் கைகளில்தானிருக்கின்றன. அதாவது, தற்காலத்து சமூகத்தின் கெடுதிகளுக்கு அஸ்திவாரமாயிருக்கும் சிலர், பலரை சுரண்டுவதால் ஏற்படும் உயர்வு தாழ்வு இந்தியாவிலுமிருக்கிறது.

இதற்குக் காரணம் ஆங்கிலேய அரசாங்கமல்ல. அவ்வரசாங்கத்தோடு சம்பந்தப்பட்டதுமல்ல. ஆங்கிலேய அரசாங்கத்துக்குப் பிறகும் இது இப்படித்தானிருக்கும். அன்னிய அரசாங்கம் ஒழிந்த உடனே இந்தியாவின் தரித்திரம் நீங்கி, பலரை சிலர் சுரண்டுவது நின்றுவிடாது.

இந்திய நாகரிகம் அபேதவாதத்துக்கு விரோதமானதல்ல

இந்தியாவின் நிலைமைகள் நூதனமானவைகளென்றும், இந்தியாவின் பழக்க வழக்கங்கள் வித்தியாசப் பட்டவை

களென்றும், இந்தியா தொழில்களில் மிகவும் பிற்போக்கான தென்றும், ஆகையால் அபேதவாதக் கொள்கைகள் இந்தியாவில் நடைபெற மாட்டாவென்றும் அடிக்கடிச் சொல்லப் லப்படுகிறது. இப்படிச் சொல்வதால் அபேதவாதத்தின் அடிப்படையான கொள்கைகள் இந்திய நிலைமைகளுக்கு சரிப்படாவென்று அருத்தம் கொண்டால் இதைவிட பெரிய தவறிருப்பதாகச் சிந்திக்க முடியாது.

மேலே சொன்ன சொத்துக் குவிகின்ற முறை மற்றத் தேசங்களில் எவ்வாறு உண்மையாய் இருக்கிறதோ, அவ்வாறே இந்தியாவிலும் உண்மையாய் இருக்கிறது. எந்த விதத்தில் சொத்துக் குவிதலை மற்ற தேசங்களில் நிறுத்தக் கூடுமோ அதேவிதமாய்த்தான் இந்தியாவிலும் நிறுத்த முடியும். இந்தியாவின் விசேஷ நிலைமைகளை யுத்தேசித்து, அபேதவாத கொள்கைக்களை எவ்விதமாய் நிறைவேற்றலாமென்று தான் கவனிக்க முடியுமே தவிர, அந்த கொள்கைகளை மாற்றிவிட முடியாது. சுரண்டுதலையும், ஏற்றத்தாழ்வாகச் செல்வம் பிரிக்கப்படுவதையும் ஒழிக்கும்பொருட்டு உற்பத்திச்சாதனங்களை சமூக உடைமைக்குக் கொண்டு வரவேண்டுவது, உலகத்திலுள்ள மற்ற தேசங்களில் எவ்வளவு அவசியமோ அவ்வளவு இந்தியாவிலும் அவசியமாகும்.

இந்திய பழக்க வழக்கங்கள் சம்பந்தப்பட்ட வரையில், எனக்கு தெரிந்தமட்டில் அவைகள் வாழ்க்கையின் சுகங்களையும் உரிமைகளையும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதற்கு விரோதமானவைகளல்ல. தனி முன்னேற்றம் கருதும் ஒருமைக் குணம்தான் இந்திய நாகரிகத்தின் விசேஷமுறை என்றும், அது அபேதவாதக் கொள்கைகளுக்கு வேறுபட்ட தென்றும் சிலர் கூறுகின்றார்கள். இந்த விஷயத்தை

இவ்வாறு சொல்வது இவ்விரண்டு பதங்களின் அருத்தங்களையும் தெரியாமல், வார்த்தைகளின் உபயோகத்தைப்பற்றி சண்டை செய்வதேயாகும். மனிதன் மிகவும் மேலான ஸ்திதியை யடையவேண்டுமென்ற நோக்கத்துக்காக தனித்துப் பாடுபடவேண்டுமென்னும் கருத்தில்தான் ஒருமைக் குணம் வழங்கப்பட்டதேயன்றி முதலாளித்துவ சமூகத்திலிருப்பதுபோல் சுயலாபத்துக்காக தனித்த முறையில் பாடுபட வேண்டுமென்ற கருத்தில் வழங்கப்படவில்லை. மனிதன் மிகவும் உயர்ந்த ஸ்திதியை யடையவேண்டுமானால், எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபடுவதால்தான் அப்படிச் செய்ய முடியுமென்று காண்பிப்பதில் அபேதவாதிக்கு யாதொரு கஷ்டமும் நேரிடாது. அபேதவாத சமூகத்தில்தான் சாதாரண மனிதன் பிளேடோ, மார்க்ஸ் முதலியவர்களின் பதவியை யடைய முடியுமென்று டிராட்ஸ்கி எழுதவில்லையா?

இனி இந்தியா தொழிலில் மிகவும் பிற்போக்கடைந்திருக்கிறது என்ற கூற்றும் நம்மை, அதைரியப்படுத்த வேண்டியதில்லை. இப்பிற்போக்கான நிலைமைதான் நமக்கு உதவி செய்யும். ஏனென்றால் இந்த நிலைமையில்தான் எதிர்ப்பு மிகவும் பலவீனமாக விருக்கும். இவ்விதமாய் பிற்போக்கடைந்த தேசத்தில் அபேதவாதத்தை நிலைநிறுத்த முடியுமா வென்று சந்தேகிப்பவர்களுக்கு, உலகத்திலுள்ள மிகப் பிற்போக்கடைந்த பகுதிகளில் ருஷியர்கள் என்ன செய்கிறார்களென்பதை சற்று ஞாபகப்படுத்தினால் போதும். மாஸ்கோவில் எவ்விதமாய் அபேதவாத சமூகம் நிறுவப்படுகின்றதோ அதே விதமாய்த்தான் உஸ்பேகிஸ்தானத்திலும் நிறுவப்படுகிறது. ஒரு அபேதவாதக் கட்சி அதிகாரம் பெற்று, அவ்வதிகாரத்தை அமுல் நடாத்தப்

போதிய பலமும் பெற்றிருந்தால் தற்கால விஞ்ஞான சாஸ்திரத்தின் உதவியைக்கொண்டு உலகத்திலுள்ள எந்த பாகத்திலும் ஒரு அபேதவாத சமூகத்தை யுற்பத்தி செய்துவிட முடியும்.

காங்கிரசும் அபேதவாதமும்

இதுபற்றிய காங்கிரஸின் நிலைமை என்ன?

நாம் மேலே சொல்லியிருக்கும் விஷயங்களைப்பற்றி காங்கிரஸ் முற்றிலும் கவலைப்படாமலிருக்கிறதென்றும், அதன் நோக்கம் தேச விடுதலையைக் கடந்து செல்லவில்லை யென்றும் நினைப்பது பிசகாகும். உண்மையில் காங்கிரஸ் முன்னிருக்கும் மேற்சொன்ன இரண்டுவித பிரச்னைகளையும் காங்கிரஸ் அங்கிகரித்துக்கொண்டு, சற்று மனமில்லாமல், லேசாக, இந்திய ஜனங்கட்கு, ஏகாதிபத்தியத்தி லிருந்தும், உள்நாட்டு சுரண்டுதல் முறையிலிருந்தும் விடுதலை கொடுக்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டிருக்கிறது.

தற்சமயம் சற்று ஞாபகமற்றுப்போன, 1929-ம் வருஷத்தின் அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அடியில் கண்டபடி கூறுகிறது:—

"இச்சபையின் அபிப்பிராயத்தில் பாரதமக்களின் கொடிய தரித்திரமும், துன்பமும், வெளிநாட்டார் சுரண்டுதலால் மாத்திரம் ஏற்பட்டவைகளல்ல. சமூகத்தின் பொருளாதார அமைப்பும் அதற்குக் காரணமாய் இருக்கிறது. தம் சுரண்டுதல் அதிக காலத்துக்கு நடக்கும் பொருட்டு அன்னிய அதிபர்கள் இந்நாட்டுப் பொருளாதார அமைப்பைக் காப்பாற்றுகிறார்கள். ஆகையால் இந்திய மக்களின் தரித்திரத்தையும், துன்பத்தையும் நீக்குவதற்காகவும்,

அவர்களின் நிலைமையை திருத்துவதற்காகவும், மிகவும் மோசமான உயர்வு தாழ்வுகளை ஒழிப்பதற்காகவும், தற்காலத்திய பொருளாதார சமூக அமைப்பில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்". —(பம்பாய், 1929)

இதில் சமூகத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. அப்படி செய்வதன் காரணங்களை ஒரு அபேதவாதியால் எவ்வளவு தெளிவாக விவரிக்க முடியுமோ, அவ்வளவு தெளிவாக விவரிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் நமக்கும் காங்கிரஸுக்கும் எந்த விஷயத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது? வித்தியாசம் என்னவென்றால் காங்கிரஸ் "புரட்சிகரமான" மாறுதலைப்பற்றி பேசிவிட்டு அதன் தலையை மணலில் புதைத்துக் கொள்ளுகிறது.

நான், நம்மை எதிர்த்து, கேவலமாக பேசும் காங்கிரஸ் காரரை மிகவும் (Earnestness) மனமார கேட்கிறேன்: "சமூகத்தின் பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாறுதல்" என்ற பதத்துக்கு, செத்துப்போனவர்களின் சொத்தின்பேரில் வரி விதிக்கிறது, படிப்படியான வருமான வரியை விதிக்கிறது. முக்கிய தொழில்களை சமூகத்தின் கையில் கொண்டுவருகிறது. உற்பத்திசெய்ய உபயோகப்படாத இடங்களுக்கு வாடகை விதிக்காமலிருப்பது என்ற அருத்தம் கொடுத்தால், இவைகள் மேல்சொன்ன தீர்மானத்தில் குறிக்கப்பட்ட சுரண்டுதல் முறையை ஒழித்துவிடுமா? இப்படி இருந்தும் கராச்சித் தீர்மானம் இவைகளைத்தான் முக்கியப் பொருளாதாரத் திட்டமாக கொண்டிருக்கிறது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, காங்கிரசல்லவென்று எனக்கு ஞாபகம் மூட்டலாம். அது ஒரு கெட்டிக்

கார விவாதமாகுமே தவிர என்னுடைய கேள்விக்குப் பதிலாகாது.

காச்சித் தீர்மானத்தைத்தான் எடுத்துப் பார்ப்போம். அத்தீர்மானத்தின் ஆரம்பத்தில், சுயராஜ்யம் ஏழைமக்களுக்கு உண்மையான சுயராஜ்யமாய் இருக்கவேண்டுமானால் அது பொதுமக்களுக்கு அரசியல் சுதந்திரத்தையும் பொருளாதார விடுதலையையும் நல்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

பொருளாதார சுதந்திரமென்றாலென்ன? நம்மை இன்றையத் தினம் எதிர்க்கும் நம்முடைய நண்பர்களும், தலைவர்களும் இக்கேள்விக்கு பதில் சொல்லிவிட்டு அதற்குப் பிறகு காச்சித் தீர்மானத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற சில்லரைச் சீர்திருத்தங்களைக் கொண்டு பொருளாதார சுதந்திரத்தையடைய முடியுமாவென்று சொல்லட்டும்.

பொருளாதார விடுதலை என்றால், மாணவரியும் சில முக்கிய கைத்தொழில்களை கைப்பற்றிக் கொள்வதுந்தான் என்று காங்கிரஸ் நினைத்துக் கொண்டிருக்கும்வரை, அது இந்த அதிர்ஷ்ட தேசத்துக்கு அளிக்கப்போகும் சுதந்திரம் வெகு அழகானதாகத்தான் இருக்கும்! நாம் நீண்ட காலம் அடிமைகளாய் இருந்து விட்டபடியால், சுதந்திரமென்றால் என்னவென்பதை மறந்து விட்டோம் போலிருக்கிறது.

காச்சியில் காங்கிரஸ் ஒரு தீவிரமான அபேதவாதத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அது இப்பொழுது அப்படி செய்யவேண்டுமென்றும் சொல்லவில்லை. நான் சொல்வதெல்லாமென்னவென்றால், நடைமுறையில் பொது ஜனங்களைப் பொருளா

தார சுரண்டுதலிலிருந்து விடுதலை செய்து எல்லா அரசியல், பொருளாதார அதிகாரத்தையும் அவர்களுடைய கையில் கொடுக்கக் கூடிய, ஓர் குறைந்த பொருளாதாரத் திட்டத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதேயாகும்.

இப்படிப்பட்ட திட்டத்தைத்தான் காங்கிரஸ் அபேத வாதக் கட்சி ஆதரிக்கிறது.

காங்கிரஸின் தற்கால வேலைத்திட்டம் இந்த லக்ஷியங்களைவிட மிகவும் குறைவானதாய் இருக்கிறது. அது ஏழைகளின் கஷ்டங்களை ஒரு சிறிதளவு நீக்கலாம். ஆனால், சுரண்டுதலையொழித்து பொதுமக்களின் கையில் அதிகாரத்தை கொடுக்காது. அகில இந்திய காங்கிரஸ்க் கமிட்டி பம்பாயில் தீர்மானித்ததுபோல் சமூகத்தின் பொருளாதார அமைப்பில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தாமல், அப்படியே விட்டுவிடும். ஒரு பக்கத்தில் முதலாளிகளையும், ஜமீன்தார்களையும், ராஜாக்களையும் மற்றொரு பக்கத்தில் தொழிலாளிகளையும், குடியானவர்களையும், சமஸ்தான பிரஜைகளையும் வைத்துக்கொள்ளும். அரசியலுக்கு மிகவும் முக்கியமான தொழில்களைத் தவிர, மற்ற எல்லா உற்பத்தி சாதனங்களையும், மத்திய தர வகுப்பாரையும், சுரண்டுதலை யடிப்படையாய்க் கொண்டிருக்கும் பொருளாதார வமைப்பையும் அப்படியே விட்டுவிடும். இது எவ்வழியிலும் பொருளாதார சுதந்திரமாக மாட்டாது. கராச்சித் தீர்மானத்தின் முகவுரை (Preamble)க்கும் அதன் அடக்கத்துக்கும் மத்தியில் ஒரு பெரிய வித்தியாசமிருக்கிறது. இந்த வித்தியாசத்தை நீக்கி இவ்விரண்டையும் ஒன்றாக்கத்தான் நாம் முயலுகின்றோம். ஏழை மக்களுக்கு பொருளாதார விடுதலை வேண்டுமென்று சொல்

லும் காங்கிரஸ், அவ்விடுதலைக்கு அருத்தமின்னதென்று விளக்கியாவது சொல்லட்டும்.

நாம் கைக்கொண்டிருக்கும் மிகவும் குறைவான திட்டத்தை ஒப்புக்கொள்ள காங்கிரஸ் தயாராக வில்லாமலிருக்கலாம். சரியான லக்ஷியங்களைக் கைக்கொள்ள கொஞ்சக் காலம் கேட்கலாம். ஆனால் நம்முடைய நோக்கங்களை இதற்கு மேல் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. ஒருகால் சில காங்கிரஸ்காரர்கள் அபேதவாதம் பொய்த்தோற்றமென்றும், இந்திய சிதோஷ்ணத்திற்கு லாயக்கற்றதென்றும், இந்திய அபேதவாதிகள் கொள்கைகளை மாத்திரம்தான் படித்தவர்களென்றும், கார்ல் ஹென்ரிக் மார்க்ஸ் எனப் பேர்வைத்துக் கொண்ட ஒரு பழைய துருப்பிடித்த ஜெர்மன் யூதனுடைய சில வாக்கியங்களை திருப்பிச் சொல்லத்தான் அவர்களுக்குத் தெரியுமென்றும் இன்னும் பலவிதமாகவும் தூஷிக்கலாம்; தூஷிக்கட்டும்.

இப்படிப்பட்ட தூஷணைகளை காங்கிரஸ்காரர்கள் மறுபடியும் சொல்லுவதற்கு முன், பொருளாதார சுதந்திரமென்றால் என்னவென்றும், பொதுமக்களின் தரித்திரத்துக்கும், துன்பத்துக்கும் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் எவ்வளவு தூரம் காரணமென்றும், சுதேச சுரண்டுதல்முறையிலிருந்து மக்கட்கு விடுதலை அளிப்பதென்றால் அதற்கு அர்த்தமென்ன வென்றும் தெளிவாக சொல்லிவிடவேண்டும்.

அபேதவாதிகளாகிய நாம் சம்பந்தப்பட்ட மட்டில், பொருளாதார விடுதலைக்கு ஒரே ஒரு அருத்தம் தானுண்டு. அதுதான் அபேதவாதம். இவ்விஷயத்தில் காங்கிரஸ் அபேதவாதிகளோ, மற்ற இந்திய அபேதவாதிகளோ, பொது

உடமைக்காரர்களோ எவரும் ஒரு முகமாகவே நிற்கின்றார்கள். அபேதவாத முறை நாட்டில் பரவாமல் பொருளாதார விடுதலை தோற்றிவிடுமென்று சொல்வதெல்லாம் பகற்கனவும் மயக்க வாதமுமேயாகும்.

எனவே காங்கிரஸ் அபேதவாதக் கட்சி என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது? பொதுமக்களின் பொருளாதார விடுதலைக்காகவும், சுரண்டுதலை யொழிப்பதற்காகவும், அநியாயம், துன்பம், தரித்திரம், அறியாமை முதலியவைகளைப் போக்குவதற்காகவும் சுயராஜ்ய சர்க்கார் என்ன செய்யவேண்டும்?

காங்கிரஸ் அபேதவாத கட்சி தனக்குத் தோன்றிய சில விஷயங்களை தன் திட்ட நோக்கங்களில் தெளிவாகக் காண்பித்திருக்கின்றது. அவைகளாவன:

1. சகல அதிகாரத்தையும் உற்பத்தி செய்யும் பொது மக்களின் கைக்கு மாற்றிக் கொள்ளவேண்டும்.

2. தேசத்தின் பொருளாதார வாழ்க்கையின் அபிவிருத்தி சர்க்காரால் திட்டம் போட்டு நடத்தப்படவேண்டும்.

3 எல்லா தொழில்களும், (உதாரணமாக, இரும்பு, பருத்தி, சணல் ஆலைகள், ரயில்வேக்கள், கப்பல்கள், மிகப் பெரிய தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்கள், பாங்குகள் இன்ஷூரன்ஸ் முதலிய பொது நன்மைக்கு வேண்டியவைகளையெல்லாம் கைப்பற்றி படிப்படியாக உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் வேண்டிய எல்லா சாதனங்களையும் சமூக உடைமைக்குள் கொண்டுவர வேண்டும்.

4. சகல வெளிநாட்டு வியாபாரமும் சர்க்கார் கையிலிருக்கவேண்டும்.

5. அபேதவாத முறைக்கு வராத பொருளாதார அமைப்புகளிருந்தால் அவைகள் அப்படி வரும் வரையில், உற்பத்திக்காகவும் விநியோகத்திற்காகவும் லேவாதேவிக் காகவும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தவேண்டும்.

6. சிற்றரசர்கள், ஜமீன்தார்கள் முதலிய எல்லா சாண்டும் வகுப்பாரையும் பிரதிபிரயோஜனம் கொடுக்காமல் நீக்கிவிடவேண்டும்.

7. நிலங்களை விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

8. கூட்டுறவு ஸ்தாபனங்களையும், கூட்டுப்பண்ணை விவசாய முறையையும் சர்க்கார் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

9. தொழிலாளிகளும் விவசாயிகளும் பட்டிருக்கிற கடன்களை ரத்துச்செய்துவிட வேண்டும்.

10. சர்க்கார் அனைவருக்கும் வேலை கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் ஜீவனாம்சம் கொடுக்க ஏற்றுக் கொள்ள வேண்டும்.

11. "ஒவ்வொருவனுக்கும் அவனுடைய அவசியத்துக்குத் தக்கபடி கொடுத்து, ஒவ்வொருவனிடத்திலிருந்தும் அவனுடைய சக்திக்கு தக்கப்படி உழைப்பைப் பெறுவது" என்பதை எல்லா பொருள் உற்பத்திக்கும் அடிப்படையாய் கொள்ளல்வேண்டும்.

12. எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கவேண்டும்.

13. எந்த மதத்தையும் சர்க்கார் ஆதரிக்கக்கூடாது. வகுப்பு, ஜாதி முதலியவற்றை யுன்னி எவ்வித வித்தியாசமும் காண்பிக்கலாகாது.

14. ஆண் பெண்களுக்கிடையில் சர்க்கார் வித்தியாசமே காண்பிக்கக்கூடாது.

15. இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லும் கடன்களைக் கொடுக்க மறுத்துவிடவேண்டும்.

இங்கு பதினைந்து திட்டங்களிருக்கின்றன. இவைகள் நடக்கக்கூடாதவைகளாகவும், மிகவும் கடுமையானவைகளாகவும், தீவிரமானவைகளாகவும், அதீதப்பட்டவைகளாகவும் தோன்றலாம். உண்மையில் அவைகள் மிகவும் சாதாரணமானவையும், யுக்திக்கு எட்டக்கூடியவையும், நியாயமானவையும், நடைமுறையில் கொண்டுவரக்கூடியவையுமாகும். அவைகள் இந்தியாவுக்கு அபூர்வமாகத் தோன்றுகின்றனவென்று சொன்னால், அவைகள் சர்வ பிரதிநிதி சபையைவிடவோ, சட்டசபைகளை விடவோ, வரி நிர்ணய சபையைவிடவோ, பருத்தி மில்களின் சங்கஙாதங்களை விடவோ, மற்ற நூதனமான கூச்சல்களை விடவோ அதிக அபூர்வமானவைகளல்ல என்று நாம் சொல்லவேண்டுமா?

மேற்சொன்ன திட்டங்களெல்லாம், முதலாவது அதிகாரத்தில் சொன்ன கொள்கைகளை அதாவது, நம் சமூகத்தின் எல்லா கெடுதிகளுக்கும் அடிப்படையாய் இருக்கும் தனிச் சொத்துரிமையை, ஒழிக்கும் பொருட்டே வகுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அவைகள் மிகவும் பகுத்தறிவுக்கு ஒத்த சமூகத் திட்டங்களை ஏற்படுத்துவதற்காகவே போடப்பட்டிருக்கின்றன.

கட்சியால் ஏற்படுத்தப்பட்ட 15 திட்டங்களில் நான் நம்பர் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12 களைப்பற்றி மட்டிலும் சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். மற்றப் பகுதிகள் மிகவும் தெளிவாகவே இருக்கின்றன.

(1) எல்லா அதிகாரமும் உற்பத்தி செய்யும் பொதுமக்களின் கைக்கு மாற்றிக்கொள்வது

கைகளாலோ அல்லது மூளையைக்கொண்டோ வேலை செய்து உற்பத்திசெய்யும் பொதுமக்களின் கையில் எல்லா அரசியல் பொருளாதார அதிகாரத்தையும் கொடுப்பது தான் இத்திட்டத்தின் அடிப்படையான அம்சம். வேலை செய்பவர்களிடத்தில் அதிகாரம் செல்லவேண்டுமென்றால் வேலை செய்யாதவர்களிடத்தில் யாதொரு அதிகாரமும் இருக்காதென்பதைச் சொல்லவேண்டியதில்லையன்றோ?

இதில் ஊடுருவி நிற்கும் கொள்கை மிகவும் முக்கிய மானதாகும். இதுவரையில் ஏற்பட்ட எல்லாச் சமூக அமைப்புகளிலும் அதிகாரம், (எந்த சமூகத்திலும் எண்ணிக் கையில் அதிகமாக இருந்துவரும்) உழைப்பாளிகள் கையில் இராமல், சொத்துரிமையுடைய வகுப்பாரிடத்தில்தான் இருந்துவந்தது. தற்கால ஜனநாயக முறை ஏற்படுவதற்கு முன் இருந்த ஆட்சிமுறைகளிலெல்லாம் இதனையே காண் கின்றோம். கிரேக்கர்கள் பிரமாதமாக ஜனநாயக ஆட்சி யென்று சொல்லிக் கொண்டார்களே, அங்கும் இதுதான் காணப்பட்டது. ஒரு சிறு தொகையான ஆளும் வகுப் பார் பெருந்தொகையினரான தொழிலாளிகளை அழுத்தி ஆண்டு வந்தார்கள்.

ரகசிய ஓட்டுமுறையும், கட்சி ஆட்சியும் வந்தபிறகு தான் ஜனநாயக ஆட்சி என்ற கதை ஏற்பட்டது. இக்

கிரண்டும், மிகவும் தாழ்ந்தவருக்கும், மிகவும் உயர்ந்தவருக்கும் சமமான அதிகாரத்தைக் கொடுத்திருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனல் சொத்துக்காரர்களுக்கு அனுகூலமாய் இருக்கும் இப்பொருளாதார சமூகமோ, ஜனநாயக ஆட்சியை ஒரு தமாஷாகக் கொள்கிறது. பணக்காரருக்கு அனேக விதமான சௌகரியம் உண்டு. பெரிய தேர்தல் நிதிகளும், பெரிய பெரிய பத்திரிகைகளும், பள்ளிக்கூடங்களும், உயர்தரக் கல்விச்சாலைகளும் இருக்கின்றன. ஏழைகளுக்கு இருப்பது என்ன? அவர்களுக்கு ஏதாவது பிச்சை கிடைத்தா லுண்டு; இல்லாவிட்டால் பட்டினியாய்தான் கிடக்கவேண்டும். இந்த நிலைமையில் தொழிலாளிகளின் ஓட்டுரிமைக்கு அருத்தமில்லாமல் போய்விடுகிறது.

இந்த போலி ஜனநாயக ஆட்சியாகிய தமாஷ் காட்சியில்கூட, எல்லாவித கஷ்டங்களையும் அனுபவிக்கிற ஏழைத் தொழிலாளர்கள் பொருளாதாரத் தராசை தங்கள் பக்கம் சாய்க்க முயன்ருல், போலி ஜனநாயகம் அவர்களை தூன் புறுத்த வருகிறது. புரட்சி, "சிகப்புகள்" என்ற கூச்சல் கிளம்பிவிட்டாலோ, அம்மா! ஜனநாயகம் சூரியனைக் கண்ட பனியைப்போல் மறைந்துவிடும். தொழிலாளிகளுக்கு கொடுக்கப்பட்ட 'பாலெட்' பெட்டி குப்பைத் தொட்டிக்குப் போய்விடும். பாசிசத்திற்குப் பட்டாபிஷேகம் நடைபெற வாய்பிக்கும். பொருளாதார உரிமைகள் பணக்காரர்களுக் கனுகூலமாய் மிகவும் கடுமையாய் ஸ்தாபிக்கப்படும்.

இவ்விஷயங்களை முன்னிட்டுத்தான் "எல்லா அதிகாரமும் ஏழைமக்கள் கையில்" வரவேண்டுமென்று சொல்கின்றோம்.

நாம் ஒரு நடக்கக்கூடாத விஷயத்தை நினைத்துக் கொண்டு பேசுகின்றோமென்று சிலர் சொல்லலாம்.

ஆனல் நாம் இருதய சுத்தியோடு நடக்கும் விஷயமென்று உறுதியாய் சொல்லுகிறோம். அதிகாரத்தின் ரகசியம் பொருளாதார ஆதிக்கமென்று தெரிந்தே சொல்லுகிறோம். கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் பொருளாதார அமைப்பின் எஜமானர்களாவது சாத்தியம் என்பதோடன்றி அதுவே இயற்கையுமாகும். இதற்குப் பிறகு ஏற்படவேண்டிய விஷயங்களை விட்டுவிட்டு இந்த ஒரு விஷயத்தோடு மாத்திரம் நின்றுவிட்டால், நாம் நடக்கக்கூடாத விஷயத்தைப் பற்றி பேசிய குற்றத்திற்கானாவது மட்டுமல்லாமல் ஏமாற்றுக்காரர்களு மாவோம்.

2. தேசத்தின் பொருளாதார வாழ்க்கையின் அபிவிர்த்தி சர்க்காரால் திட்டம் போட்டு நடத்தப்பட வேண்டும்.

அபேதவாதம் செய்யும் ஒரு பெரிய காரியம் என்னவென்றுல், அது சமூக வளர்ச்சியை மனிதன் அறிந்து, அதன்பேரில் ஆதிக்கம்பெற்று, அதை நடத்திவைக்கும்படி செய்கிறது. இதுவரையில் தனித்த முறையும் சுயலாபமும், முக்கிய சக்திகளாய் இருந்தபடியால், சமூகம் குருட்டுத்தனமாக வளர்ந்துகொண்டு வந்தது. அவ்வித வளர்ச்சிக்கு முக்கியகாரணம் ஒருவருடைய நோக்கத்துக்கும் நன்மைக்கும் மற்றவர்களுடைய நோக்கத்துக்கும் நன்மைக்குமிடையில் ஏற்பட்ட விரோதமேயாகும். யாதொருவிதமான சமூகத் திட்டமும் இருக்கவில்லை. நாம் எல்லோரும் சேர்ந்து விஷயங்களை உணர்ந்து பாடுபட ஏற்படுத்திக் கொண்ட யாதொரு பொதுத் திட்டமும் கிடையாது.

"அவனவன் அவனவனுக்காகப் பாடுபட வேண்டும்" என்பதுதான் இதுவரையில் நம் சமூக நடவடிக்கையின் உள்ளிருந்த இரகசியம்.

எல்லோருக்கும் பொதுவான நன்மைக்காக எல்லோரும் சேர்ந்து பாடுபட வேண்டுமென்று சொல்லுவதில் தான் அபேதவாதம் மானிட வர்க்கத்துக்கு மிகவும் சிறந்த உன்னத நம்பிக்கையைக் கொடுக்கின்றது. தற்சமயம் தாறுமாறாக நடந்துவரும் சமூக "அமைப்பை" ஒழித்து, கூட்டு முறையில் வருங்காலத்துக்காகத் திட்டம் போட்டு வேலை செய்ய வேண்டுமென்று சொல்லும்போதுதான் அபேதவாதத்தின் பெருமை தெரிகிறது. மறைந்துள்ள புதிதாகக் கண்டு பிடிக்கும் சக்திகளையும், உற்பத்திச் சக்திகளையும், விளப்பிவிட்டு, மனிதர்கள் தங்களுடைய வளர்ச்சியைத் தாங்களே அமைத்துக் கொள்ளும்படிச் செய்வதன் மூலமாய் அபேதவாதம் ஒரு புதிய சரித்திர யுகத்தை ஏற்படுத்துகிறது. இப்புதிய காலம் லோகாயத வளர்ச்சியிலும் சன்மார்க்க மேற்போக்கிலும், அறிவு அபிவிருத்தியிலும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் இருக்கும். தனித்த விருப்பத்துக்குப் பதிலாக சமூக விருப்பம் ஏற்படும்.

இதனால் மனிதர்கட்கு என்ன செய்ய முடியுமென்று பார்க்க வேண்டுமானால், சற்று ருஷியாவை நோக்கினால் தெரியும். அங்கு விளம்பியிருக்கும் புதிய நம்பிக்கையிலும் புதிய உற்சாகத்திலும் ஆகாயம், சமுத்திரம், காற்று, நதி முதலிய எதுவும் வெல்ல முடியாதனவல்ல வென்று தோன்றுகிறது. சில வருஷங்களுக்கு முன் இதே தேசம் மிகவும் இருளடைந்து, நம்பிக்கையற்று, மிகவும் மோசமான சோம்பேறிகளைக் கொண்டதாய் இருந்தது.

திட்டம் போட்டு நடத்தும் சமூக முன்னேற்றத்தின் மிகவும் முக்கியமான அம்சம், திட்டம் போட்ட பொருளாதார மாகும். ஒரு தேசத்தின் பொருளாதார அமைப்பே அந்த தேசத்தின் பூரா வாழ்க்கைக்கும் திறவுகோல். ஆகையால் பொருளாதார வமைப்பின்மேல் அதிகாரம்பெற்று அதை மனிதர்களின் பொது நலங்களுக்குத் தோதான வழியில் நடத்துவது மிகவும் அடிப்படையான தேவையாகும்.

திட்டம் போட்ட பொருளாதார மென்றுவென்ன? ஒரு விவரமான பதிலளிப்பதற்கு சமூகத்திலே திட்டம்போட்டு வேலை செய்வதில் ருஷியா செய்த பெரிய பரிசோதனையை நாம் கவனமாய் ஆராயவேண்டும். அதைப்பற்றி அனேக தப்பான அபிப்பிராயங்கள் பொதுஜனங்களுக்குப் போதிக்கப் பட்டிருக்கின்றன. "அது உத்தியோக முறை" (Bureaucratic) என்றும், "லஞ்சம் நிறைந்"திருக்கிறதென்றும், எல்லாவித நூதன முயற்சிகளையும் கொன்றுவிட்டது" என்றும், அது பூராவும் சித்திப்பெறாமல் போய்விட்டதென் றும் சொல்லப்படுகிறது. நான் இந்த தப்பெண்ணங்களை ஆராய்ச்சி செய்ய முயன்றால், என்னுடைய விஷயத்தை விட்டு அதிக தூரம் விலகிப் போய்விடுவேன். ஆனால் கொஞ் சம் சொல்லிவிட வேண்டியது அவசியம்: உலகத்தில் முத லாளித்துவத்தால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைப்போக்க இதுவரையில் செய்யப்பட்ட எல்லா தேச, சர்வதேச, முயற்சிகளும் பயன்படாமல்தான் போய்விட்டன. ஆனால் ருஷியா மாத்திரம் தன்னுடைய தலையைத் தூக்கிக்கொண்டு உற்பத்தியில் இடைவிடாத மேற்போக்கை யடைந்து, வாழ்க்கையின் அளவை உயர்த்தியிருக்கின்றது.

திட்டம் போட்டு பொருளாதாரத்தை நடத்துவதில் மிகவும் முக்கியமான அம்சங்கள், உற்பத்தி, பங்கிட்டு கொடுத்தல், (சர்க்காருடைய சொத்து ரூபத்தில்) மீதம் செய்தல்— இம்மூன்று அம்சங்களும் சரியானபடி ஒழுங்கு படுத்தப்பட்டு, சரியான வழியில், முன்னேறிக் கொண்டிருக்கின்றன. முக்கியமான தேவை என்னவென்றால் சமூக லாபங்களோடு மோதக்கூடிய தனித்த பொருளாதார உரிமைகள் இருக்கவே கூடாது என்பதாம்.

ஐந்தாண்டுத் திட்டத்தை தயார் செய்த கிரின்கோ என்பவர் தன்னுடைய வேலையை ஆரம்பித்தபோதே சொன்னபடி, கணக்குப் போடுகிறவர் சிலர் ஒரு மத்திய ஸ்தலத்தில் உட்கார்ந்துகொண்டு, பூரா பொருளாதாரத்தையும் நடத்துகிறார்களென்றும் இவர்கள்தான் திட்டத்தைத் தயார் செய்கிறார்களென்றும் நினைப்பது பிசகு. உண்மையில் திட்டம் போடுவதில், உற்பத்தி செய்யும் ஸ்தாபனங்களாகிய தொழிற்சாலைகள், கூட்டு முறையைக்கொண்டு விவசாயம் செய்யும் விவசாயச்சாலைகள் முதலியனவும் பங்கிட்டுக் கொடுக்கும் ஸ்தாபனங்களாகிய கோவாபரேடிவ் ஸ்டோர்கள், சர்க்கார் ஸ்டோர்கள் முதலியனவும் பங்கு எடுத்துக் கொள்ளுகின்றன. உச்ச ஸ்தானத்திலிருக்கிறவர்கள் இவைகளை எல்லாம் ஒன்றாகச்சேர்த்து கோர்வை செய்து வழி காண்பித்து நடத்திவைக்கின்றார்கள். உண்மையில், பொருளாதாரத்தை உச்ச ஸ்தானங்களிலிருக்கிற சிலர் கைகளில் மாத்திரம் விட்டுவிடக் கூடாதென்று ருஷிய சர்க்கார் மிகவும் கவலைகொண்டிருக்கிறது. தேசம் முழுவதும் சுயேச்சையான பெரியப்பெரிய பாகங்களாக பிரிக்கப்பட்டு, அப்பாகங்கட்கு உற்பத்தி செய்வதிலும், சர்க்காரை நடத்துவ

திலும், நூதன உற்பத்தி முறைகளைக் கைக்கொள்வதிலும் பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

திட்டம் போட்டு நடத்தும் பொருளாதார வாழ்க்கையில் ஒவ்வொருவரும் "இதைத்தான் உடுத்த வேண்டும்" 'இதைத்தான் சாப்பிடவேண்டும்' 'இப்படித்தான் வாழ்க்கை நடத்தவேண்டும்" என்று வற்புறுத்தப் படுவார்களென்று தப்பாக எண்ணப்படுகிறது. உண்மையில், முதலாளித்துவ வாழ்க்கையில்தான் இப்படி இருக்கின்றதே தவிர, அபேதவாத சமூகத்தில் (திட்டம் போட்டு நடத்தும் வாழ்க்கையில்) இப்படி இராது. அபேதவாத சமூகத்தில், இக் குழப்பமான சட்டங்களெல்லாம் ஒரு நோக்கத்துக்குள்ளடங்கிய பிரயோஜனங்களுக்காக மாற்றப்படுவதோடு, தொழிற்சாலைகளின் மூலமாயும், விவசாய ஸ்தாபனங்களின் மூலமாயும், மற்ற கூட்டு ஸ்தாபனங்களின் மூலமாயும், சமூக தேவைகளைப் பற்றியும், தனித்த தேவைகளைப்பற்றியும், ஒவ்வொருவருடைய அபிப்பிராயமும் வாங்கப்படும்.

இது சம்பந்தமாய் லூயி பிஷர் என்பவர் எழுதிய ஒரு புஸ்தகத்தில் வரும் அடியில்கண்ட பாகம் மிகவும் இன்பமளிக்கக் கூடியதாயும் விஷயங்களை விளக்கக்கூடியதாயுமிருக்கும்:—

"இன்றைய தினத்தின் இஸ்வெஸ்தியா பத்திரிகை அடியில் கண்டபடி அறிவிக்கிறது:—

மாஸ்கோவிலுள்ள புஷ்பக்கடைகளும், ஸ்டோர்களும், ரோஜா புஷ்பங்களையும், பீயோனி புஷ்பங்களையும் குறைந்த விலைக்கு விற்க ஆரம்பித்துவிட்டன. இப்புஷ்பங்கள் எஸ்ஸென்துகி, ரோஸ்தோப்—ஆன்—டான், யால்தா முதலிய

விடங்களில் பச்சை சாமான்களை யுற்பத்திசெய்யும் ஸ்தாபனங்களிலிருந்து விமானமார்க்கமாய் மாஸ்கோவுக்கு வருகின்றன; தினசரி 5000 ரோஜா புஷ்பங்களும் 2000 பீயோனி புஷ்பங்களும் இவ்விதமாய் கொண்டுவரப்படுகின்றன. எஸ்ஸென்துகிக்கும் ரோஸ்தோபுக்கும், யால்டாவுக்கும் மாஸ்கோவிலிருந்து ரயில் மார்க்கமாகப் போகவேண்டுமானால் 36 மணி நேரம் செல்லும்.

சென்ற சில வாரங்களாக மாஸ்கோவில் வழக்கத்திற்கு விரோதமாக வசந்தகாலத்தில் குளிர் அதிகமாயிருந்ததால் ஸ்ட்ராபெரிப் பழங்கள்கூட சில தென்தேசங்களிலிருந்து விமானம் மார்க்கமாய் கொண்டுவரப்பட்டன. மாஸ்கோவின் பாதாள வழிகளுக்காகத் தயார்செய்த வண்டிகளின் உட்காருமிடங்கள் மிகவும் உறுத்தலாயிருந்தன. அதனால் அவைகள் உபயோகிக்கப்படவேயில்லை. சகல வண்டிகளுக்கும் தோல் மெத்தைகள் போடவேண்டுமென சர்க்கார் உத்திரவு அளித்தது. பாதாள வழியில் ஓடும் வண்டிகளில் இடமில்லாமலிருந்தும் ஸ்டேஷன் பளிங்குக் கல்லால் செய்யப்பட்ட தூண்களாலும் அழகிய கூரைகளாலும், நவீன வெளிச்சங்களாலும் அலங்கரிக்கப்படாமலிருந்தும் கூட மாஸ்கோக்காரர்கள், பூமியின்மேல் ஓடும் வண்டிகளில் அதிக கூட்டத்தால் பட்ட கஷ்டங்களை யுத்தேசித்து மிகவும் சந்தோஷமாய் துரிதமாய் ஓடும் பாதாள வண்டிகளில் பிரயாணம் செய்கிறார்கள். விசேஷமான சௌகர்யங்களுக்காகவும், பார்வைக்கு அழகாக இருப்பதற்காகவும் அந்த சர்க்கார் பணம் செலவு செய்ததின் காரணம் என்ன?

"பிரவ்டா" என்ற பொதுஉடைமை தினசரிப் பத்திரிகையில் கண்டபடி, மற்ற தேசங்களுக்கு எவ்வளவு நேர்த்தியான உற்பத்திப் பொருள் அனுப்பப்படுகிறதோ (குறைந்தபட்சம்) அவ்வளவு நேர்த்தியான பொருள்கள் ருஷிய உபயோகி

களுக்கும் கொடுக்க வேண்டுமென்று ஸ்டாலின் சகல தொழிற் சாலை அதிகாரிகளுக்கும் உத்தரவளித்திருக்கிறார். "பார்வைக்கு அழகான சோவியத் உற்பத்திப் பொருள்களை" கொடுக்க வேண்டுமென்று ருஷ்ய சிகப்பு பத்திரிகைகள் வற்புறுத்துகின்றன.

சோவியத் யூனியனிலுள்ள பொருள் உற்பத்திக்காரர்களுக் கிடையில் யாதொருவிதமான போட்டியும் கிடையாது. மேலும் சில துறைகளில் உற்பத்தி கம்மியாகவிருந்து தேவை அதிகமாக விருப்பதால் உற்பத்திப் பொருள்களெல்லாம் மிகவும் சுலபமாக விற்று விடுமென்பது திண்ணம். உற்பத்தி செய்யும் பொருள்கள் விற்குமோ விற்காதோ வென்று கவலை போல்ஷவிக் தொழில் அதிகாரிகளுக்கு கிடையாது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை யெல்லாம் வாங்க அநேக பணப் பைகள் காத்துக் கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட நிலைமையில் சோவியத் சில்லரை வியாபாரி தவறான வழியில் வாடிக்கைக்காரர்களைத் தேடி அவனிடத்திலிருக்கிற மிகவும் உயர்ந்த சரக்கைக் கொடுக்கவோ, அதிகமாக விளம்பரம் செய்யவோ, விற்பனைத் தந்திரங்களை உபயோகிக்கவோ, தற்காலத்தில் செய்வதுபோல் வீடு வீடாகக் கொண்டு போய் கொடுக்கவோ கட்டுப்பட்டவனல்ல. ரோஜா புஷ்பங்களில்லாமல் ஜனங்கள் வாழலாமென்றும் ஸ்ட்ராபெரி பழங்களுக்காக கோடைகாலம்வரை காத்திருக்கலாமென்றும் ஜனங்கள் அவரவர்களுடைய சாமான்களை, அவரவர்களே தூக்கிக்கொண்டு போகலாமென்றும் பட்டு கிடைக்கா விட்டால் பருத்திநூல் உடை தரிக்கலாமென்றும் ரஷிய சர்க்கார் எடுத்துக் காட்டுகிறது. சகல உற்பத்தியும் விநியோகமும் அரசியல் மூலமாய் சர்க்கார் கையிலிருப்பதால் சர்க்கார் விற்பனை செய்யாத பொருள் வேறு எங்கும் கிடையாது. இப்படி யெல்லாமிருந்தும் ரஷிய சர்க்கார், சமத்துவத்தோடு பலவித

வர்க்கங்கள் வேண்டுமென்றும், கூடுமானவரை அதிகமான ஜனங்களுக்கு சுகமும் பெருவாழ்வும் அளித்து இனசரி வாழ்க்கையை அலங்கரிக்க வேண்டுமென்றும் மிகவும் வற்புறுத்துகிறது.

"திட்டம் போட்ட பொருளாதாரத்திற்கு விரோதமாகவும், சர்க்கார் உடைமைக்கு விரோதமாகவும் பழங்காலத்தில் சொல்லப்பட்டதும் தற்காலத்தில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் திருப்பிச் சொல்லப்படுவதுமான வாதத்திற்கு மேற்சொன்னவைதான் பதில்" என்று லூயி பிஷர் சொல்கின்றார். நான் மேலே சொன்னபடி, ஒவ்வொரு தனித்த நபரும் அவரவர்களுடைய வாழ்க்கையின் சகல விஷயங்களிலும் வற்புறுத்தப்படுவார்களென்பது தான் அவர்களுடைய ஆட்சேபனை. "ஒவ்வொருவரும் உறுதியான உடுப்பை உடுத்தவேண்டுமென்றும், வியாழக்கிழமைதோறும் ஈரல் சாப்பிடவேண்டுமென்றும், வெள்ளிக்கிழமைகளில் பலர் சாப்பிடவேண்டும்" என்றும் சொன்ன ஆட்சேபனையை "சோவியத் அனுபோகமும், கடைமுறையும் தகர்த்துவிட்டன" என்று பிஷர் சொல்கின்றார். மேலும் அவர் கூறுவதாவது:—

ஜார்ஜியர்களுக்காக குதியில்லாத ஜோடுகளும் சைபீரிய பேட்டைக்காரர்களுக்காக உரோம ஜோடுகளும் (Furboots) தலைநகரிலுள்ள ஆடம்பரக்காரர்களுக்காக வர்ணகுரோம் தோலால் செய்யப்பட்ட உயர்ந்த குதியுள்ள ஜோடுகளும், தர்கோமான் ஜாதியார்களுக்காக லேசான தொப்பிகளும், உஸ்பேக் சாதியார்களுக்காக தலைக் குட்டைகளும், தார்த்தாரியர்களுக்காக குல்லாக்களும், நகரங்களிலுள்ள நாகரிகமானவர்களுக்காக ஐரோப்பியத் தொப்பிகளும் போல்ஷவிக் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன. ஒவ்வொரு தொழிற்சாலை

களிலும் நிபுணர்களிருக்கின்றனர். அவர்கள் துணிகளிலும் மற்ற நெசவு வஸ்துக்களிலும் அநேக விதமான ரகங்களைக் குறிக்கிறார்கள். பெண்களின் உடுப்புகளைச் செய்வதற்காகவும், ஆண்களின் சட்டைகளைச் செய்வதற்காகவும் சர்க்கார் ஸ்தாபனங்களிருக்கின்றன. அவைகள் தனிப்பட்டவர்களுடைய இஷ்டப் பிரகாரம் உடுப்புகள் செய்து கொடுக்கின்றன. எனவே பணத்திற்குத் தக்கபடி ஒருவர் தன்னுடைய இஷ்டங்களைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்.

சில பெரிய ஸ்தாபனங்கள், பொருட்காட்சிகளை ஏற்படுத்தி அவைகள் உற்பத்தி செய்யும் எல்லாப் பொருட்களையும் அதில் வைத்து, காட்சி பார்க்க வருபவர்களிடத்தில் அவரவர்களுக்குப் பிரியமான வஸ்துக்களின் அடியில், ஒரு கார்ட்டில் தத்தம் விருப்பத்தைக் குறித்துவைக்கும்படி செய்கிறார்கள். எந்த பொருளுக்கு அதிகமாக ஓட்டுக் கிடைக்கின்றதோ அந்தப் பொருள் அதிகமாகவும், எதற்குக் குறைவாகக் கிடைக்கிறதோ அது குறைவாகவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இம்முறை சரியானதல்லவென்று ஒருவேளை ஆட்சேபிக்கப்படலாம். ஆனால் சோவியத் தொழிலாளி எந்த அளவிற்கு தன்னுடைய வாடிக்கைக்காரர்களின் விருப்பங்களுக்கு கட்டுப் பட்டிருக்கிறானென்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிந்து விடுகிறது.

இப்பிரச்னையைப்பற்றி போல்ஷவிக் மனப்பான்மை எவ்விதமிருக்கிறதென்பதை 'பிரவ்டா' பத்திரிகை சமீபத்தில் விளக்கியிருக்கிறது. "இவ்விதமாக நிலைமைகளை சீர்திருத்தவும், அதிகமான தொழிற்சாலைகளைக் கட்டவும், கலா விஞ்ஞான முற்போக்குகளை ஏற்படுத்தவும், அழகான உயர்ந்த பொருள்களை உற்பத்தி செய்யவும் எதற்காக சோவியத் சர்க்கார் பாடுபட வேண்டும்? ஜனங்களுக்காக, உற்பத்தி செய்பவர்களுக்காக, உபயோகிக்கிறவர்களுக்காக, தம் தேசத்திற்காக பாடுபடுகிறது. ஒரு யந்திரமாக விருந்தாலும், சரி ஜோடாக விருந்தாலும் சரி,

ஒரு ஆணியாக விருந்தாலும், சரி எதை உற்பத்தி செய்தாலும் ஒரு தொழிற்சாலை, அவைகளை உபயோகிக்கும் சோவியத் வாசிகளேயும் அபேதவாதத்தைக் கட்டுகின்ற லட்சக் கணக்கான உன்னத மக்களேயும் மானிடக் கூட்டத்தையும்பற்றியே எப் பொழுதும் கவனிக்கவேண்டும்."

லாபத்தைக் கருதாது உபயோகமொன்றையே எண்ணி பொருட்கள் ஆக்கப்படும்போது—உற்பத்தி செய்யும் தொழிலாளியே செய்த பொருளை அநுபவிப்பவனுகவு மிருக்கும் போது, நல்ல நல்ல பொருட்களைசெய்து கொள்வது இயற் கையேயன்றோ! இவ்வாறு திட்டம்போட்ட பொருளாதாரம், விருப்பங்களை கவனியாமலிருப்பதைவிட்டு, விருப்பங்களை அதிகமாகக் கவனிப்பதற்கு காரணமென்னவென்றால் U. S. S. R. (சோவியத் ரஷியா)வில் உற்பத்திக்கும் உபயோகத்துக்கு மிடையில் யாதொரு வேற்றுமையும் கிடையாது என்பதே. ஆகையால் ருஷியர்கள் அதிகமாக உற்பத்தி செய்யவோ குறை வாக உபயோகப்படுத்தவோ முடியாது. லாபகரமாய் அமர்த் தப்பட்டிருக்கும் தொழிலாளிகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதுதான் சர்க்காரின் முதல் கவனம். ஸ்ட்ராபெரி பழங் களும் ஆகாய விமானங்களும் சர்க்காரே உற்பத்திசெய்து சர்க் காரே (அதாவது, சகல லாபங்களேயுமடையும் தொழிலாளி களே) அனுபவிக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஸ்ட்ரா பெரிகளும்பியோனி புஷ்பங்களும் கிடைக்கக்கூடுமோ எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக பாதாள வண்டிகளின் சீட்கள் மெதுவாயிருக்கக்கூடுமோ, எவ்வளவுக்கெவ்வளவு தன்னுடைய மனைவியின் ஜோடுகள் அழகாக இருக்கக்கூடுமோ அவ்வளவுக் கவ்வளவு ஊக்கமாகவும் விருப்பத்துடனும் தொழிலாளி உற் பத்தி செய்கிறான். சர்க்கார் ஜனங்களுக்காக எல்லாவித சௌகர்யங்களையும் செய்து வைக்கிறது. ஜனங்கள் சர்க்காருக் காக (அதாவது தங்களுக்காகவே) எல்லா சௌகர்யங்களையும்

செய்து வைக்கிறார்கள். (ந்யூ ஸ்டேட்ஸ்மன் அண்ட் நேஷன், 20 ஜுலை 1935.)

நான், மேலே, ஒரு சரியான பொருளாதாரத் திட்டம் வகுக்கப்பட வேண்டுமானால், பொதுஜன நலத்தையும், சமூக க்ஷேமத்தையும் தாக்குகின்ற தனியுடைமை நிழலே ஆகாதென்று கூறினேன். என்னிடம் இந்த கேள்வி கேட்கப்படலாம்:—அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜெர்மனி, இத்தாலி ஆகியவற்றில் தனியுடைமை முறை தகராறிருந்துவந்த போதிலும் அங்கு பொருளாதார வாழ்க்கைத் திட்டங்கள் போடப்படவில்லையா?

ஆம். முதலாளித்வ தேசங்கள்கூட திட்டம் போட்டு நடத்தும் வழிக்கு வந்துவிட்டன. சென்ற ஆறு வருடமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அதை நீக்கச் செய்த எல்லா முயற்சிகளின் பலனின்மையும், முதலாளித்வ சமூகத்தின் பிடிமானமில்லாத குழம்பிய முறையில் அநேக குறைபாடுகளிருப்பதாக அம் முதலாளித்வ வகுப்பாருக்குத் தெளிவாக காண்பித்துவிட்டன. ஆகையால் தம் ஆட்சி இயந்திரத்தை ஒழுங்குற நடத்துவதற்காக சில பிளாக்குகளையும், கீயர்களையும் கொண்டு முயற்சிகள் செய்யப்பட்டன. இவைகள்தான் ரூஸ்வெல்ட் "தொழில் ஸ்தாபனங்களுக்கு" கொடுத்த "சட்டங்களும்", மற்ற நாடுகளின் பாஸிஸமுமாகும்.

இத்தாலியில் பாஸிஸம் அநேக வருஷங்களாக முயற்சி செய்வதுபோல அநேக தேசங்கள் முயற்சிகள் செய்தும் பலனில்லாமல் போய்விட்டது. தனி உரிமைகளை ஒழித்த பிறகுதான் திட்டம் போட்டு சமூகத்தை நடத்த

முடியுமென்று நாம் சொன்னதை அந்தேசங்களின் முயற்சிகள் வற்புறுத்தவே செய்கின்றன. ரூஸ்வெல்ட் N. R. A. & AAA என்ற புது முறைகளை ஏற்படுத்திய போது ஏராளமான உற்சாகம் ஏற்பட்டது. தற்சமயம் அவ்வுற்சாகம் ஒழிந்து ஜனங்களிடத்தில் நம்பிக்கையின்மை ஏற்பட்டுவிட்டது. ரூஸ்வெல்டை ரக்ஷகராகப் பாவித்த அமெரிக்க சர்வகலாசாலைக்காரர்கள், தற்சமயம் கோபிகளாகவும், விரோதிகளாகவும் மாறிவிட்டார்கள். N. R. A. யின் நெருப்புப் பொறிகள் அணைந்துவிட்டன. முதலாளித் திட்டம் வெற்றிபெறாமல் அபேதவாதத் திட்டம் வெற்றி பெற்றதற்குக் காரணம் இவ்விரண்டிற்கு மிடையிலிருக்கிற பெரிய வித்தியாசமேயாகும். முதலாளித்வ திட்டத்தின் கருத்து, பொருளாதார அமைப்பு முழுவதையும் சமூகத்தின் நன்மைக்காக மாற்றியமைத்து நடத்துவதல்ல; ஆனால் எல்லா லாபமும் ஆறாக ஓடி முதலாளிகளின் ஜேபிகளில் வந்து விழவேண்டு மென்பதுதான் ஆசை. முதலாளித்வத்திற்கு உயிரளிக்கும் லாபம்தான் அதன் பெரிய வியாதி. லாபத்தைக் கருதும் வரையில் வியாதி சுகமடையாது, வியாதியின் அடையாளங்கள் திரும்பத் திரும்ப வெளியாகிக் கொண்டேயிருக்கும். அதே காலத்தில் லாபம் நின்றுவிட்டால் முதலாளித்வம் மரணமடைந்துவிடும். இப்பரிதாபகரமான நிலைமையிலிருந்து அபேதவாதம்தான் விடுதலையளிக்க முடியும்.

[1] அரசியலுக்கு அவசியமான தொழில்களையும் மற்ற தொழில்களையும் சமூக உடைமைக்குள் கொண்டுவருதல்.

முழுத்திட்டத்துக்கும் இதுதான் அஸ்திவாரக் கல். பொதுஜன சர்க்கார், சில வகுப்பார்களுக்கு பொருளாதாரத்

துறையில் ஏற்பட்டிருக்கும் ஆதிக்கத்தை ஒழித்து விடுவதை யே அடிப்படையாகக் கொள்ளவேண்டும். பொதுஜனங் களின் பொருளாதார விடுதலையென்றால், உற்பத்திக்கு சாதக மான சொத்தை தனி முறையில் பெற்றிருப்பதாலேற்படும் சுரண்டுதலை (கொள்ளையை) ஒழிப்பதுதான் அர்த்தமென்று கொள்ள வேண்டும். தனி உரிமைகளை தொலைப்பதிலிருந்தே சமூகத்திட்டம் ஆரம்பிக்க வேண்டும்.

இப் புத்தகத்தின் இப்பிரிவில் சொன்னபடி உற்பத்திக் கும் விநியோகத்திற்கும் பரிவர்த்தனைக்கும் வேண்டிய சகல சாதனங்களையும் சமூக உடைமைக்குள் கொண்டு வருவது தான் முடிவான நோக்கம். அதாவது, எல்லா தொழிற்சாலை களும், பண்படுத்தப் பெருத சாமான்களும், வியாபாரமும், பங்குகளும், பணமும் மொத்த சமூகத்தின் கையில் வந்துவிட வேண்டும். இதற்கு ஒரு மனிதன் தன் சொந்த உபயோகத் திற்கு அவசியமானதைக்கூட வைத்துக் கொள்ளலாகாது என்பது அர்த்தமல்ல; ஒருவனிடமிருக்கும் பொருள் அதிகச் சொத்துச் சம்பாதிப்பதற்குத் துணைபுரியலாகாது என்பதே இதன் நோக்கம்.

ருஷியப் பொது உடைமைக்காரர்கள் இதுவரையில் அவர்களுடைய பூரண லக்ஷியத்தை யடையவில்லை. ஆனால் அவர்களுடைய நோக்கத்தைப்பற்றி டாக்டர் ஷேர் உட் எட்டி என்பவர் அடியில் வருமாறு எழுதுகிறார்:—

"பொதுவுடைமைக்காரர்களின் நோக்கம், தானு கச் சம்பாதியாத எல்லாச் சொத்துக்களையும், உற்பத் திக்கு சாதகமான எல்லாப் பொருட்களையும் பறிமுதல் செய்து கொள்வதென்பதாகும். ஆனால் ஒரு மனிதன் தன்னுடைய சொந்த முயற்சியால் சொந்த உபயோ

கத்திற்காக மட்டிலும் வைத்துக்கொள்ளும் (Personal property) பொருட்களை தடைசெய்வதில்லை. உதாரணமாக, குடியிருக்கும் வீடு, உடுப்புகள், சித்திரப் பொருட்கள், பைசிகில், மோட்டார்கார், ரேடியோ, பாங்குக் கணக்கு, சர்க்கார் பாண்டுகள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்வதில்லை. ஒரு மனிதனுக்கு பணத்தைச் சேர்க்க அனுமதியுண்டு; ஆனால் அப்படிச் செய்வதற்கு, அங்கே யாதொரு சௌகரியமும் சந்தர்ப்பமும் கிடையாது. எந்த உரிமைகளுக்காகவும், பாதுகாப்புக்காகவும், மனிதன் ஒரு காலத்தில் பணம் சேர்த்தானோ, அவ்வுரிமைகளையும் பாதுகாப்பையும் தற்சமயம் சர்க்காரே உழைப்பாளிகட்கும் அவர்தம் குடும்பங்கட்கும் அளித்திருக்கிறது.”

எனவே, சமூக வாழ்க்கை முழுவதையும் மாற்றியமைப்பது காங்கிரஸ் அபேதவாதக் கட்சியின் முடிவான லக்ஷியமாய் இருந்தபோதிலும், ஆரம்ப காலத்தில், அவசியமான சில விஷயங்களைக் கொண்டு ஆரம்பிக்க வேண்டுமென்று அது நினைக்கிறது. அரசியலுக்கு உயிர்நாடி போன்ற தொழில்களையும், மற்ற முக்கிய இந்தியத் தொழில்களாகிய பருத்தி, சணல் முதலிய தொழில்களையும், பாங்குகளையும், போக்குவரத்துச் சாதனங்களையும், தோட்டங்களையும், சுரங்கங்களையும், சமூக வாழ்க்கைக்கு முக்கியமான மற்ற எல்லாப் பொருளாதார ஸ்தாபனங்களையும், நடவடிக்கைகளையும் சமூக உடைமை முறைக்குள் கொண்டுவர வேண்டும்.

உதாரணமாக பருத்தித் தொழிலை எடுத்துக் கொள்ளுவோம். பம்பாயில் மட்டும் எண்பதும் சொச்சம் மில்

ளிருக்கின்றன. இவைகள் எல்லாம் இந்திய ஜனங்களின் பொதுச் சொத்தாகி விட்டனவென்று ஒரு சர்க்கார் அறிக்கை வெளியிடப்படும். தேசத்தின் பொருளாதாரத் திட்டத்தை யனுசரித்து, பருத்தித் தொழிலில் வேலை செய்கின்ற தொழிலாளிகளின் பிரதிநிதிகளோடு சேர்ந்து வேலைச் செய்வதற்காக ஒரு பருத்தித் தொழில் டிபார்ட்மெண்டு ஏற்படுத்தப்படும். தற்சமயமிருக்கிற வசதிகளை யுத்தேசித்தும், சமூகத்தின் பொதுத் திட்டத்தை யனுசரித்தும், ஜனங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய எவ்வளவு பருத்தி வாங்க வேண்டுமென்றும், எவ்விதமான பருத்தி சாமான்களை எந்த அளவிற்கு உற்பத்தி செய்யவேண்டுமென்றும் இந்த டிபார்ட்மெண்டுக்காரர்கள் தீர்மானிப்பார்கள்.

ஆரம்ப காலத்தில் உற்பத்திப் பொருட்கள் போதுமான அளவில்லாமலிருந்தால், ஒவ்வொருவரும் 'இவ்வளவுக்கு மேல் வாங்கக்கூடாது' என்று உத்தரவு அளிக்கப்படும். போதுமான அளவு உற்பத்தியாகிவிட்டால், ஒரு கண்டிப்பான விலை ஏற்படுத்திக் கடைகளில் வைக்கப்படும்.

இவ்வாறு தங்களின் விருப்பத்துக்குத் தக்கபடியாக [illegible] வாங்க சௌகரியம் கிடையாமல் போகும்போது அதிகமாகப் பொருள் வைத்திருப்பவர்கட்கு மட்டிலும் அநியாயமாகத் தோன்றலாம். ஆனால், தங்களுடைய மானத்தை மறைக்க ஒரு கோவணத் துண்டுகூட இல்லாத ஆடவர் அவ்வாறு நினைக்கமாட்டார்கள். இந்தியாவில் எத்தனையோ ஆயிரக்கணக்கான குடும்பங்களில் பல பெண்கட்கு ஒரு புடவையைத் தவிர இருப்பதில்லை. அக்குடும்பங்களில், வெளியே போகவேண்டும்போது, ஒரு பெண் அப்புடவையைக் கட்டிக்கொண்டு வெளியே சென்றால்,

இதர பெண்கள் ஏதேனும் கந்தல்களைக் கட்டிக்கொண்டு வீட்டுக்குள்ளேயே இருந்து வருகிறார்கள். இத்தகையோர் மேற்கண்ட இட்டத்தை வகுத்தால் அதனை அநியாயமென்று கருதுவரோ?

இனி, சமூக உடைமைக்குள் கொண்டுவரப்பட்ட மில் தொழிலாளிகளின் நிலைமை எவ்வாறிருக்கும்? இது வரையில் எந்த மில்களில் அடிமைகளாக இருந்து கொடிய, பாழும், அடிமைத்தனத்தில் மூழ்கிப் பாடுபட்டார்களோ, அந்த மில்களுக்கு அவர்கள் (சமூகத்திலுள்ள இதர மக்களோடு சேர்ந்து) எஜமானர்களாய் விடுவார்கள்! அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் அவர்களுடைய யூனியன்களுக்கும் மில்களை நடத்துவதில் பூரண அதிகாரமேற்படும். அவர்களுக்காக நேர்த்தியான வீடுகள் கட்டி கொடுக்கப்படும். குறைந்த நேரமே அவர்கள் வேலை செய்வார்கள். அவர்களது குழந்தைகளுக்காக ஸ்கூல்களும், பெண்களுக்காக பிரசவ ஆஸ்பத்திரிகளும் கட்டிக் கொடுக்கப்படும். அவர்களுக்காக பார்க்குகளும், பொருட்காட்சிசாலை (Museums) களும், புத்தகசாலைகளும் ஏற்படுத்தப்படும். சுதந்திரமும், ஊக்கமும், அதிகாரமும், நாகரிக முற்போக்குமடையத் தகுந்த சந்தர்ப்பங்களும் வசதிகளும் நிறைந்த ஒரு இன்ப உலகத்தில் தொழிலாளிகள் வாழ்வார்கள்.

மில் முதலாளிகளின் கதி என்ன? அவர்களும், தொழிலாளிகள் சமூகத்தில், தொழிலாளிகளாகி விடவேண்டும். அவர்களுக்கும் வேலை செய்யவும், சமூகத்துக்காக உழைக்கவும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அவர்களுக்கு போதுமான திறமையிருந்தால், ஒருவேளை மில் மானேஜர்களாகவும், தொழில் நிபுணர்களாகவும் அமரலாம்.

மில் சொந்தக்காரர்களுக்கு யாதொரு பிரதிப் பிரயோ ஜனமும் கொடுக்கப்படமாட்டாது. ஏனென்றால், சமூக சமத்துவம் கருதும் ஒரு சமூகத்தை, சமூக உயர்வு தாழ்வைக் காண்பிக்கும் பொருள் வித்தியாசத்தைக் கொண்டு ஆரம்பிக்க முடியாது. உற்பத்திக்கு சாதகமாய் இருக்கிற சொத்துக்களைத் தனித்தவர்கள் பெற்றிருப்பது தான் சுரண்டுதலுக்குக் காரண மென்றும், லாபமென்று சொல்லப் படுவது, தொழிலாளிகள் தங்களின் கூலிக்கு மேல் சம்பாதித்துக் கொடுத்த பணம்தானென்றும், ஒப்புக்கொண்டு புதிய சமூகம் ஆரம்பிக்கப்படுவதால் அச் சமூகத்தில் முதலாளிகட்குப் பிரதிப் பிரயோஜனம் கொடுக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பது முடியாத காரியம். அநியாய மான தென்று சொல்லப்பட்ட ஒரு முறைக்கு பிரதி பிரயோஜனம் கொடுத்தால், அந்த அநியாயமான காரியத்தை அங்கீகரித்துக் கொண்டது போலாகிவிடும். மேலும் மில் முதலாளிகளிடத்தில் தேவைக்கு அதிகமாய், தனி உபயோகத்துக்கு வேண்டிய சொத்துக்களிருக்கக் கூடும். ஆகையால் அவர்களுக்கு அதிகமாய் தேவை யிராது. அவர்களும் வேலை செய்ய, அவர்களுக்கும் மற்ற தொழி லாளிகளுக்குச் செய்வது போல், சர்க்கார் எல்லாவித சௌகரியங்களையும் செய்து கொடுத்தால், அவர்களுக்கு அதிகமான செல்வம் ஏன் தேவைப்பட வேண்டும்? மில் சொந்தக்காரர்களும், அவர்களிடத்திலிருக்கிற நல்ல சுபாவத்தைக் கொண்டு, புதிய ஏற்பாட்டில் சேர்ந்து, புதிய உயர்தர சமூகத்தை ஏற்படுத்துவதில் பாடுபடவேண்டும்.

மில் சொந்தக்காரர்கள் சற்று "வேடிக்கையாய்" நடந்து கொள்ள முயன்றால், விஷயங்கள் வேறு விதமாய் நடந்துவிடக் கூடும். அதாவது புதிய உத்தரவுகளை எதிர்த்து,

புதிய முறையை உடைத்துவிட முயலுவதோடு, புதிய சமூகத்துக்கு விரோதமாய்ச் சதியும் செய்ய ஆரம்பிப்பார்களானால், அவர்களுக்கு கெடுதி சம்பவித்து விடும்: சட்டப் பிரகாரம் அவர்கள் ஜனங்களின் சத்ருருக்களாகப் பாவிக்கப்பட்டு, சட்டப் பிரகாரம் தண்டிக்கப்படுவார்கள். புரட்சிகரமான உணர்ச்சி வேகத்தின் காரணமாகவும், புதிய சமூகத்தின் உறுதியற்ற நிலைமையின் காரணமாகவும், புதிதாகக் கட்டப்பட்ட கப்பலை புயற்காற்றிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற கவலையின் காரணமாகவும், பொதுஜனங்கள் அவர்களுக்கு விரோதமாய் ஜனங்கள் அதிக கோபமும் அகங்காரமும் கொண்டு எழலாம்.

ஆகையால் மில் சொந்தக்காரர்களுக்கு என்ன நேரிடுமென்பது அவர்களின் நடத்தையைப் பொறுத்தேயிருக்கிறது.

இதுகாறும் நாம் பருத்தித் தொழிலைப்பற்றி சொல்லி வந்தது மற்றத் தொழில்களுக்கும் தகும்.

நம் திட்டப் பிரகாரம் எங்கும் ஒரு அமைப்புக்குள்பட்ட முறையில், உற்பத்தித் துறை செய்வதும், ஒழுங்கான சம வினியோக முறை செய்வதும் சீர் செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

[4] வெளி நாட்டு வியாபாரம் சர்க்கார் கையில் இருக்க வேண்டும்.

எல்லா வெளிநாட்டு வியாபாரங்களையும் தன் கையில் வைத்துக்கொள்ளுவது திட்டம் போட்ட பொருளாதாரத்தின் ஓர் முக்கிய அம்சமாகும். தெளிவாகக் கூற வேண்டு

மானுல், சமூகத்திற்கு தான் இஷ்டப்பட்ட வஸ்துக்களை இறக்குமதி செய்து, விரும்பிய பொருள்களை ஏற்றுமதி செய்ய அதிகாரமிருக்க வேண்டும். இந்த உரிமையை தனிப்பட்ட வியாபாரிகள் கையில் விட்டு விட்டால் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் லாபத்தால் நிர்ணயிக்கப்படுமே யொழிய சமூக அவசியங்களால் நிர்ணயிக்கப்படமாட்டா. அப்படிச் செய்து விட்டால் தேசத்தில் பஞ்சமிருக்கும் போது தானியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுப் போவதும், ஏராளமான பஞ்சு விற்பனையில்லாமல் கட்டுப்பட்டுக் கிடக்கும்போது, வெளி தேசங்களிலிருந்து ஏராளமான பஞ்சு இறக்குமதியாவதுமான அதி நூதனக் அருங்காட்சியைப் பார்க்கலாம்.

வெளிநாட்டு வியாபாரங்கள் தனிப்பட்டவர்கள் கையிலிருந்தால் பொருளாதார வாழ்க்கையைத் திட்டம் போட்டு நடத்துவது சாத்தியப்படாது. அப்படியிருந்தால் நாணயங்களையும், விலைகளையும், உற்பத்தியையும், விநியோகத்தையும் கட்டுப்படுத்தி, தொழிலிலும் விவசாயத்திலும் யாதொரு திட்டத்தையும் பின்பற்ற முடியாது.

இக் கஷ்டங்களைத் தவிர வெளி நாட்டு வியாபாரம் தனிப்பட்டவர்கள் கையிலிருந்தால், உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருக்கிற தேச சத்ருக்களுக்கு தேசத்தின் பொருளாதார திட்டங்களையும், நடவடிக்கைகளையும் முறிக்க சந்தர்ப்பம் கிடைத்து விடும்.

வெளி நாட்டு வியாபாரம் தேச வாழ்க்கைக்கு உயிர் நாடியாயிருக்கிறது. அது பற்றியே முதலாளித்வம் பெருக்கெடுத்தோடும் தேசத்திலும்கூட அது தடுக்கப்படா

மலும் கட்டுப்படுத்தப்படாமலு மிருக்கவில்லை. சரித்திரத்தில், தடையின்றி வியாபாரம் செய்வதில் பெயர் போன கிரேட் பிரிட்டன்கூட சமீபத்தில் தடையில்லாத வெளி நாட்டு வியாபாரத்தை விட்டு விட்டது.

[5.] அபேதவாத முறையில் வராத சில துறைகளில் சிலகாலம்வரை உற்பத்திக்காகவும் விநியோகத்துக்காகவும், கூட்டுறவுகளை ஏற்படுத்தவேண்டும்.

இப்படிச் செய்வதின் அவசியம் என்னவென்றால் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் திடீரென அபேத வாத முறையில் மாற்றி அமைத்துவிட முடியாது என்பது தான். முதலாவதாக பெரிய தொழிற் ஸ்தாபனங்களையே சமூக உடைமைக்குக் கொண்டு வர முடியும். அவ்வாறு செய்கையில் அநேக சில்லரை ஸ்தாபனங்களும், வியாபாரங்களும் தனிப்பட்ட முறையில் நடந்து வரலாம். அவைகளை ஒழுங்கு படுத்துவதுதான் கூட்டுறவு முறையைக் கைக்கொள்வதன் நோக்கம்.

உதாரணமாக, ஒரு சிறு கிராம வியாபாரக் கடையை எடுத்துக் கொள்ளுவோம். ஆரம்பத்தில் ஒவ்வொரு சிறிய கிராமத்திலும் சர்க்கார் ஒரு ஸ்டோரை ஏற்படுத்த முடியாது. எனினும் தனிப்பட்ட வியாபாரத்தை அப்படியே நடக்க விடுவது செய்யவேண்டிய காரியமல்ல. அவைகளால் பெரும் தீங்கு செய்ய முடியா விட்டாலும் (அவை) அபேதவாத சமூகத்திற்கு கடும்விரோதிகளாகிவிடலாம். ஆதலால்தான் தனிப்பட்ட வியாபாரக் கடைகளுக்குப் பதிலாக வாடிக்கைக்காரர்களின் கூட்டுறவு ஸ்டோர்கள் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறோம்.

தனிப்பட்ட கடைக்காரர்கள் கூட்டுறவு ஸ்டோர்களுடன் சேர்ந்துகொண்டால், சரி; இல்லாவிட்டால் போட்டி போட்டு அவர்களை வியாபாரத்தினின்று தூரத்திவிட வேண்டும். சரியானபடி அமைக்கப்பட்ட ஓர் கூட்டுறவு ஸ்தாபனம் (விசேஷமாக சர்க்கார் அதற்கு பக்கபலமாக விருந்தால்) கட்டாயமாக சிறிய வியாபாரத்தைத் தோற் கடித்தே தீரும்.

[6] சிற்றரசர்கள், ஜமீன்தார்கள் முதலிய எல்லா சுரண்டும் வகுப்பாரையும் பிரதிப் பிரயோஜனம் கொடுக்காமல் நீக்கிவிடவேண்டும்

கொள்ளை, சமூக அநியாயம், அந்தஸ்து வித்தியாசம் முதலியவைகளில்லாத ஒரு சமூகத்தை ஏற்படுத்துவது தான் தம்முடைய நோக்கம் எனில் மேற் சொன்னபடி செய்வது அவசியமாகும். பண்டைக் காலத்து போர்ச்சேவக மானியானுபவ (Feudal) இந்தியாவின் ஞாபகார்த்தமான சிற்றரசர்கள் தற்கால உலகத்திற்கு தகுந்தவர்களல்லர். அவர்களை ஏகாதிபத்தியம் தன்னுடைய உபயோகத்திற்காகப் பாதுகாத்து வருகிறது. இல்லாவிடில் நீண்ட காலத்துக்கு முன்பே அவர்கள் தற்கால சமூகத்தின் காலசக்திகளால் அடித்துக்கொண்டு போகப்பட்டிருப்பார்கள்.

இந்தியாவின் சிற்றரசர்கள்தான் உலகத்திலுள்ள மிகவும் பெரிய கொடுங்கோலரசர்கள். வேறெங்கும் இத்தகைய பொறுப்பில்லாதவர்களிடத்தில் இவ்வளவு அதிகாரமும் சக்தியும் கொடுக்கப் பட்டிருக்கவில்லை. இதனால் ஏற்படும் அநியாயம் மிகவும் பெரியதாயிருந்த போதிலும் நாம் சிற்றரசர்களின் ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று சொல்வதற்கு இது காரணமல்ல.

நாம் இம்முறையையே தாக்குகின்றோமே தவிர, அதன் அளவுக்கு மிஞ்சிய அநியாயங்களை மட்டிலும் தாக்கவில்லை. ஓர் சிற்றரசன் எவ்வளவு நல்லவனாயிருந்தபோதிலும் சிற்றரசன்தான். ஓர் ஜமீன்தார் எவ்வளவு நல்லவனாயிருந்த போதிலும் ஜமீன்தார்தான். ஓர் ஆலைமுதலாளி எவ்வளவு நல்லவனாயிருந்தபோதிலும் ஆலை முதலாளிதான். இவர்கள் தத்தம் ஸ்தானப் பெயர்களுடன் இருப்பது வரையிலும் எவ்வளவு நல்லவர்களாக விருந்தபோதிலும் சரி, சரண்டுதலும் அநியாயமும் ஏற்பட்டே தீரும்.

நம்முடைய விவாதத்தை நன்றாக விளங்கிக் கொள்ளுவதற்காக, நமக்கு தனி மனிதர்களோடு பகைமையில்லையென்றும், தகாத முறைகளுடன்தான் விரோதமென்றும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சுதந்திரமடைந்த இந்தியாவில் சட்டத்துக்குட்பட்டு நடக்கிற அரசர்கள் இருப்பதென்பது அர்த்தமற்ற கூற்று. அவர்கள் அநாவசியமான சுமையாகவும் ஜனநாயகத்தின் வளர்ச்சிக்கு நிலையான தடையாகவும் இருப்பார்கள். அவர்களை வைத்துக்கொள்ளுவதால் ஜனங்களுக்கு (சமூகத்திற்கு) யாதொருவிதமான லாபமும் இல்லாமல் போவதோடு நஷ்டமுமேற்படும்.

ஜமீன்தார்களைப்பற்றியும் அவ்வாறே கூற வேண்டும். இந்து சமூகத்தில் ஜமீன்தாரி முறை முக்கியமானதாக எக்காலத்திலும் இருந்ததில்லை. இந்திய சரித்திரத்தில் வரும் இந்து அரசர்கள் ஆண்டதாக வரும் பகுதிகளில் நிலத்தை சாகுபடி செய்தவன்தான் உற்பத்தி செய்ததின் ஒரு பாகத்தை நேராக அரசனுக்கோ அல்லது அவனுடைய

உத்தியோகஸ்தனுக்கோ கொடுத்து வந்தான் என்று
சொல்லப்பட்டிருக்கிறதே தவிர மத்திய ஆட்கள் இருந்த
தாகச் சொல்வதைக் காணோம்.

இந்த ஜமீன்களை ஒழித்துவிட வேண்டுமென்று நாம்
சொல்லும்போது போல்ஷிவிக்கர்களின் முறையைத் தழுவு
கின்றோமென்று குற்றம் சாட்டப்படுவதைப் பார்க்க மிகவும்
வேடிக்கையாய் இருக்கிறது!

ஜமீன்தாரிமுறை சோம்பலையும், பொறுப்பின்மை
யையும் தவிர வேறெதனையும் உண்டுபண்ணுவதில்லை. அது
சர்க்காருக்கும் ஜனங்களுக்கும் நஷ்டத்தையே கொடுக்
கிறது. நியாயமாக சாகுபடி செய்பவனுக்குச் சேரவேண்
டிய ஒரு பாகத்தை, மத்திய ஆட்களின் ஒரு கூட்டம்
அபகரித்துக் கொள்ளுகிறது.

அபேதவாதி என்று சந்தேகிக்கக்கூட முடியாத மிஸ்
டர் எம். எல். டார்லிங் பஞ்சாபிலுள்ள ஜமீன்தார்களைப்
பற்றி அடியில் கண்டபடி எழுதுகின்றார்:—

> "பஞ்சாப் மாகாணத்தை மொத்தமாக எடுத்துக்
> கொண்டால், வட்டிக்காகப் பணம் கொடுப்பவனை
> விட, ஜமீன்தார், சமூகத்துக்கு ஒரு பெரிய சுமையாக
> இருக்கிறானென்று கூறலாம். லேவாதேவிக்காரன்
> சந்தேகமின்றி, சமூகத்துக்கு ஒரு நோய் போன்ற
> வனே. ஆயினும் அவனுக்குப் பதிலாக வேறு ஒரு
> வழியைத் தேடிக் கொள்ளும்வரை அவன் தீங்கான
> வனாயிருந்தாலும் அவசியமானவனாக விருக்கிறான்.
> ஜமீன்தாரோ தன்னுடைய குத்தகைக்காரர்களின்
> உழைப்பில் ஜீவித்து, தன்னுடைய பொருளை வீணுக்

குவதோடு, தன்னை அடுத்திருக்கிறவர்களையும் கெடுக்கும் புல்லுருவியாகிவிடுகிறான்.

இந்த ஜமீன்தாரி முறையின் அநியாயம் ஒரு பக்கமிருக்க, அது சமூகத்தின் பேரில் செய்யும் ஒரு பெரிய அட்டூழியமாகும். நிலம்தான் உற்பத்திக்கு வேண்டிய பிரதம சாதனம்; விசேஷமாக இந்தியாவில், வாழ்வதற்கு அதுதான் மிக முக்கிய சாதனம். அப்படிப்பட்ட நிலத்தை தனிப்பட்டவர்கள் சொந்தமாக்கி வைத்துச் சாண்டிக் கொண்டிருத்தல் செல்வத்தின் உயர்வு தாழ்வுக்குக் காரணமாக இருப்பதோடு, இந்தியர்களில் பெரும் பகுதியினரை ஏழைகளாகவும் 'பாப்பர்'களாகவும் ஆக்குவதற்குக் காரணமாய் இருக்கிறது.

ஜமீன்தாரி முறையின் அட்டூழியங்களும், அநியாயங்களும் நீங்கிவிட்டாலும், எதற்காக இம்மாதிரி தீங்கான ஒரு பொருளாதார ஸ்தாபனம் பரிபாலிக்கப்பட வேண்டும்? பொது ஜனங்களுக்கு அதைக்கொண்டு என்ன லாபம் கிடைக்கப் போகிறது? சமூகம்தான் என்ன பிரயோஜனமடையப் போகிறது?

எந்தக் காரணங்களைக்கொண்டு முதலாளிகளுக்கு பிரதிபிரயோஜனம் கொடுக்கக்கூடாதென்று தீர்மானித்தோமோ அதே காரணங்களைக்கொண்டே ஜமீன்தார்களுக்கும் பிரதிபிரயோஜனம் கொடுக்கக்கூடாது என்பது சாலும்.

[7] விவசாயிகளுக்கு நிலங்களைப் பங்கிட்டுக் கொடுத்தல்

நிலங்கள் பொது உடைமையாய் இருக்கும்படி அவற்றை விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்று

சொல்லுவது நூதனமாய் தோன்றலாம். நிலங்களைப் பொது உடைமையில் கொண்டுவந்து கூட்டு முறையைக் கைக் கொண்டு பயிர் செய்ய கொஞ்சகாலம் பிடிக்கும். ஆகை யால்தான் ஆரம்பத்தில் விவசாயிகளுக்கு பங்கிட்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்றோம்.

தற்சமயம் ஜனங்கள் கையாண்டுவரும் நில பாத்தியதை யில் அதிக வித்தியாசமிருக்கிறது. சிலர் நூற்றுக்கணக் கான ஏக்கர்கள் வைத்திருக்கின்றார்கள்; மற்றவர்களுக்கு ஒரு ஏக்கர் நிலம்கூட கிடையாது. எனவே நாம் நிலங்களை மறுபடியும் இப்படிப்பட்ட வித்தியாசங்களில்லாமல் பங்கிட வேண்டுமென்று சொல்லுகின்றோம்.

[8] கூட்டு முறை விவசாயத்தை சர்க்கார் முன்னுக்குக் கொண்டு வரவேண்டும்.

ஒரு அபேதவாத சமூகத்துக்கு ஏற்படக்கூடிய எல்லாப் பிரச்னைகளிலும் இதுதான் மிகவும் கஷ்டமானது. இந்திய அபேதவாத சர்க்காருக்கு இப்பிரச்னை இன்னும் அதிகமான கஷ்டத்தைக் கொடுக்கும். நாம் இவ்விஷயத் தைச் சற்று கவனமாய் ஆராய்வோம்.

இந்தியா அனேகமாக விவசாயிகளின் தேச மென்றும், ஆகையால் இந்தியாவுக்கும் அபேதவாதத்துக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதென்றும் சொல்லப்படுகிறது. தற்கால உலக நிலைமையில் சமூகத்தின் உற்பத்திச் சாதனங்கள் அதிகமாக முற்போக் கடைந்திருப்பதால், எந்த பிற்போக் கான இடத்திலும் அபேதவாத சமூகத்தை நிலை நாட்ட முடியுமென்று நாம் மேலே பார்த்து விட்டோம். இந்தி

யாவில் ஒரு அபேதவாதக்கட்சி அதிகாரம்பெற்று, அபேத வாத சமூகத்தை நிலைநாட்ட விரும்பினால், இந்தியா, விவசாயி களின் தேசமாக இருப்பது ஒரு தடையாக மாட்டாது. ஒரு வேளை அபேதவாத சமூகம் சற்று மெதுவாகக் கட்டப் படலாமே தவிர மற்றபடி யாதொரு கஷ்டமும் ஏற்படாது.

இந்தியாவில் அபேதவாதத்தை நிலைநாட்ட முடியுமா வென்பதைவிட, அபேதவாதத்தால் இந்திய விவசாயத்துக் கும், இந்திய விவசாயிக்கும், இந்திய சமூகத்துக்கும் ஏதாவது பலன் கிடைக்குமா வென்பதுதான் முக்கிய கேள்வி. இக் கேள்விக்கு நாம் மிகவும் உறுதியான பதிலளிக்க முடியும். இந்திய விவசாயம் அழிந்து நாசமாய்ப் போவதிலிருந்து அபேதவாதந்தான் காப்பாற்ற முடியுமென்பதில் ஒரு துளி யளவுகூட சந்தேகம் கிடையாது. அபேதவாதம்தான் விவசாயிகளுக்கு க்ஷேமத்தையும் முன்னேற்றத்தையும அளித்து, தேசத்துக்கு உறுதியையும் பலத்தையும் வழங்கும்.

இந்திய விவசாயத்தில் பல பெரும் குறைபாடுகள் புகுந்து விட்டன. அவற்றைப் பரிகரிக்க வேண்டு மானால் தலை கீழான ஒரு மாற்றம் ஏற்படுவதைத் தவிர வேறு வழியில்லை. இப்போது இருக்கும் குறைபாடுகள் முக்கியமாக அடியில் வருவனவாகும் :—நிலங்களின் உழைக்காதவர்கட்கு பாத்தியமேற்பட்டிருப்பதால், அவர் கள் உண்மையில் உழைப்பவர்களைக் கொள்ளையடித்து வருவதால், உழைப்பவர்கட்கு சாகுபடியில் சற்றும் அக்கறை ஏற்படுவதில்லை. அடுத்தபடியாக நிலங்கட்கு விதிக்கப்படும் வரி அபாரம். விவசாயிகளின் கடன் சுமை தாங்க முடியாததாகி முதுகை முறிப்பதாயிருக்கிறது. விவசாய அபிவிருத்துக்கு முரணாயிருக்கும்படியான நிலைமை

யில் நிலங்கள் சிறு சிறு பிரிவுகளாக துண்டு படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே விளைவு மிகக் குறைந்து வருகிறது. அவ்வாறு விளையும் தானியங்களை சரியானபடி விற்பதற்கு வியாபார ஸ்தாபனங்களில் கடன் வாங்க சரியான வசதிகள் கிடையா. கைத்தொழிலுக்கும் விவசாயத்துக்கும், பட்டணத்துக்கும் கிராமத்துக்குமிடையில் சரியான நிறை கிடையாது.

இவைகள் ஒவ்வொன்றும் பெரும் பிரச்னையாயிருக்கின்றன. இவைகளெல்லாவற்றிற்கும் சேர்த்து ஒரு வகை தேட வேண்டும். அப்படிச் செய்வதற்கு எத்தகைய பெரிய சீர்திருத்தம் ஏற்படுத்தினாலும் போதாது. இதற்கு வழி என்னவென்றால் உழுது பயிர் செய்பவனை சுரண்டுவதற்குச் சாதகமாக இருக்கும் எல்லா பாத்தியங்களையும் நீக்கி, விவசாயிகளின் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்து சிறிய நிலங்களைச் சேர்த்துக் கூட்டுறவு முறையில் பெரிய விவசாயப் பகுதிகளாக்கி, சர்க்காரிலிருந்தும், கோஆப்ரேடிவ் (ஐக்கிய) சங்கங்களிலிருந்தும் கடன் கொடுத்து விளைவுப் பதார்த்தங்களை விற்பனைச் செய்ய சரியான ஸ்தாபனங்கள் கண்டு, ஓய்வு நேரங்களில் விவசாயிகள் இல்லறை தொழில்களைச் செய்வதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும்.

இவைகள் "நாசம் செய்யக் கூடிய" எண்ணங்களென்று கருதி விடக் கூடாது. இவைகள், நிலச்சுவான்தாருக்கும் குத்தகைக்காரர்களுக்குமிடையில் இருக்கும் சுரண்டுதலுக்கு சாதகமான சம்பந்தங்களைத்தான் நாசம் செய்யுமே யொழிய மற்ற எதையும் நாசம் செய்யா. மற்றபடி அவைகளெல்லாம் சமூகத்தை முன்னேற்ற

மடையச் செய்யக்கூடியவைகள் தான். ஆனால் இவை களுக்காக சர்க்கார் வழிகாட்டி, உதவி புரிந்து, பிரசாரம் செய்யவேண்டுவது அவசியம்.

ஆக்ரா சர்வகலாசாலையில் செய்த பிரசங்கத்தில் ராதா கமால் மூக்கர்ஜி, "இந்திய கிராமத்திலுள்ள சிறிய நிலங்களை ஒன்றாகச் சேர்த்து கூட்டுறவு விவசாய ஸ்தாபனங்களாக மாற்றி விவசாயத்தை ஒரு பொதுக் கூட்டுறவு விஷயமாகப் பாவித்தாலொழிய" இந்திய விவசாயத்தில் யாதொரு சீர் திருத்தமும் ஏற்படுத்த முடியாதென்று ஒப்புக்கொண்டிருக் கிறார். அவர் சொன்னது நாம் சொல்லுவதை ஆதரிக்கப் போதியதாகும்.

கூட்டுறவுப் பேச்சைக்கேட்டு (முக்கியமாக நிலங்களை கூட்டுறவு முறையில் கொண்டுவர வேண்டுமென்று சொல்லு வதைக் கேட்டு) பயப்படுகிறவர்கள், நிலங்களை போதுமான அளவுள்ள பாகங்களாகப் பிரித்து, நல்ல ஸ்திதியில் இருக்கும் விவசாயிகளுக்கு அவைகளை சுயேச்சையாய், தாமே பயிர் செய்து கொள்ள வேண்டுமென்றும், மேற்கொண்டு சிறிய பாகங்களாகப் பங்கிட்டுக்கொள்ளக் கூடாதென்றும் சொல்லி கொடுத்துவிடுவதே நலமாக இருக்கும்.

இப்படிச் செய்தாலும், நாம் இயற்றவேண்டுமென்று சொல்லுகிற மாறுதலைவிட சிறிய மாறுதல் ஏற்பட்டுவிடாது. அதோடு இப்படி செய்வதால் விவசாயிக்கும், தேசத்துக்கும் ஏற்படக்கூடிய நன்மை மிகவும் குறைவாக இருக்கும்.

கூட்டுறவு முறையைவிட்டு தனிப்பட்ட முறையில் தொழில் செய்தால், உற்பத்தி செய்வதிலும், விற்பனை செய் வதிலும், கொள்முதல் செய்வதிலும், கடன் வாங்குவதிலும்,

விவசாயிக்கு அதிக கஷ்டமுண்டாகும். அன்றியும் பெரிய கூட்டுறவு விவசாய ஸ்தாபனங்களின் அங்கத்தினர்களாக இருக்கும் விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய வசதிகளில் ஒன்றும் தனிப்பட்டவனுக்கு கிடைக்காது. நாகரிகத்திலும் சமூக வாழ்க்கையிலும் தனிப்பட்ட எம்மனிதனும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் சம்பந்தப்பட்டு, தன்னுடைய சுயநலத்தை விட்டு சமூகத்தோடு ஒன்றாகச் சேர்ந்துவிட்டவனைவிட நிச்சயமாகவும் மிகவும் பிற்போக்கானவனாகவே இருக்க முடியும்.

தேசநன்மையை யுத்தேசித்தால் நம்முடைய விவாதம் இன்னும் அதிக பலமுடையதாய் இருக்கும். இந்தியாவில் விவசாயிகள், சமூகத்தின் பெரிய பாகமாய் இருக்கிறார் களென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

நான் இந்தியாவில் அபேதவாத சமூகம் ஏற்பட வேண்டுமென்று சொன்னபோது, மற்ற தேசங்களிலும் இந்தியாவிலும் அபேதவாதம் ஏற்பட வேண்டுமென்று சொன்னேன். இதற்கு காரணம், ஜனங்களைச் சுரண்டு தலிலிருந்து விடுதலை யளிப்பது மட்டிலுமன்றி, நம் தேசத் தின் பொருளாதார வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் முன்னேற்றமடையும்படி செய்வதற்கும் ஆகும். ஏகாதி பத்தியத்தின் சுரண்டுதலின் காரணமாய் இந்திய வாழ்க்கை மிகவும் குழப்பப் பட்டிருப்பதால், மற்ற தேசங்களைவிட இந்தியாவில் திட்டம் போட்டு அபிவிர்த்தி செய்யவேண்டு வது அதிக அவசியமாய் இருக்கிறது.

ஆனால், தனிப்பட்ட விவசாயத்தை வைத்துக் கொண்டு யாதொரு திட்டமும் போடமுடியாது. ஒரு தேசம்,

எங்கெந்த பொருள்களைச் செய்து குவிக்கவேண்டும், எப்படிப் பட்ட தொழிற்சாலைகள் கட்ட வேண்டும், எத்தகைய உணவைச் சாப்பிட வேண்டும், அன்னிய நாடுகளிலிருந்து தேவையான சாமான்களை இறக்குமதி செய்வதற்காக என்னென்ன சாமான்களை ஏற்றுமதி செய்யவேண்டும் என தீர்மானிக்கவேண்டுமானால், அது உற்பத்தி செய்யும் தானியம், அளவு முதலிவற்றை முதலில் தீர்மானிக்கவேண்டும்.

தனிப்பட்டவர்கள் சிறிய அளவில் நிலங்களை வைத்திருப்பதை விட்டு, நிலங்களை பெரிய பெரிய விவசாய ஸ்தாபனங்களாக மாற்றினாலொழிய சமூகம் விரும்பியபடி செய்ய முடியாது. சமூக விருப்பப்படி நடக்க வேண்டுமானால், ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு ஐக்கியப்பட்ட ஸ்தாபனமாக மாற்றப்பட்டு, திட்டம் போட்ட ஒரு பெரிய பொருளாதார அமைப்பின் அம்சமாக வேலை செய்ய வேண்டும். தனிப்பட்ட விவசாயம் இருந்தபோதிலும், ருஷியாவில் ஆரம்ப காலத்தில் நடைபெற்றதுபோல், சில விளைபொருள்களுக்கு அதிக வரி விதித்தும், சில சாமான்களுக்கு சொற்ப வரி விதித்தும், வேண்டுமென்ற சாமான்களை அதிகமாக உற்பத்தி செய்யத் தூண்டியும் வேண்டாத சாமான்களைக் குறைவாக உற்பத்தி செய்ய வற்புறுத்தியும் சீர் செய்யலாம். இப்படி செய்வதால் ஒரு சர்க்கார் அதிகமாகத் திட்டம் போட்டு முன்னேற்றமடைந்துவிட முடியாது.

மேலும் ஒரு நீண்ட காலத் திட்டம் போட்டு இந்தியாவின் விவசாய உற்பத்தியை இருமடங்காக்க வேண்டுமென்று கருதும்போது, தனிப்பட்டவர்களிடத்தில் விவசாயமிருந்தால், அப்படிச் செய்ய முடியுமா? விவசாயிகளை சீர்திருத்தப்பட்ட முறைகளைக்கொண்டு விவசாயம் செய்யும்

படிச் செய்தால் மட்டிலும் போதாது. நிலங்களை சிறு சிறு துண்டுகளாகப் பிரித்துவிட்டால் ஒரு அளவுக்கு மேல் உற்பத்தி செய்துவிட முடியாது.

மேலும், விவசாயத்துக்கும் தொழிலுக்குமிடையில் ஒரு தகுந்த சம்பந்தத்தை ஏற்படுத்தவேண்டும்; இல்லையேல் விவசாயக் குறைகள் நிவர்த்திக்கப்பட மாட்டா. இப்படிச் செய்வதற்கும் கூட்டுறவு முயற்சியும் திட்டமும் அவசியமாகும். இவ்விஷயத்தில் கூட தனிப்பட்ட விவசாயம் ஒரு தடையாகவே இருக்கும்.

மானத சாஸ்திர உண்மைப்படி நோக்கினும் அபேதவாதம் வெற்றிகரமாய் நிகழவேண்டுமானால் தனிப்பட்டவர்களிடத்தில் நிலமிருந்து வரலாகாது என்றேற்படும். நாம் நம்முடைய கைத்தொழில்களை மட்டிலும் அபேதவாத முறைப்படி யமைத்துக்கொண்டு விவசாயத்தை இப்போ இருப்பதுபோல தனிப்பட்டவர்களின் கையில் அப்படியே விட்டு விட்டாலென்ன என்று அடிக்கடி சிலர் கேட்கின்றார்கள். அவர்களுக்கு நாம் அளிக்கும் பதில் என்னவென்றால், ஒரு துறையில் சமூக ஆதிக்கமும் மற்றொரு துறையில் தனிப்பட்டவர்களின் ஆதிக்கமுமிருந்தால் இவ்விரண்டு முறைகளும் ஒன்றோடொன்று மோதி, வேற்றுமைக்குள்ளாகி பூரா சமூகமும் ஒழுங்குற நடக்கமுடியாத நிலைமைக்கு வந்துவிடும் என்பதே. சிறுசிறு நிலங்களைக் கையாண்டு சொந்த லாபத்துக்காக உழுது பயிரிடும் குறுகிய சுயநல விவசாயிகளோடு அபேதவாதம் ஒத்துவர முடியாது. ஒரே சமூகத்தில், பெரும்பகுதியான விவசாயம் தனிப்பட்ட முறையில் (தனியுடைமையாகி) நடந்துவந்து, அதனால் ஏற்படும் தொல்லை அவ்வப்போது சமூகத்தைத் தாக்கிக்கொண்

டிருக்குமாயின், ஒரு சிறிய பாகம் மாத்திரம் பொதுவுடைமைக் கொள்கைக்கேற்ப கூட்டுறவு முறையில் வேலைச் செய்துவருவதென்றால் வெற்றி பெறவே முடியாது.

ஒரு தேசத்தில் அபேதவாத சமூகம் ஏற்பட வேண்டுமானால், கூட்டுறவு வாழ்க்கையும் அவ்வாழ்க்கையின் மாதிரியும்) நகரங்களில் எவ்விதமாய் வளருமோ அதேவிதமாய் கிராமங்களிலும் வளரவேண்டுவதாகும்.

எனவே, எக்காரணத்தைக் கொண்டும் இந்திய விவசாயத்தை அபேதவாத கொள்கைகளின்படி மாற்றியமைக்காமல் இருக்கமுடியாது.

எனவே, அபேதவாத விவசாயமென்றாலென்ன? கூட்டுறவு விவசாய ஸ்தாபனமென்றாலென்ன?

பழைய இந்திய கிராமப் பஞ்சாயத்தைப்பற்றி நாமெல்லோரும் அறிவோம். அது ஆதிகாலத்து விவசாய முறையல்லவென்பதும் இம்முறை இந்தியா முழுவதிலும் பரவி இருக்கவில்லை என்பதும் உண்மை. மனு ஸ்மிருதியில் அதுபற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் இந்தியச் சரித்திரத்தில் நீண்டகாலம்வரை அனேக இடங்களில் கிராமவாசிகள் தங்களின் கிராமத்தைச்சேர்ந்த நிலங்களை எல்லாம் பொதுவாக்கி பொதுவில் சாகுபடிசெய்து விணியோகம் செய்தார்களென்பதை யாரும் மறுக்க முடியாது— இப்படிச் செய்வதற்கு காரணமெனனவென்பதை நாம் கவனிக்க வேண்டுவதல்ல. சமீபகாலம் வரையில் சென்னை மாகாணத்தில் இப்படிப்பட்ட கிராம அமைப்புகளிருந்தன.

இப்பழைய முறை எந்த நோக்கத்தைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டதோ அதுதான் அபேதவாதிகளின் நோக்கமுமாகும். ஆனால் ஒரு அபேதவாத சமூகத்தின் கிராமம் வெளியூர் சம்பந்தமற்று மூடப்பட்டிராமல் ஒரு அகில தேசிய பாராளதாா முறைக்கு ஈடுபட்ட அம்சமாக இருக்கும்.

நம் காலத்தில் ருஷியாவில் மாத்திரம் தான் அபேதவாத சமூகம் கட்டப்படுகிறது. அங்குள்ள விவசாய நிலைமைகளும், இந்திய விவசாயத்தைப்போல் பூர்வீகமானதும் பழக்க வழக்கங்களால் கட்டுப்படுத்தப்பட்டதாயும் இருந்ததோடு அங்குள்ள விவசாயிகளும் இந்தியவிவசாயிகளைப் போல் படிப்பில்லாத சுயநலம் கருதும் சோம்பேறிகளாகவே இருந்தார்கள். அப்படியிருந்தும், ருஷிய விவசாயம் நல்ல விதமாக சமூக ஆதிக்கத்துக்குள் வந்துவிட்டது. ருஷியாவில் இரண்டு, அல்ல, மூன்றுவிதமான விவசாயமுறை சமூக ஆதிக்கத்துக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

முதன்முறை ஐக்கிய விவசாயம். இம்முறை அபேதவாதிகளின் அபிப்பிராயத்தில் மிகவும் தாழ்ந்த படியிலிருப்பதாகும். இம்முறையில், ஜமீன்தார்கள், முதலாளிகள் முதலியவர்களின் நிலங்களெல்லாம் விவசாயிகளுக்குச் சமமாகப் பங்கிட்டு கொடுக்கப்படுகிறது. பழைய விவசாய கருவிகளும் குதிரைகளும் தனிப்பட்ட சொத்துக்களாக இருக்கின்றன. ஆனால் விவசாய வசதிகளுக்காக அனேக நிலங்களை ஒன்றாகச்சேர்த்து, அவைகளின் சொந்தக்காரர்களெல்லாம் இணைந்து உழைத்து, விளைவாகும் பொருள்களை செலவு போக நிலத்தின் அளவுக்குத்தக்கபடியும் அந்தந்த நிலக்காரர்கள் செய்த வேலைக்குத் தக்கபடியும் விநியோகித்துக் கொள்ளுகிறார்கள்.

இதுதான் சமூக வாழ்க்கையின் முதற்பாடம். இத ஞல் ஒரு சமூக உணர்ச்சியுண்டாகிறது. மேலும் இப்படிச் செய்வதன் காரணமாக உற்பத்தி அதிகப்படுவதால், தனிப் பட்ட விவசாயிகட்கு சமூக வாழ்க்கையைக் கைக்கொள்ள ஒரு தூண்டுதல் ஏற்படுகிறது.

அடுத்தபடியில் (ருஷ்யாவில்) 'கூட்டுப்பண்ணை' முறை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இதில் தனிப்பட்ட உரிமை கள் கிடையா. வேலைக்குதக்கபடி பங்கு கொடுக்கப்படும். சில எதிர்பாராத அவசியங்களை யுத்தேசித்தும், சிலருக்கு அதிகமாகப் பங்கு கொடுக்கப்படும். ஆயினும் இக்கூட்டுப் பண்ணைக் கிராமத்தில்கூட சில விவசாயக் கருவிகளும், பன்றிகளும், ஆடு மாடுகளும், குதிரைகளும் தனிச்சொத்தாக இருக்கலாம். சமூக வாழ்க்கை ஒரு பெரிய அளவிற்கு ஏற் பட்டு விட்டபோதிலும் அதிகமாக தனிப்பட்ட வாழ்க்கை யும் இருக்கத்தான் செய்யும்.

மூன்ருவதாக "பொது உடைமை" ஏற்பட்டிருக்கிறது. அதில் கூடியவரையில் வாழ்க்கை பொதுவாக்கப்படுகிறது. இத்துறையில் U. S. S. R (ஐக்கிய சோஷலிஸ்ட் சோவியத் ருஷ்யா) அடைந்த புரட்சிகரமான வெற்றியைப்பற்றி டாக் டர் ஷெர்வுட் எட்டி எழுதிய "இன்றைய ரஷியாவிலிருந்து நாம் என்ன தெரிந்துக் கொள்ள முடியும்" என்ற புத்தகத் தத்தில் அடியில் கண்டபடி எழுதுகிருர்:—

சோவியத்து யூனியன் விவசாயத்தில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ரோமன் ஏகாதியத்தியம் க்ஷீணதசை யடைந்த காலத்திலிருந்து, விவசாயம் பிற்போக் கடைந்து, கிராமாந்திரங்களுக்கும் நகரங்களுக்கு மிடையில் இருந்த சம்பந்தம் குழப்பமுற்று இருந்ததுதான் சதாகாலமும்

கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு பிரச்னை. அப்பிரச்னையை பூமியில் ஆறிலொரு பகுதியாகிய சோவியத் ருஷ்யா தேசம் 4½ வருடங்களில் தீர்த்துவிட்டது. ஒரு பழங்கால விவசாய நாடாயிருந்த நிலைமைமாறி நவீன நாகரிகம் செறிந்த தொழில் நாடாகிவிட்டது. அதோடு அங்குள்ள விவசாயம் முழுவதையும் நாட்டின் நாலா பக்கங்களிலும் துண்டுபட்டு சிதறிக்கிடந்த மக்களிடையே பொதுவுடமையாக்கி, இயந்திர வுறவு கொண்டதாக்கி, கூட்டுப்பண்ணை முறைக்கும் அடங்கியதாகச் செய்து விட்டது. இப்படி செய்வது சாத்திய மில்லாததாய்த் தோன்றலாம்; ஆயினும் அந்த "சாத்தியமின்மை"யை ருஷ்யா சாதித்து விட்டது. விவசாயப் பிரச்னையே இப்போ தில்லை. சோவியத்துகள் விவசாயிகளோடு "போராடி" வெற்றியடைந்து விட்டார்கள். ரஷியா, கூட்டுறவு ஸ்தாபனங்களை விட்டு இனி ஒரு காலத்திலும் பின்னடையப் போவதில்லை.

இரண்டு வருடங்கட்கு முன்னால் ஏராயிலும் முதலாளித்துவ மனம் படைத்த— நில ஆசை கொண்ட—தனியுடைமை வெறி பிடித்த—உழவர்கள் 2 கோடிப் பேரிருந்தனர். அவர்கள் திடீரென எழும்பி சர்க்காரைக் கவிழ்த்தி விடுவார்களோவென்ற பயமிருந்தது. ஆனால் தொழிலாளிகளுக்கு பிறகு இப்போது சோஷலிசத்தை ஆதரிப்பவர்கள் விவசாயிகளாகவே இருக்கிறார்கள். இந்த நடைமுறை சற்று துரிதமாக நடந்து விட்டது என்று எவரேனும் குறை சொல்லலாம்; ஆயினும் சரித்திரத்தில் இடம்பெறத் தகுந்த பெரும் வெற்றி என்பதில் சந்தேகமில்லை.

ரஷியாவில் அபேதவாதம் செய்தது இதுதான். இந்தியாவின் விஷயம் என்ன? இத்தகைய அபேதவாத முறையைக் கொண்டு செய்யப்படும் விவசாயத்தில் எந்த பாகமேனும் இந்தியாவில் நிறைவேறக் கூடாததாய் இருக்கிறதா? ருஷியர்கள் சாத்தியப்படாததை சாதித்திருக்கும்போது

நாமும் ஏன் அப்படி செய்யக்கூடாது? இந்திய விவசாயி ருஷிய விவசாயியைவிட அதிகமாய் பொது முயற்சியை யும் பொது வாழ்க்கையையும் வெறுக்கிறான் என்று எண்ண வேண்டுமானல் அதற்கு யாதொரு காரணமும் கிடையாது.

ருஷியர்களைப்போல் அவசரப்படாமல் நாம் கொஞ்சம் மெதுவாய்ச் செய்வோம். பலாத்கார மில்லாமலும் செய் வோம். காங்கிரஸ் அபேதவாத கட்சி தொழில்களை எவ்வித மாக நிர்ப்பந்தப்படுத்தி சமூக ஆதிக்கத்துக்குள் கொண்டு வர வேண்டுமென்று சொல்லுகிறதோ அவ்விதம் விவசாயத் தையும் நிர்ப்பந்தப்படுத்தி சமூக ஆதிக்கத்துக்குள் கொண்டு வர வேண்டுமென்று சொல்லவில்லை. கூட்டுறவு விவசாயத் தையும், கூட்டுறவு விவசாய ஸ்தாபனங்களையும் ஊக்கமூட்டி முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்றுநாம் சொல்லு கிறோம்.

இதற்கு போதனை மூலமும், பிரசாரத்தைக் கொண்டும், அனுஷ்டான வழிகளாலும், பண உதவியளித்தும், தகுதி யான வரிகளை விதித்தும் வழி தேடலாம்.

ருஷியாவைவிட நம்மிடத்தில் குறைந்த நிலமும், அதிக ஜனங்களும் இருப்பதால் நாம் ரஷியர்கள் உபயோ கிப்பது போல் அவ்வளவு மெஷின்களை உபயோகிக்க வேண்டியிராது. இதனல் நாம் தற்காலமிருக்கிற தகுதி யற்ற கலப்பையை வைத்துக்கொள்ளுவோமென்ற அர்த்தமில்லை. ஆனல் நம்முடைய கிராமங்களிலிருக்கிற பெருந்தொகையான ஜனங்களெல்லாம் தொழில்களில் அமரும் வரையில் அநேக டிராக்டர்களும் (உழும் இயந்திரங் களும்) அறுவடை மிஷீன்களும் தேவைப்படா. ஆனல்

கிராமங்களுக்கெல்லாம் மின்சார வசதிகளும், ரேடியோவும் சுலபமான போக்குவரத்துச் சாதனங்களும் அளிக்கப்பட வேண்டும்.

நாம் போதுமான புத்தியைச் செலுத்தினால், ருஷியர்களைவிட குறைவான தவறுகளையே செய்யக்கூடும். காரியம் முடிந்த பிறகு புத்திசாலிகளாவது சுலபமே. மற்றவர்களைவிட ருஷியர்கள்தான் தங்கள் குறையை முதலாவதாக உணர்ந்தவர்கள். அவர்கள் அத்தவறுகளை வேண்டுமென்று செய்யவுமில்லை. ஒரு சிறு கண்ணாடி குழாயைக்கொண்டு (test-tube) பரிசோதனை செய்வதில் தவறுகள் செய்யாமலிருக்க முடியலாம்; உலகத்தின் ஆறில் ஒரு பாகத்திலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களைக் கொண்டு பரிசோதனை செய்யும்போது தவறுகள் செய்யாமலிருப்பது மிகவும் கஷ்டமல்லவா?

ருஷியத் தவறுகளைப் பார்த்து அவர்கள் அடைந்த வெற்றியையும் அவர்கள் போதிக்கும் பாடத்தையும் நாம் மறந்து விடக்கூடாது. திண்ணை வேதாந்திகள் பல வித சந்தேகங்களைக் கொண்டு தம் பல்லைக் கடித்து தலைகளையாட்டலாம். ஆனால் செயலாற்றப் போகும் நமக்கோ நம் முன்னால் ஒரு மாபெரும் திட்டமிருக்கிறது. எப்போதும், உலகில் புது வாழ்வை நிருமிக்கும் பொருட்டு ருஷ்யர்கள் என்ன முறைகளைத் தணிந்து கையாடினார்களோ அதனையே நோக்குவோம்.

சில தெளிந்த ஞானமில்லாத ஆனால் கருத்துக் கொண்ட மனிதர்கள் ஊரூராகச் சென்று அபேதவாதிகள் விவசாயிகளிடத்தில் இருக்கும் நிலங்களையெல்லாம் பிடுங்

கிக் கொள்ளுவார்களென்று சொல்லி வருகிறார்கள். விவசாயிகளிடத்திலிருந்து "பறிமுதல் செய்யும்" நிலங்களை எல்லாம் அபேதவாதிகளாகிய நாம் ஒரு தனித்த தீவுக்கு ஏற்றுமதி செய்து கொண்டுபோய்விடப் போவதில்லை. நிலங்களெல்லாம் எங்கெங்கே இருக்கின்றனவோ அங்கேதானிருக்கும். விவசாயிகள்தான் அவைகளைச் சாகுபடி செய்வார்கள். ஆனால் விவசாயிகள் தங்களுடைய நிலங்களை தங்களுக்கும் சமூகத்துக்குமாகப் பிரயோஜனப்படும்படி விவசாயம் செய்யவேண்டுமென்பதுதான் இரகசியம்.

நாம் சொல்லுவதெல்லாம், ஒரு சிறிய வகுப்பாருக்கு மாத்திரம் நன்மை ஏற்படாமல் சமூகம் முழுவதுக்கும், நன்மை ஏற்படவேண்டும் என்பதே. இந்திய நிலங்களெல்லாம் எல்லா மக்கட்கும் பொதுவாகவிருந்து பொதுவாக சாகுபடி செய்யப்பட்டால் இந்தியாவின் கிராமவாசிகளுக்கெல்லாம் ஒரு பெரிய வரம் கிடைத்தது போலாகிவிடும் என்று நான் மேலே காண்பித்துவிட்டேன். இந்திய கிராமம், தற்சமயம் இருக்கும் தாழ்ந்த நிலைமையைவிட்டு, இதுவரையில் இந்திய சரித்திரத்தில் அடையாத க்ஷேமத்தையும் நாகரிகத்தையும் அடையக்கூடிய நிலைமைக்கு மாற்றவேண்டுமென்பதே நம் ஆசை.

இவ்விஷயத்தை முடிப்பதற்கு முன் நான் இதோடு சம்பந்தப்பட்ட மற்றொரு பிரச்னையைப்பற்றி எழுத விரும்புகின்றேன். காங்கிரஸ்காரர்களுக்குள் ஒரு பெரிய கூட்டம் கிராமங்களையும் கிராம நாகரிகத்தையும் மிகவும் பலமாக நேசிக்கிறது. இந்தக் கூட்டம் ஒரு தப்பான அபிப்பிராயத்தைக்கொண்டு மிஷின்கள் வேண்டுமென்று சொல்லும் அபேதவாதிகளைத் தாக்குகின்றது. இக்கூட்டம், 'அபேத

வாசிகள் தம் பாட்டுக்கு உழைத்து திருப்தியாக வாழ்ந்து கொண்டிருக்கும் (தற்சமயம் அப்படி கிடையாது) கிராம வாழ்க்கையை யொழித்து, கொள்ளையிடும் உபயோகமற்ற நகரங்களை ஏற்படுத்த முயலுகிறார்களென்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறது.

முதலாவதாக இக் கூட்டம் நகரங்களுக்கு விரோதமாகச் சொல்லுவதை எல்லாம் ஒப்புக்கொள்ளுவோம். சாதாரணமாக நகரங்களென்னும் பிசாசு ஜன அடர்த்தியும், கடுகடுக்கத்தைத் தரக்கூடிய போக்குவரத்தும், குடிசைகளும், அசுத்தமும் நிரம்பி, நமக்கு வெறுப்பைக் கொடுப்பதோடு அலைகளை அபாயம், பயங்கரம், பொதுநலத்துக்கு விரோதம், புத்திசாலித்தனமான வாழ்க்கைக்கு சத்துரு வென்றெல்லாம் நினைக்கும்படியும் செய்துவிடுகின்றன. நகரம், அதில் வசிக்கும் அநேகருக்கு அபாயமானதே. அதில் நாடக கொட்டகைகளும் மற்றும் ஆனந்தமூட்டக்கூடிய பல ஸ்தாபனங்களும் இருந்தபோதிலும், அவைகளெல்லாம் களைத்துப்போன நரம்புகளுக்கும் நொந்துபோன உடம்புகளுக்கும் ஊக்கத்தைக் கொடுக்கும் போதை வஸ்துக்கள் போலிருக்கின்றனவே யொழிய, ஆனந்தத்தைக் கொடுத்தும், ஆன்மாவுக்கு இன்பத்தையளித்தும் மனிதனுடைய நிலைமையை உயர்த்தக்கூடியவைகளாயில்லை.

மேலும், தற்கால நகரங்கள், கிராமங்களை மாத்திரம் சாண்டியதால் பெருத்தவைகளல்ல. நகர தொழிலாளர்களையும் சாண்டியே பெருத்திருக்கின்றன. இச்சாண்டுதல் நகரவாசிகளுக்கும் கிராமவாசிகளுக்குமிடையில் ஒரு இயற்கைக்கு விரோதமான போராட்டத்தை யுண்டாக்கி யிருக்கிறது. அதனால் கிராம வாசிகளுக்குத்தான் அதிக கஷ்டம்.

கலை, கல்வி, பெருவாழ்வு, சுகம் முதலியவைகளெல்லாம் நகரங்களில் குவிய அங்கராப் பெருக்கத்திற்கு உதவி புரிந்த கிராமங்கள் கவனிக்கப்படாமலிருப்பதால், நகரங்களுக்கும் கிராமங்களுக்குமிடையில் ஒரு பெரிய வித்தியாசம் ஏற்பட்டு விட்டது.

இவைபோன்ற குறைபாடுகள் நகரங்களிலிருப்பது உண்மைதான்; ஆனால் அபேதவாத சமூகத்தில் இத்தகைய பெரிய நகரங்கள் அப்படியே வைக்கப்படுமென்றும், அவைகட்கு அதிகமாக உதவி யளிக்கப்படுமென்றும் எண்ணுவது தவறு. அபேதவாதம் ஒருவகையான சமூக ஆக்க சாஸ்திரம். அது சமூகத்தை மேடு பள்ளமில்லாமலும் உயர்வு தாழ்வு இல்லாமலும் கட்ட முயல்வதாகும். அபேதவாத நகரங்களோ கிராமங்களோ இப்போதிருக்கும் நகரங்களையும் கிராமங்களையும் போன்றிரா. கிராம நகரங்கட்குள்ளிருக்கும் ஏற்றத்தாழ்வும் பகைமை யுணர்ச்சியும் ஒருநாளும் தலை தூக்காமல் ஒழிக்கப்பட்டுவிடும்.

அபேதவாதி 'மிஷின்'களைத் தழுவுகின்றான் என்பது உண்மைதான். ஆனால் அவனுடைய அபிப்பிராயத்தில் மிஷின்கள், மனிதனைச் சுரண்டுவதற்காகவும், மனிதனை அவைகளோடு கட்டிப்போட்டு சித்திரவதை செய்வதற்காகவும் ஏற்பட்டவைகளல்ல. மிஷின் என்பது மனிதனின் உழைப்பைக் குறைப்பது; உற்பத்தியை அதிகரிப்பது; மனிதனுக்கு ஓர் நேசனைப் போன்றது; மனிதனுக்காக கடலையும் காற்றையும் கட்டி யாள்வது.

மிஷின்கள் நகரங்களையும் அவைகளில் அட்டூழியங்களையும் ஏற்படுத்தி, கிராம பொருளாதாரத்தைக் குழப்பி கிராமங்

களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கி விடுமென்று எண்ணுவது தவறு. மிஷின்களை வைத்திருக்கும் சில தனி மனிதர்கள் அவைகளை தனிப்பட்ட லாபத்துக்காக உபயோகித்தால் மட்டிலுமே அத்தகைய கெடுதிகளும் அதற்கு மேற்பட்ட தீமைகளும் உண்டாகக்கூடும். அதே தீமைகள், சமூகம் முழுதும் சேர்ந்து இந்த சக்திவாய்ந்த உற்பத்திச் சாதனங்களை எல்லா ஜனங்களின் பிரயோஜனத்திற்காகவும் உபயோகிக்குங்காலையிலும் விளைந்து விடுமென்று சொல்லுவது ஒப்புக்கொள்ள முடியாத மயக்க வாதமாகும்.

அபேதவாதத்தின்கீழ் நகரங்கள் 'பிளான்' போட்டு கட்டப்படும். தொழில்களை எல்லா விடங்களிலும் பரப்பி விடுவதைக்கொண்டு நகரங்களில் ஜனங்கள் அதிகமாக கூடுவதை தடுத்துவிடப்படும். ஒரு நகரத்தை எவ்விதமாக கட்டுவதென்றும், எந்தெந்த விஷயங்களுக்காகவும் எத்தனை ஆட்கள் இருப்பதற்காகவும் கட்ட வேண்டுமென்றும் திட்டம் போடப்படும். மேலும் கிராமங்கள், உலகத்தோடு சம்பந்தமில்லாமல் மூலைகளில் இருக்கிற சில கும்பல்களாக இருப்பதை யொழித்து, அவைகள் மின்சார சக்தியைக் கொண்டும், இருப்புப்பாதைகளைக் கொண்டும், டெலிபோன், ரேடியோ, பஸ் முதலியவைகளைக் கொண்டும் உலகத்தோடு சேர்ந்த இடங்களாக இணைக்கப்படும். அதுகாலை கிராமங்கள் கூட நகரத்தைப்போல் தொழில் ஸ்தாபனங்களாகிவிடும். தனித்த முனிசிபாலிடி, பள்ளிக்கூடம், உடற்பயிற்சி, கண்காட்சி முதலியவைகளுக்கு வேண்டிய ஸ்தாபனங்கள் எல்லாம் அமையும்.

ஒரு அபேதவாத சமூகத்தின் கிராமத்தையும் நகரத்தையும் பற்றி, எம். இல்லின் என்பவர் தன்னால் எழுதப்

பட்டுள்ள "மாஸ்கோவுக்கோர் திட்டமிருக்கிறது" வென்ற புத்தகத்தில், மிகவும் நேர்த்தியாக விவரித்துள்ளார். அதனை இங்கு திருப்பி எழுதுவதைவிட நான் நல்லவிதமாக ஒன்றும் சொல்லிவிட முடியாது. அவர் எழுதுவதாவது :—

பழைய நகரம் எப்படிக் கட்டப்பட்டது?

நடுமத்தியில் கிரம்லின் என்ற ஒரு அரண்மனைக் கோட்டையிருக்கிறது. இதைச் சுற்றி மார்க்கட்டுகளும், கடைகளும் மண்டிகளுமிருக்கின்றன. தொழிற்சாலைகளுக் கிடையில் வீடுகள் கட்டப்பட்டன. நல்ல வீடுகள் நகரத்தின் மத்திய பாகத்திலும் சாதாரண வீடுகள் வெளி பாகங்களிலும் அமைந்தன. ஒரு புதிய நகரம் இப்படி கட்டப்படமாட்டாது. அதன் மத்தியில் ஒரு கோட்டையோ அல்லது மார்க்கட்டோ இராது. ஆனால் ஒரு தொழிற்சாலை அல்லது மின்சார பவர் ஸ்டேஷன் இருக்கும். எனவே ஒவ்வொரு மின்சார நிலையத்தைச் சுற்றியும், ஒவ்வொரு பெரிய தொகுதியைச் சுற்றியும் ஒரு நகரம் உண்டாகும். இவ்விதமாய் நகரத்தின் மத்தியில் ஏற்படுத்தப்படும் தொழிற்சாலைக்கும் ஜனங்கள் வசிக்கும் பாகத்துக்கு மிடையில் பயங்கரமான கோட்டைச் சுவர்களும் கோபுரங்களும் இல்லாமல் தொழிற்சாலையைச் சுற்றி ஒரு பெரிய பூந்தோட்டம் (பார்க்) இருக்கும். இந்த உல்லாசத் தோட்டம் தொழிற்சாலையிலிருந்துவரும் புகை முதலியவற்றிலிருந்து நகரத்தைக் காப்பாற்றிக்கொள்ளும.

நகரத்தின் பிளானும் வித்தியாசப்பட்டதாகவே யிருக்கும். சூரியனின் கதிர்கள் வெளியே வருவது போல் நகரத்தின் மத்தியத்திலிருந்து சாலைகளும், நிழற் பாதைகளும் எல்லா திசைகளிலும் பாவும். வீடுகளெல்லாம் சோல்ஜர்களைப்போல் ஒரே வரிசையில் நின்று ஒரே பக்கம் பார்க்கும்படியாக் கட்டப்பட மாட்டா. ஒவ்வொருவீடும் எவ்வளவு சூரியனைப் பார்க்க முடியு

மோ அவ்வளவு வெளிச்சத்தை அடையும்படியாகக் கட்டப்படும். பொது வீடுகளையும் பள்ளிக் கூடங்களையும், புஸ்தகசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் சுற்றி பூந்தோட்டங்களிருக்கும். ஒவ்வொரு வாசலிலும் பெரிய மரங்களும், செடிகளுமிருக்கும்.

நகரங்களின் தெருக்களில் நாம் தற்சமயம் கேட்கும் சப்தங்களுக்கும் கூச்சல்களுக்கும் இரைச்சல்கட்கும் பதிலாக மரங்களின் இன்பமான சலசலப்பும், சந்தோஷகரமான பறவைகளின் இனிய பாடல்களும் கேட்கும்.

தற்சமயம் நகரங்களில் வசிக்கும் மக்களின் உடம்பை நடுக்கும் ஓயா சத்தமும் ஒழியாப் படபடப்பும் இருக்காது.

பொது ஸ்தாபனங்களெல்லாம் அதிக தூரத்தில் விலக்கப்படும். ஜனங்கள் நிசப்தமான இடங்களில் வசிப்பார்கள். தற்காலத்திலிருப்பதுபோல் அனேக பெரிய நகரங்கள் இருக்க மாட்டா. ஆகையால் தெருக்களில் இப்போது இருப்பதைவிட போக்குவரத்து குறைவாகவே இருக்கும். ஒரு லட்சம் பேர் அடங்கிய ஒரு நகரம் மிகவும் பெரியதாகப் பாவிக்கப்படும்.

வருங் காலத்தின் ஒவ்வொரு நகரமும் ஒரு தொழிற்சாலையை அடுத்த தொழிலாளிகளின் கிராமமாக இருக்கும். (கிராமம் என்ற வார்த்தையைக் கவனிக்க—J. P. N.) தற்காலத்திலிருப்பதுபோல் எல்லா தொழிற்சாலைகளும் தொழிற்சாலைகளின் தொகுதிகளும் ஒரே இடத்தில் சேர்த்து வைக்கப்படாமல் ஒரு நல்ல திட்டப் பிரகாரம் தேசம் முழுவதிலும் பரப்பப்படும். நமக்கு வேண்டிய மூலப்பொருட்களும் ஒரே இடத்தில் அகப்படவில்லை; ஆயிரம் இடங்களில் அகப்படுகின்றன.

இவைதாம் நகரத்தைப்பற்றிய செய்திகள். இனி கிராம விஷயம் என்ன?

கிராமங்கள் இருக்கா. ரொட்டியும், மாமிசமும், பாலும் சர்க்கார் தொழிற்சாலைகளிலிருந்தும் கூட்டுறவுப் பண்ணைகளிலிருந்தும் கிடைக்கும். ஒவ்வொரு விவசாய தொழிற்சாலையைச் சுற்றியும் உணவு, தானியங்கள் முதலியவைகளை சேமித்து வைக்கப் போதிய களஞ்சியங்களும் மாமிசப் பாதுகாப்பறைகளும் கட்டப்படும். இத்தொழிற்சாலைகள் எல்லாம் சேர்ந்து ஒரு விவசாய யூனியன் ஆக்கப்படும். இந்த யூனியன்களைச் சுற்றி ஒரு விவசாய நகரம் உண்டாகும். இதன் பொருள் என்னவென்றால், நகரத்துக்கும் கிராமத்துக்கும், விவசாயிக்கும் தொழிலாளிக்குமிடையில் இருக்கிற வித்தியாசங்கள் மறைந்து விடும் என்பதாம். விவசாயி, தொழிலாளி என்ற பதங்களும் ஒழிந்துபோம்.

வேலை செய்பவன் என்ற பதம் மாத்திரம் தானிருக்கும்.

இவைகளெல்லாம் நாம் அபேதவாத சமூகம் ஏற்படுத்திய பிறகே நடைபெறும். ஆனால் அடுத்த ஐந்து வருஷங்களில் நாம் இருநூறு அபேதவாத நகரங்களையும், நூற்றுக்கணக்கான பொது வீடுகளையும் கட்டுவோம். ஏற்கனவே நகரத்துக்கும் கிராமத்துக்குமிடையில் இருக்கிற வித்தியாசம் அழிக்கப்படுகிறது.

அபேதவாதம் ஒரு கட்டுக் கதையல்ல; ஒரு கற்பனையுமல்ல. நாமே அதை நிறுவக்கூடும்.

ஆம்—அபேதவாதம் மிகவும் உயர்ந்த கனவே! நடைமுறையில் வரக்கூடியதே. சுலபமாய் அடையவும் கூடும். அபேதவாதிகளின் கனவுகள் எல்லாம் செய்கையாக மாற்றப்படக்கூடியவைகளாகவே இருக்கின்றன.

நகரத்துக்கும் கிராமத்துக்குமிடையில் ஏற்பட்டிருக்கிற வித்தியாசத்தை நீக்கவேண்டுமாயின், இத்தகைய முறை

களைத்தான் கையாளவேண்டுமே தவிர நகரத்தை விட்டோ கிராமத்தை விட்டோ ஓடிப்போய் விடுவதால் யாதொன்றும் ஆகிவிடப்போவதில்லை.

[10] வேலை அல்லது ஜீவனும்சம் கொடுக்க சர்க்கார் கட்டுப்படவேண்டும்.

முதலாளித்வ சமூகத்திலும் அதற்கு முந்திய சமூகங்களிலும் வேலைக்கு யாதொருவித பாதுகாப்பும் இருந்ததில்லை; எனவே மனித வாழ்க்கைக்கும் பாதுகாப்பெதுவும் இருக்கவில்லை. உற்பத்தி செய்யாத நிலங்கள் கிடைத்த வரையில் பலசாலிகளுக்கு யாதொருவிதமான பாதுகாப்பும் தேவைப்படாது. ஆனால் நிலம் கிடைக்காமல், வேலையும் அகப்படாமலாகிவிட்டால், ஒருவன் பட்டினியாய்க் கிடக்க வேண்டும்; இல்லாவிட்டால் யாரையாவது அடித்துப் பிடுங்கிச் சாப்பிடவேண்டும். ஒருவன் கொள்ளையடித்து அகப்பட்டுக் கொண்டானானால் தண்டிக்கப்படுகின்றான். அதற்குப் பயந்து பட்டினியாயிருந்து இறந்துபட்டானானால் பாவம்! அவனுடைய ஆன்மாவைக் கடவுள் ஏற்றுக்கொண்டார் என்று சொல்லப்படுகிறது.

நம் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பெரும் ஆபத்தாகும். தொழில் அபிவிருத்தி காரணமாக எங்கும் சொந்தச் சொத்தில்லாத ஒரு கூட்டத்தார் உற்பத்தியாகி தம் உழைப்பைப் பிறருக்கு விற்பனை செய்தாலன்றி வாழமுடியாதென்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். எனினும் இவர்கட்கு வேலை கொடுக்க யாதொரு விதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஒவ்வொருவரும் தம்மால் இயன்றதைப் பார்க்கவேண்டியதாய் இருக்கிறது. தொழில் நெருக்

கடியின் காரணத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் அள வுக்கு மீறி தொழிலாளிகள் சண்டைக்குத் தயாரான பிறகே தற்கால சர்க்கார்கள் வேலையில்லா இன்ஷ்யூரன்ஸுக்கு ஏற்பாடுகள் செய்திருக்கின்றார்கள்.

இந்தியாவில் ஏகாதிபத்தியத்தின் கீழ் தொழிலும் விவ சாயமும் அடைந்த கலக்கம் நினைக்க முடியாத விதமான வேலை இன்மையைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

அபேதவாத சமூகத்தில் இப்படிப்பட்ட விஷயத்துக்கு இடம் இராது. உண்மையில் எந்த நியாய புத்தியுள்ள சமூக மும் அதன் கோடிக்கணக்கான மக்கள் பசியால் வருந்து வதை திருப்தியுடன் பார்த்துக் கொண்டிராது. ஒரு கட்டுப் பாடான சமூகத்தில் அதன் வயது வந்த எல்லா அங்கத் தினர்களுக்கும் வேலை அல்லது ஜீவனாம்சம் கேட்பது மிக வும் குறைந்த வேண்டுகோளாகும். இதற்கு வழி செய்வது தான் இந்தியாவில் ஏற்படும் அபேதவாத சமூகத்தின் முதல் வேலை. ஜனங்களுக்குக் கொடுக்கக்கூடிய முதல்உறுதியும் அதுவே.

[11] ஒவ்வொருவனுக்கும் அவனுடைய தேவைக்கு தக்கபடி கொடுத்து ஒவ்வொருவனிடத்திலிருந் தும், அவனுடைய திறமைக்குத் தக்கபடி வேலை வாங்குதல்.

இதுதான் அபேதவாதத்தின் கடைசி லக்ஷியம். இதற்குப் பொருள் என்ன வென்றால் ஒவ்வொருவனும் தன் னால் இயன்றவரை தொழிற்சாலைகளிலும், நிலங்களிலும், பள்ளிக் கூடங்களிலும் ஆராய்ச்சிச்சாலைகளிலும் நாடகக் கொட்டகைகளிலும் வேலை செய்து, கிடைக்கக்கூடிய

பொருட்களிலிருந்து தனக்கு வேண்டியதை அடைந்துக் கொள்ளுவான் என்பதாகும். எனவே ஒருவன் ஆணிகளையும் சுரை(nut)களையும் தயார் செய்வானாயின் அவன் அவைகளில் தேவையான அளவை எடுத்துக் கொள்ளுவான் என்பது அர்த்தம் அல்ல. அவனுக்கு ஆணிகள் தேவைப்படா. அவன் ஆணிகளை தனிப்பட்டவர்களுக்கு விற்கவும் முடியாது. அவன் தனக்கு தேவைப்படக் கூடிய வஸ்துக்களை எடுத்துக் கொள்ளுவதென்றால் அவனுக்கு பிரயோஜனப்படக்கூடிய வஸ்துக்களை எடுத்துக் கொள்வானென்பதே பொருள். அதாவது உணவு, உடுப்பு புஸ்தகங்கள் முதலியவைகளைப் பெற்றுக் கொள்ளுவான்.

இதுதான் சமூகத்தின் முடிவான நிலைமையென்பதை நாம் உணர வேண்டும். இன்ன சமூகத்தில் உபயோகத்துக்கு வேண்டிய ஒவ்வொரு வஸ்துவும் போதுமான அளவில் கிடைக்குமென்று கருதப்படுகிறது. இந்த நிலைமையை அடையும் வரையில் ஜனங்கள் பொருட்களைச் செலவிடுவதில் சில கோடியான நிபந்தனைகளை ஏற்படுத்தவேண்டும். பொருட்களைப் பங்கிட்டு கொடுக்கவேண்டும் அல்லது செய்யும் வேலைகளுக்குக் கூலியாகக் கொடுக்கவேண்டும்.

பொருட்கள் ஏராளமாய் கிடைப்பதாக விருந்தபோதி லும் மேற்சொன்னபடி செய்ய முடியுமாவென்று சிலர் சந்தேகிக்கலாம்: உண்மையப்படியல்ல. பிரஸ்தாப பிரச்னை சமூக மனப்பான்மையையும் பொது அறிவையும் பொறுத் ததாகும். செய்கையில் கொண்டு வருவதில் யாதொரு கஷ்டமும் ஏற்படாது. முதலில் நாம் ஒரு விதமான புது சுபாவம் சிருஷ்டிக்கப்படும் என்றும், புதுவிதமான ஒழுக்க முறை உற்பத்தியாகும் என்றும் தன்னலமுடைமை

ஒரு தீயொழுக்கமெனவும் எனவே குற்றமாமெனவும் கற்பிக்கப்படுமென்றும் தெரிந்து கொள்ளவேண்டும். சோவியத் சர்க்காரில் கூட்டுறவு விவசாய ஸ்தாபனத்திலிருந்து தானியங்களை திருடுகிறவர்கள் யாராயினும் சரி, சுட்டுக் கொல்லப்படுவார்கள். அவ்வளவு புனிதமானதாகும் சமூகச்சொத்து.

இத்தகைய மனோபாவத்தின் கீழ் பிரஸ்தாபக் கொள்கை நடைபெறுமா முடியாதா வென்று சற்றுப்பார்ப்போம். ஜனங்களுக்கு அவரவர்கள் இஷ்டப்பட்ட அளவு எடுத்துக் கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டால், அவர்கள் அதைக் கொண்டு அநியாயமான லாபமடைய முயன்றுவிடுவார்களென்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்கள் எத்தகைய சமூகத்தில் வாழ்வார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்கள் வாழும் அபேதவாத சமூகத்தில் எல்லோருக்கும் சமமான வாழ்க்கையும் வேலையும் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். வயோதிகபருவம், வியாதி, பிரசவம் முதலியவைகளிலும் பாதுகாப்பளிக்கப்படும். ஒரு மனிதனுக்கு தான் நல்லவனாகி, தன்னுடைய வேலையை நல்லவிதமாய் செய்ய வேண்டுமென்ற கவலையைத் தவிர வேறு எவ்விதமான கவலையும் இராது. சமூகத்தில் யாதொரு பொருளும் விற்பனை செய்யவோ கொள்முதல் செய்யவோ படமாட்டாது. நகைகள் முதலிய சில்லரை வஸ்துக்களைத் தவிர மற்ற பொருட்கள் எல்லையைத் தாண்டிப்போக முடியாது. ஒரு அபேதவாத சமூகத்தில் அநேக நகைகளிருப்பது சந்தேகம்தான். அப்படிப்பட்ட சமூகத்தில் சொத்தைச் சேர்த்துவைக்க மனிதனுக்கு எவ்விதமான சௌகரியம் இருக்க முடியும்? அவனுக்கு தேவையான பொருட்கள் அவன் நினைத்த நேரமெல்லாம் கிடைக்கும். எல்லா பொருட்

களும் அவனுடையதாய் இருக்கும். அவனைவிட்டு எங்கும் போகமாட்டாது. உயர்ந்த சமூக உணர்ச்சியும், சமூகத்தின் உறுதியும் பணம் சேகரிக்கும் சுபாவத்தை யொழித்துவிடும்.

சமூகத்தில் இத்தகைய ஆக்கம் அமைவது வரையிலும் நான் மேலே கூறியவாறு பொருட்களை உபயோகிப்பதில் சில தடைகளிருந்து கொண்டிருக்கும். பணத்திலும், கூலியிலும் வருமானங்களிலும் சில வித்தியாசங்களும் இருக்கும். கூலியென்பது உபயோகிக்கும் தன்மையை ஒருவாறு ஒழுங்குறப் பாகுபடுத்துவதாகும். உற்பத்தி அதிகப்பட்டால், சமூகத்துக்கு அதிக லாபம் கிடைத்து, கூலிகள் (வாழ்க்கை வசதிகளின் உருவத்தில்) அதிகப்படும். அது காலை கூலியில் தற்காலத்தில் இருக்கிற வித்தியாசங்களைவிட மிக குறைந்த வித்தியாசங்களே காணப்படும். இந்த வித்தியாசங்கள்கூட தற்காலத்தில் நாம் பெற்றுவிட்ட பாழும் மனப்பான்மையை யுத்தேசித்தும், ஆற்றல் ஏற்றத்தாழ்வுகளை எண்ணியுமே (ஒரு சிறிய அளவில் ஆரம்ப காலத்தில்) அனுமதிக்கப்படுகின்றன.

12. தொழில் பிரகாரம் எல்லா வயது வந்தவர்களுக்கும் ஓட்டுரிமை கொடுத்தல்

இதற்குப் பொருள் தேசப் பிரிவுக்குத் தக்கபடி பிரதிநிதித்துவம் அளிப்பதை விட்டு தொழில் பிரகாரம் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என்பதாகும். அத்தகைய பிரதிநிதிகளின் பாத்தியம் ஊர்களின் பிரகாரம் வகுக்கப்படாமல் தொழில்களின் பிரகாரம்தான் வகுக்கப்படும். ஆகையால் தொழில் பிரகாரம் அளிக்கப்படும் பிரதிநிதித்துவமே உண்மையான பிரதிநிதித்துவம்.

இந்த உறுப்பு ஆரம்ப காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்னைகளுக்காக மட்டிலுந்தான் அமைக்கப்படுகிறது. கால அளவில், தொழில்கள் வேறுபட்டவைகளாய் இருந்தபோதிலும், ஐக்கியப்பட்டு, ஒன்றாகி, பொது உரிமைகளுடையவைகளாகிவிடும். அக்காலத்தில் வித்தியாசப்பட்ட பிரதிநிதித்துவத்துக்கு அர்த்தமில்லாமல் போய்விடும். உண்மையில், அபேதவாத சமூகம் முழு வளர்ச்சி யடையுங்காலத்தில் இதுகாலேயிருப்பது போன்ற சர்க்கார் அழிந்துவிட வகுப்பு வித்தியாசமே இல்லாத ஓர் (Classless) சமூகம் ஏற்பட்டுவிடும். அந்த நிலைமையில் சர்க்கார் அரசியல் சபைகளுக்கு பிரதிநிதிகளை அனுப்புவது நின்று அதற்குப் பதிலாக தொழில் போர்டுகளுக்கும், கல்வி போர்டுகளுக்கும் பிரதிநிதிகளை அனுப்புவார்கள். பிரதிநிதித்துவ சர்க்காரில் பூரண புரட்சியொன்று ஏற்பட்டுவிடும். நிற்க.

* * * *

நாம் இந்த திட்டங்களைத்தான் கூறுகின்றோம். இத்திட்டங்கள் மிகப் பெரியவைகள், இவற்றைப் பூர்த்தி செய்ய தைரியமும், திறமையும், நம்பிக்கையும் வேண்டும். இந்த நற்குணங்கள் இக்கால இந்திய இளைஞர்களிடம் நிச்சயமாகவும் இல்லாமலில்லை.

நாம் ஒரு உன்னதமான இந்தியாவை சிருஷ்டிக்க வேண்டுமென நினைக்கின்றோமெனில் இந்த முறைகள் தான் நம் எண்ணத்தை நிறைவேற்றும். நாட்டிலிருக்கும் வறுமை அநியாயம், ஆபாசம், சோம்பல், அறியாமை முதலியவைகளைத் துடைக்க வேண்டுமானால் நாம் இத் தீவிரமான முறைகளைக் கைக்கொண்டே தீரவேண்டும்.

நாம் சந்திரனை கேட்கின்றோமென்று சொன்னால், அப்படிச் செய்யவில்லை என்று உறுதியாய் கூறுவேன். பூரண சுதந்திரம் சந்திரனைப்போல் அவ்வளவு தூரத்திலில்லை என்றால், இம்முறைகளும் அதைவிட அதிக தூரத்திலில்லை.

அபேதவாதம் இந்தியாவுக்கு லாயக்கில்லை என்று சொல்லப்படுகிறது. இம்முறைகளையுபயோகிக்க நாம் தீர்மானித்து விட்டால், இம்முறைகளில் எந்த முறையை செயலில் கொண்டு வரமுடியாது? இந்திய முதலாளித்துவம் பலவீனமானதென்றிருக்குமானால், அது நமக்கு சாதகமாய் இருக்குமேயொழிய பாதகமாய் இராது. இந்தியாவின் பிற்போக்கான நிலைமை ஆங்கிலேயரை, இருப்புப்பாதை, தந்திகள், பாங்குகள், ஆலைகள், தொழிற்சாலைகள் முதலியவற்றை ஸ்தாபிப்பதிலிருந்து தடுத்துவிடவில்லை. இவைகள் நம்முடைய நன்மைகளுக்காக ஏற்படுத்தப்படாததால், நமக்கு பிரயோஜனமுள்ளவைகளாய் இருப்பதைவிட்டு கஷ்டம் கொடுக்கக் கூடியவைகளாய் இருக்கின்றன. துருக்கிஸ்தானத்திலிருந்த பிற்போக்கான நிலைமை அவ்விடத்தில் ருஷியர்களை அபேதவாத சமூகம் ஏற்படுத்துவதிலிருந்து தடுத்துவிடவில்லை.

நான் அடிக்கடி சொல்லியிருப்பதுபோல், நாம் மாற்ற மேற்படுத்த உறுதி செய்து விட்டால், தற்கால விஞ்ஞான சாஸ்திர அறிவைக்கொண்டும் அவைகளால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கும் கருவிகளைக் கொண்டும் அபேதவாத சமூகத்தை எந்த இடத்திலும் ஏற்படுத்தி விடலாம்.

நாம் நம்புவதுபோல், நமக்கு பூரண சுதந்திரம் அடையப்போதுமான சக்தி கிடைத்து விட்டால், இத்தேசத்

தில் நாம் நினைத்ததை எல்லாம் செய்ய சக்தி வந்துவிடும். இந்தியாவில் ஏகாதிபத்தியத்தைவிட பலமான கட்சி ஒன்று மில்லை. நாம் அதைத் தாழ்த்தி விட்டால் ஒரு கட்சியும் நம்மை எதிர்க்க முடியாது. இன்றையத் தினத்தில், ஏகாதிபத்தியத்தால் உதவப்பட்டு, மிகவும் பலம் வாய்ந்தவர்களாகத் தோன்றும் இளவரசர்களும், ஜமீன்தார்களும் நாம் தொடுவதற்கு முன் உதிர்ந்து விடுவார்கள். முதலாளிகள் கொஞ்சம் பலமுடையவர்கள் தான்; ஆயினும் அவர்களாலும் நம்மை தடைசெய்ய முடியாது.

அத்தியாயம் III

வேறு வழிகள்

"பரோபகாரத்தைப்பற்றி சிறிது பேசுவதும், பரோபகாரமென்று சொல்லும் அநியாயத்தை நடத்திவைக்க முயல்வதும், சொத்துச் சேர்ப்பதற்கு விரோதமாகப் பேசுவதும், தொழிலாளிகளின் கஷ்டங்களைப்பற்றி சிறிது புலம்புவதும், தொழிலாளரமைப்பென்று சொல்லும் தாழ்ந்த வகுப்பார்களை முன்னேற்றுவதற்காகப் பாடுபடும் பரிதாபகரமான சங்கங்களும் இவைகளுக்கெல்லாமுள்ள அரசியல் பொருளாதார சமூக அறியாமையும்—எல்லாம் சேர்ந்து (எவ்வளவு பாரபட்சமில்லாமல் அமைதியான சிந்தனையுடையவைகளாயிருந்த போதிலும்) மனித வர்க்கத்தின் ரத்தத்தை உறிஞ்சி சக்தியை போக்கி அசைய முடியாதபடி செய்து விடுகிறது."

—பிரட்ரிக் எஞ்சல்ஸ்.

அபேதவாதத்திற்குப் பதில் வேறு வழிகள்

அபேதவாதத்திற்குப் பதிலாக வேறு வழிகள் உண்டா?

வேறு வழிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. காந்தீயம், கிராமப் புனருத்தாரண சங்கம், மனுதர்ம சாஸ்திரத்தில் கண்ட பழம் இந்து சமூக முறை, மற்ற சமூக முறைகளைப்பற்றி எழுதப்பட்ட பூர்வீக நூல்கள் முதலியவைகளிருக்கின்றன.

மற்ற எல்லா வழிகளையும் அறைகூவும் அபேதவாதத்திற்குப் பதிலாக இந்தியாவிலும் மற்ற வழிகள் ஏற்படாவிட்டால் அது மிகவும் ஆச்சரியப்படத்தக்கதே. தற்கால அபேதவாதம் ஜனித்த ஐரோப்பா தேசத்தில்கூட வேறு வழிகள் பல கைக்கொள்ளப்பட்டிருக்கின்றன. H. G. வெல்ஸ் அபேதவாத இயக்கத்துத் தலைவராகிய ஜோஸப் ஸ்டாலினை "வகுப்புப் போர் கொள்கை"க்குப் பதிலாக, தன்னுடைய (Clissoldism) கொள்கை மிகவும் பகுத்தறிவுக்கு ஒத்ததாயும், ஒழுக்கமானதாயுமிருக்குமென்று போதித்து அதனைப் பின்பற்றச் சொன்னார்.

இக்கொள்கையெல்லாம் ஒன்றையொன்று ஒத்திருப்பதைப் பார்க்க ருசியாகவிருக்கிறது. காந்திஜீ இன்றைய தினம் சொல்வது தொழிற் புரட்சி ஏற்பட்ட காலத்திலேயே கிருஸ்துவப் பாதிரிகளாலும் பழம் வகுப்பைச் சேர்ந்த தத்துவ ஞானிகளாலும் சொல்லப்பட்டது. வெல்ஸ் உலகத்திற்குப் போதிக்கும் கொள்கை காம்டி (Comte) என்பவரால் நீண்ட காலத்துக்கு முன்னரே போதிக்கப்பட்டுவிட்டது.

இக்கொள்கைகளுக்கிடையில் சில விஷயங்கள் பொதுப் படையாயிருக்கின்றன. சண்டை சச்சரவுகளுக்குப் பயந்து ஓட முயல்வதும் இருக்கிற நிலையை திடீரென கவிழ்த்து விடுவதும் இக் கொள்கைகளுக்கெல்லாம் பொதுவான அம்சங்களாக விருக்கின்றன. எல்லோரும் ஒப்புக் கொள்ளும் பிரதான வித்தியாசங்களையும் உயர்வு தாழ்வுகளையும் பரஸ்பர சம்மதத்தைக் கொண்டும், நல்ல எண்ணத்தைக் கொண்டும் நீக்கிவிடலாமென்று கருதப்படுகிறது. இப்படிச் செய்வதற்கு மனித சுபாவத்தை கல்வி மூலமாய் புனிதமாக்கி, நல்லொழுக்கமும் உயர்ந்த அறிவுமுள்ள நபர்களை அதிகாரமும் சக்தியுமுள்ள உயர்ந்த ஸ்தானங்களில் வைக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது.

அபேதவாதமும் இந்திய சமூகங்களும்.

இந்தியப் பிரச்னைகளுக்குத் தேடும் வழிகள் இந்தியப் பழக்கங்களுக்கு ஒத்திருக்க வேண்டுமென்றும், ஒரு அயல் நாட்டுக் கொள்கையை இந்தியாவில் கொண்டுவர முயலக் கூடாதென்றும் புத்தி சொல்லப்படுகிறது.

இந்திய பிரச்னைகளின் விசேஷித்த குணங்களையோ அதன் சரித்திர, நாகரிக பழக்க வழக்கங்களையோ அவமதிக்க நாம் விரும்பவில்லையென்று தெளிவாகக்கூற விரும்புகிறேன். அப்படிச் செய்வது மார்க்ஸின் கொள்கைக்கு விரோதமாக விருக்கும். நாம் நம்மாலியன்ற வரையில் 'இந்திய' வழிகளென்று சொல்லப்படுபவைகளை யெல்லாம் சோதித்துப் பார்த்துவிட்டால் அதில் எவையும் தற்கால நிலைமைகளில் அபேதவாதத்திற்குப் பதிலாக மாட்டாதென்ற முடிவுக்கு வந்துவிட்டோம். நாம் இப்படிச் செய்வதால் ஆதிகாலத்து

இந்திய சமூக தத்துவ ஞானிகளின் ஞானத்தை அவமதிக்க வில்லை. துரதிஷ்டவசமாக இந்திய சமூகம் முழுவதும் மாறி அதன் பிரச்னைகளும் தீவிரமாகிவிட்டன. ஆகையால் அவர்களின் எண்ணங்களுக்கும் தற்கால விஷயங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் போய்விட்டது. சில முக்கிய கொள்கைகள் எல்லாக் காலங்களிலும் எல்லா தேசங்களிலும் உண்மையாக விருக்கும். ஆனால் சில குறிப்பிட்ட தீங்குகளை நீக்க சில குறிப்பிட்ட வழிகளைத் தேடும் போது பொதுவான முக்கிய கொள்கைகள் அதிகப் பிரயோஜனப்படா. சமூகத்துக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நல்லவை என்று நினைத்த விஷயங்கள் முறியாவிட்டாலும் குறிப்பிட்ட தீங்குகளுக்கு குறிப்பிட்ட வழிகளைத் தேடும் போது பழம் முறைகளும் அவைகளின் புதிய சாயல்களும் பூராவும் முறிந்தே போய்விடுகின்றன.

தற்காலத்தைவிட நாகரிகம் மிகவும் சாதாரணமாயிருந்த காலத்திலேயே பழம் கொள்கைகள் ஏற்படுத்தப்பட்டன. சில மனிதர் மற்ற மனிதர்களை அதிகமாகச் சுரண்டுவதற்கு போதுமான அளவு தொழிலோ அல்லது விவசாயமோ விருத்தியடையவில்லை. எல்லா உற்பத்திகளும் தனிப்பட்ட முறையில் சிறு அளவில் செய்யப்பட்டன. ஜனத்தொகை சொற்பமாக விருந்ததால் இயற்கை வசதிகள் கிடைத்தன. ஒவ்வொரு கிடகாத்திரனும் காட்டைப் பண்படுத்தி அவனவனுடைய குடும்பம் பண்படுத்திய நிலத்தில் குடியேறுவது சாத்தியமாக விருந்தது.

அக்காலத்திலிருந்த நிலைமைகளுக்கும் நம்முடைய காலத்திலிருக்கிற பிரச்னைகளுக்கும் ஏணி வைத்துப் பார்த்தாலும் எட்டாது. ஜமீன்தாரித்தனமும் ஆலைகளும் இந்தி

யாவுக்குப் புதிதானவை. ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தால் ஏற்பட்ட எல்லாப் பிரச்னைகளும் இந்தியாவுக்குப் புதியவைகளே. நான் முதலாவது அதிகாரத்தில் சொல்லியபடி நம்முடைய சமூகத்தின் அடிப்படையான பிரச்னையாகிய, சிலர் பலரைச் சுரண்டுவதற்குச் சாதகமான உற்பத்திச் சாதனங்கள் மனு காலத்தில் சிலர் கையில் இருக்கவில்லை. ஆகையால் அதனால் ஏற்பட்ட சுரண்டுதலை நீக்க மனு வழி தேடவில்லை.

அபேதவாதம் தேச எல்லைக்குள் அடங்கியதல்ல

இன்றையத் தினம் நாம் காணும் தேசியப் பிரச்சினை இந்தியாவின் பூர்வீக காலத்தில் ஏற்படவில்லை. இது தற்கால உலகத்தின் பிரச்னைகளில் ஒன்றே. சைனா, ஜப்பான், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களிலுள்ள பெருவாரியான ஜனங்களுக்கு ஒரேவித மான பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. நீராவி, மின்சாரம் முதலிய சக்திகளை கண்டு பிடித்ததனால் உற்பத்தி செய்யும் சக்தி அதிகரித்து மனிதர்களைச் சுரண்டுவதற்குத் தோதான மிகவும் பெரிய முறை ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால் இம்முறைக்கு எதிர்மாருக ஏற்பட்ட அபேதவாதம் தேசிய எல்லைகளால் சூழப்படவில்லை. அதன் இருப்பிடம் இங்கிலாந்தில் எவ்விதமிருக்கிறதோ அப்படியே ஜப்பான், ஜெர்மனி, சைனா, அமெரிக்கா, இந்தியா முதலிய தேசங்களிலுமிருக்கிறது. எந்த இடத்தில் முதலாளித்துவ சுரண்டுதலிருக்கிறதோ அந்த விடத்தில் அபேதவாதம் தலையெடுத்தே தீரும். முதலாளித்வம் எவ்விதமாய் அதில் உலக முறையாகிவிட்டதோ அதேவிதமாய் அபேதவாதமும்

உலகத்தில் நாலா பக்கங்களிலும் பரவும். இந்தியா இதற்கு விலக்காக இருக்க முடியாது. இன்று நடைபெறும் சம்பவங்களிலிருந்து விலக்காகவில்லையென்றும் தெரிகிறது. இராணுவமானிய காலத்தின் ஞாபகக் குறிகள் இன்னும் இந்தியாவிலிருப்பதால் இந்தியப் பிரச்னை ஓரளவிற்கு வேறுபட்டதாகும். ஆகையால் கொஞ்சம் மெதுவாக அபேதவாதத்தை நெருங்கலாம். மற்றபடி அவைகளுடைய லட்சியங்களும், முதலாளித்வமும் ராணுவமானிய முறையும் சேர்ந்து சுரண்டி ஆளுவதை கவிழ்ப்பதிலும் மற்ற அபிவிருத்தியடைந்த முதலாளித்வ தேசங்களில் எவ்விதமாயிருக்குமோ அவ்விதமாகவே இருக்கும்.

இந்திய முறைகள்

நாம் மேல்நாட்டு முறைகளை பின்பற்றுகிறோமென்று குறை கூறுகிறவர்கள் நம் முன்னிற்கும் பிரச்னைகளுக்கு இந்திய பரிஹார முறைகளைத் தேடலாம். இந்தியாவின் விசேஷமான குணங்களைப்பற்றியும் அதன் குறைகளை நீக்க விசேஷமான இந்திய முறைகளிருப்பதுபற்றியும் அநேகர் பேசிக்கொள்ளுகிறார்களே தவிர, ஒருவரும் அவ்விந்திய முறைகளை ஒழுங்குபடுத்தி நாம் தெரிந்து கொள்ளும்விதம் வெளியிடவில்லை. ஆனால் இதற்கு ஒருவர்மட்டும் விலக்காயிருக்கிறார்.

எனக்குத் தெரிந்தமட்டில், இந்தியத் தலைவர்களுக்குள் டாக்டர் பகவன்தான் மாத்திரம்தான் நவீன காலத்தை தீர்க்கமாக ஆராய்ந்து இந்தியப் பிரச்னைகட்கு இந்திய முறைகளைக் காட்டியிருக்கிறார். இப்பண்டிதர் காட்டும் வழிகளை விட, அவர் லக்ஷியமாய் சுயராஜ்யமென்றால் எப்படிப்பட்டதா

யிருக்குமென்று நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்பது பற்றி அழுத்திக் கூறுவதுதான் அதிகப் பிரயோஜனகரமாக விருக்கிறது. அபேதவாதிகளைவிட்டு, இப்பண்டிதர் தம்முடைய அபிப்பிராயங்களை கூறும்பொழுது தனித்தவரா யிருக்கிறார். மற்ற இந்திய நாகரிகத்தை நேசிப்பவர்கள் சம்பந்தப்பட்டவரையில், அவர்கள் நம்மை அயல்நாட்டு முறைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் (Foreignism) என்ற வர்ணத்தைப் பூசுவதோடு, நீண்டகாலத்துக்குப் பிறகு வரப்போகும் விஷயங்களைப்பற்றி சிரத்தை எடுத்துக் கொள்ளுகிறோமென்றும் சொல்கிறார்கள்; அஃதுடன் அவர்கள் வேலை முடிந்துவிடுகிறது. "நாம் சுயராஜ்யத்தை முதலாவது அடைந்து கொள்ளுவோம்" என்று சொல்கிறார்கள். அவர்கள் அபேதவாதத்தை எதிர்க்கும்போது அது தங்களது விவாதத்திற்கு விரோதமாயிருக்கிற தென்பதை உணரவில்லை. அவர்கள் சுயராஜ்யம் அடைந்தபிறகு எக்கொள்கையை ஒப்புக் கொண்டாலும் அபேதவாதத்திற்கு விரோதிகளாயிருப்பார்களென்பது அவர்களின் பேச்சிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் நடுநிலைமை வகிப்பதை விட்டுவிட்டு எப்படிப்பட்ட அனுதாபம் உடையவர்களா யிருக்கிறார்களென்பதும் புலப்படுகிறது.

மற்ற வழிகளைப்பற்றி விவாதிப்பதற்குமுன், இந்திய நாகரிகத்தை உற்சாகமாய் ஆதரிக்கிறவர்கள், அபேதவாதத்தைப்பற்றி பேசும்போது டாக்டர் பகவன்தாஸ் காட்டியிருக்கும் மனுவின் வழிகளைப்பற்றி கொஞ்சம்கூட கவனிப்பதில்லையென்பதைச் சொல்ல விரும்புகிறேன். C. R. தாசும் பகவன்தாசும் சேர்ந்து போட்ட சுயராஜ்யத் திட்டத்தின் கதி நன்றாகத் தெரியும். அபேதவிதமாக தற்சம

யம் அவர் எழுதிய "பூர்வீக அபேதவாத முறையும் தற்கால விஞ்ஞான அபேதவாத முறையும்" என்ற புத்தகத்திற்கு ஒருவரும் செவிசாய்க்கவில்லை.

சென்ற சட்டசபை தேர்தல் காலத்தில், ஜனங்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத் தனுப்புவதுதான் இந்திய முறையென்றும், அபேட்சகர்கள் வீடுவீடாகச் சென்று தன்னைத் தேர்ந்தெடுக்கும்படி சொல்லுவது இந்திய முறையல்ல என்றும் அறிஞர் டாக்டர் அவர்கள் சொன்னது ஞாபகமிருக்கலாம். இந்திய நாகரிகத்தை நேசிப்பவர்கள் அக்காலத்தில் டாக்டர் அவர்கள் சொன்ன விஷயத்தை உற்சாகத்தோடு வரவேற்கவில்லை யென்பது நமக்குத் தெரியும். அவர்களெல்லாம் அவரை மனுப் பயித்தியம் பிடித்தவரென்று நினைத்தார்களென்று நான் அனுமானிக்கிறேன். "இந்தீயத்" (Indianism) தைப் பற்றிப் பேசப்பட்டு வரும் பேச்சில் பெரும்பாகம் ஏமாற்றாயிருப்பதோடு பிற்போக்கையும் மாறுதல் வேண்டாமையையும் மறைக்கும் ஓர் திரையாக விருக்கிறது. தேசத்தின் தலைவரெல்லாம் சேர்ந்து (ஒருவரிருவரைத் தவிர) ஓர் புது அரசியல் முறையை அமைக்க உட்கார்ந்தால் அவர்கள் ஏற்படுத்தும் முறை, (அபேதவாதம் இந்தியாவிற்கு வெளிப்பட்ட முறையென்று எவ்வளவு தூரம் கண்டனம் செய்த போதிலும்) மேல்நாட்டு ஜனநாயக முறையின் காப்பியாகவே யிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

அபேதவாதத்திற்கு மற்றொரு வழியெனச் சொல்லும் அரசியல் ஜனநாயகத்தைப்பற்றி முதல் முதலாக ஆராய்ச்சி செய்ய விரும்புகிறேன்.

அரசியல் ஜனநாயகம்

அரசியல் ஜனநாயகம் அபேதவாதத்திற்குப் பதிலாக முடியாது. தேசத்திலுள்ள அநேக அரசியல் வேலை செய்பவர்கள் சுயராஜ்ய மென்றால் அரசியல் ஜனநாயகமென்று எண்ணியிருப்பதால் நான் இதைப் பரிசோதிக்க விரும்புகிறேன். பெந்தாம், காட்வின் என்பவர்களின் காலத்தில் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை கொடுத்தால் ஜனங்கள் மிகவும் பலம் வாய்ந்தவர்களாய் சமூகத்திலுள்ள சகல அநியாயங்களையும, தீங்குகளையும் ஒழித்துவிடமுடியுமென்று நினைக்கப்பட்டது. படிப்படியாய் ஓட்டுரிமையை விஸ்தீர்ணப்படுத்தியதின் மூலம் பழைய தீவிரவாதிகளின் கனவு உண்மையாகப் பலித்துவிட்டது. ஆனால் அவர்கள் எண்ணிய பொன்யுகம் வரவில்லை. அநியாயங்களும் தீங்குகளும் சிறிது கூட மாறாமல் அப்படியே யிருந்தன.

அதிவிரைவில் இன்ன விடத்தில் தவறு இருந்ததென்பதைத் தெரிந்துக் கொண்டார்கள். நீண்ட காலமாக அபேதவாதிகள் அரசியல் ஸ்தாபனங்களில் மாறுதல்கள் ஏற்படுத்துவது மட்டும் போதாதென்றும் சமூகத்தின் பொருளாதார அமைப்பின் அடிப்படையான கொள்கைகள் மாற வேண்டுமென்றும் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அரசியல் பலம் வாக்குக் கொடுப்பதில் இல்லை என்றும் தேசத்தின் பொருளாதார வாழ்க்கையை தங்கள் தங்களின் ஆதிக்கத்தில் கொண்டு வந்தால்தான் உண்மையான பலம் ஏற்படுமென்றும் சுட்டிக் காட்டினார்கள். அபேதவாதியல்லாதவர்கள் ஓட்டு முறையை மாத்திரம் நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அம் முறையைக் கொண்டு குறைகளை நிவர்த்திக்க முடியாமல் போனவுடன் ஜனநாயகம் பயன்படாமல்

போய் விட்டது" என்ற கூச்சல் எங்கும் ஏற்பட்டு விட்டது. தற்காலத்தில் மேல்நாடுகளிலுள்ள முற்போக்கான அரசியல் வாதிகளில் அரசியல் ஜனநாயகத்தோடு பொருளாதார ஜனநாயகமும் வேண்டுமென்று சொல்லாதார் யாருமில்லை. அத்தகைய ஜனநாயகத்தை எந்த முறைகளைக் கொண்டு அடைவதென்பதைப் பற்றி அநேக அபிப்பிராய பேதங்களிருக்கின்றன. ஆனால் அரசியல் ஜனநாயகம் மாத்திரம் போதுமென்று ஒருவரும் நினைக்கவில்லை.

இந்தியாவின் நிலைமை யாது? துரதிர்ஷ்டவசமாக நாம் இன்னும் பந்தாம், காட்வின் காலத்திலேயே இருக்கிறோம். மிதவாதிகளுக்கும் பழைய காங்கிரஸ்காரருக்கும் எதிரில் பூரண பிரதிநிதித்வமுள்ள சர்க்காரைத் தவிர வேறு எந்த நோக்கமுமில்லை.

வயதுவந்த ஒவ்வொருவருக்கும் ஓட்டுரிமை கொடுத்தால், பொது ஜனங்கள் சர்க்காரைக் கைப்பற்றி அவர்கள் தங்களின் நன்மைக்குச் சாதகமானபடி சர்க்காரை நடத்திக் கொள்ள மாட்டார்களாவென்று என்னிடத்தில் அடிக்கடி கேட்கப்படுகிறது. நான் இல்லை யென்று திடமாகப் பதிலளிப்பேன். இந்திய ஜனங்களைவிட அதிகமாக எத் தேசத்திலும் அவ்வாறு செய்யவில்லை. சட்ட ரூபமாகவும் பெயரளவிலும் ஜனநாயகம் அவர்கட்கு சமத்துவமளித்திருந்த போதிலும் அவர்களைச் சுரண்டுதலிலிருந்தும் பட்டினியிலிருந்தும் வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை அளிக்கவில்லை. ஐக்கிய அமெரிக்கா எல்லா தேசங்களையும் விட பணக்கார தேசமாகவும் ஜனநாயகம் பிறந்த தேசமாகவும் இருந்தும் இன்றை

யத் தினம் திடகாத்திரர்களான ஒன்றரைக் கோடி குடும்பஸ்தர்கள் பிழைக்க மார்க்கமில்லாமல் திண்டாடுகிறார்கள்.

"ஜனங்களுக்காக, ஜனங்களால், ஜனங்களேற்படுத்திய சர்க்கார்" என்று நெடுநாளாக பெருமையாய்ச் சொல்லிக் கொண்டு வந்த இத்தேசத்தில் இத்தகைய நிலைமையிருப்பது ஆச்சரியப்படத் தக்கதல்லவா? ஜனங்கள் தாங்கள் பட்டினியாயிருக்கும்படி தங்களைத் தாங்கள் ஆண்டது ஆச்சரியப் படத்தக்கதே!

அரசியல் ஜனநாயகத்தில் என்ன கெடுதியிருக்கிறது? சுருக்கமாகக் கூறினால் அம்முறையின்கீழ் செல்வத்திலும் பதவியிலும் ஜனங்களுக்குள் அதிக வித்தியாசமிருந்து வருவதால் செல்வந்தர்கள் செல்வமில்லாதவர்களை எளிதில் அடிமைகளாக்கிவிட இடம் ஏற்பட்டு விடுகிறது. உண்மையில், சரித்திர பூர்வமாக, தற்கால ஜனநாயகம் முதலாளித்வத்தோடு சேர்ந்து வளர்ந்து வந்ததேயாகும். ராணுவ மானிய காலத்திலிருந்த உரிமைகளையும் அதிகாரத்தையும் தாக்குவதற்காகவே ஜனநாயகம் அக்காலத்தில் வளரும் பூர்ஷுவாக்களின் (பணக்காரரின்) கருவியாக விருந்தது. எனவே ஜனநாயகத்தை உற்பத்தி செய்த சக்தி அதை முதலாளித்வமென்னும் வண்டியில் பூட்டிவிட்டது. ஜனநாயகத்தின் இவ்விதமாக ஜனங்களின் ஆதிக்கம் என்று சொல்லும் ஓர் திரைக்குப் பின்னால் வகுப்புஆதிக்கம் என்பது வெட்ட வெளிச்சமாக இருந்து வருகிறது. யாதொரு சந்தேகமின்றி சகல மேல்நாட்டு ஜனநாயக ஆட்சியிலிருந்தும் இதனை தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

இந்தியாவில் ஜனநாயக அரசியல் முறையைப் பரிசோதித்தாலும் மற்ற தேசங்களில் கிடைத்த பலனைவிட

எவ்வித மேலான நன்மையும் கிடைத்து விடாது—ஒருகால் கெடுதியே விளைந்தாலும் விளையலாம். ஏழைகளையும் சுரண்டப்படுபவர்களையும் அதிகமாக நசுக்க ஜனநாயக இந்திய அரசாங்கம் மேல் வகுப்பார் கையில் ஒரு தகுந்த கருவியாகி விடலாம். பற்பல வகுப்பார்களின் நடத்தைகளிலிருந்து எதிர்காலத்தில் அவர்கள் ஏதாவது நன்மை செய்ய இடம் விடுவார்களென்று நம்ப வழியில்லை. இந்திய மில் முதலாளியைவிட இங்கிலேய மில் முதலாளி நல்லவனென்பது நமக்குத் தெரியும். இந்திய ஜமீன்தார்களும், லேவாதேவிக்காரர்களும் செய்யும் அநியாயங்களையும் நாம் அறிவோம். அநியாயத்திற்கும் கொடுமைக்கும் நம்முடைய சுதேச மன்னர்கட்கு ஒப்புவமையே கிடையாது. இவ்வகுப்புகள் அதிகாரம் பெற்றால் ஜனங்களின் கதி என்னாகும்?

படிப்படியாய் முன்னேறுதல்?

நாம் சமூக முன்னேற்றத்தின் படிகளைத் திடீரெனத் தாண்டிவிட முடியாதென்றும் நாமும் அபேதவாதத்தை யடைவதற்குமுன் ஐரோப்பிய தேசங்களைப்போல் முதலாளித்வ ஜனநாயக அநுபவம் வழியாகவே அபேதவாதத்தை யடைய முடியுமென்றும் சொல்லப்படுகிறது. ரஷியாவும் சோவியத் சைனாவும் இந்த விவாதம் பொய்யென நிரூபித்துவிட்டன. ஒரு தேசம் பூரண தொழில் அபிவிருத்தி யடைந்தாலொழிய பூரண அபேதவாதத்தை நிலைநாட்ட முடியாதென்பது உண்மையே. இந்தியாவைப் போல் தொழிலில் பிற்போக்கான ஒரு தேசம் பூரண தொழிலபிவிருத்தி யடைவதற்கு கொஞ்சநாள் பிடிக்கும். ஆகையால் அது உடனே ஒரு அபேதவாத தேசமாக மாற்றப்பட முடியாது. இதைப்பற்றி யாதொரு சந்தேக

மும் இருக்க இடமில்லை. ஆனால் தொழிலபிவிர்த்தியும் பொருளாதார முன்னேற்றமும் முதலாளித்வ ஆதிக்கத்துக்குள் பட்டிருந்தால் வளர வேண்டுமென்பது ஏன் என்பது நமக்குப் புரியவில்லை. அபேதவாத சக்திகள் தோன்றியபிறகும், அவைகள் உலகத்தின் ஆறில் ஒரு பாகத்தில் பூரண தொழிலபிவிர்த்தி ஏற்படுத்துவதில் வெற்றியடைந்த பிறகும், முதலாளித்வம் க்ஷீண திசையடைந்து உற்பத்திச் சக்திகளை அதிகரிப்பதற்குப் பதிலாக குறைக்கும் நிலைமையில் வந்துவிட்ட பிறகும் முதலாளித்வ ஜனநாயகம் பொருளாதார முன்னேற்றம் கொண்டு வருமென நம்பி வச்சாண்டும் முதலாளிகளிடத்தில் ஏழை ஜனங்களை ஒப்புவிக்க வேண்டும் என்பது எதற்கோ? முதலாளித்வம் பொருளாதாரத் துறையில் வீழ்ச்சியுற்று சக்தியற்றுப் போய் கிடந்த காலத்திலும் அபேதவாத ருஷ்யா பொருளாதார வெற்றியையும் முன்னேற்றத்தையும் மேலும் மேலும் அடைந்து சமூகத்தின் உற்பத்திச் சக்திகளை வளர்த்து வந்ததன்றோ!

இன்னொரு முக்கிய விஷயமிருக்கிறது. இந்தியாவிலுள்ள முதலாளித்வ வகுப்பு தன்னுடைய தலைமையில் இந்திய தேசிய புரட்சியை நடத்தி வைப்பதில் வெற்றியடைந்தால் (வெற்றியடைய முடியாது) அது தன்னுடைய ஆதிக்கத்தை தேசத்தில் நிலைநாட்டும். இப்படிச் செய்வதில் ஜமீன்தார் வகுப்பையும் தன்னோடு சேர்த்துக் கொள்ளும். அந்த ஆதிக்கம் ஜனநாயகத் திரைமறைவில் வேலை செய்யும் அல்லது வெளிப்படையாக பாஸிஸ்ட் முறையைக் கைக்கொண்டு ஆதிக்கம் நடத்தும். இவ்வாறு சம்பவித்தால் ஜனங்கள் தங்களுடைய விடுதலையை யடைவதற்காக மறுபடியும் புரட்சி செய்யவேண்டியதாய் நேரிடும்.

தொழிலாளிகள் ஏகாதிபத்தியத்தை முறியடித்தால் இவர்கள் பெற்ற ஆதிக்கத்தை முதலாளிகளுக்கு கொடுத்து விடுவார்கள் என்று சொல்லமுடியாது. முதலாளிகளின் கையில் ஆதிக்கம் போவதெனில், தெரிந்து பொதுஜனங் களின் நன்மையை பலி கொடுத்ததுபோலாகிவிடும். ஆகை யால் பொதுஜனங்கள் தங்கள் மாட்டு கருத்தைச் செலுத்தும் புரட்சித் தலைவர்களின் தலைமையில் கிளர்ச்சிசெய்து அபேத வாதத்தை நோக்கிச் செல்வதுதான் மிகவும் உத்தமமாக விருக்கும்.

காந்தீயம்

காந்திஜீ, சுயராஜ்யம் ஏற்பட்டுவிட்டால் எப்படிப்பட்ட சமூகம் ஏற்படுமென்று நோகவோ விளக்கமாகவோ சொல்லவில்லை. ஆகையால் அபேதவாதத்துக்குப் பதிலாக அவர் வேறொரு வழியை வைத்திருக்கிறாரென்று சொல்ல முடியாது. அப்படியிருந்த போதிலும் அவர் அனேக சந்தர்ப்பங்களில் கொடுத்திருக்கிற அறிக்கைகளிலிருந்தும் எழுதியிருக்கிற கட்டுரைகளிலிருந்தும் ஒருவகையான பொரு ளாதார அபிப்பிராயமிருக்கிறதென்று நினைக்கலாம். அது அபேதவாதத்திற்குப் பதிலான ஒரு முறையென்று (காந்திஜீ கருதாவிட்டாலும்) அவரது சிஷ்யர்கள் கருதுகின்றனர். 'காந்தீயமே இந்தியாவில் உண்மை சமதர்மம்' என்றும் நாட்டில் சொல்லப்படும் சொல் சர்வ சாதாரணம் என்பதை வாசகர்கள் அறிவார்கள். இதுபற்றியே எனது விஷயத்திற்கு சம்பந்தப்பட்ட காந்திஜியின் கொள்கைகளை ஆராய நினைக் கிறேன்.

இப்படிச் செய்வதற்கு முன் நம்முடைய பிரச்னை இன்னதென்று மறுபடியும் கூற விரும்புகிறேன். பொருளா

தாரச் சுரண்டுதலுக்கும் உயர்வு தாழ்வுக்கும் அடிப்படையாக விருப்பதை சாசுவதமாய் அழித்து விடுவதுதான் நமது நோக்கம். உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்டவர் கையிலிருக்கும் முறையை ஒழிப்பதுதான் அபேதவாதி காணும் மார்க்கமென்று நான் காண்பித்துவிட்டேன். இப்பிரச்னைக்கு காந்திஜி கான்பூரிலிருந்தபோது சில ஜமீன்தாருக்கு அளித்த பேட்டியில் நாம் இப்போது கிளப்பியிருக்கும் பிரச்னையைப் பற்றி மிகவும் தெளிவாக சொல்லியிருக்கிறார். இப் பேட்டியின் சரியான விவரம் ஸ்ரீஜத் மகாதேவ தேசாயால் வெளியிடப்பட்டிருக்கிறது.

அதில் நமக்கு சம்பந்தமில்லாத ஒரு பாராவை மட்டிலும் விட்டுவிட்டு மற்றவற்றை அப்படியே தந்து விடுகிறேன்:—

1. கேள்வி. காரச்சி காங்கிரஸ், ஜனங்களின் மூலாதார உரிமைகளை விவரித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றியது. அது தனிப்பட்ட சொத்தை அங்கீகரித்ததால் தேசிய மனப்பான்மையுடைய ஜமீன்தார்கள் காங்கிரஸை ஆதரித்தார்கள். ஆனால் காங்கிரசுக்குள் ஏற்பட்டிருக்கும் புதிய அபேதவாதக் கட்சி தனிப்பட்ட சொத்தை அழித்துவிட வேண்டுமென்று பயமுறுத்துகின்றது; அது எவ்வாறு காங்கிரஸ் கொள்கையில் சம்பந்தப்படும்? அபேதவாதிகளின் வேண்டுகோள் வகுப்புப் போரை கிளப்பிவிடுமென்று நீங்கள் நினைக்கவில்லையா? தாங்கள் அதை தடைசெய்வீர்களா?

பதில். காரச்சி தீர்மானத்தை காங்கிரஸ் மகாசபை தான் மாற்றமுடியும். ஆனால் சொத்துடைய வகுப்பாரிடமிருந்து நியாயமான காரணமின்றி சொத்துக்களைப் பிடுங்கு

வதில் நான் சம்பந்தப்பட மாட்டேனென்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். உங்களுடைய மனத்தை மாற்றி உங்களுடைய சொத்துக்களை குடிகளுக்காகப் பாதுகாத்து அவர்களின் நன்மைக்காக உபயோகப் படுத்தும்படி செய்வதுதான் என்னுடைய நோக்கம். காங்கிரசுக்குள் அபேதவாதக் கட்சி என்று ஒரு புதிய கட்சி ஏற்பட்டிருப்பது எனக்குத் தெரியும். ஆனால் உண்மையாகவும், குறைகூற முடியாதபடியும், நமது கோடிக்கணக்கான ஜனங்களிடம் வாக்கெடுத்தால் அவர்கள் சொத்துடையவர்களிடமிருந்து சொத்துக்களைப் பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்று வாக்குக் கொடுக்க மாட்டார்களென்பது எனக்கு நன்கு தெரியும். நான் மூலதனமும் உழைப்பும், ஜமீன்தாரும் குடிகளும், இணைந்து ஒருமனப்பட்டு ஒத்துழைக்க வேண்டுமென்பதற்காகவே பாடுபடுகிறேன். மிகவும் ஏழையான ஜனங்கள் நான்கணா சந்தா கொடுத்து காங்கிரஸ் கொள்கையை ஏற்றுக்கொண்டு அதில் சேர எவ்விதமாய் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறார்களோ அதே விதமாக நீங்களும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் ஒன்று எச்சரிக்கை செய்ய வேண்டும். நான் அடிக்கடி ஆலை முதலாளிகளிடம் "நீங்கள் மட்டுமன்று ஆலைகளின் சொந்தக்காரர்கள். தொழிலாளிகளும் உங்கள் ஆலைகளின் பங்காளிகளாவார்கள்" என்று சொல்லி வருகிறேன். அதே விதமாக உங்கள் நிலங்கட்கு நீங்கள் மட்டும் உரியவர்களல்ல; உங்கள் குடியானவர்களும் பாத்தியதையுடையவர்களாவார்கள். எனவே நீங்கள் பெறும் தானியங்களையெல்லாம் உங்கள் அநாவசிய சுகபோகங்கட்காக வாரி வீசிவிடலாகாது. குடியானவர்களுடைய நன்மைக்காகச் செலவிட வேண்டும். உங்களுக்கும் உங்களது குடிகளுக்குமிடையில் ஓர் பாந்தவ்யம் ஏற்பட்டு

நீங்கள் அவர்களுக்குத் துரோகம் செய்ய மாட்டீர்களென்று நிச்சயமாகத் தெரிந்து விட்டதாயின் குடியானவர்கட்கும் உங்களுக்கு மிடையில் சச்சரவு ஏற்பட்டு, வகுப்புப்போர் நிகழாதென்று நீங்கள் உறுதி கொள்ளலாம். வகுப்புப் போராட்டம் இந்தியப் பழக்க வழக்கத்துக்கே விரோதமானதாகும். எல்லோருடைய மூலாதார உரிமைகளையும் சம நியாயத்தையும் அடிப்படையாய்க் கொண்ட ஒரு பொது உரிமையை இந்தியா தானே ஏற்படுத்த முடியும். நான் கற்பித்துவரும் ராமராஜ்யத்தில் சிற்றரசனுக்கும், பாமர தரித்திரனுக்கும் சம உரிமைகள் கிடைக்கும்.

வகுப்புப் போரைத் தடுக்க நான் எனது பூராச் செல்வாக்கையும் உபயோகப்படுத்துவேனென்று நீங்கள் உறுதி கொள்ளலாம். ஆகஸ்ட் மாதம் 3-ம் தேதி நான் என் பேரில் ஏற்படுத்திக் கொண்ட தடை நீங்கிவிடும். அதற்குப் பிறகு நான் என்ன செய்யப் போகிறேனென்பது எனக்கே தெரியாது. நான் மறுபடியும் சிறைக்குப் போகாமல் இருக்க இயன்றவரை முயலுவேன். ஆனால் எனக்குத் தெரியாத ஓர் நிலைமையைப்பற்றி நான் ஒன்றும் உறுதியாகச் சொல்ல முடியாது. அநியாயமாக உங்களுடைய சொத்துக்களைப் பிடுங்கிக்கொள்ள யாராவது முயலுவார்களானால் நான் உங்கள் பக்கமிருந்து சண்டை போடுவதை நீங்கள் பார்ப்பீர்கள்.

2. கேள்வி. நாங்கள் அடுத்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரசுக்கு உதவி செய்வதாக உத்தேசித்திருக்கிறோம். ஆனால் காங்கிரஸ்காரர்கள் சட்டசபையில் எவ்விதமாய் நடந்துகொள்ளப் போகிறார்களென்பதுபற்றி எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. எங்களது பயத்தை நீக்கும்படி

பார்லிமெண்டரி போர்டை தாங்கள் இணங்கச்செய்ய முடியுமா?

பதில். இவ்விஷயத்தை நீங்கள் பார்லிமெண்டரி போர்ட் அங்கத்தினர்களோடு கலந்து பேசும்படி நான் உங்களை அழைக்கிறேன். ஒரு அங்கத்தினராவது சொத்தைப் பிடுங்கிக்கொள்வதைப் பற்றியாவது அல்லது தனிப்பட்டவர்களின் சொத்தை ஒழித்துவிடுவதைப் பற்றியாவது பேச மாட்டார்களென்பது எனக்கு நன்கு தெரியும். ஆனால் அவர்கள் உங்களுக்கும் உங்களுடைய குடிகளுக்கு மிடையிலிருக்கிற சம்பந்தங்களைத் தீவிரமாகச் சீர்திருத்த வேண்டுமென்று கட்டாயமாகச் சொல்லலாம். அது உங்கட்கு புதிய விஷயமாக இருக்குமென்று நினைக்கக்கூடாது. சர். மால்கோம் ஹெய்லியும், லார்ட் இர்வினும்கூட தற்கால உணர்ச்சிகளை உணர்ந்து அதன்படி நீங்கள் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவ்வாறு செய்தால் நாம் ஒரு பரிசுத்தமான தேசிய அபேதவாதத்தை ஏற்படுத்தலாமென்று நீங்கள் உறுதி கொள்ளலாம். மேல்நாட்டு அபேதவாதமும், பொது உடைமையும் நம் கோட்பாடுகட்கு மாறுபட்ட சிலவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகும். அம் மாறுபட்ட மேனாட்டுக் கோட்பாடுகளில் ஒன்று மனித சுபாவம் சுயநலத்தைக் கருதக்கூடியது என்பது. நான் அவ்வபிப்பிராயத்தை அங்கீகரிக்கவில்லை. மனிதனுக்கும் மிருகத்துக்கும் சில முக்கியமான வித்தியாசங்கள் உண்டு. மனிதன் தன் ஆன்மசக்தியால், மிருகங்களையொப்ப, உதயமாகும் உணர்ச்சிகளை அடக்கலாம். மனிதனின் நித்யமான ஆன்மா மிருககுணம் சேர்ந்த தன்னலத்தையும் பலாத்காரத்தையும் விட்டு விலகி நிற்பதாகும். பல மகான்கள் எத்

தனையோ வருட தபோ பலத்தால் கண்டுபிடித்த இந்துமதக் கொள்கை இதுவே. பல மகான்கள் இவ்வுண்மையைக் கண்டு பிடிக்கத் தம் உயிரை அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். ஆனால் மேனாட்டாரோ உலகில் உயர்ந்த பாகங்களைக் கண்டுபிடிக்க தம் உயிரை அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். ஆகையால் நம்முடைய அபேதவாதமோ பொது உடைமையோ, அஹிம்சையையும் முதலாளி தொழிலாளி ஒத்துழைப்பதையும், ஜமீன்தாரும் குடிகள் நட்பையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

உங்களைப் பயமுறுத்தக் கூடிய ஒரு கொள்கையும் காங்கிரசில் கிடையாது. உங்களது பயத்துக்குக் காரணம் உங்களது மனந்தானென்று சொல்ல அனுமதிப்பீர்களென நினைக்கிறேன். நீங்கள் உணர்ந்தோ உணராமலோ செய்யும் எல்லா அநீதிகளையும் ஒழித்து விட்டால் காங்கிரஸைப் பற்றியோ காங்கிரஸ்காரர்களைப்பற்றியோ ஏற்பட்டிருக்கும் பயம் நீங்கிவிடும். ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்குமிடையிலுள்ள சம்பந்தங்களில் ஒரு புதிய மாறுதலை ஏற்படுத்தி விட்டால் எங்களை உங்கள் பக்கத்திலிருந்து உங்களது சொத்துக்களையும உரிமைகளையும் காப்பதாகக் காண்பீர்கள். 'எங்களை' என்று சொல்லும்போது பண்டித ஜவகர்லாலையும் சேர்த்தே கூறுகிறேன். ஏனெனில் முக்கிய கொள்கையாகிய அஹிம்சா தர்மத்தில் எங்களுக்குள் யாதொரு அபிப்பிராய பேதமும் கிடையாது. அவர் சொத்தையெல்லாம் சமூக உடைமைக்குள் கொண்டு வரவேண்டுமென்று சொல்லுகிறார். அதைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்காமல் ஒரு சமூகம் தானே சொத்தை வைத்துக்கொள்ள முடியாது. சரியான

படி செலவிட தூண்டவே செய்யும். உங்களுடைய சொத்தை குடிகளின் லாபத்திற்காக நீங்களே வைத்திருப்பதில் உங்கட்கு யாதொரு ஆட்சேபணையு மிருக்காதென்று நினைக்கிறேன். சுயேச்சையுடன் சமாதானமாக வாழவேண்டுமென்பதைவிட குடிகள் அதிகமாக எதுவும் வேண்டவில்லை. நீங்கள் உங்களுடைய சொத்தை குடியானவர்களின் உபயோகத்திற்காக வைத்திருப்பீர்களானால் அவர்கள் ஒரு போதும் நீங்கள் சொத்து வைத்திருப்பதை ஆட்சேபிக்க மாட்டார்கள்.

(தி 'லீடர்' ஆகஸ்ட் 3, 1934)

காந்தீயம் சுத்தமான இந்தியக் கொள்கையல்ல

இந்த வேடிக்கையான தத்துவத்தைப்பற்றி குறைகூறுவதற்குமுன் காந்திஜீயின் அபிப்பிராயங்கள் முழுமையும் இந்தியாவில் ஜனித்தவைகளா வென்று பார்ப்போம். அவர் "சுதேச அபேதவாதத்தை"ப்பற்றியும் இந்தியாவின் விசேஷித்த குணங்களைப்பற்றியும் இந்துமதத்தின் அடிப்படையான கொள்கையைப்பற்றியும் பேசுகிறார். அவருடைய அபிப்பிராயப்படி மேல்நாட்டு அபேதவாதம் இந்து மதத்திற்கு முழுமையும் மாற்றமான கொள்கைகளை யடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. "சுதேச" அபேதவாதம் அயல்நாட்டு அபேதவாதத்தைவிட இந்தியாவுக்கு அதிகத் தகுதியுடையதெனச் சொல்லுகிறார். இந்த பூர்வீக மூறையின் உண்மையைப்பற்றி சற்று ஆராய்வோம்.

காந்திஜீயைப் போல் மேல்நாட்டு ஆசிரியர்களும் சொல்லியிருக்கிறார்கள். அவர்களது விவாதமுறை சற்று வேறுபட்டதாக விருந்தபோதிலும் முக்கிய கருத்து ஒன்று

கவே இருக்கிறது. 'வகுப்புப் போர் முட்டாள்தனம்: முதலாளி தொழிலாளி ஒருவருக்கொருவர் அவசியமானவர்கள்; புரட்சி சேதத்தை யுண்டுபண்ணுவது; போரிடும் பகுதிகளை ராஜியாக்கிவிடுவதுதான் புரட்சியைவிட மேல்; லாபத்தையும் கூலியையும் விலைகளையும் புத்திசாலித் தனமாக அடக்கி ஆளவேண்டும். சொத்துடையவர்கள் சொத்தில்லாதவர்களின் காப்பாளராவர்' என்பவற்றையே மேல் நாட்டிலுள்ள ஆடம்பர பூர்ஷ்வா புரொபஸர்களும் மேதாவிகளும் புரோகிதர்களும் சாதாரணமாகச் சொல்லி வந்திருக்கிறார்கள். மிஸ்டர் எச். ஜீ. வெல்ஸ் ஸ்டாலினிடத்தில் தன்னுடைய கொள்கையைப்பற்றி உபந்நியாசம் செய்ததை நான் மேலே சொல்லியிருக்கிறேன். அந்தப் பேட்டியின் விவரத்தை படிக்கும் ஒவ்வொருவரும், பாஷையில் வித்தியாசமிருந்த போதிலும், சாரத்தில் வகுப்புப் போரைப்பற்றி காந்திஜீ என்ன சொல்கிறாரோ அதனையே வெல்ஸ் சொல்லுகிறார் என்று கண்டு கொள்ளலாம்.

எச். ஜி. வெல்ஸ் பேசியதில் வகுப்புப் போராட்டம் மூடத்தனமென்றும், ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருக்கும் உரிமைகளை ராஜிசெய்தும் ஒழுங்குசெய்தும் முதலாளித்துவத்தில் ஏற்படும் தீங்குகளை நீக்கிவிடலாமென்றும் முக்கியமாகச் சொன்னார். சரியான தலைமைதான் தேவையென்றும் கூறினார். காந்திஜீ முதலாளிகளின் மனதை மாற்ற விரும்புகிறார். எச். ஜி. வெல்ஸும் அப்படியே விரும்புகிறார்.

மிஸ்டர் ராம்சேமாக்டொனால்டும் அவர் அபேதவாதியாயிருந்தகாலத்தில் வகுப்புப் போரை எதிர்த்ததுண்டு. அவர் சொன்னதாவது: அபேதவாதி தற்சமயத்தில் மூலதனத்

துக்கும் உழைப்புக்கு மிடையிலேற்பட்டிருக்கிற போரில் கடந்த விஷசம்பவங்களைப் பார்த்து சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது. அவைகள் தன்னுடைய நோக்கத்துக்கு விரோதமானவைகளென்று எண்ணுகிறான். அவைகள் துன்மார்க்கமானவைகளென்றும், பொருளாதாரக் கொள்கைக்கு விரோதமானவைகளென்றும் பெரும் அபாயத்தில் கொண்டு போய் விடுமென்றும் அவன் நம்புகிறான். மூளையைக் கொண்டோ கையைக்கொண்டோ வேலை செய்கிறவன் தன்னுலியன்ற மட்டில் உழைத்தால்தான், தொழிலாளி இயக்கம், அதன் லக்ஷ்யத்தையடைய எவ்வளவு சமூக அனுதாபம் அவசியமோ அவ்வளவு சமூக அனுதாபத்தையும் அடையும்." மேலும் அவர் வேறோரிடத்தில் சொன்னதாவது:—" மூலதனமும் உழைப்பும் சமூக நோக்கங்களை நிறைவேற்றக் கூடியவைகளாயிருக்கின்றன. தற்காலத்திலிருக்கிற போரின் உண்மையான அர்த்தத்தை கிரகிப்பவர்களின் கடமை என்னவென்றால் இவ்விரண்டுக்கு மிடையில் ஒற்றுமையை எப்படி ஏற்படுத்துவதென்று கண்டு பிடிப்பதாகும்." இங்கிலாந்திலும் "சுதேச அபேதவாதம்" இருந்ததாகத் தெரிகிறது. அதிர்ஷ்ட வசமாக அந்த அபேதவாதம் டோரி கொள்கையாக முடிந்து விட்டது.

பரிபாலன எண்ணம் (Trusteeship) இந்தியாவுக்கு மட்டில் விசேஷமானதென்றும் இந்தேசத்தின் அகிம்சா தர்மத்திற்கு இயற்கையாகவே பொருந்தியதென்றும் சொல்லப்படுகிறது. வில்லியம் காட்வின் தன்னுடைய 'அரசியல் நியாயம்' என்ற புத்தகத்தில் அடியிற் கண்டவாறு எழுதுகிறார்:—

"சொத்துச் சேகரிப்பது அநியாயமென்ற கொள்கைதான் எல்லா மத சன்மார்க்கத்திற்கும் அடிப்படை

யாக இருக்கிறது. தனிப்பட்டவர்களின் நல்லொழுக்கத்தைக்கொண்டு இந்த அநியாயத்தைப் போக்கும்படி ஜனங்களைத் தூண்டுவதுதான் இச் சன்மார்க்கத்தின் நோக்கம். இந்த ருசிகரமான பிரச்னையைப்பற்றி ஊக்கமிக்க மதத் தலைவர்கள் சரியான உண்மையைச் சொல்லியிருக்கிறார்கள். பணக்காரர்கள் தங்களுடைய சொத்தை காப்பாளர் என்ற முறையில்தான் வைத்திருக்கிறார்களென்றும், அவர்கள் செலவு செய்யும் ஒவ்வொரு அணுவுக்கும் பதில் சொல்லித் தீரவேண்டுமென்றும் அவர்கள் அச்சொத்துக்கு சொந்தக்காரர்களல்ல வென்றும் பரிபாலிக்கிறவர்கள் தானென்றும் போதித்திருக்கிறார்கள்.*

---

* காட்வின் தன்னுடைய மேற்கண்ட கொள்கையைப் பற்றி விவரித்திருப்பது மிகவும் ருசிகரமானது. "இக்கொள்கையின் குறைபாடு என்னவெனில், அது, இவ்வநியாயத்தைப் பற்றி நம்மை பேசச் செய்கிறதே தவிர, அதைப்போக்கும்படி தூண்டவில்லை. மதம், மனிதர்கள் அவர்களுக்கு தேவையான வஸ்துக்களையெல்லாம் பெறவேண்டுமென்று விளக்கிச் சொல்லியிருந்தால் தர்மம என்ற பெயரால் கொடுக்கும் பிச்சை ஜனங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சுற்றுவழி யென்றே நினைக்கவேண்டிவரும். நெடுங்காலமாக ஏற்பட்ட அனுபவத்திலிருந்து ஜனங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய இம்முறை போதாதென்று நமக்குத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. தன்னுடையதல்லாததை தன்னுடையதென்று பாவித்து பெரிய தயாளகுணத்துடன் பிறர்க்கு நல்குவதே தர்மமாகும். ஏழை ஜனங்களிடமிருந்து, சுரண்டியதைத் திருப்பிக்கொடுப்பதிலிருந்து அவர்களின் நன்றியை தர்மம் செய்வோர் பெறுவதற்கு இம்முறை உதவுகிறது. இது நியாயமும் இரக்கமும் கொண்ட முறையே தவிர ஒழுங்கான முறையல்ல.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன், காந்திஜீ சொன்ன மேற்படி விஷயம் மிகவும் அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இக்கொள்கை இந்தியாவிற்கு மட்டிலும் சொந்தமானதென்று சொல்வது பலமில்லாத வாதமாகும்.

மானிடரின் துயரம் எக்காலத்தில் ஆரம்பித்ததோ அக்காலத்திலேயே புரட்சிக்கும் சீர்திருத்தத்திற்கு மிடையே போராட்டமும் ஆரம்பித்திருக்கிறது. அபேதவாத சரித்திரத்தில் காந்தியின் கொள்கைகள் (Reformism) சீர்திருத்த சம்பந்தமானவையென்று அழைக்கப்படும். சீர்திருத்த மென்பது தற்போதேற்பட்டிருக்கும் சமூக அமைப்பை அப்படியே பாதுகாக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியாகும். அம்முயற்சி நிகழ்கையில் பல சக்திகளோடு மோதவேண்டி வரும். அதற்குப் பயந்து, சீர்திருத்த முயற்சி தன்னை எதிர்க்கும் ஷை சக்திகளோடு சமாசம் செய்து கொள்ளப் பார்க்கும். ஆகையால் அது சில வழுவழுப்பான மருந்துகளையேகொடுக்கா நிற்கும். காந்திஜி ஜமீந்தார்களுக்கும் முதலாளிகளுக்கும், அவர்களுடைய குடிகளோடும் தொழிலாளிகளோடு மிருக்கும் சம்பந்தங்களை திருத்திக்கொள்ள வேண்டு மென்றுதான் சொல்லுகிறார்; அப்பொழுது எல்லாம் சரியாகி விடுமாம்.—அதாவது பயங்கரமான வகுப்பு யுத்தம்,

---

பணக்காரர்கட்கு அநியாயமாக கர்வத்தைக் கொடுத்து, உண்மையற்ற புகழ்ச்சிகளையடையும்படி செய்கிறது. மேலும் அது ஏழைகளை தாங்களடையும் சிறிய பிரயோஜனங்கள் தங்களுக்கு வர வேண்டிய நியாயமான உரிமைகளென்று நினைக்கவிடாமல், தங்களின் பணக்கார தோழர்களுடைய நல்லெண்ணத்தால் கிடைத்த கிருபையென்று நினைக்கச்செய்து அவர்களை யடிமை யாக்கிவிடுகிறது.

அதிருப்தி, கலகம், புரட்சி முதலியவைகள் ஏற்படாவாம். சீர்திருத்தத்தின் கொள்கை சமூக நியாயத்தை நிலைநாட்டுவதல்ல; சமூகத்தின் ஆபாசமான சில விஷயங்களை பூசி மெழுகுவதே யாகும்.

ஏழைகளின் ராமராஜ்யம்

இன்னும் காந்திஜீயின் பேட்டிக்கு வருவோம். காந்திஜீ "நான் கனவு காணும் ராமராஜ்யத்தில் சிற்றரசனுக்கும் பரம ஏழைக்கும் உள்ள உரிமைகள் அப்படியே யிருக்கும்" என்கின்றார். இதுதான் அவரது சமூக தத்துவத்தின் முக்கியாம்சம். அவர் கனவு காணும் ராமராஜ்யத்தில்கூட ஏழையும் அரசனும் இருப்பார்களாம்! சந்தேகமின்றி மகாத்மா காந்தி ஏழைகளின் உரிமைகளைப் பாதுகாக்க விரும்புகிறார்; ஆனால் அவ்வுரிமைகள் எப்படிப்பட்டவைகளாயிருக்குமென்று அவர் சொல்லவில்லை. மேலும் அவ்வுரிமைகளைக்கொண்டு, திண்டாடித் திணறும் ஏழை என்ன செய்ய முடியுமென்பதையும் சொல்லவில்லை. இதற்குள் மிகவும் ருசியான விஷய மென்னவென்றால் காந்திஜீ கனவு காணும் ராமராஜ்யத்தில்கூட பரமதரித்திரர் களிருப்பார்களாம்!

பரம தரித்திரர்களுக்கும் அரசர்களுக்கும் ராமராஜ்யம்! ஏன் அப்படி யிருக்கவேண்டுமென்றால், உன்னத ஆத்மாக்கள் தங்களது உயர்ந்த மனதையும் தாராள சிந்தையையும் காண்பிக்கத் தகுந்த சந்தர்ப்பமளித்து மனித சுபாவத்தைப் பற்றி இந்துமதம் கொண்ட கொள்கையை நிரூபிக்கவாம்!

பரம தரித்திரர்கள் சமூகத்தில் ஏன் இருக்கவேண்டுமென்று அபேதவாதம் கேட்கும் முக்கிய கேள்வியானது

காந்திஜீக்கு தோன்றவேயில்லை. அது தோன்றவும் செய்யாது; ஏனென்றால் காந்திஜீயின் கொள்கை நிறைவேற வேண்டுமாயின் பரம தரித்திரர்கள் இருந்தே யாகவேண்டும்.

அபேதவாதத்திற்கும் காந்தீயத்திற்குமிருக்கிற உண்மையான வித்தியாசம் இதுதான். அபேதவாதம் "லோகாயுத" சம்பந்தமானதென்றும், காந்தீயம் "ஆத்மீக" சம்பந்தமானதென்றும் சொல்வது உண்மையல்ல. இவைகள் சாதாரணமாக உபயோகப் படுத்தப்படும்போது அர்த்தமில்லாத வார்த்தைகளாக விருக்கின்றன. அபேதவாதம், "சமூக உயர்வு தாழ்வு ஏன் ஏற்பட்டது? சிற்றரசர்கள், ஜமீன்தார்கள், முதலாளிகள், பரமதரித்திரர்கள் இவர்களின் உற்பத்தி எவ்விதமாய் ஏற்பட்டது? மனிதனைச் சாண்டுவதன் ரகசியமென்ன?" என்ற விசாரணையிலிருந்து ஆரம்பிக்கிறது. இவ்விசாரணை முடிவில் அபேதவாதி இவைகளின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து அதை நீக்கமுயலுகிறான். சமூகத் தீங்குகள் எங்கு உற்பத்தியாகின்றனவோ அங்கிருந்தே அவைகளை ஒழிக்கமுயலுகிறான்.

இக்கேள்விகளைப்பற்றி காந்தீயம் கொஞ்சம்கூட கவலைப் படுவதில்லை. அநேக ஜனங்கள் பரமதரித்திரர்களாக அல்லது பரமதரித்திரர்களைவிட மிகச்சற்று நல்ல நிலைமையில் இருக்கும்போது சிலர் மாத்திரம் அரசர்கள், சிற்றரசர்கள், ஜமீன்தார்கள் முதலாளிகள் என்ற பதவியில் ஏன் இருக்கவேண்டுமென்று காந்தீயத்துக்கு தோன்றுவதே கிடையாது. சமூகம் அதனுடைய உயர்வு தாழ்வுடன் எப்படி இருக்கின்றதோ அதை அப்படியே காந்தீயம் அங்கீகரித்துக் கொள்ளுகிறது. ஜமீன்தார் முதலாளி இவர்களது செல்வம் எங்கிருந்து வந்ததென்று விசாரிக்கத் துணியாமல், காந்தீயம் மிகவும் இரக்

கம் கொண்டு, அவர்களே, ஏழைகளின் பாதுகாப்பாக விருந்து, அவர்களின் செல்வத்தை ஏழைகளின் நன்மைக்கு உபயோகப்படுத்தும்படி கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறது.

அபேதவாதியின் அபிப்பிராயத்தில் இத்தத்துவத்தை ஏமாற்றுதலென்று சொல்லவேண்டும்—தானும் ஏமாந்து சுரண்டப்படுகின்ற ஜனங்களையும் ஏமாற்றுவதாகும். நம்முடைய அபிப்பிராயப்படி ஜமீன்தார் முதலாளி ஆகியவர்களின் செல்வம், குடிகள் தொழிலாளிகள் உழைப்பிலிருந்தே வருகிறது. ஆகையால் பிரௌதான் என்பவர் சொல்லியபடி அது களவேயாகும். இக்களவை கவனியாமலும் கேட்காமலும் விடுவது நியாயமென்றால், அது ஏமாற்றுத் தத்துவமாகும்.—இப்படி ஏமாற்றுவது உணரப்படாமலும் நிகழலாம்.

மேல் வகுப்பார் களவு செய்வதோடன்றி பலாத்காரமும் செய்கிறார்கள். அவர்கள் தாம் கைப்பற்றும் செல்வத்தையெல்லாம் பலாத்காரத்தினால் ஏழைகளே பயப்படுத்தி வெருட்டுவதன் மூலம் காப்பாற்றிக் கொள்கிறார்கள். இவ்வாறு வெருட்டும் சட்டங்கள் (சமூகச் சட்டங்கள்) மட்டிலுமில்லாமலிருக்குமானால் தொழிலாளிகளும் விவசாயிகளும் சேர்ந்து தங்கள் தொழிற்சாலைகளையும் நிலங்களையும் தானேக்கே பிடித்துக் கொள்வார்கள். பண்டித ஜவஹர் எழுதியிருப்பது போல், "பணக்காரவகுப்பைச் சேர்ந்தவர்கள் பலாத்காரமுறையைக் கொண்டே தங்கள் நிலைமையைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள்" (அவரது 'சமீபகால வியாசங்களும் கட்டுரைகளும்' என்ற புத்தகத்தில் காண்க)

காந்திஜீ, சிற்றரசர்கள், ஜமீன்தார்கள், முதலாளிகள் ஆகியோரின் உரிமையை எதிர்க்காமல் அவர்கள் தங்களு

டைய காரியத்தை நடத்தலாமென்று அங்கீகரிப்பதி லிருந்து, இந்த அமைப்பைக் கொண்ட பெருவாரியான திருட்டையும் பலாத்காரத்தையும் அவர் அங்கீகரிக்கிரு ரென்று ஏற்படுகிறது. காந்திஜீ தம் அங்கீகாரத்தை திறமை யுடனும் தெளிவாகவும் கூறியிருக்கிறார். ஜமீன்தார்களின் சொத்துக்களைப் பிடுங்க யாராவது முயன்றால் அவர் அதைத் தடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். அதற்குச் சற்று முன் அகமதாபாத்தில் முதலாளிகள் அதிகமாகப் பணம் சம்பா திக்க வேண்டியது அவர்களுடைய கடமை யென்று சொன்னார்.

அயிரைமீனுக்கு சுறுமீன் காவலாம்

ஒருசமயம் காந்திஜீ மேல் வகுப்பார்கள் அவர் களுடைய சொத்தை குடிகளுக்கும் தொழிலாளி களுக்குமாகக் காப்பாற்றி வைத்திருக்க வேண்டுமென்றும், மற்றொரு சமயத்தில் மேல் வகுப்பார்களும் கீழ் வகுப்பார் களும் சொத்தில் சமபாக உரிமையுடையவரென்றும், வேறொரு சமயத்தில் மேல் வகுப்பார் தங்களுடைய சொத் துக்களை ஏழைகளின் பிரயோஜனத்திற்காக வைத்திருக்க வேண்டுமென்றும், இன்னொரு சமயத்தில் மேல் வகுப்பார் கீழ் வகுப்பார்களை சொந்தக் குடும்பஸ்தர்களைப்போல் பாவிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார். இதுதான் காந்திஜீ யின் சுத்தமான சுதேச அபேதவாதம்,—அதாவது உழைப் புக்கும் மூலதனத்துக்கும், ஜமீன்தாருக்கும் குடியான வனுக்குமிடையில் உயர்வு தாழ்வின்றி ஒற்றுமையை நிலை நாட்டும் வழி!

மேலே கூறிய காந்திஜீயின் பல கருத்துகளுள்ளு மிருக்கிற வரையறையில்லாத் தன்மையையும், பரம்பர

மூரண்பாட்டையும் சற்று ஆராய்வோம். ஜமீன்தார் ஓர் காப்பாளனும்; அவன் தன்னுடைய சொத்தில் எந்தப் பாகத்தை காப்பாளனென்றமுறையில் வைத்திருக்கவேண்டும்? காக்கப்படவேண்டுவது பூராவுமா ஒரு பாகமா? ஒரு பாகமாகவிருந்தால் அப்பாகம் இவ்வளவு இருக்கவேண்டுமென்று யார் தீர்மானிப்பது? மேலும் அவனுடைய குடிகள் அவனோடு சம பாகஸ்தர்களாக விருந்தால் சமபாகமென்பதற்கு சரியான அர்த்தம் என்ன? சொத்தில் பாதி ஜமீன்தாருக்கும் மற்றப் பாதி குடிகளுக்கும் கிடைக்குமா? இல்லாவிடில் ஜமீன்தாருக்கும் அவனுடைய குடிகளில் ஒவ்வொருவருக்கும் சமபாகம் என்பது அர்த்தமா? ஒரு பங்காளி காப்பாளனுக எப்படியிருக்க முடியும்? "ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்" என்றால் அர்த்தமென்ன? குடிகள் தாலுக்தார்களுடைய நிலங்களை தாராளமாக உபயோகப்படுத்தி அவர்களுடைய மோட்டார் வண்டியில் நினைத்தபொழுது ஏறிக்கொண்டு பக்கத்து நகருக்குப் போகலாமா? உயர்வு தாழ்வின்றி ஒத்துழைப்பதென்றால் வேறு அர்த்தமென்ன? இந்த ஒத்துழைப்பை யார் நிலைநாட்டுவது?

இக்கேள்விகள் இலேசாகத் தள்ளிவிடக் கூடியவைகளல்ல. இவைகளைவிட இன்னும் பலமான கேள்விகள் வேறு உண்டு.

ஒரு குடியானவனோ அல்லது ஒரு தொழிலாளியோ அவனுடைய எஜமானனோடு ஏன் சமபாகஸ்தனாக விருக்கவேண்டும்? காந்திஜி சொல்லுக்கு ஆதாரம் என்ன?

குடிகளும் தொழிலாளிகளும் அவர்களின் எஜமானர்களின் சொத்துக்களை உற்பத்தி செய்பவர்களாக விருப்ப

தால், அவர்களும் சமமாக அச்சொத்துக்குப் பாத்திய முடையவர்களென்று சொன்னால், அவர்களை நாம் உற்பத்தி செய்ததையெல்லாம் ஏன் நாமே வைத்துக்கொள்ளக் கூடாது? ஏன் அவர்கள் அதை மற்றவர்களிடத்தில் கொடுத்து தங்களுக்கு காப்பாளாக விருக்கும்படி சொல்ல வேண்டும்? அவர்கள் பக்தியுள்ள பரோபகாரர்களென்ற பெயர் சம்பாதிப்பதற்காகவா இப்படிச் செய்யவேண்டும்?

நாம் இப்பிரச்சினையை வேறுவிதமாகப் பார்ப்போம். மேல் வகுப்பார்கள் காப்பாளராக ஏனிருக்க வேண்டும்? அவர்கள், தற்சமயம் சொல்வதுபோல், செல்வமெல்லாம் தங்களுடையதென்றும் தங்களது புத்தியையும் பொருளையும் கொண்டுதான் சம்பாதிக்கப்பட்டதென்றும் மற்றவர்களுக்கு அதில் யாதொரு பாத்தியமுமில்லை யென்றும் சொல்லலாம்.

பணக்காரர்களிடத்திலிருக்கிற சொத்து அவர்களைச் சேர்ந்த தல்லாவிட்டால், அவர்களே அதை வைத்திருந்து தர்மம் செய்யும்படி செய்வதற்கு என்ன நியாயமுண்டு? மற்றொரு வகையில் அவர்கள் நியாயமாகச் சம்பாதித்த சொத்தாயிருந்தால் அதை அவர்கள் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்வதற்கு யாதொரு காரணமும் கிடையாது. ஏழைகள் பட்டினியாய்க் கிடந்தால் கிடக்கட்டும்; அது பணக்காரரின் குற்றமல்ல. எனவே காந்தீயத்தின் பொருளாதாரக் கொள்கை வழ வழா கொழ கொழா வாகி விடுகிறது. நல்லெண்ணமிருந்த போதிலும் உபயோகமற்ற தாகி விடுகிறது.

இதற்கு இரண்டே முறைகள் தானுண்டு. ஒன்று, பணக்காரரின் செல்வமெல்லாம் அநியாயமாக வந்தவை

களென்று நிரூபித்து, பிடுங்கிக்கொள்ளல் வேண்டும். அல்லது அவைகள் நியாயமாகச் சம்பாதிக்கப் பட்டவைகளென்று ஒப்புக்கொண்டு பேசாமலிருந்துவிட வேண்டும். ஏழைகள் தாங்கள் கவனிக்கப்படவில்லையென நினைத்துவிடக் கூடா தென்று கருதி தயாளத்தன்மையைக் காட்டிக்கொள்வதில் பிரயோஜனமில்லை.

இப் பிரச்னை ஒழுக்கத்தையோ சன்மார்க்கத்தையோ பற்றியதல்ல; சொத்தின் உற்பத்தி விநியோகம் முதலியவை களைப்பற்றி விஞ்ஞான ரூபமாய் ஆராயக் கூடியதாகும். இப் பிரச்னையை சில அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டு மூடா மல் தைரியமாகப் பார்க்க வேண்டும். கார்ல் மார்க்ஸ் முத லாளித்துவ சொத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து, அது உழைப்பின் சுரண்டுதலை யடிப்படையாய்க் கொண்டிருக்கிற தென்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார். மானிடவர்க்கத் திற்கு அவர் செய்த மாபெருஞ்சேவை அதுவாகும். மார்க் ஸுக்கு முந்தியவர்கள் சன்மார்க்க வழியில் சொன்ன விஷயங்களை மார்க்ஸ் விஞ்ஞான பூர்வமாக நிரூபித்ததை பூர்ஷுவா புரோபவர்கள் இன்னும் மன்னிக்கவில்லை. ஆகை யால் தான் அவர் ஏற்படுத்திய உழைப்புக்குத் தக்க பெரு மதி என்ற கொள்கைக்கு அநேக எதிர்ப்புகள் ஏற்பட்டிருக் கின்றன.

கார்ல் மார்க்ஸின் ஆராய்ச்சியை விட்டு நழுவிப்போன எவருக்கும் வேறு யாரிடமும் தன்னுடைய சொத்தைவிட்டுப் பிரியும்படி சொல்ல யாதொரு பாத்தியமும் கிடையாது. வேண்டுமானால் தர்மம் செய்யும்படி சொல்லலாம்.

புலியின் பல்லைப் பிடுங்குதல்

இந்தப் பாதுகாப்புக் கொள்கையை (Theory of Trusteeship) அனுஷ்டானத்தில் கொண்டு வருவது எவ்வாறு? மேல் வகுப்பார்களை கீழ்வகுப்பார்களின் காப்பாளராக காந்திஜீ எவ்விதமாக மாற்றப் போகிறார்? "உங்களது மனத்தினுள் புகுந்து உங்களை நல்லெண்ண முடையவர்களாக மாற்றுவதுதான் என்னுடைய நோக்கம். உங்களுடைய தனிப்பட்ட சொத்தை உங்களுடைய குடிகளின் நலத்துக்காகப் பாதுகாத்து வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்கிறார் காந்திஜீ ஐக்கியமாகாண ஜமீன்தார்களிடம்.

இதுகூட இந்தியாவுக்கு மட்டும் தனித்த கொள்கை யென்று நினைக்கப்படுமோ வென நான் சந்தேகம் கொள்கிறேன். இம்முறை பெரிய மதத்தலைவர்கள் அனைவருக்கும் பொது. இயேசுகிறிஸ்து உள்பட முந்திய மதத்தலைவர்களெல்லாம் இவ்விஷயத்தில் எவ்வளவு வெற்றியடைந்தார்களென்பது சரித்திர உண்மை. தற்சமயம் காந்திஜீ தம்முடைய மந்திரக்கோலைக் கொண்டு பழைய வித்தைகளை மீண்டும் காட்ட விரும்புகிறார்.

காந்திஜீ, லார்டு இர்வின், சர் மால்கோம் ஹெய்லி இவர்களின் உபந்நியாசத்தைக் கேட்டு நன்மையடைந்த எழு ஜமீன்தார்கள் தற்சமயம் தங்களுடைய குடிகளின் பாதுகாப்பாளர்களாக வேலை செய்கிறார்களா வென்பது எனக்குத் தெரியவில்லை. காந்திஜீயினுடைய கொள்கைகள் மேல் வகுப்பார்களால் உற்சாகத்தோடு ஏற்றுக் கொள்ளப் படுகின்றன வென்பதும், அவர்களில் சிலர் அக்கொள்கைகளை மிகவும் பலமாக ஆதரிக்கிறார்களென்பதும் எனக்குத்

தெரியும். இது சகஜம்தான். ஏனென்றால் அத்தத்துவங்களை ஒப்புக் கொள்ளுவதால் அவர்களுக்கு யாதொரு நஷ்டமும் வரப்போவதில்லை. சில சந்தர்ப்பங்களில் நன்கொடைகளாக அவர்கள் ஏதேனும் கொடுத்தாலும் அப்பணம் அவர்கட்கு புகழையே கொடுக்கும். எனவே அது ஒருவகையான வியாபார தந்திரமாகிவிடுகிறது, அதனால் அவர்கட்கு அப்பணம் மற்றொரு விதத்தில் திரும்பிவந்துவிடலாம்; அன்பதோடு அவர்களுடைய நிலைமைக்கு சன்மார்க்க ஆதரவு அளித்து அதை பலப்படுத்தவும் செய்கிறது.

காந்திஜீ தன்னுடைய பேட்டியில் தான் சதாகாலமும் மில் முதலாளிகள் தங்களது ஆலைகளுக்கு தனிப்பட்ட பாத்யஸ்தர்களல்லவென்றும், தொழிலாளிகளுக்கும் அவைகளில் சம பாத்திய முண்டென்றும் சொல்லிவந்திருப்பதாகக் கூறுகிறார். ஆனால் இந்த உபதேசத்தில் அவருக்கு ஏதாவது வெற்றி ஏற்பட்டதாவென்று சொல்லவில்லை. காந்திஜீ அலகாபாத் லேபர் யூனியனில் ஈடுபட்டிருக்கிறார். அதை ஸ்தாபித்தவர்களில் அவரும் ஒருவர். அப்படிப்பட்ட அவராவது, அல்லது வேறு எவராவது சரி, யூனியனுக்கும் மில் முதலாளிகளுக்கும் நடைபெற்ற போராட்டத்தில் ஏதாவது மனமாற்றம் ஏற்பட்டதாக சொல்லமுடியுமா? யூனியனுடைய பலத்திலேற்படும் பயத்தினாலும், பொது வேலை நிறுத்தத்தால் ஏற்படக்கூடிய நஷ்டத்தின் பயத்தினாலும், மகாத்மாஜீ போன்ற செல்வாக்குள்ள மனிதர்களின் பஞ்சாயத்தை ஒப்புக் கொள்ளாமல் போனால் ஏற்படும் வெறுப்புக்கு பயந்தும்தான் மில் முதலாளிகள் தொழிலாளிகளோடு சமாதானம் செய்து கொள்ளுகிறார்களே அன்றி வேறில்லை. அப்படி செய்யப்படும் சமாதானத்தின் ஷரத்துகள்கூட மில்

முதலாளிகளால் சந்தோஷமாக தங்களுடைய தொழிலாளிகளின் நன்மைக்காக ஒப்புக் கொள்ளப்படுவனவல்ல. அவைகளால் முதலாளிகள் உண்மையாக எவ்வித தியாகமும் செய்துவிட்டதாக ஏற்படவுமில்லை.

ஒரு யோகாப்பியாசசாலை அவசியம்

காந்திஜீ தம்முடைய வாழ் நாளிலேயே மேல் வகுப்பாருடைய இருதயத்தை படையமுடியவில்லை யென்றால் அவர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்து விட்டால் பிறகு முடியுமென்று நாம் எப்படி நம்புவது? எந்த உலகிலும் ஒரு போதகருக்குப் பின் அவரைப்போன்று மற்றொரு போதகர் இதுவரையிலும் வந்தது கிடையாது. “சிஷர்கள்” என்பவர்களோ சதா காலமும் சுலோகங்களைத் திருத்துவதிலும் அவைகளை வியாக்கியானம் பண்ணுவதிலும் சச்சரவு செய்யக்கூடிய சிறு புத்தியுடையவர்களாவர். காந்திஜீ தமக்குப்பிறகு தம்முடைய மனமாற்றத்தொண்டை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு கூட்டத்தை தயார் செய்திருப்பதாக நம்புகிறாரா? இல்லாவிடில் எந்த மார்க்கத்தைக்கொண்டு அவருடைய கொள்கை வெற்றிபெறுமென்று அவர் நினைக்கிறார்?

காரியத்தைப் பூர்த்தி செய்யக்கூடியது எந்த மார்க்கமாக விருந்தாலும் இரண்டு குணங்களிருக்க வேண்டும். (1) மனமாற்றம் ஏற்படவேண்டும்;-தனிப்பட்ட நபர்களின் மனமல்ல; முழு வகுப்பாருடைய மனமும் மாறவேண்டும். (2) இவ்விதமாக “மாறுதலடைந்த மனம்” தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து வரவேண்டும். ஆனால் ஒரு மனம் ஏற்றுக் கொண்ட நல்ல குணங்கள் தலைமுறையாக தொடர்ந்து வருவது கிடையாது. ஒரு நல்ல மனிதனுக்கு கெட்ட பிள்ளை

பிறப்பதை நாம் பார்க்கிறோம். எனவே ஒவ்வொரு தலை முறையிலுமுள்ள முதலாளிகளுக்கும் ஜமீன்தார்களுக்கும் பாதுகாப்பாளர் என்ற சுபாவத்தை ஊட்டக்கூடிய ஒரு நிலை யான ஸ்தாபனம் வேண்டியதா யிருக்கிறது.

மேலும் இம்மனமாற்றம், மனமாற்றத்திற்கு அதீத மான சுற்றுச் சார்புள்ள நிலைமைகளில் வரவேண்டியதா யிருக்கிறது. சுற்றுச் சார்பு நிலைமைகளில் ஏகத்துவமும் தனிப்பட்ட லாபமும் நிறைந்திருக்கும். மேலும் "பாது காப்பாளர்" தமது பழம் முறைகளைக் கைக்கொண்டால் அவர்களைத் தண்டிக்க யாதொரு சமூகச் சட்டமோ மற்ற வித தண்டனையோ இருக்காது. எனவே பழைய முறையை அனுஷ்டித்துக் கொள்வான். அவ்வாறு செய்வது அதிக லாபகரமானதல்லவா?

இவ்வாறு மனமாற்றத்தில் வெற்றி பெறக்கூடிய ஒரு பெரிய ஸ்தாபனத்தை ஏற்படுத்த முடியுமா? ஒரு யோகாப்பி யாசசாலை ஏற்படுத்த வேண்டுமென்று டாக்டர் பகவான் தாஸ் சொல்லுகிறார். ஒரு பெரிய தலைவர் ஒரு யோகாப்பி யாசசாலையை ஏற்படுத்தலாம். ஆனால் அது பலனளிக்கு மென்று நம்புவது கஷ்டம்.*

---

* பூர்வீககால பிராமணர்களைப்பற்றி ஞாபக மூட்டுவோம். பிராமணர்களின் வேலை யாது? சுருங்கக் கூறவேண்டுமானால் மதம் சன்மார்க்கம் முதலியவைகளைக் கொண்டு அக்காலத்தி லிருந்த சமூக ஏற்பாட்டை காப்பாற்றி பலப்படுத்தி வந்தார் கள். சமூக ஏற்பாட்டை மாற்றாமல் எப்படிப்பட்ட தர்ம விப ரீதத்தைச் செய்தாலும் பிராமணர்கள் ஆக்ஷேபிப்பதில்லை. சமூ கத்தைச் சீர்திருத்த முயன்ற ஒவ்வொரு சீர்திருத்தச் செயலை

நம் பிரச்னை மனிதனின் சுபாவத்தைப்பற்றிய தன்று. அபேதவாதி, மனமாற்றும் தத்துவம் நடைபெறுதென்று சொல்லும்போது அவன் தனக்கு மனிதர்களின் நல்ல சுபாவத்தில் நம்பிக்கையில்லை யென்று சொல்லவில்லை. காந்திஜீ "மேல் தேசத்து" அபேதவாதத்தை தப்பர்த்தம் செய்து கொண்டதால்தான், அது, மனிதனுடைய சுயநல சுபாவத்தை யடிப்படையாகக் கொண்டிருக்கிறதென்று கூறுகிறார். இதைவிட உண்மைக்கு விரோதமாக ஒன்றுமிருக்க முடியாது. மனித சுபாவத்தைப்பற்றி அபேதவாதிகள் அற்பமான அபிப்பிராயம் வைத்திருந்தால் பொது நலத்தை படிப்படியாக வைத்து ஒரு சமூகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்ல ஒரு காலத்திலும் துணிந்திருக்க மாட்டார்கள். அபேதவாதம் மனித சுபாவத்தை ஒரு முடியாத அளவிற்கு உன்னதப்படுத்த முயலுகிறதென்று அடிக்கடி அபேதவாத விரோதிகள்கூட கூறவில்லையா?†

யும் அப்பிராமணர்கள் எதிர்த்தார்கள். பிராமணர்கள் சமூக வித்தியாசங்களை துடைக்க முயன்றார்களென்று சொல்வது தவறு. வித்தியாசங்களைப் பலப்படுத்தி முட்டுக்கட்டை கொடுக்கத்தான் முயன்றார்கள். அவர்கள் தர்மத்தைப் போதித்தது உண்மை; ஆனால் சதாகாலமும் அத்தர்மம் தனிப்பட்ட உரிமைகளையே தந்திருக்கின்றது.

நான் பிராமணர்களை ஒரு வகுப்பார் என்ற முறையில் குறைகூறுகிறேனே தவிர, பிராமணர்களுக் குள்ளிருக்கும் தனிப்பட்ட புரட்சித் தலைவர்களைப்பற்றி குறைகூறவில்லை.

† சில நாட்களுக்கு முன் பம்பாய் உபநகர (Suburban) மகாநாட்டில் மிஸ்டர் புலாபாய் தேசாய் இப்பண்டைக்கால விவாதத்தை எடுத்துரைத்தார். "அபேதவாதத்தையும் பொது

காந்திஜீ சொல்வதற்கு மாறாக அபேதவாதிக்கு மனித சுபாவத்தில் ஏராளமான நம்பிக்கையுண்டு. அதைச் சீர்திருத்துவதுதான் அவனுடைய திட்டத்தின் முக்கிய நோக்கம். ருஷியாவின் கடுமையான முறைகளைப்பற்றிக் கண்மூடித்தனமாக எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் மனித சுபாவத்தை சீர்படுத்துவதில் ருஷ்யா மிகவும் வெற்றியடைந்திருக்கிறது. இந்த விடத்தில் ஷெர்உட் எட்டியைப் போன்ற பாரபட்சமில்லாதவரின் சாட்சியத்தை எடுத்தாள விரும்புகிறேன்: "எண்ணங்களைச் சீர்திருத்துவதுதான் ரஷ்யாவின் முக்கிய நோக்கம். இப்பெரிய நோக்கம்தான் அவர்களுடைய எல்லா வேலை முறைகளையும் ஆளுகின்றது. நீண்ட காலத்தில் கிடைக்கக்கூடிய பயனுக்காக உடனே வேண்டிய தேவைகள் சிறிது சுருக்கிக்கொள்ளப்படுகின்றன. நிலங்களிலும் உற்பத்தி சாதனங்களிலும் இருந்த எல்லா உரிமைகளும் ஒழிக்கப்பட்டன. யாதொரு விதமான தனிப்பட்ட ஆஸ்தியும் சேர்த்துவைக்க முடியாது. தனிப்பட்ட லாபத்திற்குப் பதிலாக மானிட சேவை கருதப்படுகிறது. இது உலகிலேயே ஒரு புதிய விஷயம். மனித உபகாரமும்

உடைமையையும் சமூக அமைப்புக்கு அடிப்படையாகக் கொள்ள இது காலமல்ல. அபேதவாதம் பொது உடைமை இவைகளை சமூகத்தின் அடிப்படையாகக் கொள்ள மனிதனுடைய சுபாவம் மிக தீவிரமாய் மாறவேண்டுமென்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். விசேஷமாக ஒவ்வொரு மனிதனிடமும் தன்னால் இயன்றவரையில் பாடுபட்டு அதன் பலனை தானே அனுபவிக்க வேண்டுமென்ற சுபாவம்மாறி, தான் தன்னால் இயன்றவரையில் பாடுபட்டு அதன் பலனை சமூகம் அடையச் செய்யவேண்டுமென்ற புதிய சுபாவம் வளரவேண்டும்." (இந்துஸ்தான் டைம்ஸ் செய்தி)

பரோபகார சிந்தனையும்தான் விசேஷ சாதனங்களாக சோவியத் ருஷியாவில் கருதப்படுகின்றன. அவர்கள் மனித சுபாவத்தில் வைத்த நம்பிக்கையும், சுற்றுச்சார்பு நிலைமை நல்லதாக விருந்தால் மனிதன் நல்ல விதமாக நடந்து கொள்ளுவானென்று கொண்ட கொள்கையும் அவர்கட்கு வலிமை தருகின்றன.”

மனமாற்றமல்ல சமூகப் புரட்சி

மனமாற்றத் தத்துவம் உருப்படாதென்று அபேத வாதி சொல்வதற்குக் காரணம் மனித சுபாவத்திலுள்ள அவ நம்பிக்கையல்ல. ஆனால் சுற்றுச் சார்பிலிருக்கும் நிலைமையைப்போன்றுதான் மனிதன் நடந்துகொள்ளுவானென்ற மனோதத்துவ உண்மையை அபேதவாதி உணர்வதாலேயே அவநம்பிக்கை கொள்ளுகிறான். உண்மையில் சமூக சுற்றுச் சார்பே மனிதனுடைய நடத்தையை உருப்படுத்துவது. ஒரு முதலாளி தொழிலாளிகளைச் சுரண்டுவது அவனது கெட்ட சுபாவத்தினாலல்ல; அவனிருக்கும் சுற்றுச் சார்புகளே அவனை அவ்வாறு செய்யத் தூண்டுகின்றன. வேறெதையாவது அவன் செய்ய முயன்றானால் அவன் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து நீக்கப்பட்டு மற்றொருவன் அந்த ஸ்தானத்திற்கு வந்துவிடக்கூடும்.

ஆகையால் சமூகத்திலுள்ள வகுப்புகளின் ஒழுக்க முறை மாறவேண்டுமானால் சமூக அமைப்பிலேயே மாறுதல் ஏற்படவேண்டும். உதாரணமாக முதலாளி வகுப்பு தொழிலாளிகளைச் சுரண்டுவதைத் தடுக்கவேண்டுமாயின், அது முடியாமல் போகுமாறு சமூக அமைப்பை மாற்றி வைக்கவேண்டும். அதனாலேயே ஷெர்வுட் எட்டி ருஷ்யா

வில் சுயாலத்திற்குப் பதிலாக மானிடசேவை கருதப்படுகிற தென்று சொல்வதற்கு முன்பு, அங்கு நிலத்திலும் உற்பத்தி சாதனங்களிலும் தனிப்பட்ட உரிமைகளில்லை யென்றும், தனிப்பட்ட ஆஸ்தி சேகரிக்க முடியாதென்றும் சொல்லி யிருக்கிறார். மனித சுபாவம் சுற்றுச் சார்பின் நிலைமை களைப் பொறுத்திருக்கின்றதே தவிர, நமக்குள்ளிருக்கும் ஆன்மாவைப் பொறுத்ததல்ல. சுற்றுச் சார்பின் நிலைமை கள் நல்லவைகளாக விருந்தால், ருஷ்யாவில் எவ்விதமாக மனி தர்கள் நடந்து கொள்ளுகிறார்களென்று ஷெர்வுட் எட்டி சொல்லுகிறாரோ, அவ்வாறு நல்லவிதமாய் நடந்து கொள்ளு வார்கள். மனிதனை மனிதன் சுரண்டுவதை சட்டமாக வைத் திருக்கும் சமூகத்தில், நற்போதனைகள் செய்யப்பட்டால் அது சில தனிப்பட்ட நபர்களின் மனதை மட்டிலும் மாற்ற லாமே தவிர சமூகம் பூராவையும் மாற்றிவிட முடியுமென்று நம்ப முடியாது.

ஆகையால் அபேதவாதி சர்க்காரைக் கொண்டு அதன் மூலமாய் பிரசாரத்திற்கும் கல்விக்கும் சாதகமான சாதனங் களைக் தனதாதிக்கத்தில் கொண்டுவந்து முதலாவதாக சுற் றுச் சார்பு நிலைமைகளை மாற்ற விரும்புகிறான். அது எவ்வாறு? அவன் சுரண்டப்பட்டவர்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் சேர்த்து அமைத்து தற்கால சமூக அமைப்பை தலைகீழாகக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றுவான். அதற்குப்பிறகு புதிய அஸ்திவாரத்தின் மேல் ஓர் சமூகத்தைக் கட்டுவான்.

காந்திஜீயளித்த பேட்டியில் கவனிக்கவேண்டிய சில இன்னை விஷயங்களிருக்கின்றன. அவைகளை யெல்லாம் பார்ப்போமாகில் நம்முடைய கவனம் முக்கிய பிரச்னையை

விட்டு விலகிவிடும். எனவே அவைகளில் சில விஷயங்களை மட்டிலும் கவனித்தால் சிறிது பலன் கிடைக்கலாம்.

தலைமை வகிப்பதா வால் பிடிப்பதா

ஒருவரும் குறை கூருதவாறு பொதுஜன வாக்கெடுத்தால் நம்முடைய கோடிக்கணக்கான ஜனங்கள் ஓட்டு அளிக்கமாட்டார்களென்று நான் தெளிவாக உணருகிறேன் என்று காந்திஜீ சொல்கிறார். அப்படிச் செய்த போதிலும் அவ்வபிப்பிராயத்துக்கு ஒரு சமூக விஞ்ஞானியிடத்தில் யாதொரு மதிப்புமிருக்காது; ஏனெனில் அவன் தற்கால சமூகத்தை விஞ்ஞான முறையில் அறிந்து தற்கால கெடுதிகளைப் போக்கக்கூடிய சமூகத்தை திட்டம் போட்டு ஏற்படுத்த விரும்புகிறான். பிற்போக்கான, அறியாத, ஒடுக்கப்பட்ட ஜனங்களின் அபிப்பிராயத்தை விஞ்ஞானி எவ்வாறு மதிப்பது? கேற்றுவலாயில் ஆங்கிலேய தொழிலாள வகுப்பார் கன்சர் வேடிவ்களுக்கு வாக்களித்தார்களென்பது காந்திஜீக்குத் தெரியாதா? தற்சமயம்கூட அமெரிக்காவிலுள்ள தொழிலாளிகள் அபேதவாதியாகிய நார்மன் தாமஸுக்கோ, பொது உடமைக்காரராகிய வில்லியம் Z. பாஸ்டருக்கோ ஓட்டுக் கொடுக்காமல் பெருவாரியாக மேல்வகுப்பார்களால் ஆளப்பட்ட ஜனநாயக குடியரசுக் கட்சிகளின் அபேட்சகர்களுக்கே ஓட்டுகொடுக்கிறார்கள். இதைக்கொண்டு அவர்களுடைய அபிப்பிராயம் அவர்களுடைய நன்மையோடு ஒத்திருக்கிறதென்று நினைப்பதா?

ஒரு பிராமணனுடைய உலையை தொடும்படியாகக் கூப்பிட்டால் கூட அப்படி தொடுவது பெரும் பாதகமென்று நினைக்கக்கூடிய லட்சக்கணக்கான தீண்டாதார் இந்தியா

வில் இல்லையா? பீகாரிலும் ஐக்கிய மாகாணத்திலும் பர்தா மறுப்பு இயக்கம் துன்மார்க்கமானதென்று சொல்லும் பெண்கள் கிடையாதா?

ஜனங்கள் எதற்காக வாக்கு கொடுக்கிறார்கள், எதற்காக வாக்கு கொடுக்கவில்லையென்பது முக்கியமல்ல. அவர்கள் தங்களுடைய உரிமைகளையும் சக்திகளையும் எவ்வளவு தூரம் உணர்ந்திருக்கிறார்களோ, அதைப் பொறுத்துத்தான் அவர்களுடைய அபிப்பிராயம் வரும். ஜனங்கள் தங்களுக்கு உண்மையில் நலம் இன்னதென்று தெரிந்து கொண்டால் சமூகத்தில் எல்லா பிரச்னைகளும் உடனே நிவர்த்தியாகி விடும்.

ருஷ்யாவில் "பொருளாதார சாஸ்திரி"களென்று படித்த ஒரு சிலர் இருந்தார்கள். அவர்கள் தொழிலாளிகள் ஏற்கனவே தங்களுடைய உரிமைகளை உணர்ந்திருக்கிறார்களென்றும், ஆகையால் அவர்களுடைய விருப்பங்கள் சித்தியாகும்படி தங்களுடைய உரிமைகளை உணர்ந்திருக்கிறார்களென்றும், ஆகையால் அவர்களுடைய விருப்பங்கள் சித்தியாகும்படி அவர்களுக்கு உதவுவதுதான் தலைவர்களின் கடமை யென்றும், தொழிலாளிகளின் விருப்பத்தைவிட அதிகமாக ஒன்றையும் சேர்க்கக் கூடாதென்றும் அவைகளுக்குத்தான் விஞ்ஞான ரூபம் கொடுக்க வேண்டுமென்றும் வாதாடினார்கள். இதற்கு 'என்ன செய்யவேண்டும்?' (What is to be done?) என்ற புத்தகத்தில் லெனின் ஒரு கடுமையான பதில் எழுதி அதற்கு "வால் பிடித்தலென்று" பெயர் கொடுத்தார். (அதாவது ஜனங்களுக்கு தலைமை வகிப்பதை விட்டுவிட்டு ஜனங்களின் வாலைப் பிடித்துத் தொங்குவது). அப்புத்தகத்தில் புரட்சிகரமான படி

பாளிகள் திட்டம் போட்டு ஜனங்கள் அவர்களுடைய உரிமைகளையடையும்படி செய்ய வேண்டியதுதான் அவர்களது கடமையென்று லெனின் தெளிவாகக் காண்பித்திருக்கிறார். அபேதவாதம் தொழிலாள வகுப்பாரால் உற்பத்தி செய்யப் பட்ட கொள்கையல்ல. படித்த பூர்ஷுவாக்களில் சில தனிப்பட்ட நபர்களால் உற்பத்தி செய்யப்பட்டதாகும். அவர்கள் முதலாளித்துவத்தால் சிருஷ்டிக்கப்பட்ட பிரச்னைகளை ஆராய்ந்து தெளிந்த மூளையையும் உண்மை மனதையும் கொண்டே அபேதவாதக் கொள்கையை ஏற்படுத்தினார்கள். லெனின் சொல்வதாவது:—எல்லா தேச சரித்திரங்களையும் ஆராய்ந்து பார்த்தால் தொழிலாளிகள் தாமாக டிரேட் யூனியன் உணர்ச்சி வரையில்தான் முன்னேறுவார்களென்று தெளிவாக தெரியும். முதலாளிகளோடு போர் செய்வதற்கும் தங்களுக்கு வசதியான சட்டங்களை ஏற்படுத்துவதற்குமே தொழிலாளிகள் தாமாக சங்கங்கள் ஏற்படுத்துகிறார்கள். சோத்துள்ள வகுப்புகளில் பிறந்த படிப்பாளிகள் ஏற்படுத்திய தத்துவ சரித்திர பொருளாதாரக் கோள்கைகளிலிருந்தே அபேதவாதக் கோள்கை தோன்றியது.

சமூகத்தைக் கட்ட விரும்பும் சிற்பியின் கையில் பொதுஜன வாக்கெடுப்பென்பது மிகவும் நம்பத்தகாத அற்ப கருவியாகும்.

சமூக உடைமை

"ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்குமிடையிலுள்ள சம்பந்தங்களில் ஒரு புதிய மாறுதலை ஏற்படுத்திவிட்டால், எங்களை உங்கள் பக்கத்திலிருந்து, உங்களது சொத்துக்களையும் உரிமைகளையும் காப்பதாகக் காண்பீர்கள். 'எங்கள்' என்று

சொல்லும்போது பண்டித ஜவஹர்லாலையும் சேர்த்தே கூறு
கிறேன். ஏனெனில் முக்கிய கொள்கையாகிய அஹிம்சா
தர்மத்தில் எங்களுக்குள் யாதொரு அபிப்பிராய பேதமும்
கிடையாது. அவர் சொத்தையெல்லாம் சமூக உடைமைக்
குள் கொண்டு வரவேண்டுமென்று சொல்லுகிறார். அதைக்
கண்டு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை. தனிப்பட்ட
நபர்களுக்குக் கொடுக்காமல் ஒரு சமூகம் தானே சொத்தை
வைத்துக்கொள்ள முடியாது. சரியானபடி செலவிட
தூண்டவே செய்யும். உங்களுடைய சொத்தை குடிகளின்
சகாயத்திற்காக நீங்களே வைத்திருப்பதில் உங்கட்கு
யாதொரு ஆட்சேபணையு மிருக்காதென்று நினைக்கிறேன்.
சுயேச்சையுடன் சமாதானமாக வாழவேண்டு மென்பதை
விட குடிகள் அதிகமாக எதுவும் வேண்டவில்லை. நீங்கள்
உங்களுடைய சொத்தை குடியானவர்களின் உபயோகத்
திற்காக வைத்திருப்பீர்களானால் அவர்கள் ஒருபோதும்
நீங்கள் சொத்து வைத்திருப்பதை ஆட்சேபிக்க மாட்டார்
கள்.

இதைவிட அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடிய
யாதொரு அறிக்கையையும் நான் சமீப காலத்தில் படித்த
தில்லை. இவ்வாறு லக்ஷியங்களையும் விவாத அம்சங்களையும்
சேர்த்துக் குழப்புவதையும் அதிர்ஷ்டவசமாக நான் இது
வரை பார்த்ததில்லை. பண்டித ஜவஹர்லாலின் சார்பாக எவ்
வித விளக்கமும் கொடுக்கவேண்டியது எனது வேலையல்ல.
அவர் விடுதலை யடைந்ததும் தமது அபிப்பிராயத்தை காந்தி
ஜீக்கும் ஜமீன்தார்களுக்கும் தெளிவாக விளக்கிவிடுவாரென
நான் உறுதியாக நம்புகிறேன். மேலும் நான் சுட்டிக்
காட்டுவதென்னவென்றால், காந்திஜீ இவ்வறிக்கையை வெளி

யிட்ட காலத்திலேயே, ஜவஹர்லாலால் எழுதப்பட்ட "விதர் இந்தியா" என்ற கட்டுரையும் அதனோடு சேர்ந்த பிரசாரமும் வெளிவந்துவிட்டன. அவைகளையெல்லாம் படித்தவர் அவைகளின் ஆசிரியரைப்பற்றி இப்படிப்பட்ட விஷயங்களை எவ்வாறு சொல்ல நேரிட்டதென்பதை அறிய மாட்டார்கள்.

அஹிம்சா தர்மத்தில் அவருக்கும் ஜவஹர்லாலுக்கும் அபிப்பிராயபேதமில்லாததனால் ஜவஹர்லால் தனிப்பட்டவர்களின் சொத்துக்களையும் உரிமைகளையும் உற்சாகமுடன் காப்பாற்றுவாரென காந்திஜீ கூறுகிறார். "Some criticisms considered" என்ற கட்டுரையில் ஜவஹர் அஹிம்சா தர்மத்தைப்பற்றி தமது அபிப்பிராயத்தைக் கூறும்போது, முறைகள் அவ்வளவு முக்கியமானவைகளல்லவென்று விளக்கியிருக்கிறார். "முறை எவ்வளவு முக்கியமாக விருந்தபோதிலும், அது எவ்வாறு லக்ஷ்யமாக முடியுமென்று என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. ஒரு அடி எடுத்து வைப்பதற்கு முன்பே லக்ஷ்யத்திற்குரிய இடம் எத்திசையிலென்பதை தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்." முறை, அதாவது அஹிம்சா தர்மம் சம்பந்தப்பட்ட வரையில் அவர் ஏகாதிபத்தியத்தோடு போராடுவதற்கு அதை ஒரு ஆயுதமாகக் கருதியிருப்பதாகத் தெளிவாய்க் கூறுகிறார். "மேலும் அவர் அஹிம்சா தர்மம் தவறு செய்யக் கூடாதவை யென்றும் எண்ணவில்லை. ஆனால் அநேக சந்தர்ப்பங்களில், என்னுடைய அபிப்பிராயத்தை அதாவது அஹிம்சா தர்மம் ஒரு தவறு செய்யக்கூடாததல்ல வென்றும், நான் அஹிம்சையைக் கொண்டு அடிமையாயிருப்பதைவிட பலாத்காரத்தைக்கொண்டு சுதந்திர முடையவனாக

விருப்பதே மேலென விரும்புகிறவனென்றும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறேன்."

(ரீசண்ட் எஸ்ஸேஸ் அண்டு ரைட்டிங்ஸ் P. 33)

சுயராஜ்ய மடைந்த பிறகு, தேசத்துக்குள்ளிருக்கிற வகுப்புரிமைகளை சர்க்காரின் பலம் கொண்டு சரிப்படுத்துவதில் தயங்கமாட்டேனென சந்தேகத்திற்கிட மில்லாது ஜவஹர்லால் சொல்லியிருக்கிறார். "சர்க்கார் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு அகிம்சையா பலாத்காரமாவென்ற கேள்வி பிறக்கலாம். உண்மையில் இக்கேள்வி பிறந்தே தீரும். பிற்போக்கான வகுப்பார்கள் புதிய சர்க்காரை கவிழ்க்க முயலுவார்கள். இவர்களை அடக்குவதற்கு "கா" சர்க்காரின் பலத்தை உபயோகப்படுத்துவாரா? அல்லது மத, பரோபகார தத்துவத்தைக் கொண்டு அவர்களின் மனதை மாற்ற முயலுவாரா? மேலும் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்தைக் கொண்டு உரிமை இழந்த தனிச்சொத்துடைமையாளரின் உரிமைகளை திரும்பப் பெறுவதற்கு புதிய சர்க்கார் சட்டங்களை ஏற்படுத்தலாம். அப்பொழுது, அவ்வகுப்பார்களுக்கு "கா" என்ன ஆலோசனையளிப்பார்? பெருன்பான்மையோரின் அபிப்பிராயத்துக்கு இணங்கும்படி செய்வாரா; அல்லது எதிர்க்கும்படி செய்வாரா? எதிர்த்தால் அவ்வெதிர்ப்பை எவ்வாறு அடக்குவது?"

(ரீசண்ட் எஸ்சேஸ் அண்டு ரைட்டிங்ஸ் P. 35—36)

"கா" வின் பதில் எவ்விதமாயிருந்த போதிலும் ஜஹர்லாலின் அபிப்பிராயங்கள் தெளிவாயிருக்கின்றன. ஜவகர்லால் அறிக்கைகளின் மூலமும் "ரீசண்ட் எஸ்ஸேஸ் அண்டு ரைட்டிங்ஸ்" என்ற புத்தகத்தின் மூலமும் இவ்விதம் தமது

கருத்துகளை வெளியிட்டிருக்கும்போது காந்திஜீ எவ்வாறு தன்னோடு இவ்விஷயத்தில் ஜவஹரையும் சேர்த்து இணைத்துக் கொண்டாரென்பது தெரிந்து கொள்ள முடியவில்லை.

இவைகளெல்லாம் ஓர் புறமிருக்க, சமூக வுடைமைப் பற்றி காந்திஜீ கொடுத்திருக்கும் அபிப்பிராயத்திற்காக மூசன் பரிசு கொடுக்க வேண்டும். ஜவஹர்லால் சமூக உடைமையைப்பற்றிப் பேசுவதால் ஒருவரும் பயப்பட வேண்டிய தேவையில்லையென்றும், தனிப்பட்டவர்களிடமில்லாது ஒரு சமூகம் சொத்துக்களை தானே கொண்டிருக்க முடியாதென்றும் காந்திஜீ சொல்லியிருக்கிறார். இவ்வித வெற்றுரைக் கொள்கையை காந்திஜீ நடப்பமுடியுமா? தற்கால பொருளாதார சாஸ்த்திரத்தில் தேர்ச்சிபெறாத புதுமாணுக்கனுக்கும் கூட சமூக உடைமையின் அர்த்தம் தெரிந்திருக்கிறது. சர்க்கார் ரயில்வேக்களுக்கு யார் சொந்தக்காரர்கள் என்று காந்திஜீ சொல்ல முடியுமா? சோவியத்து ருஷ்யாவில் சமூக உடைமைக்குள் கொண்டுவரப்பட்ட சுரங்கங்கள், பாங்குகள், தொழிற்சாலைகள் யாவையும் யார் கைக் கொண்டிருக்கிறார்கள்?

சொந்த விநியோகத்திற்காக வைத்திருக்கும் சொத்தையும் உபயோகத்திற்கென்றே உற்பத்தி செய்யப்படும் சொத்தையும் போட்டு காந்திஜீ குழப்பிவிட்டார். வீடுகளையும், உடுப்புகளையும், சைகில்களையும், கிராமபோன்களையும், மேஜைகளையும், குறிச்சிகளையும் தனிப்பட்டவர்களின் மூலமில்லாது சமூகம் தானே கொண்டிருக்க முடியாதென்று காந்திஜீ சொல்லியிருந்தால் ஒருவரும் அவருடன் விவாதிக்க இடமில்லை. சொத்தை சமூக உடைமைக்குள் கொண்டு வரவேண்டுமெனச் சொல்லுவது தனிப்பட்டவர்

களுக்கு வீடுகளோ, துணிமணிகளோ சொந்தத்திலிருக்கக் கூடாதென்று பொருள்படாது.

அபேதவாதி சொத்துக்களை சமூக உடைமைக்குள் கொண்டுவரவேண்டு மென்று சொல்லும் போது, சுரங்கங் கள், தொழிற்சாலைகள் முதலியவைகளைத்தான் கொண்டுவர வேண்டு மெனச் சொல்லுகிறான். அப்படிப்பட்ட சொத் துக்களை சமூகம் கொண்டிருப்பதில் யாதொரு கஷ்டமும் ஏற்படாது. மேலும் இவைகளைத் தனிப்பட்டவர்களுக்கு சொந்தமாக்குவது நியாயமல்லாததும் நேர்மையற்றதும் விஞ்ஞான ரீதியாகாததுமாகும். இவைகள் மிகவும் பெரிய ஸ்தாபனங்களாயிருப்பதால்தான் சமூக நன்மைகளோடு சம் பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவைகளைச் சமூகம் தான் கொண்டிருக்க வேண்டும்.

இதன் அர்த்தமென்ன வென்றால், இந்த ஸ்தாபனங் களை சோவியத்து ருஷ்யாவில் செய்ததுபோல் சமூக ஊழி யர்கள் நடத்துவார்கள். இவைகளிலிருந்து அடையும் பலனை சகலரும் ஒரு பொதுத் திட்டத்தின் பிரகாரம் பங்கிட்டுக் கொள்ளுவார்கள்.

கதர் மூலம் அபேதவாதம்

காந்திஜீ ஜமீன்தார்களுக்கு அளித்த பேட்டியில் சுதேச அபேதவாதமென்றால் முதலாளியும் தொழிலாளியும் ஒத்து ழைப்பதென்று சொல்லி யிருக்கிறார். மற்றொருவித கார்த்தியன் "அபேதவாத" முண்டு. ஆனால் அதைப்பற்றி அப்பேட்டியில் ஒன்றும் சொல்லப்படவில்லை. அதன் முக்கிய கொள்கை இயந்திரங்களை விலக்கி குடிசைத் தொழில்

களை அபிவிர்த்தி செய்வதாகும். இயந்திரங்களுக்கு விரோதமாகச் சொல்லப்படும் முக்கிய காரணங்களென்ன வென்றால் இயந்திரங்கள் பலாத்காரத்திற்கும் சுரண்டுதலுக்கும் காரணமாயிருக்கின்றன வென்பதும், விசேஷமாக இந்தியாவைப் போன்ற ஜனப் பெருக்கமுள்ள தேசத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை யுண்டாக்கும் என்பதுமாகும். இயந்திரங்கள் பலாத்காரத்திற்கும் சுரண்டுதலுக்கும் சாதகமாக விருக்கின்றன வென்று கூறினால் அது இயந்திரங்களின் குற்றமல்ல. அவைகளை தனிப்பட்டவர்களின் லாபத்திற்காக உபயோகப்படுத்தும் முறையின் குற்றமென்றே சொல்ல வேண்டும். இயந்திரங்களிருந்தால் முதலாளித்துவ மிருந்தே தீர வேண்டுமென்று சிலர் எண்ணுகிறார்கள். இது உண்மையல்லவென்பதை சோவியத் ரஷியா தெளிவாக நிரூபித்து விட்டது. அங்குள்ள சமூகம் இயந்திரங்களையே அடிப்படையாய்க் கொண்டிருந்த போதிலும் அங்கு சுரண்டுதல் அறவே கிடையாது. ரஷியாவில் பலாத்காரமிருக்கிறது. ஆனால் அது இப்பழைய பொருளாதார முறையைக் கொண்டு உண்டாக்கப்பட்டதல்ல. அது எப்படிப்பட்ட பலாத்காரமென்றால் சிறுபான்மையோர் ஏகபோகமாக அனுபவித்து வரும் பழைய உரிமைகளையும், சுரண்டுதல்களையும், பலாத்காரத்தையும் தகர்த்தெறிவதற்கு வேண்டிய புரட்சிகரமான அரசியல் பலாத்காரமாகும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி இத்தேசத்தில் தவறாக விவாதிக்கப்படுகிறது. “பத்து பேர்களின் வேலையைச் செய்யும் ஒரு இயந்திரத்தை நாம் ஸ்தாபித்தால் அத்தனை பேர்களுக்கும் வேலையில்லாது போய் விடாதா?” வென்று பலர் கேட்கின்றார்கள். ஆம், அது அப்படியே செய்கிறது.

னுல் அது செய்யும் வேலைகளிலும், உரிய தேவைகளிலும், வாழ்க்கை முறைகளிலும் புதுமையும், உயர்வும் புகுத்து கின்றதென்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

அமெரிக்காவைப் போன்ற ஒரு தேசத்தை எடுத்துக் கொள்ளுவோம். அங்கு குடியேறிய 13 நாடுகள் கலகம் செய்து தத்தம் சுதந்திரத்தை யடைந்தகாலையில், அவற் றின் உற்பத்தி யளவும் ஜனத்தொகையும் மிகக் குறைவா யிருந்தன. இயந்திரங்கள் தோன்றியதால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்குமென்று சொல்வது உண்மை யானுல் அத்தேசத்தில் இயந்திரங்கள் அதிகரிக்க அதிகரிக்க வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்திருக்க வேண்டும். அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. வெளிநாட்டு வியாபா ஸ்தலங்களும் ஏகாதிபத்தியமும் அமெரிக்க நாட்டுத் தொழி லாளர்களுக்கு வேலை கொடுத்தனவென்று சிலர் சொல்ல லாம். ஆனுல் இது முற்றிலும் உண்மையல்ல. மகாயுத்தம் வரையில் அமெரிக்கா அதிகமாக ஏற்றுமதி செய்யவில்லை. யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட வியாபார வளர்ச்சியில்கூட அமெரிக்கா தான் உற்பத்தி செய்த சாக்குகளில் நூற்றுக்கு பத்துகூட ஏற்றுமதி செய்யவில்லை. இதன் காரணமாக இயந்திர விரோதிகள் வாதாடுவதுபோல ஏன் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கவில்லை யென்றுல் பலவித காரணங் களைக்கொண்டும் அமெரிக்க தொழிலாளி விவசாயிகளின் வாழ்க்கை நிலை மற்ற முதலாளித்துவ தேசத்திலிருப்பதை விட உயர்ந்துகொண்டே வந்தது. ஆகையால் அமெரிக்கா வில் உற்பத்தி செய்யப்பட்ட வஸ்துக்கள் அதிகமாய் அங் கேயே செலவாகி வந்தன.

இதனால் அமெரிக்காவில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை என்று அர்த்தமில்லை. அங்கும் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்தது. அதுவும் சில குறிப்பிட்ட காலத்தில் தான் ஏற்பட்டது. அதற்கு முக்கிய காரணம் இயந்திரங்களன்று. அக்காரணத்தை அடியில் கூறுகிறேன். அமெரிக்கரின் அனுபவத்திலிருந்து தெரிந்து கொண்டதென்னவென்றால் ஜனங்களின் உற்பத்தி சக்தியுடன் பொருட்களை வாங்கும் சக்தியும் அதிகரித்துக் கொண்டு போனால் எவ்வளவு இயந்திரங்களை உபயோகப்படுத்தினாலும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாதென்பதேயாம். ஜனங்களின் தேவைக்கதிகமாக உற்பத்தி செய்தால் தான், வேலையில்லா திண்டாட்டம் ஏற்படும். இவ்வாறு செய்வதற்கு நீண்ட நாட் செல்லும்.

மற்றொரு தேசத்தைக் கவனிப்போம். அமெரிக்கர்களைவிட அதிகமாக சோவியத் ருஷியா இயந்திரங்களை நம்புகிறது. ஒவ்வொருவரும் பிரமிக்கத் தக்கவிதம் சோவியத் ருஷியா தன்னுடைய தொழிலிலும், விவசாயத்திலும் இயந்திரங்களை உபயோகிக்கிறது. அவ்வாறிருந்தும், நாகரிகமடைந்த உலகத்தின் மற்ற எல்லா பாகங்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் சமூகத்தில் முக்கிய பிரச்னையாயிருந்தபோது, ருஷியாவில் மட்டும் தான் வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாதென எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதன்றோ? இதற்கு இயந்திர விரோதிகள் என்ன பதில் சொல்வார்கள்?

இதன் பதில் முதலாளித்துவத்தின் கீழ் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்தே தீருமென்பதுதான். நாம் முதலாளித்துவத்தில் தெரிந்து கொண்டதென்ன? ஈவு இரக்க

யின்றி உற்பத்தி குறைக்கப்படும்; அநேக தொழிற் சாலைகள் வேலையில்லாது சோம்பலில் ஆழ்ந்து கிடக்கும்; கொடுக்கல் வாங்கலற்று பணம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்; பண்டகசாலைகளில் பொருள்கள் நிறைந்து கிடக்கும். அதேசமயத்தில் முதலாளிகளாலும் சர்க்காராலும் பண்டகசாலை பூட்டி வைக்கப்பட்டிருக்கும்; அல்லது வேண்டுமென்றே நாசமாக்கப்படும். இப்பொருள்களெல்லாம் அத்யாவசியமாக விருந்தும் அவற்றை எத்தனை ஜனங்கள் கிடைக்கப்பெறாமல் தவிக்கின்றனர். ஒருபுறம் உற்பத்தியின் அளவு மீறி விட்டதென்றும் மற்றொருபுறம் அனுபவிக்கக் கூடியவர்களிடத்தில் உற்பத்திப் பொருட்களை வாங்கப் பணமில்லையென்றும் சொல்லப்படுகிறது. இதைவிட வேறு பரஸ்பர விரோத முள்ளது ஏதாவது இருக்க முடியுமா? இதுதான் முதலாளித்துவத்தில் காணப்பெறும் பிடிவாத குணம். உலகத்திலுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது தேவைக்கு வேண்டியவைகள் கிடைக்காது வாடும் போது, அதிக உற்பத்தியிருக்க முடியாதென்பது வெளிப்படை. இப்பொழுது உற்பத்தி செய்வதைவிட ஆயிரமடங்கு அதிகமாக உற்பத்தி செய்தபோதிலும் யாதொரு கஷ்டமுமில்லாமல் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாவும் செலவாகிவிடும். அவ்வாருனல் ஏன் இவ்வித நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது? நெருக்கடிக்கு ஜனங்களின் ஏழ்மையே காரணமாகும். ஜனங்களிடத்தில் வாங்கும் சக்தி அதிகமாயில்லாததினுல், பண்டகசாலையில் மூடப்பட்டுக்கிடக்கும் சாக்குகளையும், கடலில் கொட்டப்படும் சாக்குகளையும், நெருப்புவைத்து எரிக்கப்படும் சாக்குகளையும் வாங்க முடிவதில்லை. முதலாளித்துவ தேசங்களில் உள்ள பெரும்பான்மையான ஜனங்களின் வாங்கும் சக்தி

அவர்கள் பெறும் கூலியி(ஊதியத்தி)லிருந்தே உண்ட இக்கூலிகள், முதலாளிகளால், தங்களது அதிக லாபத்தைக் கருதி மிகவும் குறைந்தவைகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக ஓர் வட்டம் போடப்பட்டுவிடுகிறது. முதலாளி சாக்குகளை விற்று லாபம் சம்பாதிப்பதற்காக ஏராளமாய் உற்பத்தி செய்கிறான்; ஆனால் அதே சமயத்தில் அவன் கூலியைக் குறைத்து ஜனங்களின் உபயோகிக்கும் சக்தியைக் குறைத்தும் விடுகிறான். எனவே உற்பத்திக்கும் சலவுக்கும் (விற்பனைக்கு) மிடையில் சமநிலைமை ஏற்படுவதில்லை. வேளா வேலைகளில் அதே முதலாளி தான் "மிகவும் அதிகமாய்" உற்பத்தி செய்துவிட்டதாக காணக்கூடும்; உடனே அவன் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டு பல தொழிலாளிகளை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறான்.

ஒரு சிலரின் லாபத்திற்காகவன்றி பொது ஜனங்களின் உபயோகத்திற்காக பொருள்கள் உற்பத்தி செய்யப்படுமானால், உற்பத்தி செய்யப்படும் பொருள்களெல்லாம் செலவாகி விடுமென்பது இப்பொழுது தேற்றம். பொருட்களின் உற்பத்தியளவைத் தவிர வேறு எவ்வகையிலும் ஜனங்களின் வாங்கும் சக்தியைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் அப்படிப்பட்ட (உபயோகிக்க உற்பத்தி செய்யும்) சமூகத்தில் எவ்வளவு சாக்கு உற்பத்தியாகிறதோ அவ்வளவும் "கூலியாகக்" கொடுக்கப்பட்டுவிடும். சமூகத்தின் தேவைகளெல்லாம் பூர்த்தியானபிறகுதான் அதிக உர்பத்தி என்ற பேச்சுப் பிறக்கும். ஆனல் சமூகத்தின் தேவைகளுக்கு அளவு கிடையாதென்று நான் சொல்லி விட்டேன். சமூகத்தின் தேவைகளெல்லாம் பூர்த்தியாகும்

வரையில் இயந்திரங்களைக் குறைத்து உற்பத்திகளைக் நசுக்கவேண்டிய அவசியமேற்படாது.

இந்தியாவில் அப்படிப்பட்ட காலம் வர நீண்டநாட் செல்லும். இந்தியாவில் பரம ஏழைகளாயிருக்கிற ஒவ்வொருவருக்கும், ஒரு நடுத்தர வீடும், அதைச் சுற்றிலும் அழகான சிறு தோட்டமும், படுக்கைகள், நாற்காலிகள், மேஜைகள், இலாநன், ஜமுக்காளங்கள், மின்சார வசதிகள், ரேடியோ இயந்திரம், மோட்டார், சிறு புத்தகசாலை, சங்கீத வசதிகள், நல்ல ஆகாரம், தூய உடை, விளையாட போதுமான ஓய்வு, எழுதப்படிக்க சாதகமான வசதிகள் எல்லாம் அளிக்க வேண்டுமானால் நாம்—சுமார் ஐம்பது வருடங்கள் ஆகும் என்று வைத்துக் கொள்வோம்.—அவ்வளவு நாளும் நம் உற்பத்தித் துறையை எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்யவேண்டும்?

இயந்திரங்களைக் கண்டு ஓடுவதும், சிறு கைத்தொழில்களைக் கைக்கொள்ளுவதும் நாம் மேலே பார்த்தமாதிரி உண்மையான பிரச்சினையைக் கண்டு பயப்படும் வியாதியின் அடையாளமாகும். சங்கடமான முடிவுகளிலிருந்து தப்பவேண்டுமானால் தற்போதிய சமூகத்தைப் பரிசோதிப்பதை விட்டுவிட்டு விலகிக்கொள்ள வேண்டும். அழகான மனக்கோட்டை கட்டுவது அவ்வளவு கஷ்டமல்ல உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்காமல், மனிதனுக்கு உதவி செய்கிற—தீங்கில்லாத இரும்பாலும் சுண்ணாம்பாலும் செய்யப்படும் சாதுக்களான இயந்திரசாலைகளின் பேரில் குற்றம் சாட்டப்படுவது எவ்வளவு அநீதம்!

இயந்திர விரோதிகளின் தத்துவார்த்த சம்பந்தமான வாதம் இதோடு நிற்கட்டும். நடைமுறையில், அவர்கள்

சொல்வதோ இன்னும் கெட்டதாகும். உலகத்திலுள்ள சிறு கைத்தொழில்களை இயந்திரங்கள் சுலபமாக ஒழித்து விட்டிருக்கின்றன வென்றால் அதற்கு தகுதியான காரணங்கள் இருந்தாகவேண்டும். உண்மையாக அக்காரணங்கள் மிகவும் உன்னதமானவை. இயந்திரங்கள் அதிகமான லாபத்தைக் கொடுப்பதோடு சிறிய கைத் தொழில்களுடன் பொருளாதாரப் போட்டி போடுவதற்கும் சாதகமாக விருக்கின்றன.

முதல் வைத்து வியாபாரம் செய்ய முயலுகிறவர்கள் இயந்திரங்களை விலக்கமுடியாது. தற்காலக் கைத் தொழிலுக்கு எதிராக சிறிய கைத் தொழில்கள் நிற்கமுடியா. இந்தியாவில் ஏகாதிபத்தியத் தொல்லை யொருபுறமிருந்த போதிலும், இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்வது படிப்படியாக வளர்ந்து கொண்டுவருவதை நாம் பார்க்கிறோம். ஏகாதிபத்தியத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கும தடைகள் நீங்கியதும் இயந்திரங்களை உபயோகப்படுத்தும் ஆவல் அதிகரிக்குமென்பதில் தடையில்லை. ஆனால் முதலாளித்துவ ஆதிக்கத்தின் கீழ் இந்தியாவில் அதிகமாக இயந்திரங்களை உபயோகப்படுத்த முடியாது. இவ்வுண்மை சர்க்கரை செய்வதில் ஏற்பட்டிருக்கும் வேகத்தைக் கவனித்தாலே விளங்கும். சர்க்கார், முதலாளிகளின் தயவைப்பெற, வெளிநாட்டுச் சர்க்கரையின் பேரில் வரி விதித்ததினால் இந்திய முதலாளிகளுக்கு ஏராளமாகப் பணம் சம்பாதிக்க ஒரு சந்தர்ப்பமேற்பட்டது. எங்கும் சர்க்கரை செய்யும் ஆலைகள் காளான்களைப்போல் தோன்ற ஆரம்பித்துவிட்டன. கையால் செய்யப்பட்ட நாட்டுச் சர்க்கரையைத்தான் உபயோகப்படுத்த வேண்டுமென எவ்வளவோ பிரசாரம் செய்

திருந்த போதிலும் ஆலைகள் ஏற்படும் வேகத்தை நிறுத்த முடியவில்லை.

இப்படிப்பட்ட பொருளாதாரத்தை யடிப்படையாகக் கொண்ட மனப்பான்மையிருக்கும்போது சிறிய கைத் தொழில்களை எவ்விதம் பரவச் செய்வது? இதற்கு பதில் சொல்லக் கூடியவரென்று யாரை நாம் நினைக்கிறேமோ அவரிடமிருந்தே எவ்வித விளக்கமும் கிடைக்கவில்லை. வாய் கனிய வசீகரமாகப் பேசலாம்!

நான் முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டது போல, சர்வாதிகாரத்தைக் கொண்டாலொழிய தற்காலத்தில் இயந்திரங்களைக்கொண்டு உற்பத்தி செய்வதையோ, இனிமேல் இயந்திரங்களை உபயோகிப்பதையோ தடுத்துவிட முடியாது. தற்கால சமூகத்தில் சிறிய அளவில் உற்பத்தி செய்பவர் சர்வாதிகாரத்தை யடைய முடியாது. ஒருபுறம் முதலாளியும் மற்றொருபுறம் தொழிலாளியும் எவ்வாறு தற்கால சமூகத்தில் முக்கிய ஸ்தானம் அடைந்திருக்கிறார்களோ, அவ்வாறு சரிசமத்துவமான அளவில் உற்பத்தி செய்கிறவன் அடைய முடியாது. இந்திய நிலைமையில் விவசாயிகளுக்குக் கிடைத்திருக்கிற முக்கிய ஸ்தானம்கூட சிறிய அளவில் உற்பத்தி செய்கிற தொழிலாளிக்குக் கிடைக்கவில்லை. சில மனோராஜ்யக்காரர்கள் அவ்விதம் சாதித்துவிடலாமென்று எண்ணினால், இவ்வாறு வேண்டுமென்றே சமூகத்தின் உற்பத்திச் சக்திகளை ஒழிப்பது புத்திசாலித் தனமாவென்று நான் கேட்பேன். மேலும் இவ்வுற்பத்தி சக்திகளை நல்ல விதமாகக் கைக்கொண்டு நடத்தினால் அவர்கள் கனவு கண்டு கொண்டிருக்கும் சகல

வித சன்மார்க்க லோகாயுத நன்மைகளையும் உண்டாக்கலா மல்லவா வென்றும் கேட்பேன்.

முடிவாக நான் சொல்ல விரும்புவதென்ன வென்றால் காந்தீயம் ஒரு மிகவும் நல்லெண்ணங் கொண்ட கொள்கையா யிருக்கலாம். நானும் அது அப்படிப்பட்டதென்று நம்பு கிறேன். ஆனல் எவ்வளவு நல்லெண்ணம் கொண்டதாக விருந்தபோதிலும், அது அபாயகரமானது. நான் இவ் வாறு சொல்வதில் எனக்கு எவ்வித சந்தோஷமும் கிடை யாது. அது உண்மையான பிரச்னைகளை மறைத்து விடுவ தாலும், சமூகத்தின் கெடுதிகளை தெய்வபக்தியைக்கொண்டு விலக்க முயலுவதாலும் அது பயங்கரமானதாக விருக்கிறது. இவ்விதமாக பொதுஜனங்களை ஏமாற்றி பணக்காரர் ஆதிக் கத்தைப் பலப்படுத்துகிறது.

மனுவும், மார்க்ஸும்

டாக்டர் பகவான்தாஸைவிட பூர்வீக இந்திய நிலைமை களை நமக்கு நல்ல மாதிரியில் எடுத்துரைக்கக்கூடிய வேறொரு பண்டிதரில்லை. ஆகையால் நான் அவர் பூர்வீக விஞ்ஞான அபேதவாதத்தைப்பற்றி எழுதியதை மிகவும் ஆவலுடன் படிக்கவேண்டியதாயிற்று. (அவர் எழுதிய "பூர்வீக விஞ் ஞான அபேதவாதமும் தற்கால விஞ்ஞான அபேதவாத மும்" என்ற புத்தகத்தைப் பார்க்க.)

டாக்டருடைய புத்தகத்தில் பெரும் பாகம் மார்க்ஸை பற்றியும், ருஷியாவைப்பற்றியும், பாசிசத்தைப்பற்றியும் குறை கூறுகின்றது. அதற்கெல்லாம் இங்கு பதில் கூறுவது என்னுடைய நோக்கமல்ல. அவருடைய குற்றச்சாட்டு

சற்று பார்த்த நோக்கமுடைய மிதவாத பூர்ஷுவாக்களின் மனப்பான்மையை தழுவியதாகவே இருக்கிறது. அவர் சொல்லி இருக்கிற சில அபிப்பிராயங்களை பொதுவுடைமைக் காரர்களும் இருதய பூர்வமாக ஒப்புக்கொள்ளுவார்கள். ருஷியாவில் தவறுதல்கள் செய்யப்படவில்லை என்றும், ருஷியாவில் நிலைநாட்டப்பட்டிருக்கும் சமூகத்தில் யாதொரு குறைவும் கிடையாதென்றும் எந்த பொதுவுடைமைக்காரனும் சொல்லமாட்டான்.

என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தில், டாக்டர் அவர்கள், மார்க்ஸினுடைய அடிப்படையான கொள்கைகளை (அதாவது சரித்திரத்திற்கு லோகாயத வாதம் பற்றி மார்க்ஸ் கொடுக்கும் வியாக்கியானம், சர்க்கார் பற்றிய கொள்கை, வகுப்பில்லாத சமூகம் என்பவற்றை) தவறாக உணர்ந்திருக்கிறாரென்று சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக லெனினைப் போன்ற விவேகிகள் நூற்றுக் கணக்கில் பிறப்பதில்லை என்று சொல்லுகிறதோடு அதைப்பற்றி டாக்டர் அடியில் கண்டபடி எழுதுகிறார்: "சரித்திர பூர்வமாக லோகாயத முறைப்படி நோக்கும் பொழுது விவேகிகள் ஏன் டஜன் கணக்கில் (அது கூட கிடையாது) பிறக்கிறார்கள்? நூற்றுக் கணக்கில் ஏன் பிறக்கக்கூடாது? இவர்கள் ஏன் 'விசேஷமான நபர்களாய்' இருக்கிறார்கள்?" சரித்திரத்தை லோகாயத முறைப்படி நோக்குவது உண்மையாய் இருந்தால், இமயமலை விந்தியமலையைவிட ஏன் உயரமாய் இருக்கிறதென்று டாக்டர் கேட்டுவிடுவாரோ என்று நான் ஆச்சரியப்படுகிறேன். சரித்திர பூர்வமான லோகாயத தத்துவத்துக்கும் இம்மலைகளின் உயர்வு தாழ்வு வித்தியாசத்துக்கும் எவ்வளவு சம்பந்தமுண்டோ அவ்வளவு வித்தியாசம்

சரித்திர பூர்வமான லோகாயத தத்துவத்துக்கும் மனிசர் களின் இயற்கைத் திறமைகளிலிருக்கிற ஏற்றத் தாழ் வுக்குமுண்டு. இயற்கை சக்திகள் எவ்விதமாய் ஒரு வித்தி யாசத்தை ஏற்படுத்தினவோ அதேவிதமாய்தான் மற்ற வித்தியாசத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன. மனிதர்களுக் குள் விவேகிகள் ஏன் பிறக்கிறார்கள் என்று ஜீவவர்க்க நிர்ணய சாஸ்திரம் சொல்ல வேண்டுமே தவிர, சரித்திரம் சொல்ல முடியாது. சரித்திரத்தை லோகாயத முறையில் ஆராய்ந்தாலும் சரி, மற்ற எந்த முறையைக் கொண்டு ஆராய்ந்தாலும் சரி. இது சரித்திரத்தின் வேலையல்ல. சடப் பொருள்களின் அளவற்ற சேர்க்கைகளால் மாதாய் பழமும், சப்பாத்துக்கள்ளிப் பழமும், ரோஜா புஷ்பமும் குப்பைக்கீரையும் அமைகின்றன. அவ்விதமே அது ஈன்ஸ் டீனைப்போன்ற விவேகிகளையும் ஜானைப்போன்ற மடயனை யும் உண்டாக்குகிறது.

அதே சந்தர்ப்பத்தில் டாக்டர் "தியாகம் லோகா யுதத்தைச் சேர்ந்ததா? பகுத்தறிவைச் சேர்ந்ததா? மறை பொருளானதா? யோகசித்தியுடையதா?" என்று கேட் கிறார். 'லோகாயுத'மென்ற அடைமொழி இத்தகைய தடு மாற்றத்தை யுண்டுபண்ணியது பரிதாபகாமானதாகும். அவ் வார்த்தைக்கு ஒரு சாதாரண அர்த்தமும், பாரமார்த்திக மான பொருளும் இருப்பதுதான் இந்தத் தப்பெண்ணத்துக்கு காரணம். சரித்திர பூர்வமான லோகாயுத சாஸ்திரம் மனித னிடத்திலிருக்கும் உன்னத, ஆன்மீக லக்ஷியமான இயற் கைக் குணங்களை மறுக்கிறதென்றும் இன்னும் மற்றவி மாயும் சொல்லப்படுகிறது. மாலிநோஸ்கி என்பவர் "மானிட வர்க்கம் தனது வயிற்றின் மேல்தான் முன்னேற்றமடை

கிறது" என்று சொல்லி இருக்கிறார். சரித்திர பூர்வமான லோகாயுத சாஸ்திரம் இப்படிப்பட்ட விஷயங்களைச் சொல்ல வில்லை. சுயநலத்தைவிட்டு தியாகம் செய்வதும், மானிட சேவைக்காக துன்பங்களை அனுபவிப்பதும் மனித சுபாவத்தில் இல்லை என்று சொல்லத்தகுந்த அளவு மார்க்ஸைப் பின் பற்றுகிறவர்கள் குருடர்களல்லர். மிகவும் பொதுவான விஷயத்தைக்கூட அவர்கள் பார்க்க முடியாத குருடர்களாக விருக்கிறார்களென்று குறை கூறுவதைக் கேட்க ஆச்சரிய மடைகிறேன். ஆனால் மார்க்ஸின் சிஷ்யர்கள் சொல்வது என்னவென்றால், ஒரு மனிதன் தியாகம் செய்யும்போதும், ஆத்மீக முறையில் நடந்து கொள்ளும்போதும், மறை பொருள் தரும் விதமாய் நடந்து கொள்ளும்போதும், அவன் மற்றவர்களைப் போன்றே கருமமாற்றுகின்றான். அதாவது அவனும் ஜீவவர்க்க சக்திகளாலும், சமூக சக்திகளாலும் நிர்ணயிக்கப்பட்டுத்தான் நடந்துகொள்ளுகிறான். (இவ் விஷயத்தில் நான் என்னுடைய ஆசிரியராகிய டாக்டர் ஆல் பர்ட் வெய்ஸ் என்பவருக்கு நன்றி செலுத்தவேண்டும். அவர் எழுதிய A Theoretic al Basis of Human Behaviour என்ற புத்தகத்தைப் பார்க்கவும்). மார்க்ஸை பின்பற்றுகிறவர்களுடைய அபிப்பிராயத்திலும் இதர நற்கால சாஸ்திரிகளுடைய அபிப்பிராயத்தைப்போல் மனிதனது நடக்கைக்குக் காரணம், ஜீவவர்க்க சக்திகளாகிய, நரம்புகள், தசைக் கட்டுகள், மாமிச கிரந்திகள் முதலியவைகளின் சக்திகளும், சமூக சக்திகளாகிய குடும்பம், கல்வி, சேர்க்கை முதலிய சக்திகளும் ஒன்றேயாகும். நடைமுறை பாஷையில் ஒருவித நடத்தையை ஆத்மீக நடத்தை என்று சொன்னதால் அது இவ்விரண்டு விதமான காரணங்களுக்கும் சுவாதீனமானதாயிருக்க முடியாது. இக்காரணங்கள் விஞ்ஞான

பாஷையில் "லோகாயுத"மே ஆத்மீக நடத்தை என்று சொல்லும்போது நாம் ஒரு குறிக்கப்பட்ட நடத்தையைப் பற்றிப் பேசுகின்றோமே தவிர வேறல்ல. மார்க்ஸை பின் பற்றுகிறவனிடத்தில் ஆத்மீக நடத்தைக்கும் ஒரு லோகாயுத —அதாவது உறுதியான ஜீவவர்க்க—சமூக காரணமுண்டு.

அறிஞரான டாக்டர் சொல்லி இருக்கும் அனேக விஷயங்களை நாம் பரிசோதிக்க முடியவில்லை. ஏனெனில் அப்படிச் செய்தால் நாம் நம்முடைய முக்கிய விஷயத்தைவிட்டு அதிக தூரம் சென்றுவிட நேரிடும். அவருடைய பூர்விக அபேதவாதத்தைப்பற்றி சற்று கவனிப்போம்.

பிரச்னை

டாக்டர் தால் குறிப்பிடும் பிரச்னை ஒரு அபேதவாதியால் முழுவதும் ஒப்புக் கொள்ளக் கூடியதாய் இருப்பதைக்கண்டு திருப்தியடையலாம். "ஒரு புதிய திட்டதை ஏற்படுத்த வேண்டும். பழயதை அல்லது முழுமையும் திருத்திய புதிய சமூகத்தை அமைத்தல் வேண்டும். அத்திட்டத்தைக் கொண்டு கனிப்பட்டவர்களின் வாழ்க்கையையும் மானிட ஐக்கிய வாழ்க்கையையும் நடத்தல்வேண்டும். இத்திட்டம் பொன் யுகத்தை உண்மையில் நிலநாட்டுவதை சாதகமாக்கி உலக சகோதரத்துவத்தை நடத்தையில் கொண்டு வரவேண்டும். தற்காலத்தில் இருக்கிற தொழில்களையும் இயந்திரங்களையும் நகரங்களையும் அப்படியே வைத்துக்கொண்டு சமூகத்தை மாற்ற வேண்டும். ஏனெனில் இவைகளெல்லா வற்றையும் ஒழித்துவிட்டு ஆடுமாடு மேய்க்கத்தகுந்த கிராம விவசாய நிலங்களை மாத்திரம் வைத்துக்கொள்ள முடியாது. தற்பொழுதுள்ள அநேகவிதமான

ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த மிகவும் தனிப்பட்ட முதலாளித்துவத்தை நீக்கி அதற்கு ஊழியர்களாய் இருக்கும் ராணுவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் அழித்து ஒரு சமமான (முடியாத சமத்துவமல்ல, ஒரே மாதிரியுமல்ல) சமூகமாக மாற்றியமைக்க வேண்டும். உலகத்திலுள்ள வேலைகளையும் அதிலுள்ள பொருட்களையும், தேவையான வஸ்துக்களையும் சுகங்களையும், அமோகமான வாழ்க்கைகளையும், இன்பங்களையும் எல்லோரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்." என்று ஸ்ரீ தான் கூறுகிறார்.

இதற்கு வழி

இதை எல்லாம் செய்யக்கூடிய திட்டம என்ன? டாக்டர், "மனு தன்னுடைய சாஸ்வதத் திட்டத்தில் (ஐந்து வருட, பத்து வருட, இருபத்தைந்து வருடத்திட்டங்கள் அல்ல) தனிப்பட்ட வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் சேர்த்து நடாத்த மானிடவர்க்கம் முழுவதிற்கும் ஒரு வழிகாட்டி இருக்கிறார்." ஒருங்குபடுத்தப்பட்ட கல்வி, குடும்ப வாழ்க்கை, பொருளாதாரம், தேச பாதுகாப்பு, சுகாதாரம், நியாயம், மதம்-பொழுதுபோக்கு-கலை முதலியவைகளெல்லாம் அடங்கி இருக்கின்றன. பழைய இந்திய சமூக அமைப்பு எல்லையற்ற போட்டிக்கும் பகைக்கும் நிறைந்த ஒத்துழைப்புக்குமிடையிலும், சுயநலத்துக்கும் பரோபகாரத்துக்குமிடையிலும், தனிப்பட்ட முறைக்கும் அபேதவாதமுறைக்குமிடையிலும், பூர்ண சுதந்திரத்துக்கும் சுதந்திரமின்மைக்குமிடையிலும், தனிப்பட்டவர்களே சகல காரியங்களையும் செய்யவேண்டுமென்ற வாதத்திற்கும் சர்க்காரே சகல விஷயங்களையும் நடத்த வேண்டுமென்ற சொல்லுக்குமிடையிலும், சர்க்காரே வேண்டாமென்று சொல்லுவதை

கும், அதிகமாக சர்க்கார் சக்தி வேண்டுமென்று சொல்லுவ தற்குமிடையிலும் ஒரு நியாயமான மத்தியபாதையைக் காண்பிக்கிறது. ஒவ்வொரு நபரும் தன்னுடைய வாழ்க்கை யின் ஒவ்வொரு நிலைமையிலும் இன்ன உரிமைகளைப் பெற்று இன்ன கடமைகளைச் செய்ய வேண்டுமென்று விதித்திருப் பதன் மூலமே மேற்சொன்ன மத்திய பாதையைக் காண்பிக் கிறது. ஆரம்பத்தில் ஆச்ரம தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். பின் ஒரு முதிர்ந்த சமூக அங்கத்தினர் என்ற முறையில் சமூக தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். அப் பால் சமூக வாழ்க்கை நடாத்தும் நிலைமையில் குடும்ப தர் மத்தைக் (வர்ண தர்மம்) கைக்கொள்ள வேண்டும். உரிமை களும் கடமைகளும், வேலையும், தகுந்த பிரதிப் பிரயோஜன மும் உண்மையான நியாயத்தை யுண்டாக்கும்வாறு விதிக்கப் பட்டிருக்கின்றன. (சமத்துவம்கூட உண்டாகலாம். பொது உடைமைக்காரர் விரும்பும் பொருளாதார சமத்துவமல்ல; ஆத்மீக சமத்துவமாகும். (PP. 31-32) எந்த பொது உடைமைக்காரரும் தான் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்திவிடுவேனென்று சொல்லவில்லை. தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் பொதுஉடைமைக்காரரின் லக்ஷியம். அதாவது "ஒவ்வொருவரிடத்திலிருந்தும் அவரவருடைய திறமைக்குத் தக்கபடி வேலை வாங்கி, தேவைக்குத் தக்கபடி அளிப்பது."

மேலும் டாக்டர் தன்னுடைய திட்டத்தை அடியில் கண்டபடி விளக்குகிறார். "பூர்வீக இந்திய முறைப்பிரகாரம் ஒவ்வொரு சர்க்காரிலும் நான்கு முக்கிய 'கூட்டங்கள்' 'சங் கங்கள்' 'சபைகள்' 'கார்பொரேஷன்கள்' 'அமைப்புகள்' 'தொழிலாளர் சங்கங்கள்' இருக்கும்—(1) கல்வியாளர்களின்

சங்கம், (2) அரசியல் உத்தியோகஸ்தர்களின் சங்கம், (3) செல்வத்தை யுற்பத்தி செய்து அதை நிர்வகிப்போர்களின் சங்கம், (4) உழைப்போர்களின் சங்கம், இந் நான்கு சங்கங்களையும் சேர்ந்து உழைக்கும்படி செய்வதற்கும், பூரா சமூகத்தையும் ஒன்றாகச் சேர்த்து (இந்நான்கு சங்கத்திலும் உழைக்கும் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட) ஒரு சட்ட சபையின் அதிகாரத்துக்குள் வைப்பதற்கும் வேண்டிய சட்டங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட பிரதிநிதிகள் விசேஷித்த சன்மார்க்க குணங்களையும் படிப்பையுமுடையவர்களாய் இருக்கவேண்டும். மேலும் அரசியல் தலைவன் சட்டசபைக்கு கீழ்ப்பட்டவனாய் இருப்பான். இவ்வொத்துழைப்பின் காரணமாய் முதல் சங்கத்தார் தங்களுடைய புத்தியையும் ஞானத்தையும் கொண்டு சட்டங்களைச் செய்வதோடு இரண்டாவது சங்கத்தாரின் பாதுகாக்கும் வீரத்தையும், சட்டங்களை நடத்திவைக்கும் சக்தியையும் வழிகாட்டுவார்கள். இதைக்கொண்டு மூன்றாவது சங்கத்தார் ஜனங்களின் அவசியங்களைப் பூர்த்தி செய்வதற்காக க்ஷேமமாய் இருப்பதோடு நான்காவது சங்கத்தார் சுகத்தில் வாழ்ந்து எல்லோருக்கும் உதவி புரிவார்கள்."

இதுதான் டாக்டர் தாஸுடைய பூர்வீக அபேதவாதத்தின் சாராம்சம் * அவர் மிகவும் ஒழுங்கானதும்,

---

* டாக்டர் தன்னுடைய திட்டத்தின் பொருளாதார, அரசியல் விஷயங்களைப்பற்றி அனேக விவரங்கள் கொடுத்திருக்கிறார். உதாரணமாக செல்வத்தை வினியோகிப்பதற்காக அவர் அடியில் கண்ட விதத்தை தெரியப்படுத்துகிறார். ஐக்கியமாகாணங்களைப் போன்ற இடங்களில் சாமர்த்திய மற்றவர்களுக்கு குறைந்த பக்ஷம் மாதம் ஒன்றுக்கு ரூ. 10-ம், சமர்த்தர்களுக்கு கூடியபக்ஷம் அதைவிட

சமமானதும், பகுத்தறிவுக்கடுத்ததும், சந்தோஷகரமானதுமான ஒரு சமூகத்தைச் சித்திரித்துள்ளார். அவருடைய திட்டம் மிகவும் இலேசானது. மனு பிரிப்பதுபோல் அவரும் சமூகத்தை நான்கு பிரிவுகளாக தொழில்பற்றிப் பிரித்திருக்கிறார்—அதாவது கல்விகற்றவர்கள், உத்தியோகஸ்தர்கள், செல்வத்தை யுற்பத்திசெய்து அதை நிர்வகிப்பவர்

பத்து மடங்கும், படித்தவர்களுக்கு இருபத்தைந்து மடங்கும், அதிகாரிகளுக்கு நூறு மடங்கும் செல்வத்தை யுற்பத்தி செய்பவர்களுக்கு ஐநூறு முதல் ஆயிரம் மடங்குவரையிலும் சம்பளமாகக் கொடுக்க வேண்டுமென்ற அளவு ஏற்படுத்தி இருக்கிறார். மேலும் அவர் ஒரு மிகவும் சுருக்கமான வரி விதித்தலையும் வெளியிட்டிருக்கிறார். அது வேலைகளுக்குத் தகுந்தபடி வித்தியாசப் பட்டதாய் இருக்கிறது. மேலும் வட்டியும் லாபமும் சமூக ஆதிக்கத்துக்குள் இருக்கவேண்டுமென்றும் கூறுகிறார். "பூர்வீக அபேதவாதத்தின் பிரகாரம் வட்டி லாபம் முதலியவைகளின் கீழ் மேல் எல்லைகளும் முதலுக்குத் தக்கபடி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்கிறார். சில 'அவசியமான' வஸ்துக்களின் வர்த்தகத்தை தாங்கள் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்து மேல்பார்ப்பதின் மூலம், விலைகளை நிர்ணயித்து வஸ்துக்களை 'மறைத்து வைத்து' ஜனங்களைத் திண்டாடும்படி செய்து அதன் மூலம் பெரும் லாபம் சம்பாதிப்பதைத் தடுக்கவேண்டுமென்கிறார்.

அரசியல் துறையில் அநேக சட்டசபைகள் இருக்கவேண்டுமென்றும் அது கிராம பஞ்சாயத்திலிருந்து ஆரம்பித்து அகில இந்திய சட்டசபை வரையில் போகவேண்டுமென்றும் சொல்லுகிறார். ஆதிசபைத் நேராக தேர்ந்தெடுக்கப் படவேண்டுமென்றும் மற்ற சபைகள் சோவியத் ருஷியாவில் செய்வதுபோல் மறைமுகமாக தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார். இச்சபைகளில் அங்கத்தினர்களாவதற்கு அனேக யோக்கியதாம்சங்களை விசேஷமாக அகில இந்திய சட்டசபைக்கு டாக்டர் விதித்திருக்கிறார்.

கள், உழைப்பவர்கள் என்பன. இவ்வகுப்பார்களின் கடமை, பொறுப்பு, உரிமை, வழக்கங்கள் முதலியவைகள் சரியானபடி விதிக்கப்படவேண்டும். கல்விகற்றவர்கள்தான் சட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

இந்த திட்டத்தைப் பற்றி இரண்டு விஷயங்கள் மனதில் படுகின்றன. முதலாவதாக இப்பிரிவினை தன்னிஷ்டமானதும் தற்காலத்துக்கு ஏற்காததுமல்லவா? படித்தவர்களுக்கும் உத்தியோகஸ்தருக்குமிடையில் பேதம் காண்பது எப்படி? அது சுலபமா? மேலான உத்தியோகங்களை தற்கால சமூகத்தில் கல்வி கற்றவர்களே தாங்கியிருக்கிறார்கள். மற்றப்படி சிறிய உத்தியோகஸ்தர்களை உழைப்பாளிகளிடமே சேர்க்கவேண்டும். செல்வத்தை யுற்பத்தி செய்யும் வகுப்பார் ஒழிந்து அவர்களுடைய வேலைகள் எல்லாம் உத்தியோகஸ்தர்களாலும் உழைப்பாளர்களாலும் செய்யப்படலாம். உண்மை என்னவென்றால் வியாபாரிகளையும், தொழிற்சாலை முதலாளிகளையும், லேவாதேவிக்காரர்களையும் செல்வத்தை யுற்பத்தி செய்யும் வகுப்பாரென்று சொல்லுவது தவறு. நான் மேலே கூறியவாறு உண்மையில் செல்வம் உழைப்போர்களால்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. செல்வத்தை யுற்பத்திசெய்து அதை நிர்வகிக்கும் வகுப்பார் என்று சொல்லப்படுவோர் உண்மையில் யாதொரு செல்வத்தையும் "உற்பத்தி செய்ய"வில்லை. மேலும் அவ்வகுப்பார் தமக்கு கூடியவரையில் அதிக லாபம் கிடைக்குமாறு தான் செல்வத்தை நிர்வகித்து வருகிறார்கள். அறிவுள்ள ஒரு சமூகத்தில் இந்த செல்வத்தை யுற்பத்தி செய்யும் வகுப்பார் உத்தியோகஸ்தர்களாகவும் அரசியலை நடத்துகிறவர்களாகவும் மாறிவிடுவார்கள்.

டாக்டருடைய பிரிவினை பரிபூரணமானதல்ல. எல்லா சமூகமும், விசேஷமாக தற்போதைய சிக்கலான சமூகங்களும் பலவித தெளிவான வேலைகளைச் செய்யும் வகுப்புகளாகப் பிரிக்கப்படவேண்டும். டாக்டருடைய திட்டத்தின் இரண்டாவது குறை என்னவென்றால், அவரால், ஒரு சமூகத்தை நான்கு பிரிவுகளாக பிரித்துவிடுவதனால் மாத்திரம் எவ்வாறு தற்கால சமூகத்தின் முக்கிய பிரச்னையாகிய சுரண்டுதலும், பொருளாதார உயர்வு தாழ்வும் நீங்கிவிடுமென்று விளக்கப்படவில்லை. அவருடைய 'பூர்வீக அபேதவாதம்' இப்பிரச்சனைகளிலிருந்துதான் ஆரம்பிக்கிறது. ஆயினும் அவர் இப்பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பதென்பதை காண்பிக்கவில்லை.

மேலும் எச்சமூகமும் விசித்திரமாய் சமூக ஆராய்ச்சிகாரர்களின் தத்துவார்த்தப் பிரகாரம் பிரிக்கப் படவில்லை என்று தெரிந்துக் கொள்ள வேண்டும். சமூக பிரிவுகள் சமூகத்தின் வளர்ச்சியில் ஏற்பட்டவைகளே. மனிதர்கள் எம்முறையில் தங்களுடைய வயிற்றுப் பிழைப்பை நடத்துகிறார்களோ அம்முறைமைதான் சமூகப் பிரிவுக்கு முதல் காரணம். நாகரிக வளர்ச்சியின் ஸ்திதியில், அந்நாகரிகத்தைப் பயன்படுத்துவதற்காக, இயற்கையிலேயே ஏற்பட்டிருக்கும் சமூகப் பிரிவுகள் பகுத்தறிவுக்கு ஒத்தபடி ஒழுங்குப்படுத்தப்படலாம். மனுவும், அவரைப் பின்பற்றிய மற்றப் பெரியார்களும் இப்படிப்பட்ட முயற்சியைச் செய்தவர்களாவார்கள்.

தற்கால சமூகத்தின் பிரச்சினைகளுக்கு விளக்கமாக, சமூகத்தை சில பிரிவுகளாகப் பிரிக்கக்கூடிய ஒரு திட்டத்தை டாக்டர் பகவன்தாஸ் நமக்கு முன் வைத்திருப்

பது குதிரைக்கு முன் வண்டியைப் பூட்டியது போலிருக்கிறது. தற்காலத்தில் சமூகம் பிரிக்கப்பட்டிருப்பதை அவர் குறைகூறத் தவறுவதில்லை. ஆனால் அதற்குப் பதிலாக மற்றொருவிதமாய் சமூகத்தை பிரிக்கவேண்டுமென்று சொல்லும்போது அவர் சமூகம் இவ்வாறுதான் பிரிக்கப்பட முடியுமென்று நினைத்துவிட்டார். அவர் ஒரு புதிய பிரிவினையை ஆதரிப்பதற்கு முன் தற்கால சமூகம் ஏன் இப்படி பிரிக்கப்பட்டிருக்கிறதென்று நினைத்திருக்க வேண்டும். இந்தியாவிலோ, வெளிநாட்டிலோ இருக்கிற சமூகப்பிரிவினைகள் யாராலாவது இப்படித்தான் இருக்கவேண்டுமென்று எண்ணிப் பிரிக்கப்படவில்லை. இப்பிரிவுகள் இயற்கையாகவே வளர்ந்திருக்கின்றன. நாம் வேறுவிதமான பிரிவுகளை ஏற்படுத்த வேண்டுமானால் அதற்குத் தகுதியான சமூகத்தை முதலில் தயார் செய்யவேண்டும்.

இவ்விஷயத்தில் அபேதவாதியின் முறை மிகவும் மேலானதே. வயிற்றுப் பிழைப்புச் சாதனங்களும், உற்பத்திச் சாதனங்களும் தனிப்பட்டவர்களின் கையில் இருக்கும் வரையில் சுரண்டுதல் இருந்தே தீருமென்றும், தற்கால சமூகத்திலுள்ள நியாயமற்ற சமூகப் பிரிவுகளாகிய எஜமான், அடிமை, பணக்காரன், ஏழை, சக்தியுள்ளவன், சக்தியற்றவன் என்போர் இருந்தே தீருமென்றும் அவன் (அபேதவாதி) சொல்லுகிறான். சமூகத்தை நாம் தொடாமல் விட்டுவிட்டால், மேற்கண்ட அநியாயமான பிரிவுகள் இருந்தே தீரும். சமூக அமைப்பின் அடிப்படையை ஒழுங்குபடுத்தினால் மற்றவைகள் (சமூகப் பிரிவுகள் உள்பட எல்லாம்) தானே மறைந்து போய்விடும்.

டாக்டர் இக்கொள்கையை ஒப்புக்கொள்ள மாட்டாரென்று நான் நினைக்கின்றேன். சமூகத்தின் மேல், ஒரு சமூக அமைப்புத் திட்டத்தை வெளியிலிருந்து காட்டலாமென்றும், அப்படிப்பட்ட திட்டம் கால அளவில் சமூக அஸ்திவாரத்தைக்கூட மாற்றிவிடுமென்றும் சொல்லலாம். அவர் அப்படி செய்தால் வேரிலிருந்து கொப்புகளுக்குப் போவதற்குப் பதிலாக கொப்புகளிலிருந்து வேருக்கு தலைகீழாக வருவதையே யொக்கும்.

தத்துவார்த்தமாக, அப்படிச் செய்வது சாத்தியமாய்த் தோன்றலாம். ஆனால் அநுஷ்டான முறையில் சித்தியாகுமென்று நான் நினைக்கவில்லை.

சமூகத்தை தொழில் பிரகாரம் பிரிப்பதோடு மட்டிலும் டாக்டரவர்கள் நின்று விடவில்லை. ஒவ்வொரு வகுப்பின் கடமைகள் பொறுப்புகள் முதலியவைகளையும் விவரித்திருக்கிறார். இது சமூக பிரச்னையை விளக்கி விடுகிறதென்று எண்ணப்படலாம். கடமைகளை விவரிப்பது மிகவும் இலகுவான வேலையே. கடினமான வேலை என்னவென்றால் முதன் முதலில் ஜனங்களை அந்தந்த பிரிவுகளில் அமைப்பதாகும். இரண்டாவதாக அவரவர்களை அவரவர்களுடைய கடமைகளைச் செய்யும்படி தூண்டுவதாகும். இதுதான் கஷ்டம். டாக்டருடைய கப்பல் இம்மலையில்தான் மோதி நொறுங்கிப் போகுமென்று பயப்படுகிறேன்.

இப்பிரச்னையை நாம் சற்று நுட்பமாய் ஆராய்வோம். ஒரு புறம் நம்முடைய சமூகம் சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள், பணக்காரர்கள், ஏழைகள், பலமுள்ளவர்கள், பலஹீனர்கள், எஜமானர்கள், வேலைக்காரர்கள் என்று

வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. எஜமானர்களுடைய வகுப்பு மிகவும் சிறியதாய் இருக்கிறது. உழைப்பவர்கள் கோடிக்கணக்கிலிருக்கிறார்கள். மேலும் இந்த பொல்லாத சமூகம் பலாத்காரத்தாலும் பயமுறுத்தலாலும் காப்பற்றப்பட்டு வருகிறதென்று நாம் காண்கிறோம். சர்க்கார் தன்னுடைய முழு அதிகாரத்தைக் கொண்டும், சட்டம், போலீஸ், ராணுவம் முதலிய பலத்தைக் கொண்டும் இந்த அநியாயத்தைக் காப்பாற்றி வளர்க்கிறது.

மற்றொருபுறம் டாக்டர் பகவான்தாஸ் இச்சமூகம் முழுவதையும் கடந்து செல்வம், சக்தி, பொறுப்பு, கடமைகள், வேலைகள் முதலியவைகளை மறுபடியும் பங்கிட்டு கொடுக்க ஒரு திட்டம் வைத்திருக்கிறார். எப்படி நிறைவேற்றப் போகிறாரோ தெரியவில்லை. நம் பெற்ற வகுப்புக்கு பிடித்தமில்லாத ஒரு திட்டத்தை நிறைவேற்ற இரண்டே வழிகள்தானுண்டு. முதலில் அத்திட்டதை சமூகத்தின்மேல் சுமத்த போதுமான பலமுள்ளவர்களைத் தேடவேண்டும்; இல்லாவிடில் ஆதிக்கம் பெற்ற வகுப்பாரிடம் அதை ஏற்றுக்கொள்ளும்படி தூண்டவேண்டும். இவ்விரண்டு முறைகளில் ஒன்றையேனும் கைப்பற்றினாலொழிய மனுவைப் போன்ற ஒரு பெயரைக் கொண்டு எந்த திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது.

அபேதவாதி தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் போதுமான பலமும் மனப்பான்மையுமுள்ளவர்களை சுரண்டப்படுபவர்களிலிருந்து விசேஷமாக, தொழிலாளிகளிலிருந்து திரட்டலாமென்று நம்புகிறான். வேறு விதமாகக் கூறவேண்டுமானால் அவன் சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் வகுப்புப் போரின் சக்திகளை நம்புகிறான். மேலும் அவன்

ஒடுக்கப்பட்டவர்களையும் சுரண்டப்பட்டவர்களையும் ஒரு அமைப்பாக அமைத்து தற்கால சமூகத்தின் அஸ்திவாரத்தைத் தகர்த்து, புதிதாக வொன்றைப் போட்டு, அதன் மேல் ஒரு புதிய சமூகத்தைக் கட்ட முயலுகிறான்.

மஹாத்மா காந்தியைப்போலவே டாக்டர் பகவன் தாஸும் போதனாமுறையை முழுவதும் நம்பியவரே. அவர் இதற்காக ஒரு விவரமான திட்டத்தையும் தயார் செய்து அதை கௌரவமடைந்த மனுவின் பெயருடன் பிணைத்துவிட்டார். அவர் எழுதுவதாவது: "எனக்குப் புலப்படும் ஒரே வழி என்னவென்றால், ஒரு சாஸ்வத வகுப்பை உற்பத்திசெய்ய வேண்டும். அவ்வகுப்பிலிருந்து முதலாவதாக நற்சிந்தனையுடைய புத்திசாலிகளான சட்ட நிர்மாணகர்களையும், இரண்டாவதாக நம்பத்தக்க ஆட்சி வல்லாளர்களையும் பெறவேண்டும். இவர்களுக்கு பொது ஜனங்களிடம் போதுமான கௌரவமும் செல்வாக்கும் ஏற்படுவது மூலம் இவர்கள் உத்தியோகத்திலிருக்கிறவர்களின் தவறுகளை பூரணமாய் தடுக்கக்கூடியவர்களாய் இருக்கவேண்டும்............" மனு தன்னுடைய சமூக அமைப்புத் திட்டத்தை கண்டுபிடித்து, அதன் கட்டிடம் முழுவதையும் பிராமண வகுப்பை அஸ்திவாரமாய்க் கொண்டே கட்டினார். மேலும் அவர் எழுதுகிறார்:—" ஆச்ரம முறையை சரியானபடி புதுப்பித்தால், ஜனங்கள் எல்லோரும் அவர்களுடைய ஐம்பதாவது வருஷத்தை முடித்தவுடன், குடும்ப வாழ்க்கையை விட்டும், வயிற்றுப் பாட்டுக்காக பாடும் பாட்டியிலிருந்தும் விலகிக்கொண்டால் ஒவ்வொரு தேசத்திலும் மூன்றாவது நிலையாகிய வானப்பிரஸ்தாஸ்ரமத்தில் போதுமான ரிஷிகள் இருப்பார்கள். இவர்கள் பூரண நம்

பிக்கைக்கும் கவுரவத்துக்கும் லாயக்கானவர்களாகவும், நல்ல சட்டங்களைச் செய்யக்கூடியவர்களாகவும் உத்தியோகஸ்தர்களை தங்களுடைய ஆத்மீக சக்தியைக் கொண்டும் செல்வாக்கைக் கொண்டும் அடக்கி வழிகாட்டக்கூடியவர்களாகவுமிருப்பார்கள். மேலும் உலகத்திலுள்ள ஆண் பெண்களில் பகுத்தறிவு, விஞ்ஞானம், கல்வி முதலிய அறிவுத் தெய்வங்களை வணங்கக் கூடியவர்களும், மிகவும் உன்னதமான தொழில்களாகிய உபாத்தியாயர் தொழில், நன் நடத்தையைப் போதிக்கும் தொழில், சிறுவர்களின் சரீரங்களைப் பரிபாலிக்கும் தொழில் முதலிய தொழில்களை செய்யக் கூடியவர்களும், தங்களுடைய வேலைகளோடும், ஞானத்தோடும், கல்வியோடும் யோகத்தையும் தவத்தையும், பொதுஜன ஊழிய மனப்பான்மையையும், பரோபகார சிந்தனையையும், பரிசுத்தத்தையும், சந்நியாசத்தையும், அதோடு சேர்ந்த மானஸ சக்தியையும், சன்மார்க்க சக்தியையும், எல்லாவற்றையும் அடக்கக் கூடிய ஆத்மீக சக்தியையும் சேர்க்கவேண்டும். அவர்கள் அப்படி செய்த உடனே உலகத்தின்கண் இருக்கும் கெடுதிகளெல்லாம் ஓரே நாளில் நீங்கிவிடும். ஆசை, கர்வம், இச்சை, துன்மார்க்கம் முதலிய எல்லா பிசாசுகளும் உச்சாடனம் பண்ணப்பட்டு அதிகாரிகளின் மனதை விட்டு பயந்து அலறிக்கொண்டு ஓடிவிட, அவர்கள் சமூகத்தின் உண்மையான சேவகர்களாய் விடுவார்கள்................"

படித்தறிந்த டாக்டரவர்கள் காண்பிக்கும் ஞானக் காட்சி மிகவும் விநோதமாயிருக்கிறது. ஆனால் பார்க்கிறவர்கள் இது முழுவதும் உண்மையில்லாத காட்சி யென்று நினைக்கக்கூடியதாய் இருக்கவில்லையா? உத்தியோக ஆசைகொண்ட இளைஞர்களைத் தயார் செய்யுமிவ்வுலகில்—

சமூகம், சுயநலத்துக்காகவும், வெறுப்பு கலந்துக்காகவும் ஆளப்படுமிவ்வுலகில்—வயோதிகர்கள் தத்தம் வயதை அதிகப்படுத்துவதற்காக குரங்குக் காளேகளை யுபயோகிக்கும் இவ்வுலகத்தில்—டாக்டரவர்கள் காண்பிக்கும் காட்சி மிகவும் அபூர்வமாய்த் தோற்றுதோ? மேற்கொண்டும் டாக்டர் தான் தம்முடைய திட்டத்தை விவரிக்கிறார். அவர் வர்ணித்த பூமான்களை தயார் செய்வதற்கு ஒரு யோகாப்பியாசசாலை ஏற்படுத்த வேண்டுமென்று கூறுகிறார். "ஒரு உண்மையான யோகாப்பியாசசாலை தேவை" என்ற தலையங்கத்தில் அவர் எழுதுவதாவது:—

"பிரம்மஞான சங்கத்திலும், கீழ்நாட்டு தியசாபிகல் சங்கத்திலும் தகுந்த சன்மார்க்கம், கல்வி, ஆத்மீக ஞானம் பெற்றிருக்கும் யோகிகளைக் (அவர்களுடைய நிபந்தனைகளுக்கெல்லாம் உட்பட்டு) கூப்பிட்டு வைத்து, மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கும்படி செய்ய வேண்டும். ஞானம் அடைந்து கஷ்டங்களை அனுபவிக்க வருபவர்களுக்கு சன்மார்க்கம், அறிவு, தேக நிபந்தனைகளும் பரீக்ஷைகளும் ஏற்படுத்தவேண்டும். குடும்ப சம்பந்தமில்லாமையும் பந்துக்களில்லாமையும் ஒரு நிபந்தனையாய் இருக்கவேண்டும். ஆராய்ச்சிகளிலும் பரிசிலனையிலும் விஞ்ஞான முறைகளைக் கைக்கொள்ளவேண்டும். நிரூபிக்காமல் நம்பும்படி சொல்லக்கூடாது. இப்படிப்பட்ட ஒரு யோக அப்பியாச சாலை, சரியான மாணவர்களை யுற்பத்தி செய்து, அவர்களை நல்ல இருதயத்தோடும் ஆத்மாவோடும் வேலை செய்யத் தூண்டிவந்தால், (அவர் ஆத்மீக சக்திகளை

ளர்க்காமல் இருந்தபோதிலும்)............. அவர்களுடைய சன்மார்க்க, ஆத்மீக, செல்வாக்கைக் கொண்டும், அவர்கள் மானிட சமூகத்தின் நலத்துக்காக உழைக்கும் உழைப்பிலிருந்தும், உலகம் நேரான வழியில் வந்து தேக, ஆத்மீக ஆனந்தத்தையும் செழிப்பையும் முற்போக்கையும் அடையும்."

டாக்டர் தால் வகுப்புப் போருக்குப் பதிலாக ஒரு "யோக அப்பியாச சாலை" வேண்டுமென்று சொல்லுகிறார். H. G. வெல்ஸ் ஸ்டாலினிடத்தில் P. E. N. கிளப்பை வகுப்பு போருக்குப் பதிலாக வைத்துக் கொள்ளலாமென்று சொன்னார். உலகத்திலுள்ள இரண்டு தூரமான பாகங்களிலுள்ள இருவர்கள் இவ்விரண்டு விதமாக எண்ணி இருக்கிறார்கள். அப்படி இருந்தபோதிலும் அவர்கள் ஒரே விதமான சமூக சக்திகளால் நடாத்தப்பட்டிருக்கிறார்கள். அச்சக்திதான் தங்களுடைய சமூக, பொருளாதார நிலைமைக்கு அபாயமில்லாமல் சமூகத்தை சீர்திருத்தவேண்டுமென்ற மத்திய வகுப்பார்கள் கொள்ளும் விருப்பம்.

யோக அப்பியாசசாலை சம்பந்தப்பட்ட வரையில், என்னுடைய அபிப்பிராயத்தில், அது ஒரு தப்பான அடிப்படையைக் கொண்டிருக்கிறது. "பிரம்ம தூதர்கள்" இல்லாததுதான் தற்கால உலகத்திலிருக்கிற பயங்கரமான கெடுதிகளுக்குக் காரணமென்று டாக்டர் தால் நினைக்கின்றார். அதாவது அத்தகைய மனிதர்களை போதுமான அளவில் எப்படியாவது உற்பத்தி செய்துவிட்டால் ஒரே தினத்தில் உலகத்திலுள்ள எல்லா கெடுதல்களும் நீங்கிவிடும் என்று நம்புகிறார். இவ்விதமாய் நினைப்பது குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டுவதுபோல் இருக்கிறது. உலகத்தில் பிரம்ம

தூதர்கள் இல்லாததால் முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் இருக்கின்றனவென்று சொல்லுவதைவிட முதலாளித்வமும் ஏகாதிபத்தியமும் இருப்பதால் "பிரம்ம தூதர்கள்" இல்லை என்று சொல்லுவது உண்மை மிகுந்திருக்கும். தற்கால முதலாளித்துவ சமூகம் ஒரு அளவை ஏற்படுத்தி அதற்குத் தகுதியான மனிதர்களை யுற்பத்தி செய்கிறது. இச்சமூகத்தின் வீரர்கள் போர்டு, மாண்டு, லிண்ட்பர்க், ஹான்சன், ஹோர், ஹிட்லர், ஈன்ஸ்டீன் முதலியவர்களைப் போன்றவர்களே தவிர, "பிரம்ம தூதர்கள்" அல்லர். முதலாளித்துவம் இருக்கும் வரையில் "பிரம்ம தூதர்கள்" உண்டாக மாட்டார்கள்.

"அபேதவாத தூதர்களின்" விஷயம் வேறுபட்டது. முதலாளித்துவமே அவர்களை உற்பத்தி செய்கிறது. முதலாளித்துவ சமூகத்தில் ஏற்படும் வகுப்புப் போரில்தான் அபேதவாதம் வேர் பிடித்து வளருகிறது. தற்கால சமூகத்தைப் பார்வையிட்டால் இதற்கு போதுமான ருஜுகள் கிடைக்கும். அபேதவாதிகள்தான்—நான் அபேதவாதி என்று சொல்லும்போது, பொதுவுடைமைக்காரர்களை விலக்கவில்லை—தற்சமயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சமூகத்தை எதிர்க்கும் உலகத்தில் மிகவும் பெரிய கட்சியார். சமூக திட்டங்களைப் போடக்கூடிய பிரம்ம தூதர்கள் எத்தனை பேர்களிருப்பார்கள் என்று நான் மதிக்க முடியாது. இந்தியாவில் அபேதவாதிகளின் தொகுதி மிகவும் சிறியதாய் இருக்கிறதென்பது உண்மை. அபேதவாதத்தை உற்பத்தி செய்யும் சக்திகளும் இந்தியாவுக்குப் புதியவைகளே. இந்தியாவிலும் கூட, சமூகத்தை இன்ன விதமாய் மாற்றியமைக்க வேண்டுமென்று தெளிவாய்

என்னுகிற வகுப்புகளில் அபேதவாதிகள் தான் மிகவும் பெரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

பிரம்மஞான ஸ்தாபனங்களும் இன்னும் மற்ற யோக அப்பியாச சாலைகளும் போதுமான பிரம்ம ஞாதர்களை உற்பத்தி செய்கின்றனவென்றே வைத்துக் கொள்ளுவோம். அப்பொழுதும் அவர்கள் தங்களுடைய காரியத்தில் சித்தி பெறுவார்கள் என்பது என்ன நிச்சயம்? அவர்களால் சமூகத்தை மறுபடியும் வகுத்து செல்வத்தையும் அதிகாரத்தையும், உத்தியோகங்களையும் பங்கிட்டுக் கொடுக்க முடியுமா?

இத்திட்டத்தை ஆர அமரப் பதறாமல் போட்டிருப்பதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட வேண்டும். நம்முடைய உலகம் உடைந்து, சிதறி, வெறிபிடித்து இணறிக்கொண்டு கீழ் நோக்கிச் செல்கிறது. கோடிக்கணக்கானவர்கள் பசியாலும், வேலையில்லாமையாலும் நைந்து வாடுகிறார்கள். அநியாயமான முதலாளித்வமும் ஏகாதிபத்தியமும் அமுக்கவும், சுரண்டவும் புதிய யுத்த கருவிகளை தயாரிக்கவும் செய்கின்றன. குடி ஏற்ற நாடுகள் நசுக்கப்படுகின்றன; கோடிக்கணக்கான உயிர்களைக் கொண்டு அதிகாரிகள் சூதாடுகிறார்கள். இக்கைய சந்தர்ப்பத்தில் இந்த வேதாந்தி—டாக்டர் தாஸ்—ஒரு யோகாப்பியாச சாலையைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்! என்ன ஆச்சரியம்!

பாசிசம்

தற்கால உலகத்தில் வேலைசெய்யும் சக்திகளைப்பற்றி கொஞ்சமாவது தெரிந்துக் கொண்டவர்கள் அபேதவாதத்

துக்குப் பதிலாக பாசிசத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பாசிசம் அபேதவாதத்துக்கு நேர் விரோதமானது. அது தான் அபேதவாதத்தின் பெரிய சத்ரு.

முதலாளித்வம் க்ஷீணதிசையை யடைந்த காலத்தில் வளர்ந்த செடிக்கு பாசிசம் என்று பெயர். இக்காலத்தில் முதலாளித்வம் எந்த முறையைக் கொண்டாவது தன்னை காப்பாற்றிக்கொள்ள முயலுகிறது. முதலாளித்வத்தால் ஏற்படுத்தப்பட்ட குழப்பமான சட்டங்களின் பலனும், தொழிலாளர் வகுப்பின் சக்தியால் ஏற்பட்ட அரசியல் அபாயமும், ஜனநாயகத்தை ஒழித்துவிடும்படி செய்கின்றன. இதுவரையில் ஜனநாயகம் முதலாளித்துவத்துக்கு மிகவும் சாதகமான கருவியாய் இருந்து வந்தது. ஆனால் இப்பொழுது அது (ஜனநாயகம்) நல்ல பலனைக் கொடுக்கத் தொடங்கியிருக்கிறது; எனவே ஆளும் வகுப்பார்களுக்கு பாசிசம், (அது எவ்வளவு உறுதியற்றதும் பிரயோஜனமில்லாததுமாய் இருந்தபோதிலும்) அபேதவாதத்துக்குப் பதில் நல்ல வழியெனத் தோன்றலாம். ஆயினும் காங்கிரஸ் தொண்டர்களைப் போன்று பாடுபட்டுழைத்து தங்கட்காக ஒரு சுயராஜ்யத்தை நிறுவிக்கொள்ள வழிதேடுவோர்க்கு பாசிசம் மிகவும் பெரிய சத்துருவாகும். பாசிசம் பொதுஜன நலத்துக்கு விரோதமாய் இருப்பது வெட்ட வெளிச்சமாகையால் நான் அதைப்பற்றி இங்கு எழுதவேண்டியதில்லை. ஆனால் சில பிரபல காங்கிரஸ் வாதிகள் பாசிசத்தை ஆதரித்துப் பேசி இருப்பதாலும், பாசிசத்தையும் அபேதவாதத்தையும் ஒன்றாய்ச் சேர்த்துவிடலாமென்று அபிப்பிராயப்பட்டிருப்பதாலும் நான் இங்கு சற்று எழுதவேண்டியதாயிற்று. பாசிசத்துக்கும் அபேதவாதத்துக்கு மிடை

யில் ஒற்றுமையிருக்கிறதென்று சொல்லுவது மூடத்தனம் மட்டுமல்லாமல் அபாயகரமாகவும் இருக்கும். "சர்வாதி காரத்வத்தை போன்ற சில வெளி "ஒற்றுமை"களைக் கண்டு பாஸிசத்துக்கும் அபேதவாதத்துக்கு மிடையில் ஒற்றுமையிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இந்த "ஒற்றுமைகள்" மிகவும் ஏமாற்றத்தைத் தருவனவாகும். பாஸிச வேஷத்தில் தொழிற்சாலை முதலாளிகளும் லேவாதேவிக்காரர்களும் கருமமாற்றுதற்கும், தொழிலாள ஆட்சி நடைபெறுதற்கும் அளவிலா வித்தியாசமுண்டு. பாசிசம் தொழிலாளிகளையும் விவசாயிகளையும் கொள்ளையடிப்பதற்காக ஏற்பட்டதாகும். அபேதவாதமோ அந்த சாண்டு தலை ஒழிப்பதற்காக ஏற்பட்டது. இவ்விரண்டுக்கு மிடையில் எவ்வித ஒற்றுமையேனுமிருக்க முடியுமா?

நாம் பாசிசத்தையும் அபேதவாதத்தையும் பார்க்கும் போது அவைகளின் வெளிரூபத்தைப் பார்க்ககூடாது. அவைகளின் உள்ளே புகுந்து, அவைகளின் அஸ்திவாரங்களை நோக்கவேண்டும். பாசிசத்துக்கு அஸ்திவாரம் முதலாளித்துவத்தின் ஆசையும் சாண்டுதலுமாம். ஆனால் அபேதவாதத்தின் அஸ்திவாரம் பொதுஜனங்களை இந்த ஆசையிலிருந்தும், சாண்டுதலிலிருந்தும் விடுதலையளிப்பதாம். ஒன்றுக்கு ஒன்று பெரும் சத்துரு.

நான் பாஸிசத்தின் ஊழல்களை விவரிக்க ஆரம்பித்தால், என்னுடைய விஷயத்தை விட்டு அதிக தூரம் விலகிவிடுவேன். ஒரு எச்சரிக்கை கொடுத்துவிடுவது போதுமென்று எண்ணுகிறேன். இதைப்பற்றி அதிகமாய் தெரிந்துகொள்ள விரும்புவோர்களுக்கு நான் ஒரு ஆலோசனை கொடுக்க ஆசைப்படுகிறேன். இதைப்பற்றி அனேக உயர்ந்த புத்த

கங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனல் ஆர். பால்மே டட் எழுதிய பாஸிசமும் சமூகப் புரட்சியும் என்ற புத்தகத்தைவிட நேர்த்தியான புத்தகத்தை நான் அறியேன். ஆங்கிலேய பாஷையில் எழுதும் மார்க்ஸ் சிஷர்களில் மிஸ்டர் டட்தான் மிகச் சிறந்தவரென்று நான் எண்ணுகிறேன். லெனின் எழுதிய ஏகாதிபத்தியம் என்ற புஸ்தகம் அந்தக் காலத்துக்கு எவ்வளவு விசேஷமாய் இருந்ததோ, அவ்வளவு டட் எழுதிய பாஸிசம் முதலாளித்துவம் க்ஷீணதிசை யடையும் இக்காலத்துக்கு முக்கியமானது. மார்க்ஸீய கலையில் லெனின் எழுதிய ஏகாதிபத்தியம் என்ற புஸ்தகத்துக்கு எவ்வளவு மதிப்புண்டோ, அதற்கடுத்த மதிப்பு டட் எழுதிய பாஸிசம் என்ற புஸ்தகத்துக்கும் இருக்கும்.

அத்தியாயம் IV

முறைகளும் வழிகளும்

விஷயம் அறிந்த சிறு தொகுதியார்கள் பொது ஜனங்களுக்குத் தலைமை வகித்து திடீரென்று தாக்கி புரட்சிகள் செய்த காலம் கடந்துவிட்டது. இந்த சமூக அமைப்பை முழுவதும் மாற்றி வைக்கவேண்டுமானல், பொது ஜனங்களும் அதில் ஈடுபட வேண்டும். மேலும் அவர்கள் எதற்காகப் போராடுகிறர்களென்றும் அவர்கள் எதை நாடுகிறர்களென்றும் முன்னமேயே அறிந்து கொள்ளவேண்டும்...........சென்ற ஐம்பது வருஷத்தின் சரித்திரம் இதை நமக்கு போதித்திருக்கிறது. பொது ஜனங்களை இன்னதுதான் செய்யவேண்டுமென்று போதிப்பதற்காக நீண்ட காலம்வரை இடைவிடாது வேலை செய்யவேண்டும். இந்த

வேலையைத்தான் நாம் இப்பொழுது செய்துக்கொண்டிருக்கிறோம். நாம் அடைந்திருக்கும் வெற்றி சத்துருவை நம்பிக்கை இழக்கும் படிச் செய்கிறது.

—பிரீட்ரிக் ஏஞ்ஜல்ஸ்.

சில நாட்களுக்குமுன் ஹிந்துஸ்தான் டைம்ஸ் என்ற பத்திரிகை அடியில் கண்ட ஞானோபதேசத்தைச் செய்தது:—"அன்னிய ஆதிக்கம்தான் நம்மை முன்னேற விடாமல் தடுத்து நம்முடைய தேசிய வாழ்க்கையை நாசம் செய்கிறது. நமது தேசம் முதலாவதாக அதை ஒழிக்கட்டும். அதற்குப் பிறகு ஜனங்கள் கேட்கத் தயாராய் இருந்தால் அபேதவாதிகள் தங்களுடைய கொள்கைகளை தாராளமாய் பிரசாரம் செய்யலாம். பொதுஜன அபாயத்தை முன்பாக வைத்துக்கொண்டு தேசத்தை பிரிப்பது தேசாபிமானமல்ல."

ஹிந்துஸ்தான் டைம்ஸ் முதலாளிகளின் அபிப்பிராயத்தை வெளியிடும் பத்திரிகை. ஆகையால் அது நமக்கு தேசாபிமானத்தைப் போதிக்க உரிமை பெற்றிருக்கிறது. தேசாபிமானம் முதலாளிகளின் விசேஷமான வியாதி. உண்மையில் முதலாளித்துவமும் தேசமும் சேர்ந்து வளர்ந்தனவாகும். முதலாளிகள் ஓங்கி வளர்ந்த காலம்தான் உன்னதமான தேசாபிமான காலம். "தேசத்துக்கு ஆபத்து" என்ற கூச்சல் முதலாளித்துவத்தின் ஓயா பக்கபலமாகும். 1931-ம் வருஷத்தில் நடந்த ஆங்கிலேயப் பொதுத் தேர்தல் இதற்குத் தகுந்த உதாரணம்.

தற்கால சமூகப்பிரச்னைகளை விளக்க வேண்டுமாயின் அபேதவாதத்தை விட்டு தப்பமுடியாது என்று நான் முந்திய அதிகாரங்களில் காண்பித்து விட்டேன். நாம்

அபேதவாத சமூகத்தை அமைப்பதற்கு முன், சர்க்காரைக் கைப்பற்ற வேண்டுமென்றும் சொல்லிவிட்டேன். இதை கொண்டு சுயராஜ்யம் பெறுவதற்கு முன் அபேதவாதத்தைப் பற்றிப் பேசுவது உபயோகமற்றதென்று சிலர் வாதாடலாம். சிலர் அப்படி வாதாடவே செய்கிறார்கள். ஹிந்துஸ்தான் டைம்ஸ் ஆசிரியரைப் போன்றவர்கள் இப்படி பேசுவது பிரயோஜனமில்லாததென்றும், குறும்புத்தனமானதென்றும்கூட எண்ணுகிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயத்தில், சுயராஜ்யமடைவதற்கு தேச ஒற்றுமை வேண்டுமென்றும், அபேதவாதம் அப்படிப்பட்ட ஒற்றுமையை ஒழிக்கக்கூடியது என்றும் படுகிறது. ஆகையால் இச்சந்தர்ப்பத்தில் அபேதவாதக் கிளர்ச்சி ஏற்பட்டால் தேசிய சக்திகள் பலவீனமடையுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். இந்த உணர்ச்சி அதிகமாய் பரவியிருப்பதால் அதைப்பற்றி தீர்க்கமாக ஆராயவேண்டும்.

தேசீய ஒற்றுமை

தேசிய ஒற்றுமை என்றாலென்ன? தேசம் என்றாலென்ன? தேசியமயம் என்றாலென்ன?

நம்முடைய தேசிய சரித்திரத்தில் நடைபெற்ற இரண்டு சம்பவங்களைப் பார்ப்போம்.—(1) 1857-ம் வருடம் கண்ட சிப்பாய்க் கலகம், (2) 1885-ம் வருடம் கண்ட காங்கிரஸ் ஜனனம். இவ்விரு சம்பவங்களுக்கு மிடையே 28 வருஷங்கள்தானிருந்தன. அப்படி இருந்தும் இந்த சொற்ப காலத்தில் தேசிய மனப்பான்மையில் ஒரு பெரிய, நம்ப முடியாத மாறுதல் உண்டாகிவிட்டது. 1857-ம் வருஷத்தில் பகிரங்கமாக அரசியல் ஆதிக்கத்துக்காக ஆயுதம் தாங்கி யுத்தம்

செய்யப்பட்டது. 1885-ம் வருஷத்தில் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்வதற்காக ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப் பட்டது.

பூரண அரசியல் ஆதிக்கத்துக்காக யுத்தம் செய்ததை விட்டு ஒரு ராயல் கமிஷனுக்காக பிரார்த்தனை செய்வது ஒரு பெரியமாறுதலல்லவா? அப்படி இருந்தும் பிந்திய முயற்சி (ராயல் கமிஷன் வேண்டுதல்) 'இந்தியத் தேசங்களை உருப் படுத்தும் ஆரம்பம்' என்று அழைக்கப்பட்டது.

1857ல் நடந்த சம்பவமும் 1885ல் நடந்த சம்பவமும் தேசிய இயக்கங்களாக இருக்குமாயின் தேசியம் என்பதற்கு ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு அர்த்த மிருக்கிறதென்று வெளிப்படுகின்றதன்றோ? இவ்வித்தியாசம் லக்ஷியத்தில் மாத்திர மல்லாது மனிதர்களிலும் காணப்படுகிறது. 1857ம் வருத்தில் ராணுவமானியத் தலைவர்களும் அவர்களுடைய படையும் "தேசிய வீரர்"களாய் இருந்தார்கள். 1885-ம் வருஷத்திலோ மத்தியதர வகுப்புகளிலிருந்து வந்த (வேலை விட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்களுள் பட) கனவான்கள் தேசிய வீரர்களாகப் பாவிக்கப்பட்டார்கள்.

தேசியம், தேசிய ஒற்றுமை ஆகியவைகளை நோக்கும் போது ஷை விஷயங்கள் அதிக விளக்கத்தைக் கொடுக்கின்றன. 1857ம் வருஷத்தில் யுத்தம் செய்த ராணுவ மானிய அதிகாரிகளோ அல்லது 1885-ம் வருஷத் தில் காங்கிரஸை ஸ்தாபித்த பாபுகளோ தேசத்திற்காகவோ அல்லது அதில் வசித்த எல்லா வகுப்பினர்களுக்காகவுமோ நிற்கவில்லை. 1885-ம் வருஷத்தில், இந்திய விவசாயிகள் பாபுமார்களோடு "சேர்ந்து" கொண்டு சட்டசபைகளில்

"ஸ்தானங்களும்" ஆங்கிலம் படித்தவர்கட்கு அதிகமாக உத்தியோகங்களும் கேட்டது வேடிக்கையே! இன்றும் கூட இந்திய விவசாயிகள் பாபுமார்களோடு சேர்ந்துகொண்டு இன்னதென விளங்காத சுயராஜ்ஜியத்துக்காகவும் தாய் நாடு என்று சொல்லும் மாய வஸ்துவுக்காகவும் போராடு கிறார்கள்! நிற்க,

மேற்கூறியவற்றால் ஒரு "தேசம்" என்றால் பூரா தேசத்தையும் குறிக்கவில்லை என்று காண்கிறோம். அதே விதமாக தேசியம் என்றாலும் ஒரு தேசத்திலுள்ள எல்லா வகுப்பாரையும் கூட்டத்தாரையும் உரிமைகளையும் குறிக்காது. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வகுப்பார்கள், தாங்கள் தான் "தேசம்" என்று சொல்லிக்கொண்டு தேசியப் பாட்டை பாடி யிருக்கிறார்கள். ஒரு குறித்த காலத்தில் எந்த வகுப்பார் அல்லது கூட்டத்தார் தேசீய வாதிகளாய் இருப்பார்களென்பது, அக்காலத்திலிருக்கிற சரித்திர சந்தர்ப் பங்களையோ சமூக அமைப்பையோ பொறுத்திருக்கிறது. அனேக சந்தர்ப்பங்களில் தேசீய நலமென்று சொல்லப் படுவது தேசத்தின் பெருவாரியான ஜனங்களின் நன் மைக்குவிரோதமாய் இருக்கலாம். இங்கிலாந்து தேசத்தில் 1931-ம் வருடம் நடந்த பொதுத்தேர்தல் இதற்கு உதாரண மாகும். "தேசத்துக்கு ஆபத்து நேரிட்டிருக்கிறது" என்று அப்போது போடப்பட்ட கூச்சல் உண்மையில், ஜனங்களை பயமுறுத்தி ஆங்கில முதலாளித்துவத்தையும் அதன் கொள்ளையையும் சாஸ்வத பொருளாதார அடிமைத் தனத்தையும் நிலைநாட்டுவதற்குத்தான். ஆகையால், தேசம் என்பது ஒரு பிரிக்கமுடியாத புமு வஸ்து என்று பேசுவது வஞ்சப் பிரசாரத்துக்கு இரையாவதாகும்.

இந்திய சமூகம், இளவரசர்கள், தொழிற்சாலை முதலாளிகள், லேவாதேவிக்காரர்கள், வியாபாரிகள், விவசாயிகள், தொழிலாளிகள் முதலிடவர்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. தேசியம் என்ற பதம் இவர்களுக்கெல்லாம் ஒரே மாதிரியானதாயிராது. இவ்வகுப்பார்களில் ஒரு பகுதிக்கு விடுதலை கிடைத்தால் மற்றப் பகுதிகளுக்கும் விடுதலை கிடைக்க வேண்டுவது அவசியமல்ல. மேலும் எல்லா வகுப்பாரும் கைக்கொள்ளும் போராட்டமுறையும் ஒன்றாய் இருக்க முடியாது.

இளவரசர்களை எடுத்துக்கொள்ளுவோம். அவர்களுக்கு விடுதலை கிடைப்பதென்பதற்கு அவர்கள் பூரண உரிமையைப் பெறுதலென்பது பொருள். அவ்வுரிமை யுத்த களத்தில் பெறும் வெற்றியாலேயே கிடைக்கும். 1857-ம் வருஷத்துக்குப் பிறகு எந்த இளவரசர் தம் சுதந்திரத்திற்காக யுத்தம் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறார்? ஆகையால் சதாகாலமும் இவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு கீழ்பட்டுதான் இருக்கவேண்டும். இக்காரணத்தைக் கொண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் "தேசிய" இயக்கத்துக்கு விரோதமான பக்கத்தில் அவர்களும் இருக்க வேண்டியதாய் இருக்கிறது. இதுதான் தேசீய ஒற்றுமையில் ஏற்பட்டிருக்கிற முதற் பிளவு.

இந்திய ஜமீன்தார்கள் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தால் ஏற்படுத்தப்பட்டவர்களென்று நன்கு தெரியும். பெரிய ஜமீன்தார்கள் சதாகாலமும் ஏகாதிபத்தியத்துக்கு பக்கபலமாய் நிற்பதோடு கிராமாந்திரங்களில் ஏகாதிபத்தியத்தின் பெரிய பலமாக இருக்கிறார்கள். உயர்ந்த உத்தியோகங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்ற ஆசையைத் தவிர, தேசியம்

என்ற வார்த்தைக்கு அவர்களிடத்தில் யாதொரு அருத்த
மும் இல்லை. தேசீய சக்திகள் பலமடைந்து அதன் காரணத்
தால் இந்தியர்களுக்கு எவ்வித அரசியல் உரிமையேனும்
கிடைத்தால் ஜமீன்தார்கள் அவ் உரிமைக்கு முட்டுக்கட்டை
யாய் இருப்பார்கள். நாம் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்
பதிலோ அல்லது அதற்கு விரோதமாய் கிளர்ச்சி செய்
வதிலோ அவர்களுக்கு யாதொரு பிரயோஜனமும் கிடைக்க
போவதில்லை. அவர்கள் அரசியலில் தலையிடுவதெல்லாம்
இந்தியர்களுடைய கைகளில் ஆதிக்கம் "கொடுக்கப்பட்டு"
அதனால் தங்களுடைய உரிமைகளுக்கு யாதொரு கெடுதியும்
வராமல் தடுப்பதற்கேயாகும். கொஞ்சமாவது அரசியல்
ஞானமும், அனுபவமும் உள்ள ஒருவனும் ஜமீன்தார்களுடன்
ஒற்றுமையாய் இருக்கவேண்டுமென்று சொல்ல மாட்டான்.
இதுதான் தேசீய ஒற்றுமையில் இருக்கிற இரண்டாவது
பிளவு.

இதற்கடுத்து, தொழிற்சாலை முதலாளிகளை எடுத்துக்
கொள்ளுவோம். அவர்களுக்கு தேசீயம் என்பதன் பொருள்
தேசத்திலுள்ள ஆட்கள் பொருட்களை சுரண்டி சொத்து
சேகரிக்க சுதந்திரம் கிடைப்பதென்பதாகும். இதற்காகத்
தான் தேச முன்னேற்ற மென்னும் ருசியான பதம்
அவர்களால் உபயோகிக்கப் படுகிறது. மக்களைச் சுரண்டு
வதற்கு ஏராளமான அரசியல் பலம் தேவை. ஆகையால்
அவர்கள் மெல்ல அரசியலைக் கைப்பற்றப் பார்க்கிறார்கள்
அது அசாத்தியமாகையால் சிறிது சிறிதாக சீர்திருத்தங்களை
யடைய நினைக்கிறார்கள்.

இந்திய தொழிற்சாலை முதலாளி வகுப்பு ஏகாதிபத்தி
யத்தின் பாதுகாப்பில் வளர்ந்திருப்பதால், பொருளாதாரத்

திலும், அரசியலிலும் பூரணமாய் அதன் தயவையே எதிர்பார்த்திருக்கிறது. அயர்லாந்திலிருந்த பூர்ஷுவாக்களுக்கு அமெரிக்காவின் உதவி இருந்ததுபோல் இந்திய தொழிற்சாலை முதலாளிகளுக்கு வெளிநாட்டு உதவி எதுவும் கிடையாது. மேலும், இந்தியாவில் தொழிற்சாலை வகுப்பாரின் சேர்க்கையால் ஜனங்களுக்கு எவ்வித விசேஷ லாபமும் கிடைக்கவில்லை. அதோடு இத்தேசத்தின் பொருளாதார வாழ்க்கையிலோ, அல்லது நாகரிக வாழ்க்கையிலோ செல்வாக்கடைந்து, யாதொரு ஆதரவையும் உண்டாக்கிக் கொள்ளவுமில்லை. ஆகையால் இந்த வகுப்பு ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முடியாது. வேண்டுமானால் தன்னுடைய செல்வாக்கை உபயோகப்படுத்தி சற்று அழுத்தலாம். இவ்வழுத்தலையுங்கூட ஒரு வகுப்பாக நின்று செய்யமுடியாது. யாதொரு சொத்துமில்லாத கீழ் வகுப்பார்களை, அந்தரங்கத்தில் உதவி செய்து அவர்கள் மூலமாய்த்தான் ஏகாதிபத்தியத்தைத் தாக்க முடியும். இப்படிச் செய்வதின் நோக்கம் தங்கள் கையில் ஆதிக்கத்தை எடுத்துக்கொள்ளத்தான் என்பதை மறக்கலாகாது. இதைத் தவிர வேறு எந்த நோக்கமாகவேனும் போராட்டம் உதயமானால் அவர்கள் தங்களுடைய உதவியை நிறுத்திக்கொள்ளுவார்கள். இதனை வேறு பாஷையில் சொன்னால், தேசீயம் ஒரு பூர்ஷுவா சர்க்காரை தன்னுடைய நோக்கமாய் வைத்திருக்கும் வரையில்தான் தொழிற்சாலை முதலாளிகள் தேசீய வாதிகளாய் இருப்பார்கள்.

இவ்வாறு, முதலாவதாக, இந்திய தொழிற்சாலை முதலாளிகளால் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முடியாது என்று காண்கிறோம். இரண்டாவதாக, அவர்களுக்குப் பொருளா

தார முன்னேற்றத்துக்குத் தக்க சில வசதிகள் கொடுத்து விட்டால் அவர்கள் திருப்தியடைந்து விடுவார்கள் என அறிகிறோம். மூன்றாவதாக, தேசியம் அவர்களுடைய கையில் ஆதிக்கத்தைக் கொடுக்கும் என்று அவர்களுக்கு நிச்சயம் இருக்கும் வரையில்தான் அவர்கள் தேசியத்துக்கு உதவி செய்வார்கள். இதுதான் தேசிய ஒற்றுமைக்குள் புகுந்திருக்கும் மூன்றாவது பிளவு.

இனி, விவசாயிகளை எடுத்துக்கொள்ளுவோம். இந்தியா ஒரு விவசாய நாடு. இந்திய தேசியத்துக்கு ஏதாவது அர்த்த மிருந்தால், அது இந்திய விவசாயியின் விடுதலை என்ற அருத்தமே இருக்கவேண்டும். எனவே விவசாய விடுதலைக்கு அர்த்தமென்ன? முக்கியமாய், சுரண்டுதலிலிருந்து விடுதலை கிடைக்கவேண்டு மென்பதாகும். அது (சுரண்டுதல்) கருப்பு மனிதனால் செய்யப்படுவதாய் இருந்தாலும் சரி, வெள்ளையனால் செய்யப்படுவதாய் இருந்தாலும் சரி, ஒரே இயல்புடையதே. தேசத்தின் பொருளாதார, அரசியல் நோக்கங்களை அவர்களுடைய நன்மைக்குத் தக்கதாக உருப்படுத்த அவர்களுக்கு சந்தர்ப்ப மளிக்கவேண்டும். சுருங்கக் கூறவேண்டுமானால் தேசத்தில் விவசாயிகளின் ராஜாங்கம் நடைபெற வேண்டும்.

போராடும்முறை சம்பந்தப்பட்ட வரையில் விவசாயிகளுக்கு ஒரே ஒரு முறைதான் தெரியும். அதாவது நேரடியான போராட்டம். அந்த யுத்தம் வெளிநாட்டுக் கொள்ளைக்காரர்கட்கு எவ்வளவு அபாயமானதோ, அதே அளவு உள்நாட்டுக் கொள்ளைக்காரர்கட்கும் அபாயமானது. ஆகையால் முன் சொல்லியவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமானால், விவசாயிகள் அவர்

களுடைய பொருளாதார, அரசியல் லக்ஷியங்களை யுணரக் கூடாது. மற்றவிதமாய்க் கூற வேண்டுமானால், விவசாயி கள் விஷயங்களைத் தெரிந்த உடனே தேசிய ஒற்றுமை முறிந்து விடுகிறது. இது மற்றொரு பிளவு.

தொழிலாளிகளின் சங்கதியும் இப்படித்தான். தொழி லாளியின் விடுதலை என்பதன் அர்த்தம், உற்பத்திச் சாத னங்களை சமூக உடைமைக்குள் கொண்டு வருவதன் மூலம் கூலிஅடிமைத்தனத்திலிருந்து அவனுக்கு விடுதலை யளிப்பதென்பதாகும். விவசாயிகளைப் போல், தொழிலாளி களின் ஆயுதமும் நேரடியான போராட்டமே. தேசிய ஒற்றுமை நிலைநிற்கவேண்டுமானால் அவர்களுக்கும் வகுப்பு உணர்ச்சி ஏற்படக்கூடாது. வகுப்பு இருந்தால் தேசிய ஒற்றுமை முறிந்து விடும். இது பிறிதொரு பிளவு.

மேலே காட்டிய விவரங்களிலிருந்து தேசிய ஒற்றுமை என்ற ஒரு வஸ்து கிடையாதென்றும் அதை ஒழிக்க அபேதவாதிகள் முயலவில்லை என்றும் விளங்கும். தேசியம் என்ற பதத்துக்கு தேசத்திலுள்ள எல்லா வகுப் பாராலும் ஒரே அர்த்தம் கொடுக்கமுடியாது. அன்னிய ஆதிக்கத்தை ஒழித்தல் என்ற அர்த்தம் தேசியத்துக்கு கிடையாது. சில வகுப்பார், இயற்கையிலேயே அன் னிய ஆதிக்கத்தை ஆதரிக்கிறார்கள். அதற்கு விரோதமாய் இருப்பவர்களில் சிலருக்கு அதை எதிர்க்க சக்தி கிடை யாது. அப்படி எதிர்க்க சக்தியுள்ளவர்களின் நலம், முந்திய சக்தியில்லாத வகுப்பாரின் நலத்துக்கு நேர் விரோதமான தாய் இருக்கும்.

மேலும் மேற்கண்ட விவரங்களிலிருந்து ஹிந்துஸ்தான் டைம்ஸ் பேசும் தேசிய ஒற்றுமைக்கு அர்த்தமென்ன

வென்றால் கீழ் வகுப்பார்களாகிய பொதுஜனங்கள் தங்களை ஆண்டுதலில் இருந்து விடுதலையளிப்பதற்காகப் போராடாமல் ஏகாதிபத்தியமிருக்கும் ஸ்தானத்தில் சுதந்திரப் போராட்டத்திற்கே தலையிடாத பூர்ஷுவாக்களையும் ஜமீன்தார்களையும் ஆரோகணம் செய்ய பாடுபடவேண்டுமென்பதாகும்.

பூர்ஷ்வாக்களோடு ஒத்துழைத்தல்

பொதுஜனங்கள் தங்களுடைய லக்ஷியங்களை உணராமல் தற்சமயமிருப்பது அவர்களுக்கு லாபகாமாய் இருக்குமா இராதா என்று வாதாடப்படலாமென நான் மேலே சொல்லி யிருக்கிறேன். அப்படி பொதுஜனங்களை உணரவிடாமல் வைத்திருப்பது, ஏகாதிபத்தியத்தை நீக்கி, உள்நாட்டு சொத்து முதலிய உரிமையுள்ளவர்களிடத்தில் ஆதிக்கத்தை ஒப்புவிப்பதாகும். அதுவுங்கூட, பொதுஜனங்களும் ஜமீன்தார் முதலிய உரிமைபெற்ற வகுப்பார்களும் சேர்ந்துழைத்தால் அதிக விரைவில் ஏகாதிபத்தியத்தை முறியடித்துவிட முடியும் என்று நம்பினால்தான். "அப்படி பொதுஜனங்கள் யுத்தம் செய்து பூர்ஷ்வா ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டால் ஏகாதிபத்தியத்திற்கு தோல்வி யேற்பட்டு விடுவது போதுமான பலனாய் இருக்காதா? அதற்குப் பிறகு அவர்கள் விரும்பினால் இரண்டாவது புரட்சி யொன்றைச் செய்யலாமே" என்று கேட்கப்படுகிறது.

காங்கிரஸ் தலைவர்களுடைய மனப்பான்மை சாதாரணமாய் இப்படித்தானிருக்கும். ஆகையால் இதை கவனமாய் ஆராயவேண்டும்.

நான் அபேதவாதியாய் இருந்தபோதிலும், மேலே சொல்லப்பட்ட விஷயம் சாதகமாய் இருந்தால், அதற்காக

நான் முழுமனதுடன் வேலை செய்வேன். ஆனால் இரண்டாவது புரட்சி, முதலாவது புரட்சி ஏற்பட்ட பிறகு எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் நடைபெற வேண்டும். இந்தியாவைப்போன்ற ஒரு பெரிய கண்டத்தில், ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிப்பது நான் மேற்கண்ட விதம் செய்வதற்குப் போதுமான தூண்டுதலாகும். ஆனால் தற்சமயமிருக்கிற சந்தர்ப்பங்களை நோக்கினால் இந்த வழி உபயோகமற்றதாக இருப்பதோடு, ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்க சாதகமாய் இல்லாமல், அதோடு அநேக அடிமைச் சமாதானங்களைச் செய்வதற்கு ஏற்றதாகவுமிருக்கிறது.

சுருக்கமாக, சமாதானம் ஏற்படுத்திக்கொள்ளத்தக்க வழியில் அமைந்திருக்கும் சந்தர்ப்பங்கள் என்னவென்றால்— இந்திய பூர்ஷுவாக்கள் புரட்சியில் சம்பந்தப்பட முடியாத நிலைமையில் இருக்கின்றனர். இதற்கு முந்திய பிரிவில் அவர்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இருக்கும் தொடர்புகளைப் பற்றியும் அவர்கள் எவ்விதமாய் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கின்றனரென்பது பற்றியும் காண்பித்திருக்கிறேன். அந்தத் தொடர்பு அவர்களுடைய புரட்சித் தன்மையையொழித்து, அவர்கள் ஏகாதிபத்தியத்தை மறுக்காமலிருக்கும்படிச் செய்துவிடுகின்றது. ஏகாதிபத்தியத்தைப் பிடித்து தொங்கும் சில பூர்ஷுவாக்கள் அதை எதிர்ப்பதைவிட்டு, அதை சாஸ்வதப்படுத்தவே விரும்புகிறார்கள். இக்கூட்டத்தார்தான் ஏகாதிபத்தியத்தின் தாங்கிகளாக இருப்பவர்கள். ஏகாதிபத்தியத்தை ஒதுக்க விரும்புகிற தொழிற்சாலை பூர்ஷுவாக்கள் அதை நோகத் தாக்க பயப்படுவார்கள். ஜமீன்தார்கள் சம்பந்தப்பட்ட வரையில், ஏகாதிபத்தியத்

துக்கும் அவர்களுக்கும் இருக்கிற சம்பந்தங்களையும், அவர்கள் அச்சம்பந்தங்களின் காரணமாய் ஏகாதிபத்தியத்துக்கு அனுசாணேயாய் இருப்பதையும் நான் மேலே காண்பித்திருக்கிறேன்.

பூர்ஷுவாக்களின் இந்த நிலைமை, பொதுஜனங்கள் அவர்களோடு ஒத்துழைப்பதை முற்றிலும் பிரயோஜன மற்றதாக்கி விடுகிறது. ஏனெனில், முதலாவதாக இவ் ஒற்றுமையால், பூர்ஷுவாக்கள் செய்யப்போவது ஒன்றுமில்லை. போராட்டத்தில் அவர்கள் ஒன்றும் செய்யமுடியாது.—இப் பிரயோஜனமற்ற தன்மையைக் காட்ட ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளுவோம். சென்ற இரண்டு சட்டமறுப்புப் போராட்டங்களிலும், முக்கியமாக இரண்டாவது போராட்டத்தில் போடப்பட்ட திட்டத்தின் முக்கிய பாகம் பொருளாதார பகிஷ்காரமாகும். இத்திட்டத்தை பூர்ஷுவாக்கள் தான் மிகவும் உறுதியாய் நடாத்த முடியும். ஆனுல் இந்திய பூர்ஷுவாக்கள் அவர்களுடைய உறுதியின்மை காரணத்தால் இத்திட்டத்தை சரியானபடி நடாத்தவில்லை. எனினும் உண்மை உணராமல், பூர்ஷுவாக்களுக்கு சுயராஜ்ஜியம் வாங்கி தருவதற்காக அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்ட ஆயிரக்கணக்கான ஏழை மக்கள், பூர்ஷுவாக்களின் கடைகளில் மறியல் செய்து சிறைக்குச் சென்றார்கள். இப்படிப்பட்ட நிலைமை பூர்ஷுவாக்களை நம்ப விடுவதற்குச் சாதகமாக இல்லை. அவர்கள் போராட்டத்திலுள்ள ஒரு கஷ்டத்தையும் அனுபவிக்காமல், அப்போரில் இருந்து கிடைக்கும் லாபத்தை எல்லாம் தாங்களே அபகரித்துக் கொள்வதற்காக மற்றவர்களிடம் போராடும் படி கேட்பது நியாயமாகாது. சென்ற இயக்கத்தில் பூர்ஷு

வாக்கள் பலமாய் ஆங்கிலேய வியாபாரங்களை பகிஷ்கரித்திருந்தால், அவர்கள் இன்னும் அபேதவாதிகளாகிய எங்களை சட்டை செய்யாமல் தேசத்து ஏழை மக்களின் நம்பிக்கையை போதுமான அளவு பெற்றிருப்பார்கள். அனேகருடைய மனத்தைப் பிடித்து, ஆட்டும் பிளவின் பயம் ஏற்பட்டே இராது. பூர்ஷ்வாக்கள் புரட்சிகரமாய் நடந்துக் கொள்ள தவறி விட்டதுதான் தேசிய ஒற்றுமையில், அதாவது பொது ஜனங்களுக்கும் பூர்ஷ்வாக்களுக்குமிடையில் இருந்த ஒத்துழைப்பில் விழுந்த முதல் வெட்டாகும்.

சாதாரண காங்கிரஸ் தொண்டர் எவரும் இப்பிரச்சினை முழுவதையும் இவ்விதமாய் ஆராய்ந்தறிந்திருக்கிறுரென்று நான் சொல்லவில்லை. ஆனல் அவர் கண் திறந்து போராட்டத்திற்கு வேறு நல்ல முறை இல்லையா வென்று கேட்க ஆரம்பித்திருக்கிறுர் என்பது மட்டிலும் உண்மை.

இந்திய பூர்ஷ்வாக்கள் புரட்சிக்கு லாயக்கற்றவர்கள் என்பதை வெட்ட வெளிச்சமாக நிரூபித்து விட்டார்கள். அவர்கள் தங்கள் தலைமையில் ஒரு ஏகாதிபத்ய எதிர்ப்பு இயக்கத்தை தீவிரமாய் வளரச் செய்யவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் போரில் கலந்து கொள்ளாதது மாத்திரமல்ல. எந்தப் போராட்டமும் வளரவேண்டுமாயின் அதற்குள் ஏராளமான பொதுஜனங்கள் இழுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது தம் இயக்கத்தை ஒரு பொதுஜன இயக்கமாக்கிக் கொள்ளல் வேண்டும். அப்படி செய்யவும் பூர்ஷ்வாக்கள் தவறி விட்டார்கள். அது ஆச்சரியமல்ல. துரதிர்ஷ்டவசமாக சரித்திரத்தை நோக்கினல் அடிக்கடி

இப்படிப்பட்ட சம்பவங்களைக் காணலாம். இந்தியாவின் தற்கால நிலைமையில் தேசத்திற்குப் பொதுவூழியம் புரியும்படி ஜனங்களைத் தூண்டுவதனால் ஒரு இயக்கத்தை நடத்திவிட முடியாது. பூர்ஷுவாக்களின் ஆட்சியினால் தேசிய உணர்ச்சி கொதித்தெழுந்திருக்கும் ஜெர்மனி, கிரேட்பிரிட்டன் போன்ற தேசங்களில் அதை கிளம்பி விட்டால் பெரும் பெரும் காரியங்களை சாதித்து விடலாம். இந்தியாவிலோ ஒரு காலத்திலும் தொழிற்சாலை முதலாளி களின் ஆட்சி இருக்கவில்லை. ஆகையால் மேற்படி தூண்டு தலினால் அதிக பிரயோஜனம் கிடைக்காது. ஒருகால் படித்த இளைஞர்களை கிளப்பலாம்; கிளப்பியிருக்கிறது. ஆனால் படித்தவர்கள் மாத்திரம் ஒரு புரட்சியை ஏற்படுத்தி விட முடியாது.

இதே விதமாய் சமூக சேவையும் பிரயோஜனமில்லாத தாகும். அது தனிப்பட்ட முறையில்தான் செய்யப்படு கிறது. அதனால் அரசியலுணர்ச்சியை அது வெகுகாலம் சென்றே உண்டாக்க முடியும். "உருப்படியான" வேலையில் வேட்கையுள்ள காங்கிரஸ் தொண்டர்கள் பலர், வைத்தியத் தொண்டு, கல்வி யுதவி, ஹரிஜன சேவை, கதர் வேலை முதலிய சமூகத் தொண்டை நிரம்ப விரும்புவதைப் பார்த் திருக்கிறேன். வேறு திட்டம் இல்லாவிட்டால் இவை 'உருப்படியான' வேலையாய்த் தோன்றலாம். ஆனால் கோடிக் கணக்கான பொதுஜனங்களை அரசியல் போர்க்களத்தில் இழுத்துக்கொண்டு வருவதற்கோ, இது மிகவும் உபயோக மற்ற திட்டம். போதுமான ஜனங்களை பெருந்தொகையாக கூட்டிவிட்டால் ஒரு புரட்சி ஏற்பட்டுவிடும். ஜனங்கள் மனம் திரும்பியவர்களாவதோடு அவர்கள் புரட்சிகரமான தொண்டு

செய்பவராகவு மிருத்தல்வேண்டும். சுயலாபத்தைக் கருதியோ, நம்பிக்கைக் கொண்டோ அல்லது பயந்தோ எப்படியாயினும் சரி, பல வகுப்புகள் புரட்சியில் தலையிடவேண்டுவது அவசியம். இந்தியப் பொதுஜனங்களை இவ்விதம் திரட்டுதற்கு பூர்ஷ்வாக்களிடத்தில் யாதேனும் திட்டம் இருக்கிறதா?

மற்ற தேசங்களிலிருக்கிற பூர்ஷ்வாக்கள் அங்குள்ள பொது ஜனங்களை தங்களுடைய கொடிகளின்கீழ் சேரும் படியாய் எப்படிச் செய்தார்கள்? முதலாவதாக, தாமே யுத்தகளத்தில் இறங்கி யுத்தம் செய்து தங்களின் பேரில் நம்பிக்கை ஏற்படுத்திக் கொண்டார்கள். (இதைப்பற்றி நான் இதற்கு முன்னேயும் எழுதி இருக்கிறேன்.) இரண்டாவதாக, அவர்கள் மனதைக் கவரக்கூடிய சங்கேதச் சொற்களையும் திட்டங்களையும் பொதுஜனங்களின் முன்பாக வைத்தார்கள். இவைகள் பூர்ஷ்வாக்களின் உரிமைகளைப் பாதியாவிட்டாலும், பொதுஜனங்களின் மனதைக் கவரக் கூடியவைகளாய் இருந்தன. மூன்றாவதாக, அவர்கள் முழு இயக்கத்தையும் நடத்தப் போதுமான பொருளுதவி செய்யக்கூடிய நிலைமையில் இருந்து, அவ்வாறே உதவியும் செய்தார்கள்.

இந்திய பூர்ஷுவாக்களோ, பொதுஜனங்களின் முன்பாக, மனதைக் கவரக்கூடிய ஒரு திட்டத்தை வைத்தார்களா? இல்லை. அதில் தவறி விட்டார்கள். ஜனங்களின் மனதைக் கவரவேண்டுமானால். ஏகாதிபத்யத்தைவிட அவர்கள் அதிகமாகக் கொடுக்க முடியுமென்று காண்பிக்கவேண்டும். அவ்வாறு காண்பிக்க இடமில்லை அவர்களது பொருளாதார நிலைமை. உலக முதலாளித்துவ நிலைமையில், இந்திய

பூர்ஷுவாக்கள் செழிப்பாய் இருக்கவேண்டுமாயின், அவர்கள் இந்திய பொதுஜனங்களை அழுத்தமாய் சாண்டியாக வேண்டும்.—அதாவது கூடிய வரையில் குறைந்த கூலியைக் கொடுத்து, முடிந்த வரையில் பொருட்களை கிராக்கியாய் விற்கவேண்டும். தொழிற்சாலை முதலாளிகள் சம்பந்தப்பட்டவரையில் பூர்ஷுவாக்கள் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்க முடியாது. விவசாய துறையில்கூட அவர்கள் ஒரு முற்போக்கான திட்டத்தைப் பின்பற்ற முடியாது. அவர்களுக்கு மலிவான மூலப்பொருள்கள் தேவையாய் இருக்கின்றன. தற்சமயம் பீஹாரிலும் ஐக்கிய மாகாணங்களிலும், புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட மில்களின் முதலாளிகட்க்கும், கரும்புப் பயிர் செய்பவர்களுக்கு மிடையில் ஒரு பகிரங்கமான யுத்தம் நடந்துக்கொண்டிருக்கிறது. வேடிக்கை என்னவென்றால், மாகாண சர்க்கார் பஞ்சாயத்தார்களாகி விட்டார்கள். பொதுஜனங்களும் பூர்ஷுவாக்களும் அன்னிய சக்திக்கு விரோதமாய் ஒத்து உழைப்பதற்கு இப்படிப் பட்ட நிலைமை சாதகமாய் இருக்காது. இத்தகைய சந்தர்ப்பத்தில் ஒற்றுமையைப்பற்றி பேசுவது சிரிக்கத்தக்கதாக வில்லையாவென்று நினைக்கவேண்டியதா யிருக்கிறது.

கிஸ்தி, குத்தகைப்பணம் முதலிய விஷயங்களில் பூர்ஷுவாக்கள் சற்று விட்டுக்கொடுக்க விரும்பலாம். ஆனால் அவர்கள் ஒரு பக்கத்தில் ஜமீன்தார்களுடன் இருக்கிற சம்பந்தங்களை முறித்துவிட விரும்பாததாலும், மற்றொரு பக்கத்தில் ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாய் யோன நடவடிக்கை எடுத்துக்கொள்ள விரும்பாததாலும், அரை மனதுடன் சில உறுதிமொழிகள் கொடுப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. இவ்வுறுதிகள், இயல்பி

லேயே, நம்பிக்கை கொடுக்கக் கூடுவனவாயில்லை. முதலாவ தாக அவைகள் அதிகதூரம் புகுவனவல்ல. இரண்டாவ தாக, பொருளாதார பிரயோஜனமில்லாமல் சிறிய நிலங்களை வைத்துக்கொண்டு வரி தாங்கமுடியாமல் கஷ்டப்படும் பெரு வாரியான இந்திய விவசாயிகளுக்கு லாபமளிக்கப்பட மாட் டாது. விவசாயிகளைச் சுரண்டுவதில் பூர்ஷுவாக்களுக்கு இருக்கிற பங்கு (நான் இதைப்பற்றி ஏற்கெனவே எழுதிவிட் டேன்) அதிக சந்தேகத்தை யுண்டாக்குகிறது. ஒற்றுமைக்கு ஒருவரையொருவர் நம்பவேண்டியது அவசியம். தற்கால நடவடிக்கையைக் கவனிக்காமல் எதிர்காலத்தில் வரப்போகிற நன்மைகளை யடிப்படையாய் கொள்ளவேண்டுமென்று சொல்லுவது வெறும் வேதாந்தமே.

மூன்றாவதாக, பூர்ஷுவாக்கள் அவர்களுக்கு இருந்த தொல்லைகளாலும் நிர்ப்பந்தங்களாலும் தயாள குணத்தோடு நடந்துகொள்ளாமல் நான் மேலே விவரித்தபடி மாற்றாந் தாயைப்போல் நடந்துகொண்டார்கள். புரட்சி வேண்டும் பூர்ஷுவாக்களாயிருந்தால் அவர்களுடைய பணத்தை தேசிய இயக்கத்துக்காக, பெருகியோடும் ஆற்றைப்போல் கொட்டியிருப்பார்கள். ஆனல் இந்தியாவிலோ அப்படி நடக்கவில்லை. மிகத் தீமையற்ற தேசியத் திட்டமாகிய சுதேசித் திட்டத்தை எடுத்துக் கொள்ளுவோம். இது பூர் ஷுவாக்களுக்கு மிகவும் பிரியமான திட்டமென்று யாரும் சொல்லக்கூடும். உண்மையான "தேசிய" பூர்ஷுவாக்களா யிருந்தால் சுதேசி என்ற சப்தத்தால் தேசம் முழுவதும் கணீர் கணீர் என்று முழங்கும்படி செய்திருப்பார்கள். சுதேசி பிரசாரத்துக்காக டன் கணக்கான பணத்தைக் கொட்டி இருப்பார்கள். ஆனல் ஆங்கிலேய பூர்ஷுவாக்கள்

"பிரிட்டிஷ் பொருட்களை வாங்குங்கள்" என்று தங்கள் தேசத்தில் பிரசாரம் செய்த வேளையிலேயே, இந்திய பூர்ஷ்வாக்கள் சில ஆவேசமிக்க இளைஞர்களை சுதேசிப் புகழைப் பாடும்படி விட்டுவிட்டு சும்மா விருந்துவிட்டார்கள்.

இந்திய பூர்ஷுவாக்களுக்கு இரண்டுவித நிர்பந்தங்கள் இருக்கின்றன. அவர்கள் ஏகாதிபத்திய மறுப்பில் சேர முடியாமலிருப்பதோடு, பொது ஜனங்களை, தங்களுக்கு பாதகமில்லாத சங்கேதச் சொற்களைக் கொண்டு தங்களுடைய (பூர்ஷுவாக்களுடைய) கொடியின் கீழ் கூடும்படி செய்ய தவறிவிடுகிறார்கள். இதற்கு அர்த்தமென்ன வென்றால், ஏகாதிபத்திய மறுப்பில் அவர்களை சேர்த்துக் கொள்ளுவதினால் போரின் வேகம் குறைந்து, தடைப்பட்டு, பலியாமல் போய்விடுகின்ற தென்பதாகும். பொது ஜனங்கள் இழுக்கப்படாமல் இருப்பதோடு பூர்ஷ்வாக்களும் சம்பந்தப் படாமல் இருந்தால், அந்த போர் வெற்றிபெறாது போய் விடாமல் என் செய்யும்? இதன் அர்த்தமென்ன வென்றால், பொது ஜனங்கள் தங்களுடைய சொந்த லாபத்துக்காகவே, வகுப்பு நலத்தை கவனியாமல், பொது சத்துருவோடு யுத்தம் செய்யும் பொருட்டு பூர்ஷ்வாக்களோடு சேர்ந்துக் கொள்ள வேண்டுமென்று நாம் விவாதத்துக்காக மேலே ஒப்புக் கொண்ட திருஷ்டாந்தவாதம் உண்மையல்ல வென்பதுதான். இவ்வழி சுத்த பிரயோஜன மற்றதென்றும் ஏகாதிபத்தியத்தோடு சமாதானம் செய்துக் கொள்ளத் தான் லாயக்கானதென்றும் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. மேலும் இச் சமாதானங்கள் பொது ஜனங்களை காட்டிக் கொடுத்துத்தான் செய்யப்படுகின்றன வென்று தெரிந்துக் கொள்ள வேண்டும். ஏனெனில்

அச்சமாதானங்கள் ஏகாதிபத்தியத்துக்கும் உள்நாட்டுக்கு மிடையில், பொது ஜனங்களையும், தேசத்தின் இயற்கைப் பொருட்களையும், எப்படி சுரண்ட வேண்டுமென்பதைப் பற்றி ஏற்பட்ட உடன்படிக்கையாகும். இந்தியாவின் மேல் வகுப்பார்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கு மிடையில் ஏற்பட்ட இணக்கத்தின் நோக்கம் வேறே இருக்கு மென்று நம்புவது சுத்த கபடமற்ற நன்மையாகும். ஆகை யால் மேற்கூறிய அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டால் (அதாவது பொது ஜனங்கள் தங்களுடைய வகுப்பு லாபங் களை விட்டுவிட்டு பொது சத்துருவாகிய ஏகாதிபத்தியத்தை தாக்க பூர்ஷ்வாக்களோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தை ஒப்புக்கொண்டால்) தேசிய இயக்கமாகிய பூரண சுதந்திரத்துக்காக போர் செய்வது பிரயோஜன மற்றுப் போவதோடு பொது ஜனங்களையும் மோசமாய் காட்டிக் கொடுத்தது போலாகும். பொது ஜனங்களின் பலத்தைக் கொண்டே பூர்ஷ்வாக்கள் ஏகாதி பத்தியத்தை இணங்கச் செய்கிறார்களென்பதை யுத்தேசிக் கும் போது இக்காட்டிக் கொடுத்தல் மிகவும் துன்பந்தரத் தக்கதாய் தோன்றும்.

இந்தியாவுக்கு 'கொடுக்கப்பட்டிருக்கிற' புதிய அரசியல் சட்டம் இவ்விவாதத்தை மிகவும் அழகாய் நிரூபிக்கிறது. அந்த அரசியல் சட்டம் (பலதடவைகளில் சுட்டிக்காட்டியது போல்) ஏகாதிபத்தியத்துக்கும் இந்திய மேல் வகுப்பார் களுக்கு மிடையில் பொதுஜனங்களை மேற்கொண்டு சுரண்ட ஏற்பட்ட ஒப்பந்தத்தைக் காண்பிக்கிறது. மேலும் அம் மேல் வகுப்பார்களின் அழுத்தத்தால்தான் இந்த அரசியல் சட்டம் ஏற்படுவது சாதகமாயிற்று.

ஒரு புதிய எதிர்ப்பு

அந்நிய "அழுக்குப் பேய்"க்கு விரோதமாய் யாதொரு தேசிய ஒற்றுமையும் இருக்க முடியாதென்று நான் மேலே காட்டிவிட்டேன். அப்படிப்பட்ட ஒற்றுமை வேண்டுமென்று சொல்லுவது, பொதுஜனங்கள் ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாய் போராடி மேல் வகுப்பார்களுக்கு அரசியல் ஆதிக்கம் சம்பாதித்துக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுவதாகும். நடைமுறையில் அப்படிப்பட்ட ஒற்றுமையினால், மேல் வகுப்பார்களின் மனப்பான்மை புரட்சிக்கு விரோதமானதாய் இருப்பதால், சுதந்திர இயக்கம் பலிக்காமல் போவதோடு பொதுஜனங்களைக் காட்டிக் கொடுத்ததுமாகிவிடும்.

சுதந்திர இயக்கத்தை எவ்வாறு வளர்ச் செய்வது என்ற கேள்விப் பிறக்கிறது. சுதந்திரத்தை அடைந்ததற்குப் பிறகு எப்படிப்பட்ட சுயராஜ்ஜியம் வேண்டுமென்று யோசித்துக் கொள்ளலாமென்று சொல்லுகிறவர்களின் திருப்திக்காக இக்கேள்விக்கு பொதுஜனங்களின் நலத்தைக் கருதாமல் பதிலளிக்க முயலுவோம். இம்மனப்பான்மை முற்றிலும் தவறானதென்றும், தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்ளச் செய்வதென்றும் பிறகு காண்பிப்பேன். எந்த அரசியலும் வகுப்பு நலத்தை கவனிக்காமலிராது. அப்படி இருந்த போதிலும் நாம் தற்சமயம் பொதுஜனங்களையும் மற்ற வகுப்பார்களையும் ஒரு விளையாட்டிலிருக்கிற காய்கள் என்ன எண்ணிக்கொண்டு சுதந்திர பிரச்சனையை "தனியாக" கவனிப்போம்.

எல்லா வகுப்பார்களிலும், பொதுஜனங்கள், அதாவது தொழிலாளிகள், விவசாயிகள் கீழ் மத்தியதர வகுப்பார்கள்

மாத்திரம்தான் ஏகாதிபத்தியத்தோடு யுத்தம் செய்யமுடியும். ஏனெனில் அவர்கள் மாத்திரம்தான் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்திருக்கவில்லை. அவர்கள் யுத்தம் செய்யக்கூடிய நிலைமையில் இருப்பதோடு அவர்கள் மாத்திரம்தான் ஏகாதிபத்தியத்திலிருந்து பூரண விடுதலையும் அடைய விரும்புகிறார்கள். ஏகாதிபத்தியத்தின் உயிர்—இரத்தம் பொது ஜனங்களை சுரண்டுவதால்தான் வருகிறது. பொதுஜனங்களின் வளரும் அதிருப்தியைக் குறைக்க ஏகாதிபத்தியம் அவர்களுக்கு சில சகாயங்களைச் செய்யலாம்; ஆனால் அது அவர்களை சுரண்டுவதை விட்டுவிட்டால், தன்னுடைய நோக்கத்துக்கும் சுபாவத்துக்கும் விரோதம் செய்தது போலாகும். மற்ற வகுப்பாரோடு அது ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் செய்து கொள்ளலாம்; ஆனால் அது நேரேவோ, மறைமுகமாக தன்னுடைய சுதேசி ஏஜண்டுகளைக் கொண்டோ, பொதுஜனங்களை சுரண்டுவதை விட்டுவிட்டால், தன் கைப்பட மரண கட்டளையில் கையெழுத்து செய்தது போலாகும். நான் இதற்கு முன் சொல்லியபடி இதற்கு அர்த்தமென்னவென்றால் பொதுஜனங்கள் மாத்திரம்தான் இணங்காது ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பவர்கள். அவர்கள் மாத்திரம்தான் தேசத்தின் பூரண சுதந்திரத்தை விரும்புகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் சுதந்திரப் பேச்சைக் கேட்டு சிரித்து எதிர்க்கிறார்கள். அல்லது பேச்சில் அபிமானத்தைக் காட்டுகிறார்கள். அன்னிய "அமுக்குப் பேயி"ன் ஆதிக்கத்தில் க்ஷேமமடைகிற வகுப்பார்களாகிய உயர்ந்த சம்பளத்தையடையும் சர்க்கார் சிப்பந்திகள், பட்டம்பெற்ற ஸ்ரீமான்கள், பெரிய ஜமீன்தார்கள் முதலியவர்களென்னும் ஏகாதிபத்தியத் "தூண்கள்" தேசத்தின் சுதந்திரத்துக்கு விரோதமாய் இருக்கிறார்கள்.

இதற்கு அமுக்குப் பேய் தங்களுடைய முன்னேற்றத்துக்கு தடையாய் இருக்கிறதென்று உணர்ந்த இந்திய தொழிற்சாலை முதலாளிகளைப் போன்றவர்கள் கூட, சுதந்திரப் போர் பொது ஜனங்களின் வகுப்பு உணர்ச்சியை எழுப்பி விடுவதைக்கண்டு பயந்து, ஏகாதிபத்தியத்தின் சிறிய பாகஸ்தர்களென்ற முறையில், பொது ஜனங்களைச் சுரண்ட சில வசதிகளைப் பெற்றுக் கொண்டு திருப்தியடைந்து விடுவார்கள்.

பொது ஜனங்கள் மாத்திரம்தான் ஏகாதிபத்தியத்துக்கு எதிரிகளென்றும், மற்றவர்கள் புரட்சிக்கு எதிரிகளென்றும் நாம் ஒப்புக்கொண்டால், சதுரங்க விளையாட்டுக்காரர் என்ற முறையில், எந்த யுத்த வித்தையைக் கைக்கொண்டு எந்தக் காய்களை முன்னே கொண்டுபோக வேண்டும்? பொது ஜனங்களை ஏகாதிபத்யத்தின் முன்பாகக் கொண்டு வரக்கூடிய யுத்த வித்தையை நாம் கைக்கொள்ள வேண்டுமென்பது தெளிவாகத் தெரிகிறது. நாம் எவ்விதம் இப்படி செய்யக்கூடும்?

நம்முடைய தேசத்தின் ஜனத்தொகை முப்பத்தைந்து கோடிக்கு மேல் இருக்கிறது. நம்மையாளும் அன்னியர்களின் தொகை இரண்டு லக்ஷம்தான். இப்பரிதாபகரமான நிலைமையைப் பற்றி சற்று கவனிப்போம். நம்ப முடியாதவாறு இச்சிறிய கூட்டத்தார் இப்பெரிய கூட்டத்தாரை எவ்விதம் ஆளுகிறார்கள்? முப்பத்தைந்து கோடி ஆடுகளை அடக்கி மேய்ப்பதற்கு இரண்டு லக்ஷம் ஆட்களைவிட அதிகமான ஆட்கள் வேண்டுமென்று யாரோ ஒருவர் சொன்னார்! இந்த அநியாயம் எவ்வாறு சாதகமாய் இருக்கிறது? நமக்குள் தேசிய உணர்ச்சி இல்லாததாலா? நமக்குள் ஒற்

றுமையில்லாததனாலா? நமக்கு கல்வியில்லாததனாலா?—இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு அஸ்திவாரமாய் இருப்பதென்ன?

அனேக வருஷங்களுக்கு முன், அழகிய நகரமாகிய சான்பிரான்ஸிஸ்கோவில் ஒரு இந்திய சமூக ஊழியர் மிகவும் கவரத்தக்கவாறு பேசியதைக் கேட்டேன். அவருடைய வாக்கியங்கள் எவ்வளவு அழகாய் இருந்தனவோ அவ்வளவு அவரும் அழகாய் இருந்தார். கேட்டவர்கள் அவரை மதிக்கும்படி பேசினார். பேசி முடிந்தது. ஜனங்கள் ஆனந்தமடைந்து, கைத்தட்டிய சப்தம் மறையவில்லை. அச்சமயத்தில் மண்டபத்தின் மத்தியில் ஒருவர் எழுந்திருந்து கேட்டதாவது:—"முப்பது கோடி இந்தியர்களை சில ஆங்கிலேயர்கள் எவ்விதம் அடக்கி ஆளுகிறார்கள்?" இரண்டு மணி நேரத்தில் அவர் ஜனங்கள் மயங்கும்படி செய்த பிரசங்கத்தின் மாயத்தை இக்கேள்வி முறித்து விட்டது. ஆனால் அவர் சற்று அதிக தைரியத்துடன் எழுந்திருந்து பதிலளித்ததாவது:—"நீங்கள் என்னிடத்தில் இரண்டு பிஸ்டல்களைக் கொடுத்தால் நான் உங்களை எல்லாம் அடக்கிவிட முடியும்" அவர் சொன்னதின் பொருளென்னவென்றால், நாசம் செய்யக் கூடிய தற்கால ஆயுதங்களை வைத்திருக்கும் சில ஆயுதபாணிகள் கோடிக்கணக்கான நிராயுதபாணிகளை அடிமைகளாக வைக்கவேண்டுமென்பது தான். கூட்டத்திலிருந்தவர்களுக்கு இந்த பதில் எவ்வளவு தூரம் திருப்தியளித்ததென்று நான் சொல்ல முடியாது. கூட்டத்தில் அனேமாக அயர்லாந்துக்காரர்கள் இருந்தார்கள். ஆகையால் அவர்கள் ஆங்கிலேயர்களின் முறைகளைப்பற்றி அதிகமாகக் கேட்கவேண்டிய அவசியம்

ஏற்படவில்லை. என்னைப் பொறுத்த வரையில் இக் கேள்வியும் அதன் பதிலும், அந்த சந்தேகமின்றி அழகாய் இருந்த பிரசங்கத்தின் பயனை அழித்து விட்டது. பதினான்கு வருஷங்களுக்குப் பிறகுங்கூட நம்முடைய அடிமைத்தனத்துக்கு ஆங்கிலேயே ஆயுதங்கள் காரணமென்று எனக்குத் தோன்றவில்லை.

நாம் ஆயுதமில்லாமலிருப்பது நம்முடைய அடிமைத் தனத்துக்கு காரணமல்ல, எந்த ஆயுதங்களைக் கொண்டும் இரண்டு லக்ஷம் பேர்கள் முப்பத்து ஐந்து கோடி ஜனங்களை அடிமைகளாய் வைக்க முடியாது. நம்முடைய ஒற்றுமை யின்மையோ அல்லது ஜாதிகள், மொழிகள், மதங்கள், முதலியவைகளின் திரளோ அல்லது நம்முடைய தாழ்ந்த குணமோ நம்முடைய அடிமைத்தனத்துக்குக் காரணமல்ல. நாம் அன்னிய ஆதிக்கத்தின் அஸ்திவாரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் வேறு திசையில் தேடவேண்டும்.

அப்படி செய்வதற்கு, சமூக அமைப்பு, அதன் நடப்பு இவைகளின் சில பக்கங்களைப் பார்க்கவேண்டும். தொழிலாளிகள், உற்பத்திற்கு அவசியமானதைவிட அதிகமாய் உற்பத்தி செய்து, சமூகத்தில் சுரண்டுதல் ஏற்பட்ட காலத்திலிருந்தே சமூகம் வகுப்புகளாக பிரிக்கப்பட்டது. எல்லா காலத்திலும் சமூகப் பிரிவினை ஒரே மாதிரியாய்தான் இருந்தது—அதாவது சுரண்டும் வகுப்பார்களாகவும் சுரண்டப்படுகிற வகுப்பார்களாகவும் பிரிக்கப்பட்டது. சந்தேகமின்றி இவைகளுக்கிடையில் அனேக கிளைகள் இருந்தன; ஆனால் மேற்படி இரண்டு பிரிவினைகள்தான் எல்லா காலங்களிலும் சமூக அமைப்பில் வெட்டவெளிச்சமாயிருந்தன. இவ்விதமாக இரண்டு வகுப்புகளாய் பிரிக்கப்பட்டதின் பய

ஐக ஒவ்வொரு வகுப்பிலுள்ள சமூகமும் ஆதிக்கம்பெற்ற வகுப்பார்களுக்கு சாதகமாய் அமைக்கப்பட்டது. சமூகத்தின் சட்டங்களும், லக்ஷியங்களும், முழு நாகரிகமும் அவர்களுக்கு சாதகமாய் ஏற்படுத்தப்பட்டன. அந்த சமூகம் ஒரு ஸ்திரமான நிலைமையில் இருந்ததென்றே அல்லது இருக்கிறதென்றே எண்ணக்கூடாது. சுரண்டுகிறவர்களும் சுரண்டப்படுகிறவர்களும் சதாகாலமும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் போர் செய்துகொண்டே இருக்கிறார்கள். அந்தரங்கமான போரைப்பற்றி நாம் தற்சமயம் கவனிக்க வேண்டியதில்லை. இத்தகைய சமூகத்தை ஒரு அன்னிய சக்தி தாக்கினால் என்னவாகுமென்று சற்று பார்ப்போம்.

அந்த சக்தி, ஆளும் வகுப்பாரோடு யுத்தம் செய்ய நேரிடுமென்பது பிரத்யக்ஷம். இவ்விரண்டு சக்திகளிலும்—தலைவர்களின் திறமைகள் உள்பட—எந்த சக்தி அதிக பலமுள்ளதாய் இருக்கிறதோ அது வெற்றியடையும்.

இந்தப் போராட்டத்தில் மற்ற வகுப்பாருடைய நிலைமை எவ்வாறு இருக்கும்? நடுவிலிருக்கிற வகுப்பார்கள் ஆட்சி புரியும் சக்தியை ஆதரிப்பார்கள். ஏனெனில் அவர்களுடைய வாழ்க்கை ஆட்சிபுரியும்சக்தியால் ஆதரிக்கப்படும் சமூக அமைப்பைச் சார்ந்திருக்கிறது. சுரண்டப்படும் வகுப்பார்கள் தம்மிடம் பணத்திலோ நாகரிக மனப்பான்மையிலோ யார் செல்வாக்குப் பெற்றிருக்கிறார்களோ அவர்களைப்பற்றி நிற்பார்கள். அன்னியனின் பயமும், அவனோடு வரக்கூடிய மாறுதல்களின் பயமும் இவ்வகுப்பார்களை ஆட்சி புரியும் வகுப்பார்களுக்கு உதவி செய்யும்படி ஏவலாம். அதே சமயத்தில், ஆட்சி புரியும் வகுப்பார்கள் மிகவும் அழுத்துகிறவர்களாய் இருந்து, அன்னியர்கள் சற்று நல்ல

வர்களாய் இருப்பார்களென்று தோன்றினால், காண்டப்படும் வகுப்பார்கள் அன்னியர்களை வரவேற்கலாம்.

எப்படி இருந்தபோதிலும், சமூகத்தில் தலைமை வகிக்கும் வகுப்பே அன்னியனுக்கு விரோதமான வகுப்புக்கு தலைமை வகிக்கும் என்பதை மனதில் வைக்கவேண்டுவது மிகவும் அவசியம். இந்த வகுப்பார் தாழ்த்தப்பட்டு அவர்களில் மீதி இருக்கிறவர்கள் தலை எடுக்க முடியாமல் போய் விட்டால், மற்ற வகுப்பார்கள் தங்களுடைய அதிருப்தியை காண்பிக்க சந்தர்ப்பமில்லாமல் போய் விடும். ஒரு கால் இலேசாக ஆங்காங்கே தலையைக் காண்பிக்கலாம். ஒரு புதிய வகுப்பு ஏற்பட்டு அன்னிய சக்தியை வெளி ஏற்றி, தான் ஆதிக்கம் பெறக்கூடிய நிலைமையை யடையும் வரையில் பொது ஜனங்களின் அதிருப்தி வீணாகவே போக வேண்டும்.

இக் கொள்கைகள் இந்திய நிலைமைக்கு எவ்வளவு பொருத்தமாய் இருக்கின்றனவென்று சற்று பார்ப்போம். அன்னிய சக்தி இந்தியாவுக்கு வரும்போது இந்தியா சாணுவ மானிய முறையில் அமைக்கப்பட்டிருந்தது. இயற்கையாகவே சாணுவ பிரபுக்கள் அதை எதிர்த்தார்கள். ஒருவருக்குப் பின் ஒருவராக அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். இந்த யுத்தத்தில் பொதுஜனங்கள் அதிகமாக ஈடுபட்டதாக தோன்றவில்லை. சாணுவ பிரபுக்களுக்கும் அவர்களுடைய பிரஜைகளுக்குமிடையில் இருந்த அபிமானத்தை, அடிக்கடி ராஜவம்சங்களில் ஏற்பட்ட மாறுதல்களும், தேசத்தின் பாகங்கள் ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்குமாறினதும் அழித்திருக்கவேண்டும்.

அன்னிய அரசாங்கம் தன்னைத்தான் ஸ்தாபித்துக் கொண்ட பிறகு பொதுஜனங்கள் உணர ஆரம்பித்தார்கள். விவசாயிகளும், தொழிலாளிகளும், வியாபாரிகளும் மிகவும் கொடூரமாய் அழைக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய ராஜாக்களும் நவாப்புகளும் முறியடிக்கப்பட்டதால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. சில சிதறுண்ட கலகங்களை அன்னிய சக்தி அடக்கவேண்டியதாயிற்று. ராணுவ மானிய வகுப்பார்கள் அடக்கி வைக்கப்பட்டது வரையில் ஒரு கட்டுப்பாடான எதிர்ப்பின் பயம் அதற்கு (அன்னிய ஆட்சிக்கு) ஏற்படவில்லை.

ஆரம்பத்திலிருந்தே ஏகாதிபத்தியம் தன்னுடைய அஸ்திவாரம் மிகவும் பல வீனமானதாய் இருக்கிறதென்று உணர்ந்து அதை பலப்படுத்த முயன்றது. ஏகாதிபத்தியத்தால் இங்கே ஒரு குடியேற்ற நாட்டைக் காணமுடியவில்லை. மேலும் போதுமான சேனையை தன்னுடைய தேசத்திலிருந்து கொண்டுவர முடியவில்லை. ஆகையால் உள்நாட்டு சமான்களைக் கொண்டு தன்னுடைய அஸ்திவாரத்தை கட்ட ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் அது தன்னுடைய உரிமைகளை ஸ்தாபிப்பதற்காக அநேக உரிமைகளை அழிக்க வேண்டியதாயிற்று. அது அப்படி செய்த பிறகு அதிகமாக நாசம் செய்ய விரும்பவில்லை. உண்மையில் ஏகாதிபத்யம் அதனுடைய புதிய முறையில் சுரண்டுவதற்கு ஒரு ஒழுங்கு படுத்தப்பட்ட அமைதியான ஆட்சி வேண்டியதாய் இருந்தது. ஆகையால் அது சட்டத்தையும் அமைதியையும் ஸ்தாபித்ததின் மூலம் தன்னுடைய உண்மையான கருத்துக்களை மறைத்து விட்டது. இது ஏகாதிபத்தியம் தன்னை ஸ்தாபித்துக்கொள்ள

செய்த சூழ்ச்சியின் ஒரு பாகம்தான். அதைப்பற்றி நாம் தற்சமயம் அதிகமாய் கவனிக்க வேண்டியதில்லை.

அது ஒரு அமைதியான சர்க்காரை ஸ்தாபித்ததோடு தனக்கும் பொது ஜனங்களுக்குமிடையில் ஒரு புதிய வகுப்பை ஏற்படுத்தி விட்டது. ராணுவ சக்தியை கொண்ட அரசர்களின் கையிலிருந்த பட்டணங்கள் அதன் கையில் வந்துவிட்டன. அவைகளைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. கிராமாந்திரங்களில் அது தன்னுடைய ஆஸ்தியாரத்தைதம் போட வேண்டியதாயிற்று. அங்குதான் அது தனக்கு மிகவும் சாதகமான மத்திய வகுப்பை ஏற்படுத்தி ராணுவ மானிய காலத்திலிருந்த மேல் வகுப்பார்களுள் யுத்தங்களில் தங்களுடைய கட்சியை காட்டிக் கொடுத்த சிலரை பொறுக்கி எடுத்து ஒரு ஜமீன்தார் வகுப்பை ஏற்படுத்தி கோடிக்கணக்கான விவசாயிகளை அவர்களிடத்தில் ஒப்புவித்து விட்டது.

இந்த தந்திரத்தால் அநேக பயன்கள் கிடைத்தன. இதைக் கொண்டு ஏகாதிபத்தியத்துக்கு செல்வாக்குடைய சம்பத்தக்க சினேகிதர்கள் கிடைத்து விட்டார்கள், விவசாயிகளின் விசுவாசமும் நிச்சயமாக்கப்பட்டது. ஜமீன்தார்களுடைய பொருளாதார நிலைமைகளும் உரிமைகளும் அவர்களுக்கு கிராமாந்தரங்களில் பெருத்த செல்வாக்கை அளித்தன. ஆகையால் இயற்கையாகவே, ஜமீன்தார்களின் விசுவாசம் ஏராளமான விவசாயிகளிடத்திலும் காணப்பட்டது. சர்க்கார்பகதூரை பயந்து மரியாதை செய்ய ஆரம்பித்தார்கள். இறுதியில் இந்த தந்திரம் விவசாயிகளுக்கும் ஏகாதிபத்தியத்துக்குமிடையில் கோபம் தாங்கக்கூடிய ஒரு வகுப்பை யுண்டாக்கி

விட்டது. விவசாயிகளின் கோபம் கிளம்பி மேலே வரும் போது சர்க்கார்பகதூரை தாக்காமல் ஜமீன்தார்களைத் தாக்கிற்று. எனவே ஜமீன்தாரித்தனம்தான் இந்தியாவில் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் நிலைத்திருப்பதற்கான அகன்ற முதல் அஸ்திவாரம்.

ஏகாதிபத்தியம் வளர வளர, அது இன்னும் அனேக சார்ந்தவர்களையும், அதன் காரியங்களை பூர்த்திசெய்ய தரகர்களையும், கையாட்களையும், வேலைக்காரர்களையும், பட்டம் பெற்ற ஸ்ரீமான்களையும் இன்னும் மற்றவர்களையும் தயார் செய்துகொண்டது. இந்த வகுப்பார்கள் சமூகத்தின் மேல் வகுப்பார்களாய் அவரவர்களுடைய துறையில் செல்வாக்கை ஏற்படுத்திக் கொண்டார்கள். இவர்கள் ஏகாதிபத்தியத்தை மேற்கொண்டு காப்பாற்றக்கூடியவர்களாய் விட்டார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் ஏகாதிபத்தியம் அனேக கையாட்களை ஏற்படுத்தி அவர்களை சமூகத்தின் மேல்வகுப்பார்களாக்கித் தன்னுடைய அஸ்திவாரத்தை உறுதிபடுத்திக் கொண்டது. ஆகையால் அதற்கு அடிப்படை ஆயுதங்களல்ல. ஆனால் மற்ற உரிமை பெற்றவர்களோடு செய்துகொண்ட ஒற்றுமை, ஏகாதிபத்தியம் தன்னுடைய கையாட்களுக்கு தன்னுடைய சொந்தப்பையிலிருந்து யாதொரு இனாமும் கொடுக்கவில்லை. அவர்களும், ஏகாதிபத்தியத்தைப் போலவே தங்களுடைய லாபங்களையும், குத்தகைப் பணத்தையும், கப்பங்களையும் பொது ஜனங்களிடத்திலிருந்துதான் வசூல் செய்தார்கள். உண்மையாய் உற்பத்தி செய்கிறவர்களையும், தேசத்தின் இயற்கை பொருட்களையும் சுரண்டுவதற்கு ஏற்படுத்திக் கொண்ட அநியாயமான உடன்படிக்கைதான் இத்தேசத்தில் ஆங்கிலேய ஆட்சி நிலைத்திருப்பதற்கு அஸ்திவாரம்.

ஒரு பக்கம் இப்படிப்பட்ட ஒற்றுமை இருக்க மற்றொரு பக்கத்தில் பூரண குழப்பமும் உணர்ச்சியின்மையும் இருக்கிறது. மத்திய வகுப்பார்களை ஏற்படுத்தியது, பொது ஜனங்களுக்குள்ள ஏகாதிபத்தியத்துக்கு விரோதமான உணர்ச்சியின் வளர்ச்சியை தடுத்துவிட்டது. ஒரு புறத்தில், ஜமீன்தார்களும் முதலாளிகளும் அவர்களுடைய சொந்த இனத்தார்களென்றும் அவர்களுக்கு விரோதமாய் யாதொரு கோபத்தையும் காட்டக்கூடாதென்றும் போதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மற்றொரு பக்கத்தில் இந்த இனத்தார்களே அவர்களை அதிகமாய்ச் சுரண்டுவதைக் காணுகிறார்கள். இயற்கையாகவே, அவர்கள் ஏகாதிபத்தியத்தின் சுரண்டுதலை நேராக உணராததால், அவர்கள் அதற்கு விரோதமாய்க் கோபங் கொள்ளுவது கஷ்டமாய் இருக்கிறது. அப்படி அவர்கள் ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாய் ஆத்திரத்தைக் காட்டிக்கொண்டாலும், சுரண்டுறவர்களில் அது ஒன்று என்ற அளவுக்குத்தான் காட்டிக்கொண்டு, தங்களை ஏகாதிபத்தியம் எவ்வளவு சுரண்டுகிறதோ, அவ்வளவு சுரண்டும் இனத்தார்களோடு சினேகத்தையும் ஒற்றுமையையும் பாராட்டுகிறார்கள். பொது ஜனங்களை நேராகவும் அதிகமாகவும் சுரண்டுகிறவர்களை விட்டுவிட்டு, ஏகாதிபத்தியம் சுரண்டுவதால் அதற்கு விரோதமாய் போராட வேண்டுமென்று கேட்டுக்கொண்டால், பொதுஜனங்களைத் திரட்டமுடியாது. ஏகாதிபத்தியத்தையும், உள்நாட்டு பூர்ஷ்வாக்களையும் எதிர்க்க ஒரே காரணம் (அதாவது அவர்கள் செய்த அநியாயம்) இருப்பதால், பிற்சொன்னவர்களை விட்டுவிட்டு ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாய் மாத்திரம் பகையான உணர்ச்சி வளரமுடியாது. பொதுஜனங்களுக்குள் ஏகாதிபத்தியத்துக்கு விரோதமான

மனப்பான்மையை யுண்டாக்க விரும்புகிறவர்கள் உள்நாட்டுச் சுரண்டுதல் முறையாகிய சிறிய ஏகாதிபத்தியத்தைப் பற்றியும் ஒரு முடிவிற்கு வரவேண்டும். இந்திய பூர்ஷ்வாக்களை வைத்துக்கொண்டு ஏகாதிபத்தியத்தை மாத்திரம் ஒழிக்க முயன்றால், அவர்கள் இதுவரையில் பயன் அடையாததைப் போல், யாதொரு பயனையும் அடையமாட்டார்கள். எல்லாவித சுரண்டுதலையும் ஒழிப்பதைத்தான் பொதுஜனங்களின் ஏகாதிபத்திய மறுப்பு இயக்கம் தன் அடிப்படையாய் கொள்ளவேண்டும். பொதுஜனங்களாகிய விவசாயிகள், தொழிலாளிகள், மத்தியதர வகுப்பார்களில் கீழ்ப்பட்டவர்கள் மாத்திரம்தான் நம்முடைய தேசத்தில் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கக் கூடியவர்களென்று நான் சொல்லிவிட்டதால், அவர்களை ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாய் கிளப்பிவிடவேண்டும். இது எப்படிச் செய்வதென்றும் நான் கேட்டுவிட்டேன். அதற்கு பதில் இதுதான். எல்லாவித சுரண்டுதலையும் விட்டு விடுதலையடைவதை நம்முடைய திட்டத்தில் முதல் 'ஐட்டமாக' வைக்கவேண்டும். ஏகாதிபத்யத்தின் காரணமாய் அவர்கள் எப்படி சுரண்டப்படுகிறொன்பதை அவர்களுக்கு தெளிவாய் எடுத்துக்காட்ட வேண்டும். சுரண்டுதலுக்கு விரோதமாய் மும்முரமான போர் செய்யும்படி அவர்களைச் செய்ய அதின் காரணமாய் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் பெரியபோர் பிறக்கும்படி செய்யவேண்டும். ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாய் ஏற்படுகிற யுத்தம், சுரண்டுதலுக்கு விரோதமான யுத்தமாய் இருந்தால் அது சமீபத்திலிருக்கிறவர்களோடு ஆரம்பிக்க வேண்டும். இப்புதிய போருக்குத்தான் நாம் புறப்படவேண்டும்—ஜனங்களின் பொருளாதார போர் எவ்விதமாய் நடத்தப்படும்? அதன் தலைவர்கள் யார்? அதன் திட்டமென்ன?

அடுத்த காரியம்

இத்தகைய போரை வளர்க்க வேண்டுமானால் பொது ஜனங்களின் வகுப்பு அமைப்புகளை, விசேஷமாக விவசாயிகளின் சங்கங்களையும் தொழிலாளிகளின் சங்கங்களையும் ஏற்படுத்த வேண்டியது முதற் தேவை. இச் சங்கங்கள் அநியாயத்துக்கும் சுரண்டுதலுக்கும் விரோதமாய்ப் போர் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, இப்போரின் மூலம் தங்களுக்குள் ஏகாதிபத்திய மறுப்பு உணர்ச்சியையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துவார்கள். இவ்வுணர்ச்சியும் ஒற்றுமையும் அவர்களை ஏகாதிபத்தியத்தைத் தோற்கடிக்கும்படிச் செய்யும். இவ்விதமாய்த்தான் பொது ஜனங்கள் மொத்தமாக (தனிப்பட்ட முறையில்லலாது) ஏகாதிபத்தியத்தோடு போர் செய்வார்கள்.

பொதுஜனங்களின் வகுப்பு அமைப்புகள் சுரண்டும் வகுப்பார்களிடத்திலிருந்து சில சகாயங்களை மாத்திரம் பெறுவதை நோக்கமாக கொண்டால் மேலே கூறிய திட்டம் நிறைவேறாது என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சுரண்டுபவர்களோடும் அடக்கியாளுகிறவர்களோடும் இணங்கி போக முயலக் கூடாது. ஆனால் அவர்களை விட்டு பூரண சுதந்திரமடைய முயல வேண்டும். வேறுவிதமாக கூற வேண்டுமானால் அவர்கள் சீர்திருத்தத்தை விரும்புகிறவர்களாக இராமல் புரட்சிகரமானவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் வகுப்பு மனப்பான்மையை வளர்க்க முயலுவதோடு வகுப்பு யுத்தத்தில் இணங்கக் கூடாத அங்கங்களாய் இருக்க வேண்டும்.

இதுதான் நாம் செய்ய வேண்டிய 'திடமான' வேலை. நாம் தேசிய ஒற்றுமை என்ற மாயத்தை முறித்து விட்டு தேசிய விடுதலைக்காக மேற் சொன்ன அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். தேசத்தின் பரப்பையும் பொதுஜனங்களின் தொகுதியையும் உத்தேசித்துத் திடமான வேலையை மிகவும் ஆவலோடு விரும்பக்கூடியவருக்குக்கூட இது போதுமான திடமான வேலை என்று எண்ணுவது தகுமென்று தோன்றுகிறது. ஆம். "நிர்மாண" வேலை செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு இது பிடிக்காது. இது ஒரு நிர்மாணத் திட்டமல்ல. ஒரு இணைப்பான அபேதவாதத் திட்டத்தை ஏற்படுத்தும் படிக்கும், வகுப்பு போரைப்பற்றிப் பேசுவதற்கு முன் அபேதவாதத்தை ஒரு சிறிய அளவில் செய்து காண்பிக்கும்படிக்கும் நான் பல தடவைகளில் கோரப்பட்டேன். அபேதவாதத்தின் இணைப்பான திட்டத்தையும் அதின் உண்மையையும் பார்க்கவேண்டுமானால் ரஷியா பக்கம் திரும்பி பார்க்கவேண்டும். அத்திட்டம் புரட்சிக்குப் பிறகுதான் ஆரம்பிக்கும். அதுவரையில் நாம் ஒரு திட்டத்தைத்தான் நிறைவேற்றலாம். ஆகையால், ஒரு காங்கிரஸ் தொண்டர், காதி நிலையங்களையும், அகில இந்திய கிராம அபிவிருத்தி சங்கத்தின் கிளைகளையும் ஸ்தாபிக்க விரும்ப வேண்டுமா அல்லது நான் மேலே கூறிய பொதுஜனங்களின் போராடும் சங்கங்களின் கிளைகளை ஸ்தாபிக்க வேண்டுமாவென்று தானாக தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வமைப் புகளில் விவசாயிகளின் சங்கங்களும் தொழிலாளிகளின் சங்கங்களும் தான் மிகவும் முக்கியமானவைகளென்று நான் சொல்லிவிட்டேன். இவ்விரண்டில்

தொழிலாளர்களின் சங்கங்கள் நீண்டகாலமாய் இருப்பதோடு அவைகள் அகில இந்திய டிரேட்ஸ் யூனியன் காங்கிரஸ் என்ற அமைப்புக்குள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. இந்த அகில இந்திய டிரேட்ஸ் யூனியன் காங்கிரஸை வளரச் செய்வதுதான் நம்முடைய அவசரமான வேலை.

விவசாயிகளின் சங்கங்கள் அனேக விதங்களில் தடுக்கப்பட்டன. அப்படி இருந்தும் அவைகள் மிகவும் வேகமாய் தேசம் முழுவதிலும் வளருகின்றன. அவைகளுடைய வளர்ச்சியை துரிதப்படுத்தி அவைகளை திடப்படுத்த வேண்டும். விவசாயிகள் நிறைந்த ஒரு தேசத்தில் இதுதான் நம்முடைய மிகவும் முக்கியமான வேலை.

பொதுஜனங்களின் வகுப்பு அமைப்புகளுடனேயே ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கான ஒரு பொதுவான அரசியலமைப்பை ஏற்படுத்த வேண்டும். வகுப்பு அமைப்புகள், தொழிலாளிகளையும், விவசாயிகளையும், மற்றவர்களையும் அவர்களுடைய பொருளாதாரப் போரையும், அரசியல் போரையும் வெவ்வேறாக நடத்த உதவும். அவர்களுடைய போரை திடப்படுத்த நமக்கு ஒரு அமைப்பு வேண்டும். வகுப்பு அமைப்புகள் மிகவும் அவசியமானவைகள். அவைகளில்லாவிட்டால் பொதுஜனங்களை திரட்டி வகுப்பு உணர்ச்சியுள்ளவர்கள் ஆக்கமுடியாது. அவர்களுடைய வகுப்பு நலத்தை யுத்தேசித்துதான் அவர்கள் முதலாவதாக ஒன்று கூடுவார்கள். ஆனால் அது போதாது. அவர்கள் தங்களுடைய பொது நோக்கமாகிய பொருளாதார, அரசியல் விடுதலையை யடைவதன் பொருட்டு ஒரு அமைப்பாகச் சேரவேண்டும்.

காங்கிரஸ் இவ்வித அமைப்ப அல்லவா என்று கேட்கலாம். ஆம், இல்லை. காங்கிரஸ் அதனுடைய தற் கால லக்ஷணத்தில் அப்பேர்பட்ட அமைப்பு அல்ல. அதன் சட்ட திட்டங்கள் அப்பேர்பட்ட அமைப்புக்கு ஏற்றவைக ளல்ல. முதலாவதாக, அது பூர்ஷுவாக்கள், தொழிலாளி கள், ஜமீன்தார்கள், குடிகள் முதலிய எல்லா தேசவகுப்பு களுக்கும் பிரதிநிதியாய் இருப்பதாகச் சொல்லுகிறது. இத்தகைய ஒற்றுமையின் அர்த்த மென்னவென்று நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். ஒரு அமைப்பில்—மேல் வகுப்பார்களின் நலத்துக்காகவே இருக்கும் ஒரே அமைப் பில்—இவ்விருவர்களின் நலத்துக்கும் சமமான இடமிருக்கு மென்று சொல்லுவது மற்றவர்களை ஏமாற்றுதல் அல்லது தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்ளுதல் ஆகும்.

எனவே காங்கிரஸை பொதுஜனங்களின் அமைப்பாக வேண்டுமானால், முதலாவதாக அது பூர்ஷுவாக்களின் பிரதிநிதியல்ல வென்றும், அது எவ்வளவு ஏகாதிபத்தி யத்தை எதிர்க்கின்றதோ அவ்வளவு பூர்ஷுவாக்களையும் எதிர்க்கிறதென்றும் வெளிப்படையாகச் சொல்லவேண்டும்.

இப்படிச் செய்துவிட்டால் காங்கிரசின் "தேசிய"த் தன்மை ஒழிந்துவிடுமென்று ஜனங்கள் நம்புகிறார்கள். இப் படிச் செய்வது உண்மையில் என்ன செய்யுமென்றால், அது ஒரு பூர்ஷுவா அமைப்பாய் இருப்பதை ஒரு பொதுஜனங் களின் அமைப்பாய் மாற்றிவிடும். காங்கிரசுக்கு தற்சமயம் ஏற்பட்டிருக்கும் கௌரவம் சற்று குறைந்துவிட்ட போதி லும் அது ஒரு மிகவும் தீவிரமான அமைப்பாய் விடும். காங் கிரஸ் கமிட்டிகள், அவைகளாலேயே "சேர்க்கப்பட்ட" தனிப்பட்ட அங்கத்தினர்களின் பிரதிநிதிகளாய் இருப்ப

தைத் தவிர்த்து மற்றப்படி யாதொரு பிரதிநிதித்துவத்தையும் வகிக்க காங்கிரஸ் திட்டம் இடங் கொடுக்கவில்லை. காங்கிரஸ் ஒரு பொதுஜன அமைப்பென்று சொல்லப்படுவதற்கு இந்த அஸ்திவாரம் போதாது. அது பொதுஜனங்களின் அமைப்பாக வேண்டுமானால், பொதுஜனங்களின் அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்டு ஆக்கப்பட வேண்டும். வேறுவிதமாய்ச் சொல்லவேண்டுமானால் அதற்கு ஒருவித சோவியத் அமைப்பு கொடுக்கவேண்டும். அதாவது அது அடியிலிருந்து மேலே ஏறவேண்டும். ஒரு ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி, அந்த ஜில்லாவிலுள்ள, விவசாயிகளின் சங்கங்கள், தொழிலாளிகளின் சங்கங்கள், இன்னும் மற்ற ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாகப் பாடுபடுபவர்களின் சங்கங்களுக்குப் பிரதிநிதியாய் இருக்கவேண்டும். ஜில்லாக் கமிட்டிகளுக்கு மேற்பட்ட சபைகள் மறைமுகமான முறைப்படியோ, அல்லது நேரான முறையும் மறைமுகமான முறையும் கலந்த முறைப்படியோ தேர்ந்தெடுக்கப்படலாம். தற்கால சட்டத்தை மாற்றி புதிய சட்டம் ஏற்படுத்தும் வரையில் தனி ஹோதாவில் அங்கத்தினர்களைச் சேர்க்கும் வழக்கத்தையும் மேற்சொன்ன முறையோடு சேர்த்து வைத்துக் கொள்ளலாம்.

இறுதியில் காங்கிரஸினுடைய தற்கால திட்டமும் அதன் நோக்கங்களும், அதை பொதுஜனங்களின் பிரதிநிதியென்று சொல்லுவதற்குத் தகுதி யளிக்கவில்லை. குறைந்த பட்சம் அடியில் கண்ட விஷயங்களை காங்கிரஸ் தன்னுடைய நோக்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் :

1. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை விட்டு பிரிந்து விடுவதென்ற கருத்தில், பூரண சுதந்திரம்.

௨, எல்லாவித அரசியல், பொருளாதார அதிகாரத்தையும்உற்பத்தி செய்யும் பொது ஜனங்கள் பெறுவது (மூளையினால் வேலை செய்பவர்கள் உட்பட)

(3) அரசியலுக்கு அவசியமான கைத்தொழில்களையும் மற்ற பெரிய கைத்தொழில்களையும், பாங்குகளையும், சுரங்கங்களையும், மலைத்தோட்டம் முதலியவைகளையும் சமூக உடைமைக்குள் கொண்டு வருவது.

(4) எல்லாவித ஜமீன்தாரித் தன்மையும் ஒழிப்பது.

(5) நிலங்களை சாகுபடி செய்கிறவர்களுக்களிப்பது.

(6) விவசாயிகளும் தொழிலாளர்களும் பட்ட எல்லாக் கடன்களையும் தள்ளிவிடுவது.

அதன் வேலைத் திட்டம், அங்கத்தினர் வழியாக பொது ஜனங்கட்குள் சமூக உணர்ச்சியை வளர்ப்பதாயிருக்க வேண்டும்.

காங்கிரஸ் ஒரு சரியான ஏகாதிபத்திய எதிர்ப்பு சபையாக வேண்டுமானால், மேலேகண்ட முதல் மூன்று குறைந்த திட்டங்களையேனும் அங்கீகரிக்க வேண்டும். அதுவரையில் அது அப்பேர்ப்பட்ட சபையாகமாட்டாது.

ஆனால் நான் மேலே கேட்ட கேள்விக்கு "ஆம், இல்லை" என்று பதிலளித்தேன். காங்கிரஸுடைய சட்ட திட்டங்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் ஒரு அமைப்பு என்ற முறையிலும் அப்படிப்பட்ட சபையல்ல. ஆனால் அதில் விவசாயிகள் உட்பட சிறிய பூர்ஷ்வாக்களின் ஒரு பெரிய கூட்டமிருக்கிறது. அது தன்

னுடைய நோக்கங்களில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரி. இக்கூட்டத்தாரை தீவிரமாக ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும்படி செய்ய அவர்களை வகுப்பு உணர்ச்சியுள்ளவர்களாக்க வேண்டும். இந்த அளவில் காங்கிரஸ் அப்படிப்பட்ட சபைதான்.

காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் சபையாவதற்கு அவசியமானவையென்று நான் மேலே சொல்லிய மாறுதல்கள் அடிப்படையானவைகளாய் இருப்பதால், அவைகள் ஒரு மாறுதலை மாத்திரம் உண்டுபண்ணாமல் ஒரு பிளவையும் ஏற்படுத்திவிடும். ஏகாதிபத்தியத்தை எதிர்க்கக் கூடியவர்களின் மனதை மாற்றவேண்டும், ஆனால் பூர்ஷ்வாக்களின் மனதை மாற்றமுடியாது. முன்னவர்களில்கூட அனேகர், வேறு காரணத்துக்காக இல்லாவிட்டாலும், "தேசிய ஒற்றுமை"யைக் காப்பாற்றுவதற்காக பூர்ஷ்வா திட்டத்தைத்தான் பின்பற்றுவார்கள். ஆகையால் பூர்ஷ்வாக்களை விட்டும் அவர்களை பின்பற்றுகிறவர்களை விட்டும் பிரியவேண்டியது அவசியம். இப்பிளவை பக்குவம் அடையுமுன் ஏற்படுத்தாவிட்டாலும் அதிக காலம் தாமதிக்கக் கூடாது.

காங்கிரஸ் அபேதவாதக் கட்சி ஏற்பட்டதிலிருந்து, காங்கிரசுக்குள் இருக்கிற அனேக சிறிய பூர்ஷ்வாக்கள், பூர்ஷ்வா லக்ஷியங்களை விட்டு பிரிந்துவிட்டார்களென்று தெரிகிறது. காங்கிரஸைவிட்டு பிரியாததற்காக அனேகர் குறை கூறுகிறார்கள். இக்காரணத்தைக் கொண்டு சிலர் அதை பாசிஸ்ட் கட்சி என்று பெயரிடுகிறார்கள். அது காங்கிரசுக்குள் இருப்பதால் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க கூடியவர்களின் பேரில் பூர்ஷ்வாக்களின் செல்வாக்கு அதிகப்படும்படி செய்கிறது என்று வாதாடுகிறார்கள். இதைவிட

உண்மைக்கு விரோதமாய் ஒன்றும் இருக்க முடியாது. இக் கட்சி காங்கிரஸுக்குள் இருப்பதற்கு காரணமென்ன? உள்ளே இருந்து கொண்டு பிரசாரம் செய்தும், எதிர்த்தும், அச் செல்வாக்கை பலவீனப்படுத்தி கடைசியாக ஏகாதிபத்தி யத்தை எதிர்ப்பவர்களை பிரித்து விடுவதற்கு தயார் செய்வது தான். இக்கட்சி வெளியேறி விட்டால், காங்கிரஸுக்குள் இருக்கிற அதிகமான வகுப்பு உணர்ச்சியுள்ளவர்களை மற்ற வர்களைவிட்டு ஒதுங்கி விடுவதாகும். இக்காரணத்தால் அவர் கள் பூர்ஷுவா திட்டத்தைதான் பின்பற்றிக் கொண்டிருப் பார்கள். இது மிகவும் தெளிவாய் இருக்க, இதை ஆட்சே பிப்பது மிகவும் நூதனமாய் இருக்கிறது. காங்கிரஸுக்கு வெளியே இருந்துக் கொண்டு, காங்கிரஸுக்குள் இருக்கிற பொது ஜனங்களைப்பற்றி பேசுவதோ அல்லது ஏகாதிபத்திய மறுப்பைப்பற்றி பேசுவதோ கடமையைவிட்டு நழுவுவ தாகும். சென்ற அகில உலக பொது உடைமை காங்கிர ஸில் மிஸ்டர் அர் பால்மெ டட் சொல்லியதைக் கேட்க ஆனந்தமாய் இருந்தது. தான் காங்கிரஸ் அபேதவாத கட்சியை ஒரு பாஸிஸ்டு கட்சி என்று சொன்னது தவ றென்று ஒப்புக்கொண்டதோடு மற்றவர்கள் இவ்வாறு பொறுப்பில்லாமல் பேசக்கூடாதென்று எச்சரித்திருக்கிறார் கள். இங்கிருக்கிற நிலைமையை அவர்கள் சரியானபடி மதிக்க இப்பொழுதுதான் ஆரம்பித்திருக்கிறார் களென்று நம்பப்படுகிறது.

ஏகாதிபத்திய மறுப்பு இயக்கச் சம்பந்தமாய் இன்னும் ஒரே ஒரு விஷயம்தான் கவனிக்கவேண்டியதாய் இருக் கிறது. யார் அதன் தலைவர்களாய் இருப்பார்கள்? ஒரு காலத்தில் ராஜுவ மானிய பிரபுக்கள் தலைமை வகித்தார்க

னென்று நாம் பார்த்துவிட்டோம். அதற்குப் பிறகு பூர்ஷுவா தலைமையில் தேசிய சீர்திருத்த இயக்கம் நடைபெற்றது. அடுத்த தலைமை எப்படிப்பட்டதாய் இருக்கும்? ஏகாதிபத்திய மறுப்பு இயக்கத்தின் நோக்கம் சுரண்டுதலை விட்டு பூரண சுதந்திரமடைவதாய் இருந்தால், சுரண்டுதலல்லாத சமூகத்தில் உற்பத்திச் சாதனங்களில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியை முன்னிட்டு எந்த வகுப்பு முக்கிய ஸ்தானத்தை வகிக்குமோ அந்த வகுப்புதான் தலைமை வகிக்கவேண்டும். இந்நிலைமையில் உற்பத்திச் சாதனங்களை சமூக உடைமைக்குள் கொண்டு வருவதன் மூலம்தான் சுரண்டுதலை நீக்க முடியும். இப்படிப்பட்ட சமூக உடைமை வேண்டுமென்று அதிகமாய் உணர்ந்து போராடக்கூடியது தொழிலாள வகுப்பு. அது சமூக முறையில் (அதாவது கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து) உற்பத்தி செய்துகொண்டிருப்பதால், அவ்விதமாய்தான் இருக்கவேண்டுமென்று சொல்ல வேண்டியதாகிறது. புதிதாக சமூகத்தை மாற்றி யமைப்பதில் அதுதான் முக்கியஸ்தானத்தை வகிக்கும். இவ்வாறு பொதுஜனங்கள் அடையப்போகிற நோக்கத்துக்காக தொழிலாள வகுப்புத்தான் நன்கு உணர்ந்து பாடுபடும். ஆகையால் அதுதான் தலைமை வகிக்கவேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் வளர்ச்சியில், தன்னுடைய லக்ஷியத்தின் செல்வாக்கை உபயோகிக்கிற முறையில், அது (தொழிலாள வகுப்பு) தலைமை வகிக்கும்.

சில அரசியல் தொண்டர்கள் தாம் வகுப்புகளுக்கெல்லாம் மேற்பட்டவர்களென்றும், வகுப்புகள் அரசியல் விளையாட்டில் காய்களைப்போல் இருக்கின்றனவென்றும் எண்ணும் மனப்பான்மையைப்பற்றி நான் மேலே சுருக்க

மாய் சொல்லிவிட்டேன். முடிப்பதற்கு முன் நான் இம் மனப்பான்மையைப்பற்றி சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். உண்மை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கிறது. அரசியல் தொண்டர்கள தனிப்பட்ட நபர்கள் அல்ல. கொஞ்சம் அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும் அவர்களெல்லாம் கட்சிகளாக பிரிக்கப்படலாம். நமக்குள் ஒவ்வொருவரும் சுயேட்சையான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறோமென்று நினைக்கின்றோம். தனிப்பட்டவர்களுக்கு வெளியிலும் ஒரு விஷயம் இருக்கிறதென்பதும், அதுதான் அபிப்பிராயத்தை உருவகப்படுத்துகிறதென்பதும் தெளிவாய்க் காணப்படுகிறது. அந்த விஷயம் தான் சமூக வகுப்புகள். அரசியல் தொண்டர்களை பிரித்தால் அவர்கள் கட்சிகளில் அமைவார்கள். அக்கட்சிகள் சில வகுப்புகளின் நலத்தை கருதும். 1885-ம் வருடத்தில் காங்கிரசை ஸ்தாபித்த 72 பேர்களும் ஒரே மனதுடையவர்களாய் இருந்தார்கள். ஏன்? ஏனென்றால் அவர்கள் ஏறத்தாழ ஒரேவிதமான வகுப்பார்களின் பிரதிநிதிகளாய் இருந்ததால், அவ்வகுப்பின் அபிப்பிராயம் அவர்கள் மூலமாய் வெளியிடப்பட்டது.

இவ்விஷயத்தை ஜனங்களுடைய மனதில் படும்படிச் செய்வது மிகவும் கஷ்டமானது. ஒவ்வொருவருக்கும் ஒரு அகம் உண்டு. ஆகையால் வெளி அபிப்பிராயத்தை அது ஒப்புக்கொள்ள மறுத்துவிடுகிறது. அப்படி இருந்தபோதிலும் மேற்சொன்ன விஷயம் உண்மைதான்.

அரசியல் சமூக இயக்கங்களை தனிப்பட்டவர்களின் காரியமாக எண்ணும்படி நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம். நாம் தனிப்பட்டவர்களைக் கடந்து அவர்களுக்கு அப்புறம் இருந்துக்கொண்டு நம்மை பிடித்து ஆட்டி அரசியல் திட்டங்களையும், தத்துவங்களையும், மதங்களையும் கொடுக்கும் சமூக சக்தியை நாம் அனேகமாக கவனிப்பதில்லை. தனிப்பட்டவர்களும் வேலைசெய்கிறார்கள். ஆனால் அவர்கள் அச்சக்தி

களின் ஏஜண்டுகளாகவும் நிறைவேற்றுபவர்களாகவும் தான் செய்கிருர்கள். அவர்கள் வெறும் பொம்மைகளல்ல. அச் சக்திகளின் அங்கங்களாய் இருப்பதோடு அச்சக்திகளை உரு வகப்படுத்தவும் செய்கிருர்கள்.

சமூக நிலைமைகள் தகுதியதாய் இருந்தாலொழிய ஒரு வர் எவ்வளவு திறமையுடையவராய் இருந்தபோதிலும் ஒரு இயக்கத்தை யுண்டாக்கமுடியாது. அப்படி தகுதியான நிலைமைகள் இருந்தாலும் அதை ஒரு உண்மையாய் இருக் கும் வஸ்து என்று சொல்லவேண்டுமே தவிர "சிருஷ்டிக்கப் பட்ட" வஸ்து ஆகாது. இவருடைய தனிப்பட்ட தன்மை வெற்றிக்கோ தோல்விக்கோ ஒரு காரணமாய் இருக்கலாம். ஆனல் ஒரு இயக்கத்தின் குணமும் லக்ஷியங்களும் சமூகத் தில் இருக்கும் நிலைமைகளால்தான் தீர்மானிக்கப் படுகின் றன. அந்நிலைமைகளை சரியானபடி நிதானித்து அவைகளை சரியானபடி பூர்த்தியடையும்படிச் செய்வதுதான் தலைமை வகிக்கிறவர்களின் முக்கியவேலை. தலைமை அவசியம் தான். ஆனல் சமூக சட்டங்களைப் பூர்த்தி செய்யும் தலைமை தான் வெற்றியடையும்.

இக்காரணத்தைக் கொண்டுதான் நான் தேசிய இயக் கத்தைப் பற்றியும், ஏகாதிபத்தியத்தின் அடிப்படை முதலிய வைகளைப்பற்றியும் ஆராயும்போது தனித்தவர்களைப் பற்றி பேசாமல் வகுப்புகளைப் பற்றி மாத்திரம் பேசி இருக்கிறேன். அரசியல் இயக்கத்தைப்பற்றி தனித்த மாதிரியில் நினைக்கின் றேமென்று சொல்லும் காங்கிரஸ் தொண்டர்கள், பூர்ஷ்வா சமூக விஞ்ஞானம் ஏற்படுத்திய மிகவும் பெரிய பித்தலாட்டத் திற்கு இரையாகிருர்கள். அரசியலில் ஒரு தனியான அபிப்பிராயம் இருக்க முடியாது. ஏனெனில் நாம் ஒரு சூனியத்தில் வசிக்க இல்லை; அரசியல் சூனியத்தில் நடைப் பெறவும் இல்லை.

Printed at 'Oolian Press' Madras.